# கடோபநிஷதப் பேருரைகள்

சுவாமி சின்மயானந்தா

பூனவில் 1951 டிஸம்பர் 31உ முதல்—
1952 ஏப்ரல் 8உ முதல் நடந்த நூறு
நாள் ஞான யக்ஞத்தில சுவாமி
அவர்கள் நிகழ்த்தியது.

*ஆங்கிலத்தில் தொகுத்தவர்:*

**ராவ்சாகப் ஸ்ரீ. எம். எம். நாயுடு**

காரியதர்சி, ஞான யக்ஞக் கமிட்டி,
308, ராஸ்தாஸ் பேட், பூனு.

*தமிழ் மொழி பெயர்ப்பு:*

**தி. சேஷாத்திரி**

பாரதி நிலையம் ரோடு, சுப்ரமணியபுரம், மதுரை.

---

*கிடைக்குமிடம்:*

கே. ஆர். புருஷோத்தம தாஸ்
72, தங்கசாலைத் தெரு, சென்னை—3.



## ஆசிகள்

விரிவுரைகள் எல்லாம் நன்கு அமைந்திருக்கின்றன. தெளிவாகவும் ஞான யாகத்தில் ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கும் உதவக் கூடியனவாகவும் இருக்கின்றன. நீங்கள் சொல்வதில் வேதாந்த பரமாக 'அத்வைத விசாரத்'தின் ஒப்புக் கொள்ளப் பட்ட கூற்றுக்களுடன் மாறுபாடுகள் கிடையா.

அன்பு. சிறந்த ஆசிகள்.

(ஒப்பம்) சுவாமி தபோவனம்

# பொருளடக்கம்


முன்னுரை

**முதற் பகுதி**

முதல் வல்லி
இரண்டாம் வல்லி
மூன்றாம் வல்லி

**இரண்டாம் பகுதி**

நான்காம் வல்லி
ஐந்தாம் வல்லி
ஆறாம் வல்லி

# முன்பின் நடக்காதது

உபநிஷதங்களும்—விரிவுரைகள்—புஸ்தகங்கள் விநியோகம்—விரிவுரைகளை உடனேயே எழுத்து வடிவப்படுத்துதல்—இந்திய சரித்திரத்திலேயே முன் பின் நடவாதது.

எம்பெருமான் உங்களைக் காப்பாராக!

பெருமையுடன்—அன்பு. ஓம்.

(ஒப்பம்) சிவானந்தா.

ஓம்

ஓம் நமோ சிவாநந்தாய.

# கடோபநிஷத்

கேனோபநிஷத்தில் நாம் சொல்லியது போல, கடோபநிஷத்துக்கும் ஆசிரியர் என்று சொல்ல யாரும் இல்லை. மகான்களாகிற ரிஷிகள் தம்மில் தாமே அமர்ந்தவர், தாம் கண்டுபிடித்தவைகளில் ஆனந்தம் கண்டவர். அவர்கள் காட்டிலேயே அரசர்க்கரசராய், ஒன்றையும் விரும்பாமல் ஒன்றையும் வேண்டாமல் ஒன்றுக்கும் ஆசைப்படாமல் காலம் கழித்தனர். அவர்கள் இன்பம் பூரணமானது. தங்கள் தெய்வத் தன்மையில் அவர்களுக்கு முழு நம்பிக்கை, முழுத் தெளிவு. ஆகவே அவர்கள் ஒன்றுக்கும் தேடி அலையவில்லை. சுய அனுபவமான அந்தப் பூரண ஞானத்தில் திளைத்த அவர்கள் தங்கள் சிறந்த கிரந்தங்களான உபநிஷதங்களின் அடியே கையொப்பமிட்டு வைக்கவேண்டும் என்று வேண்டவில்லை.

கடோபநிஷத்தின் ஆசிரியர் யார் என்று நாம் அறியோம். அறியவேண்டும் என்ற தீராத ஆவல் தூண்ட அதன் பயனாய் நாம் ஊகிப்பது கடோபநிஷத்தின் ஆசிரியர் கடராக இருக்கலாம்.' கடோபநிஷத்தின் வேறு பெயர் கடகோபநிஷத்தாயிருக்கலாம். உண்மையில் அவர்கள் தங்கள் பெயரையும் அமர இலக்கியங்களுடன் தந்து சென்றிருந்தால் அவசியம் பேரும் புகழும் கிடைத்திருக்கும். ஆனால் அவர்கள் அந்த அழியும் பெருமையை, புகழ், பேர் இவைகளை இழிவாகக் கருதினர். அவர்கள் ஞானம் அவ்வளவு முதிர்ந்திருந்தது.

ஞான தாகம் கொண்ட ஒரு சிஷ்யன் அப்படிப்பட்ட ஒரு பெரிய குருவினிடம் சென்ற பொழுது அவர் தன் உள்ளம் ஆன்மா இரண்டையும் அன்புடன் திறந்து, தன் நெருங்கிய அனுபவங்களை உண்மையுடன் கொட்டிக்காட்டினர்.

ஐரோப்பிய மதிப்புரையாளரும் இந்திய வேதாந்தங்களை ஆங்கிலச் சொற்கள் மூலம் கேட்கும் இந்திய மாணவனும் இந்த உபநிஷத், வேதகாலங்களில் அங்குமிங்கும் இருந்த சுலோகங்களின் தொகுப்பாகும் என்று கருதுகிறார்கள். இந்தக் கருத்து எவ்வளவு தப்பிதம்! அவர்கள் செய்யும் வாதங்கள் பகுத்தறிவை மட்டும் அடிப்படையில் கொண்டன. அவர்கள் சொல்கிறார்கள்: சுலோகங்களில் தொடர்ச்சி இல்லை, கருத்துக்கள் அடுத்தடுத்து முறையாகச் சொல்லப்படவில்லை. உபநிஷத்துக்களை பரிவும் நெகிழ்ச்சியும் அற்ற பகுத்தறிவுடன் அணுகுகிறவர்களுக்குத் தான் இந்தக் குற்றங் குறைகள் படும். பரிவுடன் நோக்குபவர்களுக்கு இந்த வாதங்கள் எல்லாம் அர்த்தமற்றவை, ஆழமற்றவை, ஆதாரமற்றவை. இயல்பான உண்மை இதயத்தைக் கவ்வி எழுந்து நின்று உணர்ச்சிச் சூட்டில் பேசும் பொழுது, காரிய காரண முறையை ஒட்டியும் இலக்கிய வரம்புக்குக் கட்டுப்பட்டும் பேசும் என்று எதிர்பார்க்கமுடியாது. இதற்கு உதாரணம் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் காணலாம். துன்பியலின் கடைசி உச்ச நிலையில் நின்று பேசும் போது நாயகனும் நாயகியும் பேசும் பேச்சு, விட்டு விட்டும், திக்கித் தயங்கியும், ஆங்கில மொழி முறைக்கு ஒவ்வாததாயும் இருக்கும். அதே போல, ரிஷிகள் உயர்வற உயர்ந்த உண்மையின் அனுபவ முதிர்ச்சியில் ஏற்பட்ட உணர்ச்சி வெப்பத்தில் பொங்குகிற நிலையில், தங்கள் சிஷ்யர்களுக்குத் தெய்வ நிலையை எடுத்துச் சொல்ல முயன்றார். அவர்கள் சொற்கள் வேறு எவ்வாறு இருக்க முடியும்? நடுக்கமும் தயக்கமும் சறுக்கலும் இருக்கத்தான் செய்யும்.

ஆனாலும் உண்மை அவ்வளவு பயப்படும்படியாகவும் இல்லை. உண்மையும் விவேகமும் கொண்ட மாணவனுக்கு இந்தப் பெயர் பெற்ற உபநிஷத்தில் இணைத்துச் செல்ல முடியாத பிரமாத இடை வெளி ஒன்றும் கிடையாது. உண்மையில் இரண்டு அதிகாரங்களில் உள்ள ஆறு வல்லிகளில் (கொடிகள்) உள்ள எல்லா

சுலோகங்களையும் ஓர் ஒருமைப் பொற்கொடி இணைத்தேதான் செல்கிறது.

ஸமஸ்கிருத மொழியில் கடோபநிஷத் ஒரு தனி சிருஷ்டி. தனி வகுப்பு. அது ஸமஸ்கிருதத்தின் கவிதையும் வேதாந்தமும் தழுவி நிற்கும் ஒரு மிகச் சிறந்த ஆக்கம். மிக உயர்ந்த வேதாந்தக் கருத்துக்கள் அழகும், ஒலிப் பெருமையும் கொண்ட பொறுக்கி எடுக்கப்பெற்ற சொற்களில் அமைந்து எல்லாம் சேர்ந்து ஒரு சங்கீதமாக, இசையினிமையாகமாற நிற்கிறது. உலகத்திலேயே மிக உயர்ந்த வேதாந்த கவிதைதான் கடோபநிஷத் என்று நாம் சொல்லலாம். ஆகவே கிழக்கோ, மேற்கோ, எங்கும் இந்தச் சிறந்த உபநிஷத் மொழிபெயர்க்கப்படாத மொழியே இல்லை. அது இயற்கைதானே?

இந்த உபநிஷதம் நன்ருக வளர்ந்து நல்ல முறையில் சொல்லப்படும் ஒரு கதையுடன் தொடங்குகிறது. ஒரு சிறு பையன். ஒன்பது வயது, ஒரு வயதான மதிப்பு நிறைந்த பிராமணரின் மகன். தன் தந்தையின் கருமித்தனத்தைக் கண்டு சிந்திக்கிருன். யாக முடிவில் தந்தை புரோகிதர்களுக்குப் பொறுக்கி எடுத்த சோனிப் பசுக்களைத் தக்ஷிணையாகத் தானம் செய்கிருர். இதைக் கண்டு 'என்னடா' நம் தந்தை சாஸ்திர விரோதமாகச் செய்கிருரே!' என்று வருந்திப் பையன் அப்பாவிடம் செல்கிருன். "அப்பா, என்னை யாருக்குத் தானம் செய்வீர்கள்?" என்று கேட்டு விடுகிருன் ஒரு முறையா? பல முறை திரும்பத் திரும்பக் கேட்கிருன். தந்தைக்கு மூக்குக்குமேல் வந்து விடுகிறது கோபம். "போ பயலே. உன்னை எமனுக்குத் தந்து விட்டேன்!" என்று சொல்லிவிடுகிருர்.

தந்தை விருப்பத்துக்குக் கீழ்ப்படிந்தான் நசிகேதஸ். நேரே யமலோகம் சென்று யமதர்மராஜன் அரண்மனையில் மூன்று பகல் மூன்று இரவு அன்ன ஆகாரம் இல்லாமல் காத்துக் கிடந்தான். யமராஜன் வெளியே சென்றிருந்தவன் திரும்பி வந்தவுடன் விருந்தாளிச் சிறுவனை வரவேற்று, சிறப்பும் பெருமையும் செய்யும் முறையில் மூன்று வரங்கள் கோரிப் பெறும்படி கேட்டுக் கொள்கிருன்.

வரங்கள் என்ற பெயரால் வேதாந்தத்தின் சிறந்த தத்துவங்களைப் பற்றிக் கேட்கிறான் பையன் யமராஜனிடம், அவன் கேள்விகள் சாவின் பிறகு ஆத்மா என்ன ஆகிறது என்ற கேள்விக்கு இட்டுச் செல்கின்றன. இந்தக் கேள்விக்கு யமதர்மராஜன் சொல்லும் பதில்தான் இந்தத் தர்ம கிரந்தமான உபநிஷத்தின் பெரும் பகுதியாக அமைகிறது.

நம்மிடையே படித்த கூட்டம் ஒன்று இருக்கிறது. அவர்கள் இலக்கியத்தை உரைத்துப் பார்க்கும் பழக்கம் உள்ளவர்கள். அவர்கள் வெளிநாட்டார் நன்கு தெரியாமல் வெளியிட்ட அரை குறை வேதாந்தத் தத்துவங்களைப் படித்து அதையும் அரை குறையாகத் தெரிந்துகொண்டவர்கள். அந்த வெளிநாட்டார் பெரிய எழுத்தாளர்களாக, ஆசிரியர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு நம் ஆரிய வாழ்வு, ஆரிய சித்தாந்தத்தை அறியவோ அதைப் போற்றவோ தக்க அளவு ஸம்ஸ்காரங்கள் கிடையாது. அவர்கள் சொல்லியதைப் படித்த நம் நாட்டுப் படித்தவர்கள் கூட்டம் அவசரமாக முடிவுகள் கட்ட முயன்று நம்முடைய வேதாந்தத்தைத் தாக்க வந்துவிடுகிறார்கள். அவர்கள் போடுகிற முக்கியமான கூச்சல், 'நம் வேதாந்தத்தில், வேதாந்தி, சாவுக்கு மனிதன் இயற்கையாகக் கொண்டுள்ள பயத்தின் திரியைத் தூண்டிவிட்டு வெளிச்சம் போடுகிறான்!' என்பதுதான். அதாவது அவர்கள் சொல்கிறபடி வேதாந்தம் இந்தப் பொதுப் பயத்தை வைத்து வியாபாரம் செய்கிறது.

இது ஓர் அர்த்தமற்ற வாதம். நம்பிக்கையுடன் கவனித்துப் படிக்கும் மாணவன் நின்று இதற்குப் பதில் சொல்லக்கூட அருகதையற்ற வாதம். இருந்தும் நாம் கொஞ்சம் பதில் சொல்ல விரும்புகிறோம். அப்பொழுதுதான் மேலே நன்கு படித்தவர்கள் சொல்வதுபோல் தோன்றும் நம்முடைய வேதாந்தத்தைத் தாக்கும் இந்தப் புதுப் படிப்புக் கூட்டத்தினருடைய வாதத்தின் அசட்டுத்தனங்கள் நன்றாக மனத்தில் பதியும்.

உண்மைதான். சாவுக்கு அஞ்சிச் சாகிறோம் நாம். அதற்காக வாயை மூடி மௌனமாயிருப்பது இந்தப் பொய்ப் பயத்தை அழிப்பதற்கு ஆகும் வழியா? அறிவு ஒளி பெற்றவர்கள் என்ற முறையில் நாம் நேர்மையாக இந்த அச்சுறுத்தும் பயத்தின் தன்மையைப் பற்றி விசாரிக்க வேண்டியதுதானே. அப்படிச்

செய்தால் நாம் அதன் உண்மைத் தன்மையைப் பற்றி அறிந்து கொள்ள வழி ஏற்படலாம். உண்மையிலேயே பயத்தையும் வெற்றிகொள்ள ஏது உண்டாகலாம். அதைவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டு ஒதுங்கிவிடுவது உணர்ச்சிக்கு அழகு தராது. உண்மையில் அதற்கு மாருக நம் புத்தியை அழுகச் செய்யும்: பொல்லாப் பயங்காளித்தனத்தின் இகழத்தக்க வெளித்தோற்ற மாகவல்லவா அது ஆகும்? வேதாந்தி பயங்காளி அல்ல. அவன் சுருக்கும் எல்லைக் கோட்டைப் பணிவாக அடங்கி ஏற்றுக் கொள்ள மாட்டான். அறியாமையை அகற்ற அவன் சாவுத் தேவனின் தலைவாசலுக்கும் துணிவுடன் செல்ல அஞ்ச மாட்டான். தேவையானுல் யமனைக் கையைப் பிடித்துக் குலுக்கவும் அஞ்சுபவனல்லவே அவன்.

ஹிந்து வேதாந்தம் மொத்தமுமே சாவைப் பற்றிய விசாரணையையே எல்லா ஆழ்ந்த தத்துவ விசாரணைக்கும் இயக்க ஆரம்பமாகக் கொண்டிருக்கிறது. அதனுல் ஹிந்து தத்துவ விசாரம் எந்தவிதத்திலும் நம்பிக்கையிழந்த அழுமூஞ்சி மனப்பாங்கைக் கொண்டது என்று சொல்லிவிடுதல் புத்திசாசாலித்தனமாகாது. அதற்கு மாருக ஹிந்துத் தத்துவ விசாரகன் வாழ்வை உள்ளபடி நோக்கி விசாரணை செய்கிருன். சாவுதான் மிகவும் பரந்து நின்று எல்லா மனிதனுக்கும் அவன் எங்கே இருந்தாலும் சரி, எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவனுயிருந்தாலும் சரி பொதுப் பயமாக இருக்கிறது. ஆகவே அதன் தன்மையைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்து கடைசியில் இந்த அச்சுறுத்தும் இயற்கைச் சம்பவத்துக்கு ஒரு விளக்கம் காண்கிருன். தவிரவும் நமக்கும் ஞானத்தின் ஒரு சாஸ்திரத்தையும் திரட்டித் தருகிருன். அந்த சாஸ்திரம் அழியும் மனிதனுக்கு, வாழ்வின் போக்கான சாவின் மென்னியை நெறிக்கும் பிடியிலிருந்து வழி தெரிந்து தப்பி வளர உதவுகிறது. அந்த நிலைமையில் பார்த்தால் நம் வேதாந்தத்தைப் போல நல்லூக்கம் கொண்டதும் என்றும் இளமையானதும் ஆரோக்யமானதுமான ஒரு தத்தவ விசாரம் உலகிலேயே இல்லை.

கதை என்னவோ தொடர்ச்சியற்றுக் கூடு போலத்தான் இருக்கிறது. என்றுலும் சுருதித் தாய் கதாநாயகன் சித்திரத்தை நன்கு தீட்டத் தன் அழகில் ஒன்றையும் உபயோகிக்காமல்

விடவில்லை. நசிகேதஸ் வேதாந்த விசாரணைக்கு ஏற்ற மாணவனுக்குச் சிறந்த, என்றென்றும், தங்கக்கூடிய எடுத்துக் காட்டு. அவனுடைய அந்தரங்கமான அறிவு, ஆன்ம மயமான தன்மை இவைகளைநன்குசித்தரித்துக்காட்டியிருக்கிறாள் அச்சு நிதித்தாய். குறைந்த ஆனாலும் பலம் பொருந்திய அந்தச் சித்திரக் கோடுகளில் இயன்ற அளவு நிறம் விவரணம் தர என்ன அசாதாரண ஜாக்கிரதை காட்டியிருக்கிறாள்! பாடத்திலுள்ள எவ்வொரு சுலோகத்தையும் கவனித்துப் பார்க்க நாம் புத்தகச் சோலைக்குள் நுழையும்போது இந்த அருமைகளை எல்லாம் பார்க்கலாம்.

எந்தப் புத்தகாலயத்தில் வேண்டுமானாலும் நுழைந்து பாருங்கள். வாழ்வைவிடச் சாவைப் பற்றி எழுதப்பட்ட புத்தகங்களே அதிகம் காணப்படும். உலகம் முழுவதும் சாவுக்குப் பயப்படுகிறது என்பதற்குத் தெளிவான அடையாளம் ஆனால் துரதிர்ஷ்ட வசமாக நாம் வாழ்வு என்பது என்ன என்பதைப்பற்றி விளக்கமாக தொடர்ந்து, புத்திசாலித்தனமாக விசாரணை செய்வது மிகவும் குறைவு. சாவுக்கு அஞ்சுவதில் செலவழிக்கும் நேரத்தில் ஒரு பாதியை வாழ்வின் உண்மையை விசாரிப்பதில் செலவிட்டால் நாம் சாவு என்பது என்ற விஷயத்தின் உண்மை அறிவைப் பெற்று விடலாம்.

சாவின்றி வாழ்வு இயலாதஒன்று. உண்மையில் வாழ்வு தொடரும் முறை தான் சாவாம். சாவின் வரப் பிரசாதம் இல்லை என்றால் வாழ்வு வழியில்லாததாகிவிடும். உதாரணமாக சாவு ஒழிந்து விட்டது என்று எண்ணுவோம் ஒரு கணம். நம் நிலை என்னவாயிருக்கும்? நாம் வேண்டாத குழந்தைப் படை, தொந்தரவு செய்யும் உறவினர் குழு, தாள முடியாத விருந்தினர் கூட்டம், இவை தவிர நம் குடும்பங்களில் தாத்தாக்கள், கொள்ளுத் தாத்தாக்கள், எள்ளுத் தாத்தாக்கள், அந்தப் பாட்டிகள்...எல்லோரும் ஒவ்வொரு உணவு விகித அட்டையை வைத்துக் கொண்டு கழுத்தையறுத்துவிட மாட்டார்களா? கிழம் கெட்டுகள் ஒழியாது போனால் சந்ததிகள் வாழ்வதெது?

சாவு நேரில் பார்க்கப்படாதவரைதான் கோர முகமும், கொலை நடத்தையும் கொண்டதாகக் கற்பனை செய்யப்படு

கிறது. உலகில் சிறந்த அறிவாளிகள் அடியார்கள் எல்லோருமே ஒருமுகமாகச் சாவு பெரும் வரப் பிரசாதம் என்றும், துயர் துன்பங்களிலிருந்து நம்மைக் காக்கும் ஒன்று என்றும் உரக்கச் சொல்லியுள்ளனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தம் சிஷ்யர்களுக்குச் சாவு தன் வீட்டிலேயே ஓர் அறையிலிருந்து மற்ருேர் அறைக்குச் செல்லும் மிகச் சாதாரணமான செயல்போலத்தான் என்று தெளிவாக்கி யிருக்கிருர்.

இருந்தும் நாம் எல்லோருமே சாவைக் கண்டு நடுங்குகிருேம். இந்தப் பயத்தின் உறுப்பொருள் யாது? அலசி யோசித்துப் பார்த்தால் சாகிற அந்தச் செயலுக்குப் பயப்படுகிறதை விடச் சாவிஞல் ஏற்படும் மற்றப் பலன்களுக்கே அஞ்சுகிருேம். உதாரணமாகச் செத்துவிட்டோமென்ருல் வீடு வாசல், உற்ருர், உறவினர் எல்லோரையும் விட நேரிடுமே என்ற துணுக்கம் தான் அதிகம். சுருங்கச் சொல்லின், நாம் நம்மைச் சுற்றுயுள்ளவைகளிடத்தில் கொண்டுள்ள மோகமேதான் சாவுக்கு நாம் கொள்ளும் வேதனை தரும் பயத்துக்குக் காரணம். உயிர்கள், பொருள்களில் உண்மைத் தன்மையின் எல்லை தெரிந்தவர்கள், கொண்டதோ, சேர்த்ததோ, குவித்ததோ எந்தச் சொத்தும் நம்முடைய இறுதிச் செலவின்போது உடன் வாராது என்ற உறுதியான அறிவைப் பெற்றவர்கள், எந்த விதத்தாலும் தெரிந்து ஏற்படும் இந்தச் செயலான சாவுக்கு நடுங்கவும் மாட்டார்கள். அதற்காக மனத்தைக் குழப்பிக்கொண்டு உழக்கவும் மாட்டார்கள். உண்மையில் சாவு தனி ஜீவனுக்குப் புது வனங்களையும், மேய்ச்சல் பூமிகளையும் தந்து வரமருளுகிறது. இன்னும் ஆரோக்கியம் நிறைந்த உடல், மனது அறவுகளைத் தருகிறது. சாவு நம்மைப் புது அனுபவங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறது.

உலகில் நம்மைச் சுற்றியுள்ள முடிவுபெறும் வஸ்துக்களில் ஒட்டாமல் நிற்கவேண்டும்; நம் உண்மைத் தன்மையின் உணர்வில் வழுவாமல் ஊன்றி நிற்கவேண்டும், எல்லை வீட்டின் அசையாத அறிவில் வாழவேண்டும் என்பதுதான் நம் ஹிந்து ரிஷிகளின் சாதனையாகும்.

புற உலகுடன்கூட உண்மையானதும் நிலைத்திருக்கக் கூடியதுமான இந்தத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள அறிந்து அதன் பயனாகத் தன் வாழ்க்கையை மணல் குன்றான சுயநலம், அகம்பாவம் எழுப்பிய ஆடம்பரம் முதலிய அஸ்திவாரங்களின் மேல் கட்டாமல், நலமான தூண்டுதல் சக்திகளான அன்பு, பொறை, கருணை, ஆதரவு முதலிய குணங்களின் மேல் கட்டத் தெரிந்தவனே வேதாந்தப் பண்பாட்டின் அருள் நன்மைகளைப் பெற்று இன்புற்று வாழும் ஹிந்துவாவான்.

இங்கேயும் அவசரக் குடுக்கையான புது யுக மனிதன் அகம்பாவத்தைச் சூழ்ந்து ஏற்பட்ட துன்பக் குகையிலிருந்து வெளியேறி சுதந்திரம் சந்தோஷம் தரும் சூரிய ஒளி பொருந்திய இந்தத் தத்துவத்தைத் தாக்குகிறான். 'வேதாந்தம், வாழ்க்கையிலிருந்து 'பின்னால் போ' என்று சொல்லித் தருகிறதே,' என்று அவன் எரிந்து விழுகிறான், அப்படிச் சொல்லும் ஒவ்வொரு பாஷண்டிக்கும், உரத்த குரலில் ஆமாம் சாமி போடும் யோசிக்கும்சக்தியே இல்லாத இரண்டுகால் பிராணிகளின் கூட்டங்கள் கிடைத்துவிடுகின்றன. உண்மையோ, வேதாந்தம் அந்தச் சொல்லின் எந்தப் பொருளிலும் சக்தி எறியும் இந்தக் குற்றச் சாட்டுக்குத் தகுதியற்றதே இல்லையென்பதாகத்தான் இருக்கிறது. வேதாந்தம் தடுப்பதெல்லாம், அழியும் புலப்பொருள்களை நித்தியம் அவையே நித்தியம் என்று எண்ணிப் பித்துக்குள்ளித்தனமாக அவற்றிலேயே திளைப்பதைத்தான். நித்தியத்தின் அஞ்ஞானத்தில் வாழ்வதே, வேதாந்தப்படி சாவுதான். வேதாந்தம் தன்னைப் பின்பற்றுபவர்களை அந்த வாழ்ந்தும் செத்து நிற்கும் நிலையிலிருந்து வெளியேற்றி பூரண அறிவும் சலிக்காத கண் மூடாத தெளிவும் கொண்ட நித்ய வாழ்வுக்குச் செலுத்த முயன்றுகொண்டிருக்கிறது.

இந்தக் கருத்து பின் வரும் கதை மூலம் வேண்டும் பொழுதெல்லாம் தெளிவுறுத்தப்படுகிறது. ஓர் அரசன் ஒரு முறை மனநிறைவு என்ற கருத்தைச்சோதித்தறிய விரும்பினான். அவன் மந்திரி சொல்லித் தந்தபடி அந்த அரசன் தன் தேசமக்களுக்குச் சில ஆடுகளை வாங்கித் தந்து நன்றாகத்தீனி வைத்து, கொழுக்கச் செய்து குறிப்பிட்ட நாளில் கொண்டு வரவேண்டும் என்றும், எந்த ஆடு வளர்ப்பவன் கொண்டுவரும் ஆடுகளுக்கு

பூரண திறை ஏற்பட்டிருக்குமோ அந்த ஆளுக்கு மிகப் பெரிய தொகை கொடுக்கப்படும் என்றும் சொல்லி அனுப்பினான். அநேக கிராமத்து மக்கள் போட்டியில் சேர்ந்து ஆடுகள் பெற்றுச் சென்றனர். நாட்கள் சென்றன. ஆறு மாதம் சென்றபிறகு அரசன் கொடுத்த ஆடுகளுடன் ஆட்டுக்காரர்களையும் அழைத்தான். ஒவ்வொரு ஆடாக அவனிடம் வரும்போது அரசன் ஒரு பிடி புது இளம் புல்லை எடுத்து நீட்டுவான். எந்த ஆடுதான் இந்தப் பிரமாதமாகத் தூண்டப்படும் ஆசையை ஒதுக்கி நிற்க முடியும்? ஒவ்வொரு ஆடும் புல்லுக்குத் தாண்டிக் குதித்தது. அவற்றின் ஆவலினால் வளர்த்தவன் ஒருவனுக்கும் பரிசுத் தொகையைப் பெறமுடியாமல் போய்விட்டது.

கடைசியில் ஒரு கிழவன் வந்தான். அவன் பசுங் கன்றுபோல் வளர்த்திருந்த தன் ஆட்டையும் கொண்டு வந்திருந்தான். தன் பலமான மூங்கில் கம்பின் மேல் சாய்ந்து அரசன் சிம்மாசனத்துக்கும் தன் ஆட்டுக்கும் இடையில் நின்றிருந்தான். அவன் வெள்ளாட்டின் நாக்கிலும் புதுப் புல்லைக் கண்டதும் நீர் வழிந்துதான் வந்தது. அது தன் நாக்கை உதட்டில் நக்கிற்று. கொஞ்சம் தயங்கிற்று. கடைசியில் புல்லின் இழுப்புச் சக்தி அதிகமாகிவிடவே அது அரசனிடம் ஓர் அடி எடுத்து வைத்து நெருங்க ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில் அந்தப் பொல்லாத கிழவன் மெதுவாகத் தன் மூங்கில் கம்பைக் கொஞ்சம் உயர்த்தினான். ஓஹோ! அந்த ஆடு விழித்துக் கொண்டது. அந்த மூங்கில் கம்பின் ருசியை அது அநேக தடவைகள் பார்த்திருக்கிறது. உடனே திரும்பி ஓரே ஓட்டமாக அது நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்து சென்றுவிட்டது. பிறகு என்ன, அந்தக் கெட்டிக்காரக் கிழவனுக்குத்தான் அந்தப் பெருந் தொகைப் பரிசு.

நம் இந்திரியங்களும் (புலன்களும்) ஆடுகள்தாம். நாம் எவ்வளவு கொடுத்துக் கொழுக்கவைத்தால் என்ன! மீட்டும் ஆசை தரும் பொருளில் ஒரு பிடியைக் கண்டால் ஆவல்தான். கிழவனான காவலாளன், அந்த அறிவுப் புலன்கள் ஆவல்தீர்த்து ஆனந்தத்தில் திளைக்க முற்படும் ஒவ்வொரு தடவையும் தன் மூங்கில் குச்சியான 'பியாசி' என்ற எச்சரிக்கையை எடுத்துக் காட்டாத வரை அவைகளுக்குத் திருப்தி என்பது கிடைடவே

கிடையாது. நித்திய ஞானம் ஒவ்வாத எந்த எண்ணத்தையும் மனத்தின் வழி செல்ல முடியாது. தடுக்கும் பகுத்தறிவின் பரம உச்ச நிலையில் நின்று வாழ்வதே நம் வேதாந்திகள் கண்ட இலட்சியம். அந்த வாழ்வில் சாவு விஷக் குத்துக் குத்தவும் முடியாது, அச்சுறுத்தவும் முடியாது.

# முதல் அத்தியாயம்

## முதல் வல்லி

ஓம் உசன் ஹ வை வாஜஸ்ரவஸ: சர்வ வேதஸம் ததௌ
தஸ்யஹ நசிகேதா நாம புத்ர ஆஸ

*1. மோட்சத்துக்கு ஆசை கொண்டு வசிஸ்ரவ (கௌதம)ரின் குமாரர், யாகத்தில், தன்னிடமிருந்ததை யெல்லாம் தானம் செய்தார். அவருக்கு நசிகேதன் என்ற குமாரன் இருந்தான்.*

தம் ஹ குமாரம் ஸந்தம் தக்ஷிணாஸு நீயமானாஸு
சிரத்தா விவேஸ லோமன்யத

*2. தானம் நடந்து கொண்டிருந்தபொழுது தந்தையின் நலத்தைப் பற்றிய கவலை நசிகேதனுடைய மனத்தில் புகுந்தது. அவன் சிறியவன்தான். அவன் எண்ணினான்.*

*ஒப்பில்லாத இந்த உபநிஷத்தின் ஆரம்ப சுலோகமே, கதையின் நாயகனான நசிகேதனின் குலம், தந்தை இவர்களைப் பற்றிய அந்தரங்கமான விஷயத்தை எடுத்துச் சொல்கிறது. நசிகேதன் கீழ் சாதிப் பையனல்ல. கெட்ட பழக்கவழக்கமுடையவனல்ல. தந்தை தாயால் வெறுக்கப்பட்டவனுமல்ல. அவனுடைய தந்தையின் தந்தை ஒரு வஜசிரவர். வஜசிரவர் என்றால் அன்னதானம் செய்து புகழ்பெற்றவர் என்று பொருள். வஜசிரவரின் குமாரரான நசிகேதஸின் தந்தையோ கதையில் விசுவஜித் என்ற பெரும் யாகத்தைச் செய்து கொண்டிருக்கிறார். விசுவஜித் யாகம் என்றால் தனக்குச் சொந்தமான எல்லாவற்றையும் தானமாகக் கொடுத்தாக வேண்டும். இந்த யாகத்தை முன்னால் எல்லாம் அநேகமாகப் பெரிய பெரிய அரசர்கள் தாம் பல ராஜ்யங்களை வெற்றி கொண்டு வீர முழக்கத்துடன் தம் தலைநகருக்குத் திரும்பிவந்தவுடன் செயவது வழக்கம். அல்லது கிருஹஸ்தர்கள் வீடு வாசலை விட்டுச் சன்னியாசம் வாங்கிக்கொள்ளும்*

பொழுது இந்த யாகத்தைச் செய்வது வழக்கம். விசுவஜித் யாகம் செய்வது என்பது யாருக்கும் சாதாரணமான ஒரு செயல் அல்ல. ஆகவே நசிகேதன் மிகப் பெரிய தந்தைக்குப் பிறந்த பெரும் தந்தையின் மகன். அன்னை சுருதி இந்த பாலனுடைய பண்பாட்டின் துல்லிய பரம்பரையைக் குறித்துக் காட்டியிருக்கிறாள்.

இந்தப் பகுதியில் நசிகேதனின் சித்திரத்துக்குச் சிறப்புத் தரும் ஒவ்வொரு நிச்சயமான குறிக்கோட்டைச் சேர்க்காத சுலோகமே இல்லை. இரண்டாவது சுலோகத்திலேயே பார்க்கலாம். அது வெற்றுச் செய்தியைச் சொல்ல வந்ததுதான். என்றாலும் அதில் மணிபோன்ற அந்த சிரத்தை என்ற சொல் சில சொல்லுகிறது. சம்ஸ்கிருதத்தில் சிரத்தை என்ற சொல் லுக்குப் பொருள் அதிகம். அது சுட்டும் புனிதக் குறிப்புக்கள் நிறைவு. ஆகவே அதை ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்ப்பது என்பது அநேகமாய் இயலாத ஒன்றே. ஒரு கால் 'இந்த நிலையிலோ அல்லது வரும் ஒரு நிலையிலோ கொள்ளும் நம்பிக்கை' என்று சொல்வது கிட்டத்தட்ட சரியாயிருக்கலாம் என்று இந்தச் சாது கருதுகிறார்.

இந்த மொழி பெயர்ப்பும் கூட முதலில் பார்த்தவுடனே மிகவும் நீட்டிப் பெற்ற பொருள்போல் தோன்றும். ஸ்ரீ சங்கர பகவத் பாதாளுடைய பாஷ்யம், சிரத்தையை குருவின் வசனங்களில், சாஸ்திரங்களின் உபதேசங்களில், மனச் சாட்சியின் ஆதேசங்களில் ஒருவன் கொள்ள வேண்டிய கலங்காத நம்பிக்கையைக் குறிக்கிறது. உத்தம சிடனுக்கு 'ஆறு குணங்கள்' மிகவும் தேவையான ஒரு தகுதியாகும். அக் குணங்களுள் சிரத்தையும் ஒன்றாகும். ஒரு வேதாந்த சாஸ்திரத்தில் நம்பிக்கை (சிரத்தை)யில்லாதவன் அதன் உபதேசங்களைப் பின்பற்ற மாட்டான். இந்தக் காலத்து நவீன இளைஞர்கள் சிரத்தை என்றால் இயற்கையை மீறிய ஒரு சக்தி அல்லது ஒரு வேகத்தினிடம் கொள்ளும் நம்பிக்கை என்று தப்பாகப் பொருள் கொள்ளுகிறார்கள். அவர்கள் கொண்டுள்ள கருத்துப்படி பார்த்தால் சிரத்தை என்பது அவர்கள் ஆற்றும் ஆற்றலுக்கு இலக்காகக் கொள்வது சரிதான். ஆனால் சிரத்தை அந்தப் பொருளைக் கொள்ளாது. அது நம்பிக்கையை மட்டும் தான் குறிக்கும்.

இந்த உலகத்தில் யாரும் உண்மையில் நம்பிக்கை இல்லாமல் எதுவும் செய்துவிட முடியாது.

உதாரணமாக, நம்முடைய இயற்கையிலிருந்து நம்பிக்கை என்ற மனோபாவத்தை அறவே நீக்கி விடலாம். அப்பொழுது என்ன நடக்கும்? இந்த யாக சாலையைவிட்டு எழுந்து நடந்து வீட்டுக்குக் கூடப் போக உங்களால் ஆகாது. ஏதோ வேலைக்கு நீங்கள் மனுப் போட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். எடுத்த எடுப்பில் உங்களுக்கு முன் அனுபவம் என்ற ஒன்று இருந்திருக்கவே போவதில்லை! ஆனாலும், நம்பி வேலை ஒப் படைக்கப்பட்டால், அனுகூலமான சந்தர்ப்பங்களும் வாய்க்கு மானால் மேலதிகாரி திருப்தி கொள்ளும்படி வேலையைச் செய்வோம் என்ற ஓரளவு நம்பிக்கை உங்களிடம் இருக்கத் தானே செய்கிறது? இந்தப் பொருளியல் உலகில், இந்த நம்பிக்கை இல்லாமல் ஒருவரும் உயிர் வாழ முடியாது. சிலரிடம் இந்த நம்பிக்கை சூனியமாயிருக்கிறது. அவர்கள் பித்துக்குள்ளி களாகவோ அல்லது காற்றுச் சேஷ்டையுடையவர்களாகவோ, பேயாடுகிறவர்களாகவோ இருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்க ளிடம் சுயநம்பிக்கை அறவே அற்றுப் போகிறது. இருந்த இடத்திலிருந்து எழுந்து செல்லவும் அஞ்சுகிறார்கள், சென்றா லும் வழியில் காணப்படும் சிறு கல்லைக் கூடத் தாண்ட அஞ்சி அதைச் சுற்றி வளைத்துச் செல்கிறார்கள். வேதாந்த விசாரணை உலகிலும் நமக்கு முதலில் குருவினிடம் நம்பிக்கை வேண்டும். சாஸ்திரங்களில் நம்பிக்கை வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நம்மிடமே நம்பிக்கை வேண்டும். அப்பொழுது தான் வேதாந்தப்படி வாழ்க்கை நடத்த முடியும். அதன் ஆசியின் பலன்களையும் துய்க்க முடியும்.

"நம்பிக்கை என்பது மிக உதாரமான கொள்கைகளைக் கைக்கொண்டு அவற்றின் பயனாய் வீழவோ வாழவோ கொள் ளும் உறுதி"—எப். மையர்ஸ்.

**பீதோதகா, ஜக்த-ருணா-துக்த-தோஹா நிரிந்திரியா ;**
**அனந்தா நாம தே லோகாஸ் தான் ஸ கச்சதி த ததத்**

3. (அப் பசுக்கள்) கடைசி முறையாக நீர் குடித்து, புல் தின்று தம் பாலை எல்லாம் தந்துவிட்டு மலடாய்விட்டிருந்தன.

இப்படிப்பட்ட பசுக்களை (யாகத்தில்) தானம் தருபவன் அடையும் யோகங்கள் நிச்சயமாக இன்பம் தருவனவாக இருக்க முடியாது.

இந்தச் சுலோகம் ஆன்மாவின் சங்கீதத்தை வெளியிட உப யோகப்படுத்தப்பட்டுள்ள தலை சிறந்த கவிதைக்கு ஓர் உதாரண மாகும். மிக அதிகமான கருத்தை மிகச் சிறிய அளவில் உள்ள ஒளி பொருந்திய சொற்களைச் சிக்கனமாக உபயோகித்து வெளி யிடும் கலைத்திறம் கொண்ட சொல்லுபயோகம் இந்தச் சுலோ கத்தைப்போல் வேறு எதிலும் பார்க்க முடியாது. நான்கு உரிச் சொற்கள், தானம் கொடுக்கப்பட்ட பசுக்களைப் பற்றிச் சொல்கின்றன. அவை நான்கும் சேர்ந்து படிப்பவருக்கு அப்பசுக் களின் பரிதாபமான நிலையை எவ்வளவு முழுமையாகச் சித்தி ரித்து விடுகின்றன. இனி அப் பசுக்கள் புல் தின்னவோ தண் ணீர் குடிக்கவோ முடியாது. ஆகவே ஒரு உருண்டை சாணிக் குக்கூட அவை உபயோகப்படப் போவதில்லை. அவை கிழப் பசுக்கள். பால் தருவது என்பது குதிரைக் கொம்புதான். அவை களில் பல பால் வற்றியவை. ஒருகால் நொண்டியாகவும் இருந்திருக்கும்!

அதற்காக இந்தச் சுலோகம் சொல்லழகை வெளிப்படுத்த மட்டும் எழுதப்பட்ட அர்த்தமற்ற விளையாட்டுமல்ல! சுருதி ஒருபொழுதும் அதிகம் பேசும் விளையாட்டில் ஈடுபடுவதில்லை. சொற் செட்டும் பரந்த கருத்துகளின் சுட்டுமே உபநிஷத நடையாகும். இந்தச் சுலோகத்திலும், காவியக் கலை வெளியா வது தவிர வேறு ஒரு பயனும் பெறப் பெறுகிறது.

அதாவது நசிகேதனுடைய சித்திரத்துக்கு மீண்டும் ஒரு கோடும் ஒரு நிழலும் கிடைக்கிறது. ஒன்பது வயதுப் பையன் சாஸ்திரம் எடுத்துச் சொல்கிறான். "யாகம் செய்தவன் புரோ கிதர்களுக்குத் தானம் தருவதில் கருமித்தனம் காட்டினால் ஆனந்தம் இல்லாத லோகங்களுக்குச் செல்வான்" என்று அவன் சொல்கிறான் என்றால் அவன் படிக்காத பையன் என்று சொல்ல முடியாது. அதற்கு நேர்மாறாக, சாஸ்திரங்களின் பாடங்களை அவன் நன்கு தெரிந்துகொண்டிருந்தான் என்பதல்லவா வெளியாகிறது.

ஸ ஹோவாச பிதரம் தத கஸ்மை மாம் தாஸ்யஸீதி
த்விதீயம், த்ருதீயம் தம ஹோவாச ம்ருத்யவே த்வா
ததாமீதி.

*4. அவன் பெரியவரிடம் சொன்னான், "தந்தையே, என்னை யாருக்குக் கொடுக்கிறீர்கள்?" அவன் இதை மீண்டும் மீண்டும் மூன்றுவது தடவையாகச் சொன்னான். அப்பொழுது (கோபமடைந்த அவன் தந்தை) "யமனிடம் தருகிறேன்!" என்று சொன்னார்.*

இந்த உபநிஷத்தில் நன்றாக இழைத்த சொற்களின் சட்டங்களின் இடைவெளி வழியாகப் பார்க்கிறவன் கௌதமரின் வீட்டின் மறக்க முடியாத சித்திரத்தைப் பார்க்காமல் இருக்க முடியாது. வாசலில் முற்றத்தில், தானம் பெறக் குழுமி நிற்கும் புரோகிதர்கள்; பாவம், அந்தச் சோனிப் பசுக்களை அழைத்து வந்து ரித்விகர்களுக்கு (யாகத்தைச் செய்துவைக்கும் புரோகிதர்களுக்கு) கொடுத்துக்கொண்டிருக்கிறார் தந்தை. ஆளோடியில் குழந்தை நசிகேதன் நிற்கிறான். உள்ளே ஏற்பட்ட குழப்பத்தினால் முகம் மங்கி நிற்கிறான். பலனை விரும்பும் (உசன்) தந்தைக்கு அவர் செய்யும் யாகத்தின் பலன் கிட்டவேண்டுமே என்று அவனுக்குக் கவலை. ஆனால் அவனுக்குச் சாஸ்திரம் தெரியும். விசுவஜித் என்ற யாகம் செய்பவன் தன்னிடமுள்ள எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும். அப்பொழுதுதான் யாகம் முழுவதும் வலுப் பெறும். ஆனால் கிழவரோ, பற்றுக் காரணமாகவும் மறையக்கூடிய சொத்தின் மேல் உள்ள உரிமையின் தூண்டுதலாலும் சாஸ்திரத்துக்கு லஞ்சம் தர முயலுகிறார். சாஸ்திரங்கள் விதித்த விதிகளுக்கும் மமதை தூண்டிய ஆசைகளுக்கும் ஒரு பாலம் போடுகிறார். நசிகேதன் உள்ளம் குமுறுகிறது. அவன் குமுறல் வெளியேயும் அவன் செய்கையில் பிரதிபலிக்கிறது. 'பெரிய ஆபத்தல்லவா தந்தைக்கு வரக் காத்திருக்கிறது' என்று நசிகேதன் அறிகிறான்.

தந்தையிடமுள்ள கடமையுணர்ச்சி மேலோங்கவே, நசிகேதன் நேரே தன் தந்தையிடம் போகிறான். பசுவைத் தானம் செய்துகொண்டிருக்கும் அவரிடம், "அப்பா, என்னை யாருக்குத் தானம் செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்கிறான்.

யாகம் விசுவஜித் யாகம். அதைச் செய்பவனே தன்னுடையது என்று சொல்லக்கூடிய எல்லாவற்றையும் தானம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். ஆகவே பையனும் தந்தையை அணுகித் தன்னையும் சந்தோஷமாகத் தானம் செய்துவிடும்படி சொல்கிறான். உண்மைதான், தனக்குச் சிறந்த கதி (சிறந்த ஓர் உலகத்தின் அனுபவம்). வேண்டும் என்பதற்காக எந்தத் தந்தைக்கும் தன் குழந்தையைத் தானம் செய்ய உரிமை கிடையாது. எப்படியும் தனி வாழ்வுக்குரியவன் என்ற வகையில் குழந்தைக்குத் தன் தந்தையிடமிருந்து அடைய வேண்டிய உரிமைகளைக் கேட்க நியாயம் உண்டு. என்றாலும் நசிகேதன் இப்பொழுது இந்த உரிமைகளை எல்லாம் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமைகளுக்காகப் பலியாகச் சமர்ப்பிக்கிறான். அந்தக் கருத்தில்தான் அவன் தந்தையிடம் தன்னையும் தானப் பொருளாகச் சமர்ப்பிக்கிறான் என்று கொள்ளலாம். அல்லது தந்தை பெரிய ஒரு சந்தர்ப்பத்தில் அசட்டுத்தனமாய் நடந்து கொள்கிறார். அவருடைய மனச் சுத்தத்தைச் சோதிக்கும் சமயம் அது. அந்தச் சமயத்தில் அவர் மிகவும் வெட்கப்படும்படி தன் கருமித்தனத்தைக் காட்டுகிறார். அந்தக் கருமித்தனம் அவரையே அழித்துவிடும். ஆகவே அவர் அசட்டுக் கொள்கையைப் பற்றிக் குறைகளை எடுத்துக் காட்டப் பல சொல்லலாம். அவ்வளவையும் குறிப்பாக உணர்த்த என்று அவன் கெட்டிக்காரத் தனத்துடன் சூசகமாக இவ்விதம் செய்திருக்கலாம்.

கிழப் பிராமணர் சாஸ்திரங்களை நன்றாய் அறிந்தவர், ஆனால் அது நூலளவில்தான். தன்னுள் குழப்பம் தரும் எண்ணங்கள், ஆளைக் கீழ்நிலைக்கு வீழ்த்திவிடும் ஆசைகள் இவைகளுடைய மூச்சு முட்டும் புகைமண்டலத்தைத் தாண்டிய தெளிந்த முனிவரோ சாதுவோ அல்ல அவர். சாதுவாக இருந்திருந்தால் விருப்பம் தூண்டும் இந்த யாகத்தையே செய்திருக்க மாட்டார்.

அவரிடத்தில் சொத்தில் உள்ள பற்றுணர்ச்சியே மிகப் பிரமாதமாக இருப்பது தெரிகிறது. அதன் பயனாகத் தான் ஏற்றுக் கொண்ட தர்ம நியாயம் என்ற போர்வையிலும், ஒரு தந்தைக்கும் தன் சுயநலத்துக்காகத் தன் குழந்தை உயிரைத் தியாகம் செய்ய உரிமை கிடையாது என்ற பெரிய கொள்கை காரணமாக

வும் அவர் தன் ஒரே குழந்தையைத் தானம் செய்ய மாட்டார் என்று நசிகேதன் பயந்தான்.

இங்கே ஒரு விஷயம்: இப்படிக் கருத்துக் கொள்வது செயற்கையாகக் கொள்ளப்பட்டதாகப் படலாம். கனவு என்று எண்ணலாம். ஆனால் அப்படி எண்ணவேண்டியது இல்லை. மனிதன் மனம் இன்னும் பெரிய கனவு எல்லாம் கொள்வது உண்டு. எவ்வளவோ முறை சோதனை வந்த காலத்தில் நாம் ஆசைகளுக்கு அடிபணிந்து விடுகிறோம். பூர்ணத்துவத்தின் உயரத்திலிருந்து கீழே விழுந்து விடுகிறோம் என்று தெரிந்து கொண்டேதான் அப்படிச் செய்கிறோம். அப்படி நேரும்போது நம் மனமே நம்மை நாசம் செய்ய எவ்வளவு உதவி புரிகிறது! நாம் செய்த பிசகைச் சரி என்று சொல்ல அது எவ்வளவு பொல்லாத பொய்களைச் சிருஷ்டித்து நமக்குச் சாட்சி தருகிறது!

கிழவருக்குச் சிறு பையன் பிடிவாதம் தொந்தரவாகிவிட்டது. சகிக்க முடியாத தொந்தரவாகி விட்டது. முதலில் கிழவர் பையன் திரும்பத் திரும்பச் சொன்னதை அலட்சியம் செய்திருக்கலாம். ஒரு கால் ஓர் அதட்டல் போட்டு, ‘பொத்து வாயை!’ என்று அதட்டியும் இருக்கலாம். ஆனால் பையன் மூன்றும் முறையும் கேட்டு விட்டான். சில்லறைத் தொந்தரவில் ஆத்திரமும் அலுப்பும் அதிகமாக அவர் கோபத்தில், “போடா, யமனுக்கு நீ தத்தம்!” என்றார். அவர் உண்மையில் அப்படி எண்ணி இருக்க மாட்டார். கோபத்தில் தன்னை மறந்து கொடுத்த பொருளற்ற சாபம் தான் அது.

நிச்சயமாக அவர் சொன்ன வார்த்தைகள் மனப்பூர்வமாக எழுந்தன என்று நாம் கொள்ள வேண்டாம். உபயோகமற்றவையாக ஆகி, கிழத்தனம் அடைந்து மலடாகி நிற்கும் பசுக்களைவிடச் சிறந்த பொருள்களைத் தானம் செய்யத் துணியாத ஒரு பிராமணனிடம் யமதர்மராஜனுக்குக் காணிக்கையாக, உள் அன்புடனும் தானம் செய்ய வேண்டும் என்ற நல்ல மனப்பாங்குடன் தன் ஒரு குழந்தையைக் கொடுக்கக் கூடிய பரந்த உள்ளம் இருந்திருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

**பஹூனு-மேமி ப்ரதமோ, பஹூனு-மேமி மத்யம :**
**கிம்ஸ்வித், யமஸ்ய கர்த்தவ்யம், யன்மயாத்ய கரிஷ்யதி.**

5. (நசிகேதன் எண்ணினான்.) பலருக்கு முன் செல்கிறேன். பலருக்கு நடுவில் செல்கிறேன். யமன் (தானமாகச் செல்லும்) என்னை (அடைந்து) செய்வதற்கு என்ன இருக்கிறது?

இந்தச் சுலோகம் முழுப் பண்பும் பெற்ற ஓர் அறியாக் குழந்தை தன்னுடன் பேசிக் கொண்ட பேச்சாகும். அந்தக் குழந்தை வேதம் தந்த வழியில் பிறந்தவன். வேத வழிப் பண்பாடாகிய பாலைக் குடித்து வளர்ந்தவன். தந்தை இந்த விழிப் புலகத்திலிருந்து சாவுலகத்துக்கு அனுப்பி விட்டார். நசிகேதன் வேலையில் ஈடுபட்டுத் தன்னையும் மறந்து பேசும் தந்தையின் முன்னிலையிலிருந்து நகர்ந்து நிலையை எண்ணிப்பார்த்துத் தெளிய முயலுகிறான். இது முதிர்ந்த ஆன்மாவின் உண்மை அடையாளம். சோதனைச் சமயம் வந்தால் முதிர்ந்த அறிவு குழம்பி நிற்காது. அது தன்னுள் புகை மண்டலத்தைப் படிய விட்டுக் கொண்டு கலங்கி நிற்காது. உணர்ச்சிக்கு இடம் தந்து பித்துப் பிடித்த ஆவேசத்திற்கு ஆளாகி அதன் கட்டற்ற விளையாட்டுக்கு இடம் கொடுத்து விடாது. அல்லது ஏற்பட்டிருக்கும் சோதனைக்கு அஞ்சி அடி பணிந்து செயல் களத்திலிருந்து ஓடிச் சோம்பல் கொண்டோ திகைத்துப் போயோ ஒளிந்து நிற்கவும் அந்த அறிவு இடம் கொடுத்து விடாது.

இங்கே நசிகேதனுக்கு அவன் வெளியுலக சம்பந்தம் பற்றிய மட்டில் அவனைச் சுற்றியுள்ள சூழ்நிலையில் எதிர் பாராத ஒரு மாறுதல் சடக் என்று ஏற்பட்டுப் பேரிடி போல் விழுந்து விட்டது. உண்மையாக முதிர்ந்த அறிவு கொண்டவன் அவன். ஆகவே நன்கு அலசித் தெரிந்து, சரி—தப்பு ஆராய்ந்து, தெளியத் தனித்துச் செல்கிறான்.

அந்த அமைதியில் அவன் என்றும் உண்மையாக இருக்கும் சாஸ்திரங்கள், பண்டிதர்களான குருமார்களின் வார்த்தைகள் இவைகளை ஞாபகப்படுத்திக் கொண்டு தன் சமநிலையை அடைய முடிகிறது. சீடனோ, புத்திரனோ எப்பொழுதும் தன் குரு அல்லது தந்தைக்கு அடங்கி அவர் வார்த்தைகளைக் கேட்க வேண்டும், அதில் முன்பின் யோசனையே கூடாது என்பது ஆரிய நெறி, சாஸ்திரம் விதித்த வழி. குருவிடம் சேவிக்கும் சீடர்கள் தங்கள் கடமைகளைச் செய்யும் முறையால் மூன்று விதமாகப் பிரிக்கப்படுவர்: (1) உத்தமன் (2) மத்தியமன் (3) அதமன்,

உத்தம சீடர்கள் குருமார்கள் விரும்புவதைச் சொல்லு முன்னமே குறிப்பால் அறிந்து சேவை செய்வார்கள். மத்யமர்கள் குருமார்கள் வாய் துறந்து சொன்னதைத் தவருமல் கேட்பார்கள். அதமர்கள் குருமார்கள் வாய்திறந்து கேட்டுக்கொண்டும் செய்யாத ஈனர்கள். இழுக்குக்கு உரியர்கள். இங்கே நம் கதையில் கௌதமர் நசிகேதனின் தந்தைமட்டுமல்ல. குருவுமாவார். ஆகவே இந்தப் பேச்சு சீடன்—மகன் என்கிற நசிகேதனுடைய சொல்லாகும்.

மேற்கண்ட சாஸ்திர விதியை வைத்துப் பார்த்தால் இந்தச் சுலோகத்தில் சொல்லியபடி நசிகேதன் எண்ணும்போது அவன் மனதில் சரியாக என்ன எண்ணங்கள் இருந்தன என்று நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். குருவும் தந்தையுமான அவர் எதிர்பார்ப்பனவைகளைச் செய்ய அவன் எப்பொழுதும் தயாராகவும் புத்திசாலியாகவும் இருந்தான். சிலசமயம் மத்தியம சீடனுகவும் ஆகியிருந்திருக்கலாம். அந்தச் சமயம் குருவின் கட்டளையை அறியாமல் அவர் உத்தரவை வெளிப்படையாகச் சொல்லாமல் இருக்கும் வரை செய்யாமல் இருந்திருக்கலாம். என்ருலும் அவன் ஒரு நாளும் அதம சீடனுகத் தெரிந்தோ தெரியாமலோ கூட இருந்ததில்லை. இப்பொழுதும் குருவும் தந்தையுமான அவர் சொல்லியதைக் காப்பாற்றும லிருந்து அவன் ஏன் அதம சீடனுவான்? ஆகமாட்டான்: இப்படித்தான் அவன் எண்ணங்கள் ஓடியிருக்க வேண்டும்.

பையனுக்கும் தெரியும். அவன் தந்தை தன்னையும் மறந்து சொல்லியதே தவிர அந்தச் சொல்லுக்கு அது கருத்தல்ல என்று. சனுதன தர்ம சாஸ்திரத்தில் விட்டுக் கொடுத்துப் பேசுவது என்பது கிடையாது. அறநெறியும் நன்னெறியும் காக்க வேண்டுமென்ருல் அது சொல்கிறபடி அப்படியே முழுவதும் செய்ய வேண்டும். நம் இஷ்டத்துக்கும் சௌகரியத்துக்கும் தக்கபடி அர்த்தம் செய்வதும் கிபந்தனைகொள்வதும் பொறியின்பம் விரும்பும் நம் இயற்கையின் நடுத்தெருவில் அதைச் சிரழிப்பதாகும். நண்பர்களே! விட்டுக் கொடுத்து இறங்கிய தர்மத்தை அரைகுறை மனத்துடன் கடைப் பிடிப்பதைக் காட்டிலும் வெளிப்படையாக அதர்மத்தைக் கடைப் பிடிப்பது நல்லது.

நம் தாய் நாடு என்ற கோவில் இந்த விதம் தப்பர்த்தம் செய்த ஹிந்து சனதன தர்மத்தின் சிதைவுகளைக் கடைப் பிடித்த காரணத்தால் வெட்டுப் பட்டுப் பிளந்து நிற்கிறது. ஒரு கால் நமக்கு ஒளிவு மறைவில்லாத 'அதர்மி'களாக வாழவாவது மிருக வலிவு இருந்திருக்குமானல் கூட, நாம் இன்று உலகியல் வாழ்விலாவது சிறந்த நிலையில் இருந்திருப்போம். தர்மவழியில் நடக்க நம்மிடம் ஆன்ம வலிவும் இல்லை. நேர்அ தர்மி களாக வாழ வேண்டிய உடல் வலிவும் இல்லை. பெண்மைக்குரிய பயம் கொள்ளித்தனம் காரணமாய் அதர்மத்துக்கு விட்டுக் கொடுத்து நாம் அழிவுக்கு ஏதுவுமான முறையில் ஒன்றுக் கொன்று விபரீதமான இரண்டு வழிகளைப் பின் பற்றுகிறோம். தர்மம் போல் தோற்றம் தரும் அதர்ம வாழ்வு ஒரு வழி. அதர்மம் போன்ற தர்மவாழ்வு மற்றொரு வழி.

நசிகேதன் இவற்றை எல்லாம் தேர்ந்து தெளிந்தவன். பொருள் கொள்வதில் ஏமாறுவதற்கு இடம் கொடுக்க அவன் ஒப்புக் கொள்ளவில்லை. உண்மையின் நித்தியமான மதிப்புகளை அசட்டு மோகங்களுக்கு ஏற்றவாறு மாற்றி நம் விருப்பத்துக் கேற்றவாறு அமைத்துக் கொள்ள முயலுவது மிகப் பெரிய பாவம். அதனல்தான் தான் யமனிடம் அனுப்பப் பட்டதில் சந்தேகம் கொள்ளாது, 'இப்படி அனுப்பப்பட்ட என் மூலம் யமன என்ன சாதித்துக் கொள்ளப் போகிருன்' என்று யோசிக்கத் தொடங்கி விட்டான்.

வாழ்க்கையின் இலட்சியத்தை உண்மையாக அடைய விரும்பும் மாணவர்களுக்கு இங்கே ஒரு புனிதமான வழிக் குறிப்புக் கிடைக்கிறது. நசிகேதனுக்குத் தந்தை உண்மையில் அவ் விதம் எண்ணவில்லை என்பது தெரியும். தந்தையே குரு; குருவின் சொற்கள் பொருளற்றவையாக ஆகா என்பதும் அவனுக்குத் தெரியும். நம் புராணங்களிலேயே பெரிய குருமார்கள் வாயிலிருந்து அவசரமாகச் சொல்லப்படும் வார்த்தை முடிவில் பலிப்பதைக் குறிக்கும் அநேக கதைகள் இருக்கின்றன. அதில் ஒன்றும் அதிசயமும் இல்லை. அது அப்படித்தான் இருக்கும். ரேடியோ தில்லிக்குத் திருப்பப்பட்டால் அப்பொழுது கேட்கப்படும் பாட்டு தில்லியில் பாடப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும். ரேடியோ தன் இஷ்டப்படி பாடவோ பேசவோ

செய்யச் சக்தியற்றது. அதேபோலத் தெய்வ நிலையை அடைந்துள்ள மனிதன், ஆன்மாவின் தன்னிலையில் பூர்ணத்துவத்தை அடைந்து அந்தப் பரந்தவத்துக்குத் தன் 'ரேடியோ'வைத் திருப்பி வைத்திருக்கும்போது பொருளற்ற வார்த்தைகள் பேசவே இயலாது. அவன் கருத்துக்கள் எல்லாம் பூர்ண மனத்தில் எழும் எண்ணங்கள். அவன் பேசும் சொற்கள் தெய்வ முடிவின் சிதைக்க முடியாத சொற்கள். இந்த அறிவு பூர்வமான உணர்வை ஒவ்வொரு சீடனும் தன் குருவிடம் கொண்டிருக்கவேண்டும்: அப்பொழுதுதான் ஆன்மீகத் துறையில் அவனுக்குக் குருவினுடைய அருளால் பயன்பெற முடியும். இந்த நித்தியமான கொள்கையை அறிந்து அதன்படி ஒழுகுபவன் நசிகேதன். ஆகவே தன் குருவின் வார்த்தைகளுக்கும் பொருளுக்கும் சம்பந்தம் இருக்காது என்று சந்தேகம் கொள்ளவேயில்லை. அவை தந்தை மகனிடம் கோபமடைந்த சூடான வேளையில் எண்ணத்துடன் இயைக்காமல் சொன்ன சொற்கள் தான் என்றாலும் அவைகளின் பொருளின்படி அவன் நடக்கத் தயாராகிவிடுகிறான். அதனால்தான்போலும் கடைசியில் அந்தச் சிறந்த மாணவன் யமன் சாலஷியில் இருந்து உயர்வுகளில் உயர்ந்த பொக்கிஷத்தையும் சாதனையையும் தனதாக்கிக் கொள்ள முடிகிறது.

"யமன் என்னுடன் செய்கின்ற வேலை என்னவாக இருக்கும்?" இந்தச் சொற்கள் வெளியிடப்பட்ட பேச்சு. அது அதற்குப் பின்னுள்ள தெய்வீகமானதும் சூட்சமமானதுமான ஒரு மனோ நிலையை எடுத்துக் காட்டுகிறது. தர்ம பாடங்கள் காட்டும் வழியைப் பின்பற்றியே தீருவதென்று அச்சிறுவன் நல்லதொரு முடிவைச்செய்து விட்டான். இப்பொழுது அவனுக்கு ஒரே பரபரப்பும் அதனால் ஏற்பட்ட ஆச்சரியமுமே. 'யமன் என் மூலம் எந்தப் பெரிய ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் போகிறான்? என்னென்ன வரக் காத்துக் கொண்டிருக்கிறது? குருவின் வார்த்தைகளோ பொய்க்கப் போவதில்லை. இதை எல்லாம் அறிந்து கொள்ளும் சமயம் எப்பொழுது ஏற்படும்?' என்ற துடிப்பு அவனைக் கொள்ளை கொண்டு நிற்கிறது.

அனுபஸ்ய யதா பூர்வே, ப்ரதி பஸ்ய ததாபரே
ஸஸ்யமிவ மர்த்ய: பச்யதே, ஸஸ்யமிவாஜாயதே புன:

6. நம் முன்னோர்கள் நடந்து கொண்ட விதத்தைக் கவனி. தானியங்களைப் போல மனிதன் அழிகிறான், தானியங்களைப் போல மீண்டும் பிறக்கிறான்.

இந்தச் சுலோகம் பையன் தந்தைக்குச் சொல்லும் நேர்ப்பேச்சு. அவ்வளவு சுருதிகளும் தரும் ஞானங்களின் சாரம்; சனாதன தர்மமாகிற பாலில் கடைந்தெடுத்த வெண்ணெய். இந்தச் சுலோகம் புனர்ஜன்மமாகிற அந்தச் சிறந்த வேதாந்தக் கொள்கையைக் குறிக்கிறது. அந்தச் சித்தாந்தம் இந்து மதத்தின் முதுகெலும்பு போன்றது.

வாழ்க்கையின் ஆரம்பம் முடிவு இவை இருக்கும் இடங்களை அலசித் தெரிந்து கொள்ள எந்த உண்மையான அறிவாளியும் இந்த முடிவுக்குத்தான் வரவேண்டும்.

போன பிறவியில் செய்த கர்மம் என்ற ஒன்று இல்லை என்றால் இப்பொழுது வாழ்கிறவர்களினிடையே இந்த மாறுபாடுகள் இருக்க வேண்டியதில்லை. குஷ்டரோகியின் குழந்தை பிறந்தது முதலே அந்த அருவருப்பு வியாதிக்கு இரையாகித் தவிக்க வேண்டியிருக்கிறது. அதே சமயம் ஓர் அரண்மனையில் மணி மகுடம் தரிக்கவும் அரியணை ஏறவும் அதிர்ஷ்டம் பெற்று அரசன் மகனாக இன்னொன்று அவதரிக்கிறது! ஏன்?

இந்த வாழ்க்கை இறைவனிடமிருந்து நேராகக் கிடைத்து வந்தது என்று கொண்டோமானால் போற்றலையும் பெரும் வலிவையும் கொண்ட சிருஷ்டிகர்த்தா கொடுங்கோலன். சாதாரண அழியும் அரசர்கள் போல அவனும் மனம் போனபடி தன்னிஷ்டமாக வரமருளுகிறான் என்ற முடிவுக்கு வரவேண்டியதாகும். சித்தம் போக்கு சிவம் போக்காய்ச் சில சமயம் நியாயமாயும் அநேகம் தடவைகளில் அநியாயமாயும், ஒரு தலையாயும் ஒரேமாதிரியல்லாமலும் நடக்கிற ஒரு பூதம் கடவுளாகுமா? அவர் பாதத்தில் பக்தன் தன் அன்புள்ளத்தைப் பக்தியுடன் சமர்ப்பிக்க இயலுமா? ஆனால் கடவுளைக் கொடுமனம் கொண்டவராகவும் ஒரு தலைப் பட்சமாகவும் அநியாயமாகவும், தன் விளைந்த ஆற்றல்களில் பைத்தியம் கொண்டவராகவும் கொள்ளும் எந்த மதமும் உலகத்தில் கிடையாது!

நாம் பார்த்து வரும் இந்தச் சுலோகம் ஒரு மிகச் சிறந்த உண்மையைக் குறிக்கிறது. இந்த நம் பிறப்பு அகஸ்மாத்தாக ஏற்பட்டதல்ல. நாமே ஏற்படுத்திக்கொண்ட ஒரு சங்கிலித் தொடரில் இறந்து மறைந்த ஒரு வாழ்வையும், வரவிருக்கும் ஒரு வாழ்வையும் பிணைக்கும் கணக்கான ஒரு கணுவே. இந்தச் சொற்கள் நம்மிலுள்ள இந்த 'அஹம்' இதற்கு முன் அநேக பிறப்புகள் எடுத்துவிட்டது என்று மட்டும் காட்டவில்லை, வருங் காலத்திலும் அநேக தோற்றங்கள் எடுக்க இருக்கின்றது என்றும் சொல்லுகின்றன. சுருக்கமாக இந்தப் பிறப்பு ஆத்மாவின் வெளி வாழ்வில் ஒரு சம்பவமே. (an Incident)

பரம்பரை பரம்பரையாக மக்கள் இந்த உலகத்துக்கு வருகிறார்கள், உண்டு வளர்கின்றார்கள், தங்கள் வமிசத்தை விருத்தி செய்கிறார்கள். கடைசியாகப் பின்னால் வரும் பரம்பரையின் புதுக்கூட்டத்துக்கு இடம் தந்து இறந்து மறைகின்றார்கள். காலப் பயிர்களின் பிறப்பு, வளர்ச்சி அழிவு இவைகளைக் குறிக்கும் மறக்க முடியாத உருவகத்தில் இக்கருத்து வெளியிடப்படுகிறது. பயிர்கள் மழைக் காலத்தில் வளர்கின்றன. நன்கு செழித்துப் பூக்கள் வருகின்றன. ஓரிரு மாதங்களில் அவை தங்கள வாழ்வின் பூரணம் ஏற்பட்டதற்கு அறிகுறியாக விதைகளை விட்டு மறைகின்றன. அதே போலவே மனிதனும் தம் குழந்தைகள் செழிக்க இடம் தந்து மறைய வேண்டியிருக்கிறது.

மனிதன் தன் வாழ்வும் ஓர் அளவுக்குப்பின் முடிந்தே தீரும் என்றும், காலத்தின் கணக்கில் பார்க்கும்போது தனி மனிதன் வாழ்வு ஒரு கணத்துக்கே சமானம் என்றும் தன் தந்தையிடம் குறிப்பாக உணர்த்துகிறான். பொதுவாகப் பெறப் படுகிற கருத்து: வாழ்வு இவ்வளவு சீக்கிரத்தில் அழிவதாக இருக்கும் பொழுது மோகங்களிலும், அசட்டுக் காமங்களிலும் வசப் பட்டு எதற்காக அதர்மத்தைச் செய்து நிறுத்த வேண்டும்? இது மிகவும் வலிவு கொண்ட வாதம், தந்தை நிச்சயமான ஒரு முடிவுக்கு வருவதற்கு உதவக் கூடியது. அதன் பயனாகக் குழந்தையை யமன் அரண்மனைக்குத் தந்தையின் புனிதச் சொற்களை நிலைநாட்ட அனுப்புவதற்கு அனுமதி தரலாம்.

தவிரவும் வாழ்வில் சிக்கலான மனப் போராட்ட நிலையில் தர்மத்தையும் அதர்மத்தையும் பிரித்து அறிய ஏற்ற சரியான

வழியை நசிகேதன் தன் தந்தையிடம் வாதிக்கிறன். எவ்வளவோ முறை அவ்விதம் நேரிடுகிறது. உண்மையான வேதாந்திகூடத் தர்மம் அதர்மம்என்று பிரித்து அறிய முடியாத நிலையில வாழ்வு வழியில் வழிமறப்பதுண்டு. அந்தச் சமயங்கள் அர்ஜுனனுக்கு ஏற்பட்ட நிலையை ஒத்தனவாகும் அப்பொழுது எல்லாம் சுருதி நமக்குக் கொடுக்கும் புத்திமதி. 'நம் முதாதையர் எப்படி நடந்தனர் என்று ஞாபகப்படுத்திக் கொள். இப்பொழுதும் மற்றவர்கள் எப்படி நடக்கிறார்கள் என்று பார்.' என்பதுதான்.

இது ஒரு கருத்துப் பொதிந்த புத்திமதி. இதை உண்மை வேதாந்திகள் எல்லோரும் கவனிக்கவேண்டும். அறநெறி அல்லது நீதிநெறியைப் பற்றிய கேள்விகள் நம் வாழ்க்கையில் அறைகூவி வரும்பொழுது மனத்தை நிம்மதியாக வைத்துக் கொண்டு ஆய்வுத் திறனையும் தீர்ப்புப் புத்தியையும் முன்பின் யோசிக்கச் செய்து சரியான முடிவை நடத்தத் தகுந்த வழியைப் பெறுவதென்பது எப்பொழுதும் இயலும் என்று சொல்லக் கூடிய காரியம் இல்லை. ஆகவேதான் உண்மைச் சீடனுக்கு, செயலுக்கு ஆகக்கூடிய ஒரு குறிப்பு இதோ இருக்கிறது. அந்த நேரங்களில் கடந்த காலத்திய பெரிய ஆசிரியர்கள் இதற்கு ஒத்த சூழ்நிலையில் என்ன செய்தார்கள் என்று யோசிக்க வேண்டும். ஒருகால், நம்மை எதிர்த்துள்ள நிலைமைக்கு ஒத்ததாகப் பழைய காலத்தில் ஒரு நிலைமை ஏற்படாமலே இருந்திருக்கலாம்; உதாரணமாக ஜன நெருக்கடி உள்ள டிராம் வண்டியில் செல்வதை எடுத்துக் கொள்வோம்; பழைய காலச் சேதிகளில் இதற்கு ஒத்த ஒரு சேதியைக் காணல் அரிது. ஆகவே இன்று இருந்து செயலாற்றும் பெரியவர்களின் வாழ்விலிருந்துதான் டிராமில் போகும்போது நடக்கவேண்டிய முறை, கைப் பிடிக்க வேண்டிய தர்மம் இவைகளை அறிந்தாக வேண்டும்.

ஆகவே பழங்காலப் பெரியார்கள் தற்காலப் பெரியார்கள் இவர்களின் நெறி தவறாத செயல்களைப் பற்றிக் கொண்டு இன்று எது நல்லது எது அல்லது என்பதை நாம் எப்பொழுதும் அறிந்து கொள்ள முடியும்.

**வைஸ்வாநர: ப்ரவிஸத்-யதிதிர்-ப்ராஹ்மணோ க்ரஹான்**
**தஸ்யைதாம் ஸாந்திம் குர்வந்தி, ஹர வைவஸ்வதோதகம்**

7. பிராமண விருந்தாளி வீட்டுக்குள் நெருப்புப் போல் நுழைகிறான். மனிதர்கள் அவனுக்குச் சாந்தியளிக்க இதைத் தருகிறார்கள். வைவஸ்வதா! நீர் கொண்டுவா.

முன் சுலோகத்துக்கும் இந்தச் சுலோகத்துக்கும் இடையே ஒரு பெரிய நாடக மௌனம். வேதத்தின் கர்ம காண்டப் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள கதையைத் தெரிந்து இந்த மௌனத்தை நிரப்பிக் கொள்ளவேண்டும் நசிகேதன் தந்தையைச் சமாதானப் படுத்துகிறான். உண்மையான ஆசிரியர்கள் முன் காலத்திலும் தற்காலத்திலும் கடைப்பிடித்து வந்துள்ள பெரும் ஆதரிசங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று தந்தைக்கு எடுத்துச் சொல்லுகிறான். பிறகு சிறுவன் தன் வீட்டைவிட்டு வந்து யமனின் ராஜ்யத்துக்குள் வந்து சேருகிறான். அங்கே யமனின் முன் வாசலுக்கு வந்து மூன்று இரவும் பகலும் தங்கிக் காக்க நேரிடுகிறது. யமன் இச்சமயம் தன் இடத்தில் இல்லை.

இங்கே சில அசட்டுக் கேள்விகளை அவசர புத்தியுள்ள வாசகர்கள் எழுப்பலாம். அவைகளுக்குப் பதில் சொல்லச் சின்மயா சற்று மௌனக்கெடுகிறார். சிலர்: 'அது எப்படி மனிதக் குழந்தை விரும்பியவுடன் யமலோகத்துக்குச் செல்ல முடியும்?' மற்றும் சிலர், 'இந்தச் சிறுவன் ஸ்தூல உடலுடன் அங்கே சென்றானா அல்லது சூட்சும உடல் கொண்டா?' இந்த அசட்டுக் கேள்விகள் எல்லாம் ஒரே அழுமூஞ்சித் தோற்றம் கொண்ட ஒரே குரலுடையனவே. அவைகளை எல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்துச் சொல்வது சத்தற்ற சந்தேகங்களுக்கு ஊர்வலம் நடத்துவது போலாகும்.

கனிவு அற்ற உள்ளங்களுக்கும் மூளைகளுக்குமே இம் மாதிரிக் கேள்விகள் தோன்றும். இது ஒரு கதை. மனிதர்கள் எவ்வளவு தூரம் விரும்பியபடி யமபுரி செல்ல முடியும் என்று சர்ச்சை செய்ய எழுந்ததல்ல. ஆனால் உண்மை விழையும் ஒரு வாழ்வின் சிடனைப் பேராற்றல் படைத்த ஆசிரியரான யமன் எதிரே கொண்டுவந்து சேர்க்க என எழுந்த கதை. கதையைக் கைவிட்டு அர்த்தமற்ற கேள்விச் சிக்கல்களில் புகுவது உபநிஷத்தின் பெருங்கருத்தை இழப்பதாகும்.

எந்த ஒப்புமையும் அம்சம் விடாமல் சரியாயிருக்கும் என்று கொள்ளுதல் தவறு. சரோஜா என்ற எழில் நங்கையின் முகத்தைக் கவி வர்ணிக்கிறான். அதைச் சந்திரனுக்கு ஒப்பிடு கிறான் என்றால் சற்றும் பிசகாத வட்ட வடிவமும் நடுவே சில கரும்புள்ளிகளும் கொண்டது அவள் முகம் என்று கொள் வது? அப்படிப்பட்ட மனக் கனிவு அற்ற மனிதர்கள் கவிதை வாசிப்பதை நிறுத்திப் பொழுதுபோக்குக்குக் கணக்குப்புத்தகங் களுடன் மண்டையை உடைத்துக் கொள்வதுதான் சரி. ஏனெனில் அவர்கள் கவிதை படித்துக் கல்விப் பயன் பெறப் போவதில்லை என்பது மட்டுமல்லாமல் தாம் வாசிக்கும் கவிதை யையே கொலை செய்து விடுவார்கள்.

யமதர்மராஜன் தன் வீட்டில் இல்லை. சிறுவனுக்கு மூன்று நாட்கள் தங்க நேர்ந்தது. தானே ஏற்றுக்கொண்ட உண்ணு விரதக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி மறுபடியும் கேள்விகளை ஆரம் பித்துவிடுதல் கூடாது. 'யமனுக்கு மனைவிகள் இல்லையா? அவர் கள் அங்கே இருந்தபோது இப்படி நடந்திருக்குமா?' என்று ஆச்சரியப்படுதல் பொருளற்றது. தன்னடக்கமும் கட்டுப் பாடும் பயின்றுதான் எந்த உண்மை நாடுபவனும் நல்ல பூரண ஞானமுள்ள குருவின் சாந்நித்யத்தின் வாயை அடைய முடியும் என்பதைத்தான் கதை நமக்கு அறிவுறுத்த விரும்புகிறது.

மூன்றாவது நாள் முடிந்த பிறகு யமராஜன் தன் இருப்பி டம் திரும்புகிறான். நாம் எடுத்துக் கொண்ட சுலோகம் அவர் மனைவியரோ மந்திரிகளோ சொல்லிய சொகுளாக இருந்தல் வேண்டும்.

நம் இந்து சாஸ்திரங்களில் பிராமண விருந்தாளி இரு புறமும் கூர்மையுள்ள ஆயுதமாகச் சொல்லப்படுகிறான். நம் முன் இருக்கும் நல்வழியை அடைத்து நிற்கும் காட்டுச் செடி களையும் முட்புதர்களையும் அதனால் வெட்டி வழியைச் சுத்தம் செய்யவும் உபயோகித்துக் கொள்ளலாம், அல்லது அதையே எடுத்துக் கழுத்தையும் அறுத்துக் கொள்ளலாம்.

விருந்தாளியை நெருப்புடன் ஒப்பிட்டிருப்பது மிகவும் தகுதியே. வேதகால பூஜைகளில் அடுத்த உலகத்தில் நன்மை யடையப் பொதுவாகத் தீயைத்தான் முக்கியமாக உபயோகித்

தார்கள். அதே சமயத்தில் நெருப்பு வீட்டையும் எரித்து வீட்டுக்காரருக்குத் தீமையையும் துயரையும் விளைவிக்க முடியும். இங்கே ஒரு விஷயம் கவனிக்கத் தக்கது. தற்காலச் சமூகத்தில்கூடப் படித்த பண்பாடு நிறைந்த விருந்தாளி எப்பொழுதும் மதித்து மரியாதை செய்யப்படுகிறான். இங்கே பிராம்மணன் என்றால் ஏதோ திடீர் என்று ஏற்பட்ட பிறவியின் சம்பந்தத்தால் அந்தப் பெருமையை ஏற்றுக் கொள்கிறவனைக் குறிக்கவில்லை. தனியே, சொந்தமாகவே, பண்பாட்டுச் சுத்தத்தையும் மனது புத்திச் சக்திகளையும் பிரதிபலிக்கும் ஒரு பெரியவனைத் தான் குறிக்கிறது.

ஆஸா, ப்ரதீக்ஷே, ஸங்கத(உ)ம் ஸூந்ருதாஞ்
சேஷ்டா பூர்த்தே புத்ரபசு(உ)ம்ஸ்ச சர்வான்
ஏதத் வ்ருங்க்தே புருஷஸ்யா அல்பமேதஸோ
யஸ்யானஸ்னன் வஸதி ப்ராஹ்மணோ க்ருஹே

8. ஆசை, நம்பிக்கை (எதிர்பார்த்தல்), நல்லவர்கள் சேர்க்கை, நட்புப் பேச்சுக்கள், தியாகங்கள் (யாகங்கள்), தெய்வம் தந்த பரிசுகள், புத்திரர்கள், பசுக்கள்—இவை எல்லாம், உணவு பெறாமல் பிராம்மணன் தங்கிய வீட்டின் அசட்டு உரிமையாளன் விஷயத்தில் அழிகின்றன.

சனாதன தர்மம் அழிவுறும் மனிதன் வீடுகளை மட்டும்தான் கட்டுப்படுத்துகிறது என்பதில்லை. யமன் அரண்மனையில்கூடச் சாஸ்திரங்கள் பேசப்படுகின்றன. அவை தப்பிதமின்றி ஒழுகப் படுகின்றன. அறிவும் பண்பும் கொண்ட ஒருவனை வேண்டுமென்றே அவமதித்தால் என்ன பலன் கிடைக்கும் என்று இந்தச் சுலோகம் வரிசைப்படுத்துகிறது.

சாதுவான விருந்தாளியை அவமதித்தவன் வாழ்வில் ஆசைகளும் நம்பிக்கைகளும் பொசுங்கி விடுகின்றன. இங்கே ஆசை (hope) என்பது அறியாத ஒன்றை அடைய விரும்புவதாகும். அதற்கு உதாரணம் சுவர்க்கம். எதிர்பார்ப்பது (பிரதீட்சை) தெரிந்த பொருள்களை அடைய நம்பிக்கையுடன் எதிர்நோக்கி நிற்றலாகும். அந்தப் பொருள்களுக்கு உதாரணம், நிலம் புலம் முதலிய உலகியல் பொருள்கள், உறவு முதலியனவாம்.

சாதுவான விருந்தாளியை அவமதிக்கிற கிருகஸ்தனை சுருதி அறிவிலி (அல்ப மேதசா) என்று அழைக்கிறது. இன்று நம் சமூகத்தில் தானத்தையும் தர்மத்தையும் மறந்து இருக்கும் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால் சுருதியின் பேச்சுப் படி நம்முடையது முட்டாள்களின் தலைமுறை என்றுதான் சொல்ல வேண்டும்.

சனாதன தர்மம் உருப்படுத்தியபடி ஒரு விருந்து அதிதி நாரா யணன் அல்லது ஈசுவரனுடைய உருவமாகும். தான் அறிந்து வரிசையாக மேலே வளர ஒரு கிருகஸ்தன் ஐந்து பெரிய யாகங் களைச் செய்ய வேண்டும். அவைகளுள் ஒன்று அதிதியை நாரா யணனாகப் பாவித்து விருந்து செய்விப்பதாகும்.

திஸ்த்ரோ ரர்த்ரீர் யதவாத்ஸீர் க்ருஹே
மேநச்நந் பிரும்மந் நதிதிர் நமஸ்ய:
நமஸ்தேஸ்து ப்ரும்மந் ஸ்வஸ்தி மேஸ்து
தஸ்மாத் ப்ரதி த்ரீன் வரான் வ்ருணீஷ்வ

9. யமன் சொல்லுவான்: அதிதி தேவா, பிராமணா! நீர் என் வீட்டில் மூன்று இரவுகள் உணவருந்தாமல் கழித்துவிட் டீர்கள். ஆகவே பதிலாக மூன்று வரங்களைத் தேர்ந்து பெற்றுக்கொள்ளுங்கள். அந்தணரே! உமக்கு என் நமஸ்காரம், எனக்கு நன்மையுண்டாகட்டும்.

இந்தச் சுலோகத்தின் உயிர்க் கருத்துத்தான் ஆரியர்கள் அழியாத தங்கள் சனாதன தர்மத்தை ஏற்றுக்கொண்டு அதன் படி நடப்பதில் காட்டிய உண்மைப் போக்காகும். உண்மையில் நமக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஒரு சிறிய பையன் - ஒன்பது வயது தான் ஆகிறது. வீட்டுக்காரனுக்குத் தெரி யாமல் ஏதோ சிறு தப்பிதம் நடந்துவிட்டது. அதற்காகக் கால தேவன் ஒரு தெய்வம், அவரே தன் விருந்தாளிமுன் பணிவாகத் தலை குனிந்தாரே!

இன்று ஆட்சியாளர்களே தாங்கள் போட்ட சட்டத்தை பலாத்காரமாக மீறுகிற நாள். யமன் வீட்டில் இல்லை, அந்தச் சமயம் வந்த ஓர் அதிதியைக் கவனிக்கவில்லை என்றால், அது வும் சாவுக்கு அரசனை ஒருவரும் குற்றம் சொல்ல மாட்டார்

கள். என்றாலும் நாம் பார்க்கிறோம். யம தர்மராஜன் தலை குனிகிறார். தன் பிசகுக்கு மன்னிப்புக் கேட்கிறார். பதிலாக மூன்று வரங்கள் கேட்டு வாங்கிக் கொள்ளவேண்டும் என்று கெஞ்சுகிறார். அதிகாரம் வகிக்கும் மனிதர்கள் தர்மத்தைக் காப்பாற்றுவதில் இவ்வளவு நேர்மையாக இருப்பார்களானால் மற்றவர்கள். அதாவது கீழிருப்பவர்கள் அவைகளை எல்லாம் மீறத் துணிந்திருப்பார்களா?

இங்கே சாவுக்கரசன் அந்த அந்தணச் சிறுவனுக்குத் தந்த ஒரு பெருமையும் மறைந்து கிடப்பதைக் காணலாம். "எனக்கு நன்மை உண்டாகட்டும்" என்று கேட்கும் பிரார்த் தனை விருந்தளிக்கப் போகும் வீட்டுக்காரன் கேட்கும் முன் னமேயே அளித்ததுதான். ஏனென்றால் மிகவும் பண்பட்டுத் தெளிந்த இதயத்தையும் புத்தியையும் உடைய ஒரு மனிதன், அதாவது ஒரு பிராம்மணன், வினயம் நிறைந்த வணக்கங்கள் உரிய மரியாதை இவைகளைக் காட்டுகிறவர்களிடம் தோல்வி யுண்டு விடுகிறான். அவன் தெரிந்து செய்த அவமரியாதைக்குக் கூடக் கசப்பை வளர்ப்பவனல்ல.

சாந்த சங்கல்ப சுமனா யதா ஸ்யாத்
வீதமன்யுர் கௌதமோ மாபிம்ருத்யோ
த்வத் ப்ரஸ்ருஷ்டம் மாபிவதேத் ப்ரதீத
ஏதத் த்ரயாணாம் ப்ரதமம் வரம் வ்ருணே

10. நசிகேதன் சொன்னான்: சாவுக்கரசே! மூன்றுள் முதல் வரமாக, என் தந்தை கௌதமர் மனங்குளிர வேண்டும். அன்புடையவராகவும் என்னிடமுள்ள கோபம் தணிந்தவராக வும் ஆதல் வேண்டும். உங்களால் அனுப்பப்பட்டு நான் சென்ற வுடன் என்னை ஆசையுடன் அழைக்கவேண்டும். இதை நான் பொறுக்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

யமதர்மராஜன் மூன்று வரங்களைத் தந்திருந்தான். அவற் றைப் பொறுக்குவதில் அவன் சுதந்திரமும் தந்திருந்தான். பையன் முதல் வரத்தைத் தன் தந்தைக்கு உபயோகமாக வேண்டிக் கொள்கிறான். இந்தச் செயல் அவன் மனப் பண்பு, மனவமைப்பு இவைகளின்மேல் நல்ல ஒளி வீசிப் பெரும் பகுதியை எடுத்துக் காட்டுகிறது. அவன் சாவின் உலகத்தில்

உயர்ந்த பகுதிகளில் இருக்கிறான். என்றாலும் அவன் முக்கிய மாகவும் முதலாகவும் ஆற்றவேண்டிய கடமையறிந்த ஒரு மகன். ஆகவே முதல் வரத்தைத் தந்தை உள்ளத்துக்கு அமை தியையும் இன்பத்தையும் கொண்டு வந்து தரப் பயன்படுத்து கிறான். 'ஐயோ. மகனைச் சாவின் வீட்டுக்கே அனுப்பிவிட் டோமே' என்ற கவலை தந்தையின் உள்ளத்தைப் பளுவாக அமுக்காமல் அவர் கவலையற்ற இரவுகளாகக் கழிக்கவேண்டும் என்று நசிகேதன் விரும்புகிறான்.

மனிதன் வளர்ச்சியின் முதல்படி தந்தை, போஷகர் இவர் களின் உணர்ச்சிகளை அன்புடன் கவனிப்பதுதான். உலகத்தின் உயிரற்ற பொருள்களுக்குக் கூட அதே மாதிரி எண்ணம் ஏற் படும் பொழுதுதான் வளர்ச்சி தன் முடிவைக் காண்கிறது.

முற்றிய மனிதன் யார் என்றால் அனுபவ பூர்வமான பர நிலையில் தானே எல்லாமாக ஆகும்படி வளர்ந்து நிற்பவன். தன் உறவினருக்காக மட்டுமன்றி தன் நாட்டினருக்காக மட் டிலுமன்றி எல்லோருக்கும் சமமாக அன்பு செலுத்துகிறவன்: அதாவது அப்படி முற்றிலும் வளர்ந்த முதலோன்தான் உலகத் தின் உண்மையான .பிரஜை. அவனிடம்தான் உண்மையாக உலக அன்பு இருக்கும். இந்த முதிர்ச்சியின் முற்றுச் சீரை அடைய ஒரு சாதகன் முதன் முதலில் தன் தந்தை தாய் உற வினர்களிடம் ஒரு கவனம், சுயநலமற்று எல்லாவற்றையும் அர்ப்பணிக்கத் தூண்டும் ஒரு அன்பு இவைகளுடன் ஆரம்பித்து அந்த அன்பையும் கவனத்தையும் விரிவடையச் செய்ய வேண்டும்.

இன்று கொடூரமான தப்பர்த்தங்கள் மலிந்த நாள். மதம், சமயத்தின் பேரால் மக்கள் பலவிதமான அருவருப்புச் செய்கை களை மிகவும் உன்னிப்பாகச் செய்கிறார்கள். அவற்றுள் மிகவும் கெடுதலானதும் வருந்தத் தக்கதுமானது, இஷ்டப்படி திரிகிற இளைஞர்கள் தங்கள் வாழ்க்கைகளில் ஒரு பகுதியைப் புத்தி கெட்டதனமாக மனம்போன போக்கெல்லாம் போக வாழ்க்கை களில் செலவழித்துப் பாழ் செய்த பிறகு அதை விட்டு விட்டுத் திடீர் என்று சன்னியாசத்தின் வாயிலுக்கு ஓடி வருவதில் காட்டு கிறார்களே ஆர்வம் அதைப் போன்ற ஒன்று வேறில்லை. அப் படிப்பட்ட ஓடுகாலிகள் மூர்க்கர்கள். சன்னியாசம் என்கிற

இந்தச் சீரியபாஷையிலும் வெற்றியடைய முடியாது. அவர்கள் எங்குமே வெளவால்கள்தான். தகுதியற்றவர்கள். உலகியல் வாழ்க்கையில் சமூகத்திலும் சரி. அதேபோல ஆன்மிகத் தேர்வு, முறையான தன் முதிர்ச்சிக்கான காட்டு வாழ்க்கையிலும் சரி நசிகேதனின் மனப் பண்பில் நம்முடைய இந்தத் தப்பபிப்பிராயத்துக்கு ஒரு தெளிவான எச்சரிக்கையிருப்பதைப் பார்க்கிறோம்.

யதா புரஸ்தாத் பவிதா ப்ரதீத
ஔத்தாலகி ராருணிர் மத்ப்ரஸ்ருஷ்ட:
சுகம் ராத்ரீ சயிதா வீதமன்யுஸ்
த்வாம் தத்ருசிவான் ம்ருத்யு முகாத் ப்ரமுக்தம்

*11.* என் உதவி காரணமாக அருணனின் புத்திரரான ஔத்தாலகி உன்னை முன் போலவே அறிந்து கொள்வார். அவர் இரவுகளில் அமைதியாகத் தூங்குவார். சாவின் வாயிலிருந்து விடுபட்ட உன்னைப் பார்த்தவுடன் அவர் தன் கோபத்தையும் விட்டு விடுவார்.

இந்தச் சுலோகத்தில் யம தர்மராஜன் பயன் கேட்ட எல்லாவற்றையும் அவற்றின் எல்லாப் பகுதிகளுடனும் வரமருளுகிறான்.

நசிகேதனின் தந்தைக்கு நான்கு பெயர்கள் உள்ளன. அந்த விஷயம் இந்த உபநிஷத்திலிருந்து வெளியாகிறது. கௌதமர், ஔத்தர்லகி, ஆருணி, வஜஸ்ரவஸர் என்ற பெயரே அவை. அவர் உத்தலாகரின் ஒரு மகன். அருணன் அவரைத் தத்து ஏற்றுக் கொண்டார்.

ஸ்வர்கே லோகே ந பயம் கிஞ்சனாஸ்தி:
ந தத்ர த்வம் ந ஜரயா பிபேதி
உபே தீர்த்வா சஞயாபிபாஸே
சோகாதிகோ மோததே ஸ்வகலோகே

*12.* சுவர்க்கத்தில் பயம் ஒன்றுமில்லை. நீ அங்கே இல்லை. அவர்கள் அங்கே மூப்புக்கும் பயப்படுகிறதில்லை: பசியையும் தாகத்தையும் கடந்து, சுவர்க்கத்தில் உள்ள ஒருவன் துக்கத்தைத் தாண்டியவனாய் இன்புறுகிறான்.

இரண்டாவது வரம் கேட்க வேண்டும். அதற்காக நசிகேதன் சுவர்க்கம் என்கிற மனத்தின் அறிவு நிலையின் உயர்ந்த பகுதிகளை பற்றிப் பெருமைப் படுத்திக் கூறுகிறான். சுவர்க்கத்தின் உயர்வை நன்றாய் நிலைநிறுத்துவதற்காக நசிகேதன் உலகின் துன்பங் களுடன் ஒப்பிட்டுக் காட்டும் முறையைக் கையாள்கிறான். சுவர்க்கம் ஒப்பிட்டுப் பார்க்குமளவில் அச்சங்கள் இல்லாத இடம். ஏனென்றால் அந்த அறிநிலைவாழ்வு இந்த அழியும்உலகத் தின் ஓடும் உயிரின் வாழ்வுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அதிகம் நீண்டது. ஆகவே நசிகேதன் சொல்கிறான் 'நீ அங்கே இல்லை' என்று. இது முழு உண்மையல்ல. ஏனெனில் சுவர்க்கத்தில் வசிப் பவர்களுக்கும் முடிவு உண்டு. அழியும் தளமான இந்த உல கில் இருந்தபோது செய்த புண்ணியங்களின் பலன் தீர்நத பிறகு அவர்கள் வாழ்வுக்கும் முடிவு நேர்ந்து விடும்.

வாழ்வில் மனிதனுக்கு ஐந்து படிகள் அல்லது பருவங்கள் உண்டு பிறப்பு, குழந்தைப் பருவம், இளமை, மூப்பு, சாவு தேவ தைகளுக்கு முதன் மூன்று மட்டுமே உண்டு. ஆகவேதான் நசி கேதன் அங்கே அவர்கள் கிழவயதில் பயப்படுகிறதுமில்லை என் கிறான் அவர்களுக்கு முதுமை, சாவு இவைகளின் துயர் மட்டும் தான் இல்லை என்பதில்லை. வாழ்நாள் முழுவதும் இங்கே சாதாரண மக்கள் வருந்தி வாடும் பசியும் தாகமும் கூட அவர் களுக்குக் கிடையாது.

ச த்வ-மக்னிம் ஸ்வர்க்ய மத்யேஷி ம்ருத்யோ
ப்ரப்ருஹிதம் ச்ரத்ததானய மஹ்யம்
ஸ்வர்கலோகா அம்தத்வம் பஜந்த
ஏதத் த்விதியேன வ்ருணே வரேண

13. ஓ சாவுக்கரசே! நீ சுவர்க்கத்துக்கு அழைத்துச் செல் லும் நெருப்பை அறிவாய். ஆர்வம் கொண்ட எனக்கு, சுவர்க்க வாசத்துக்கு உரியவர்களானவர்கள் எந்த அக்னியைக் கொண்டு அமரத்வத்தை அடைகிறார்கள் என்று விரிவாகச் சொல்: இரண் டாவது வரமாக நான் இதைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சுலோகத்தில் நசிகேதன் தனக்குக் கிடைத்த வரங்க ளில் இரண்டாவதைக் கேட்கிறான். இதற்கு முந்திய மந்திரத்தில் விளக்கப்பட்ட சுவர்க்க வாழ்க்கைதான் வாழ்வில் முன்னேற

விரும்பும் அநேகர் தேடிக் கேட்டது. ஒரு சிறிது நேரமாவது சுவர்க்கத்தில் வாழவேண்டுமென்று அவர்கள் தங்கள் ஆன்மீக வாழ்வையும் தார்மிக வாழ்வையும் அர்ப்பணிக்கிறார்கள். அந்த அறிவிலிகளான மக்களின் பேரால் நசிகேதன் தன் இரண்டாவது வரத்தைப் பயனுள்ளதாக ஆக்க முற்படுகிறான். மனிதன் பூமியில் ஒரு கருமத்தைச் செய்தால் அதன் பிரதிபலனாக அவன் சுவர்க்கத்தின் இனிய சுகபோகங்களை அனுபவிக்க முடியாது. அந்தக் கருமத்தைப் பற்றிய ரகசியத்தை நசிகேதன் யமனிடம் கேட்கிறான்.

மீண்டும் இங்கே நாம் பார்க்கிறோம். தர்ம வளர்ச்சிக்கும் ஆன்மீக மலர்ச்சிக்கும் மிக மிகத் தகுந்த அந்த மாணவன் நசிகேதன் இரண்டாவது வரத்தையும் பரந்த உலகத்துக்கு அர்ப்பணிப்பதில் தியாகம் செய்துவிடுகிறான். உண்மையான இந்து முதலில் தன் உறவினர்கள், தான் வசிக்கும் காலத்திய மக்கள் இவர்களுக்குரிய தன் கடமையைச் செய்து முடிப்பான். அப்புறம்தான் தன் முக்தியைத் தேடி வருவான். உலகில் அன்பு நெறியை ஒருவன் போதுமான அளவு நெடுங் காலம் பழகவேண்டும். அப்படிப் பழகாதவரை உலகங்களுக்குக் காரணமாகவும் சாரமாகவும் இருக்கும் நல்லவன் அல்லது தத்துவத்தை ஏற்கும் அளவு அவன் ஆன்மீக வளர்ச்சி அடைய முடியாது. இங்கே நசிகேதனின் வாழ்க்கையில் சுருதி இந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறது. முக்தியைத் தேடுகிறவர்கள் வெற்றியடைய இது முக்கியமானதொரு சாதனமாகும்.

இந்த மந்திரத்தில் நசிகேதன் யமதர்மனைக் கேட்கிறான். எந்தக் கருமத்தைச் செய்தால் செய்பவன் அமர நிலையை அடைவானோ அந்தக் கருமத்தின் ரகசியத்தில் என்னைத் தீட்சைசெய்து வை என்று. இதை உண்மையான லட்சியம், பெறவேண்டிய பொருள், அதாவது பிரும்ம நிலை, அல்லது அமர நிலை என்று எண்ணிவிடக்கூடாது. அதை அப்படி எண்ணுவது வேதாந்தத்தின் முதற் பாடத்துக்கே விரோதமாகிவிடும். கர்மம் (தன்னலமற்ற வேலை) செய்வதனால் வாழ்க்கையின் பரம லட்சியத்தை அடைய முடியாது. அந்தப் 'பரம்' ஏதோ செய்கை மூலம் அடையக்கூடிய ஓர் விளைவாயிருந்தால் அது செய்யப்பட்ட அல்லது 'பிறந்த' பொருளாகிவிடுமே! அந்த நிலையில் அது

முடிவுள்ளதாகவல்லவா இருக்கும். முடிவில்லாத அல்லது என்றும் அழியாத அமரக் கடவுள் தத்துவம் அல்லது உண்மை, நடத்தும் செயல் அல்லது செயல்களின் பயனாக இருக்க முடியாது. ஆகவே இங்கே அமரத்துவம் மற்றொன்றில் ஒத்திட்டுப் பேசும் கருத்தில்தான் உபயோகப்பட்டிருக்கிறது. வாழ்க்கையில் ஏற்படும் அன்றாடச் சாவை எண்ணிப் பார்த்தால் சுவர்க்க லோகங்களின் உயர்ந்த தளங்களில் ஜீவாத்மாவுக்குக் கிடைக்கும் வாழ்வு அதிக நீளமானதுதான்—அது 'அமரத்துவமே!''

ப்ர தே ப்ரவீமி, தது மே நிபோத,
ஸ்வர்க்ய-மக்னிம், நசிகேத: ப்ரஜானன்,
அனந்தலோகாப்தி-மதோ ப்ரதிஷ்ட்டாம்,
வித்தி த்வமேனம், நிஹிதம் குஹாயாம்.

*14. நான் நன்றாய்ச் சொல்கிறேன். கவனி, நசிகேதா, சுவர்க்கத்துக்கு வழிகாட்டும் அக்னியை நான் அறிவேன், சுவர்க்கத்துக்கு அழைத்துச் செல்லும் அக்னியை அறிந்து கொள்; உலகத்தைத் தாங்கும் ஆதாரத்தையும், குகையில் (இருதயத்தில்) இருக்கும் பொருளையும் அறிந்து கொள்.*

அந்தணச் சிறுவன் கேட்ட இரண்டாவது வரத்தை அருளுகிறான் யம தர்மன். வேத காலங்களில் குருவின் வாயிலிருந்தே நேராகப் பாடம் கற்பிக்கப்பட்டது. இது குறிப்பிடத் தக்க ஒரு செய்தி. நம் நாளில் நடப்பது போல 'நோட்ஸ்' கொடுப்பதும் அதை மாணவர்கள் சமயம் கிடைத்தபோது வரப் பண்ணிக் கொள்வதுமான இந்தமுறையில் அந்நாளில் கல்வி கற்றுத்தரப்படவில்லை. குருமார்கள் சொல்வார்கள். மாணவர்கள் அங்கேயே அதைப் புரிந்து கொள்ளவேண்டும். வாக்கியங்கள், அவற்றின் பொருள் இரண்டையும் உடனேயே ஞாபகப்படுத்திக் கொண்டு விடவேண்டும். இந்த நேரடிக் கல்விக்கு மாணவனிடம் நுண்ணிய புத்தி வேண்டும். ஒரே விஷயத்தில் கவனத்தையெல்லாம் செலுத்தும் சக்தியும் வேண்டும். ஆகவே தான் சாவுக்கரசன், ''நான் சொல்வேன் கவனி, என்னிடம் இருந்து அறிந்துகொள்!'' என்றெல்லாம் சொல்கிறான். இந்த நாளைய பேராசிரியர் இப்படிச் சொன்னால் அது அனாவசியம் என்று தோன்றும். ஏன்? ''கவனியுங்கள்,'' என்று ஒவ்வொரு நாளும் கூவி விளித்து அவர் பாடத்தை ஆரம்பித்தால் மாணவர்கள்

'பைத்தியம்' என்று பரிகாசம் செய்து விரட்டியடித்தாலும் அடித்துவிடுவர். தற்காலக் கல்வி முறைக்கு அது தேவையு மில்லை! மாணவர்களிடத்திலும் அந்த முறையைப் பின்பற்றும் ஆற்றலும் இல்லை. இங்கே அக்னி வித்தையின் பெருமையை விவரிக்கச் சில சொற்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை யோசித்தே அதைப் புகழ எனச் சொன்னவையாம். அப் பொழுதுதான் ஆவல்கள் நிறைந்து போகப் பொருள் நினைவு கொண்ட சாதாரண ஜீவன்கள் இந்த அக்னி பூஜையைச் செய் யத் தூண்டுதல் பெறுவார்கள் என்று எண்ணியே அவ்விதம் அது புகழப் பெற்றிருக்கிறது.

உலகத்தை அதன் விராட உருவத்தில் தாங்கி நிற்பது அக்னிதான். இது இருதய குகையில் உறைகிறது. அதாவது ஞானிகளின் ஞானத்தில் உறைகிறது.

லோகாதி–மக்னிம் தமுவாச தஸ்மை,
யா இஷ்டகா, யாவ தீர்வா, யதா வா
ஸசாபி தத் ப்ரத்யவதத் யதோக்த-
மதாஸ்ய ம்ருத்யு:, புனரேவாஹ துஷ்ட:

15. யமன் பிறகு, அவனுக்கு உலகத்துக்கு ஆதியான அக்னி பூஜையை விவரித்தான். பலிபீடத்திற்கு எப்படிப்பட்ட செங்கற்கள் வேண்டும்? எவ்வளவு வேண்டும்? அவைகளை எப்படி அடுக்கவேண்டும்! நசிகேதன் அவன் சொன்னபடியே எல்லாவற்றையும் திருப்பிச் சொன்னான். பிறகு யமன் அவ னிடம் மகிழ்ந்தவனாக மீண்டும் சொன்னான்.

இது ரிஷிகடகர் அல்லது பகவதி சுருதியே சொன்ன சுலோகமாகும்.

பாருங்கள். கதை புதையப் புதையச் சதைகொண்ட கதையாகச் சொல்லப்படவில்லை. அங்கொரு செய்தியும் இங் கொரு பகுதியுமாகச் சொல்லப்பட்டதுதான். குறிப்புகள் மட் டுமே கொண்ட இந்தக் கதையில்கூடச் சுருதித் தாய் என் னென்ன திறமையைக் காட்டியிருக்கிறாள்! அவள் தயாரித்த கலையில் அவள் தொட்ட இடம் எல்லாம் பூர்ணத் தன்மை; போட்ட கோட்டில் எல்லாம் ஒரு மென்மை! கதாநாயகன் சரித்திரத்தை வண்ணம் ஒளிருமாறு செய்ய என்ன பாடுபடு

கிருள்! அது மட்டுமா? அவ்வப்பொழுது நின்று கதையை உண்மை வாழ்வின் ஓவியமாய்த் தீட்ட உணர்ச்சிகளின் விவரம் தந்து ஒளிவீசவும் செய்கிருள்.

மாணவன் முதன் முறை கேட்கிருன். உடனே புரிந்து கொள்கிருன். அவன் அவ்வளவு சுட்டி என்ருல் பள்ளி ஆசிரியர் பிரமாதமாகச் சந்தோஷம் அடைகிருர். இது மிகவும் இயற்கையான குணம். ஒவ்வொரு பள்ளி ஆசிரியரும் இந்த விதம் தான் செய்வார். இது ஆசிரியர் திறமைக்கும் பெருமை தரும் அத்தாட்சிதான். கூடவே ஆசிரியருக்கும் ஒரு நிறைவு உணர்ச்சி, ஒரு திருப்தியும் ஏற்படுகிறது.

யம தர்மன் மாணவனுக்குக் கிரியையைப்பற்றி விவரித்து விட்டார். ஒரு பகுதி விடவில்லை. ஆனல் இந்தச் சுலோகத்தில் ஒவ்வொரு விவரமும் இல்லை. இது ஞான காண்டம். ஆகவே தான் இந்தக் கிரியையின் விவரங்கள் முழுவதும் இல்லை. பெரும் பகுதிகளின் பெயர் குறிக்கப்பட்டிருக்கின்றன. உள் தலைப்புக்களின் எண்ணிக்கைமட்டும் தந்து உணர்த்தப்பட்டிருக்கின்றன.

பழைய பாட முறையைக் கண்டிப்பாகப் பின்பற்றுகிருன் யம தர்மராஜன். பாடம் சொன்ன பிறகு பாடம் கேட்டவனை நடந்தபாடத்தைத்திருப்பிச் சொல் என்றுகேட்கிருர்.நசிகேதன் பரீட்சையில் வெற்றி பெறுகிருன். பாடம் முழுவதையும் ஒரு விவரம் விடாமல் திருப்பிச் சொல்லிவிடுகிருன், யமனுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. மாணவனுக்கு மற்றுமொரு வரத்தை அருளுகிருன்.

தமப்ரவீத் ப்ரீயமாணே மஹாத்மா
வரம் தவேஹாத்ய ததாமி பூய |
தவைவ நாம்ன பவிதாயமக்னி:
ஸ்ருங்காஞ்சேமா மனேக-ருபாம் க்ருஹாண ||

16. மகிழ்ச்சி அடைந்த யமன், அவனிடம் சொன்னன். "நான் உனக்கு இந்த மற்ருெரு வரத்தையும் இங்கே தருகிறேன். இந்த 'அச்னி யாகம்' உன் பெயர்கொண்டு அழைக்கப்படும். பல நிறமுள்ள இந்தச் சங்கிலியையும் எடுத்துக் கொள்."

யமன் அந்தச் சீடப் பிள்ளைக்கு ஒரு பாராட்டு 'மெடல்' தருகிறான். கற்கள் பதித்த ஒரு தங்கச் சங்கிலியாகும் அது. சங்கராச்சாரியார் அவர்கள் தாம் எழுதிய பாஷ்யத்தில் 'சிருங் கம்' என்ற சங்கிலிக்கு இரண்டு உரை தந்திருக்கிறார்கள். ஒன்று ஆரம், மற்றொன்று போற்றும் பல பலன்களைத் தரக்கூடிய செய்கைகள். ஒருகால் சங்கராச்சாரியார் சொல்வதுபோல் யமதர்மராஜன் இன்னும் சில ரகசியமான வழிகளைச் சொல்லிக் கொடுத்திருக்கலாம். தந்திரக் கிரியைகள் மூலமும் பிரீதிக் காரியங்கள் மூலமும் மனித ஆவல்கள் நிறைவேறுவதற்கான இன்னும் சில ரகசிய முறைகளுக்குத் தீட்சை செய்து வைத்திருக்கலாம். அல்லது மதிப்புயர்ந்த கற்கள் பதித்த சங்கிலியைத் தந்திருக்கலாம். அது எதானாலும் சரி. பையன் நுண்ணிய புத்தியுள்ளவன். அசாதாரணமான தாரண சக்தியுடையவன். அந்த ஆற்றல்களைக் கண்டு அவன் உபாத்தியாயரே பெருமிதம் காட்டினார் என்று நாம் புரிந்துகொண்டால் போதும். சுருதித் தாயின் கருத்தைப் புரிந்துகொண்டவர்களாக ஆகிவிடுவோம்.

சாஸ்திரப் படிப்பைத் தொடரவேண்டும்; தன் முக்திக்கு வழி வகுக்கவேண்டும் என்றால் ஒருவன் நசிகேதனைப்போல அவ்வளவு புத்திசாலியாக இருக்கவேண்டும். இதிலிருந்து நாம் எச்சரிக்கையைத் தெரிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கையிலும் கல்வி கற்க வழிகள் இருந்தும், வாழ்க்கையில் வெற்றி தேடத் தெரியாத எழுத்தறிவில்லா சமூகத்தின் அசட்டுப் பகுதிகளால் சன்னியாச ஆசிரமத்தில் பிரும்ம வித்தை தொடரவில்லை என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

த்ரிணாசிகேதஸ்-த்ரிபிரேத்ய ஸந்திம்.
திரி கர்மக்ருத். தரதி ஜன்ம-ம்ருத்யூ.
ப்ரஹ்மஜஜ்ஞம். தேவமீட்யம். விதித்வா.
நிசாய்யேமாம் ஸாந்தி-மத்யந்த-மேதி.

17. எவனொருவன் இந்த நசிகேத யாகத்தை மூன்றுமுறை செய்து 'மூன்று'டன் சேர்க்கையை அடைந்து மூன்று கடமைகளையும் செய்கிறானோ அவன் பிறப்பையும் இறப்பையும் கடக்கிறான். அந்தப் போற்றற்குரிய, பிரகாசமான, எல்லாமறிந்த, பிரம்மத்திலிருந்து உண்டான அக்னியை அறிந்து, 'அவனை அடைகிறானோ அவன் 'அத்யந்த சாந்தியை' அடைகிறான்.

இன்று இந்தச் சுலோகம் விசித்திரப் புதிர்போல் இருக்கிறது. உண்மையில், சங்கராச்சாரியார் அவர்களின் உரையும் இல்லை என்றால் உபநிஷத்தைப் படிக்கும் தற்கால மாணவர்கள் விழி விழி என்று விழிப்பார்கள்.

அதனால் வேத காலத்தில் இந்தச் சுலோகங்கள் குழப்பம் தரும் புதிராக இருந்தன என்று கருத்தல்ல. அந்தக் காலத்தில் சிஷ்யர்கள் வேத ஞானம் நன்கு பெற்றவர்கள். வேதகர்மா நன்கு அறிந்தவர்களாக இருந்தார்கள். ஆகவே அவர்களுக்கு இந்தச் சுலோகங்கள் படித்தவுடனே புரிந்துவிட்டன. தனி உரை தேவைப்படவில்லை. அப்படிச் சில இடங்களில் புரியாமல் இருந்து விளக்கம் தேவைப்பட்டால் உபநிஷத ரிஷிகள் நீண்ட விளக்க வுரைகளையும் விரிவுரைகளையும் தந்திருப்பார்கள்.

மூன்றுவித நசிகேத அக்னி : (அ) மூன்று முறை அந்த யாகத்தைச் செய்தவன் என்று பொருள் படலாம். அல்லது (க) கேட்டுப் புரிந்துகொண்டு நசிகேத யாகத்தைச் செய்யவும் செய்தவன் என்றும் பொருள் படலாம்.

மூன்றுடன் சேர்ந்து : (அ) இதிலேயும் இரண்டு மூன்று பொருள்கள் கூறலாம். மூன்று வகை ஆசீர்வாதப் பயனைப் பெற்றவன். அதாவது தாய் தந்தை குரு. மூவருக்கும் பணிந்து மரியாதை செய்து தகுதி காரணமாக அவர்கள் ஆசியைப் பெற்றவன். அல்லது (க) மூன்று என்பது ஞானத்தின் மூன்று வழிகளைக் குறிக்கலாம்: பிரத்யட்சப் பிரமாணம் என்கிற நேரடிப் பொறியறவு, அனுமானப் பிரமாணம் என்கிற ஊகம், ஆகமம் என்கிற பெரியவர்கள் வார்த்தைகள். அல்லது (ங) சங்கரர் சொல்கிறபடி வேதம், ஸ்மிருதி, சாஸ்திரங்கள் என்கிற மூவகையாகவும் இருக்கலாம்.

மூன்று காரியங்கள் அல்லது கடமைகள்: ஒவ்வொரு பிராம்மண கிருகஸ்தனும் செய்யவேண்டிய மூன்று கருமங்கள். அவை யாவன: 1. யாகம் செய்தல் 2. வேதமோதுதல். 3. தானம் செய்தல்.

மேலே சொல்லப்பட்ட விதிகளை எல்லாம் நிறைவேற்ற வல்லவர்கள் இந்தச் சாவுப் பிறப்புச் சுழலிலிருந்து தப்பி இந்திர லோகத்தில் தங்கி மேலான அமைதியை அனுபவிக்கலாம்.

த்ரிஞ்சிகேதஸ் - த்ரயமேதத் - விதித்வா
ய ஏவம் வித்வாம் சினுதே நாசிகேதம் |
ஸ ம்ருத்யுபாஸான் புரத: ப்ரணோத்ய
ஸோகாதிகோ மோததே ஸ்வர்க்கலோகே ||

*18. மூன்று நசிகேத அக்னியை அறிந்து அந்த அறிவினுல் நசிகேத அக்னியைப் பிரீதி செய்விக்கிறவர்கள் சாவுச் சங்கிலியைக் கழற்றி எறிந்துவிடுகிருர்கள். துக்கத்தின் எல்லையைக் கடக்கிருர்கள்; சுவர்க்கத்தில் இன்பம் துய்க்கிருர்கள்.*

நசிகேத அக்னி யாகத்தைப் பற்றிய தன் புத்திமதியை யம தர்மராஜன் பேசி முடிக்கிருர். அந்த நிலையில் அவர் கருமங்களையும் அவற்றின் பயனையும் பெருமைப்படுத்திப் பேசுகிருர். அவர் சொல்கிருர்:

இந்த அக்னி வித்தையின் மூன்று முக்கிய பகுதிகளின் ஞானத்தையும் நன்கு அறிந்தவன், உலகத்தின் அழுகைக் கண்ணீர்த் தளம் தாண்டி, விழித்த அறிவின் ஒரு தளத்தை அடைவான். அங்கே அவன் என்றும் வாழ்ந்து என்றும் இன்பம் துய்ப்பான். நசிகேத, அக்னியைப்பற்றிய மூவகை அறிவு ஏற்கனவே சொல்லியபடி கற்கள், அவைகளின் எண், அவைகளை உபயோகிக்கும் முறை என்ற மூன்றையும் பற்றியதாகும். இந்த யாகத்தைச் செய்து மேலும் அந்த அக்னியையே ஆத்மனுக எண்ணி நீண்ட காலம் தியானிக்கிறவன் சாவுக்குப் பிறகு இரணியகர்ப்பம் அல்லது பிரம்மலோகத்தை அடைகிருன். அது எங்கும் ஞானமயமான நிலையாகும்.

இது நாம் புரிந்துகொள்ளக்கூடியதுதான். நாம் முன்னமேயே பேசித் தெரிந்திருக்கிறோம். கருமம் என்கிற கிரியைகளுடன் உபாசனை என்கிற தியானத்தையும் சேர்த்துத் தொடர்ந்து மன அமைவுடன் செய்தால் அந்தச் சேர்க்கை பிரம்மலோகத்தின் உயர்ந்த இன்பங்களுக்கு ஜீவனைச் சேர்ப்பிக்கிறது. அங்கே சிருஷ்டிகர்த்தாவே வழி காட்டித் தர, உலகம் அழியும்போது ஜீவன் கைவல்ய நிலையை அதாவது பூர்ணமுக்தி நிலையை அடைகிறது. இதெல்லாம் எப்படி என்று நாம் முன்னமே பேசியிருந்தோம். வேதாந்தத்தில் இதைக் 'கிரம முக்தி' என்பார்கள். நாம் எடுத்திருக்கும் இந்தச் சுலோகம் மிகவும் முக்கியமானது.

வேதாந்த தத்துவ சாஸ்திரத்தில் கிரம முக்தியின் மார்க்கத்தைப்பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட மிக முக்கியமான ஒரு நம்பிக்கைக்கு இது இடம் தந்து நிற்கிறது. அந்த அளவுக்கு இந்தச் சுலோகம் மிகவும் முக்கியமானது.

நசிகேத யாகத்தையும், குறித்துக் காட்டப்பட்ட தியானத்தையும் செய்பவன் அழியும் உடலிலிருந்துகொண்டிருக்கும் போதே, 'சாவின் விலங்குகளிலிருந்து விடுபடுகிறான்' என்று உபநிஷதம் இங்கே அழுத்திச் சொல்கிறது. இங்கே 'சாவு' என்பது வாழ்விலே சாவாக நாம் அடைந்திருக்கும் நிலையைக் குறிக்கிறது. தீய இன்பங்கள் துய்த்தல், அறியாமை, துராசைகள், வெறுப்பு முதலிய 'இல்லாத' வீண் அழுகல் பொருள்களைச் சதம் என்று வாழ்ந்துகொண்டே இறந்தவர்களாக இருக்கிறோமே அந்த நிலையைச் சாவு என்று தானே அழைக்கவேண்டும்? கருமம் தியானம் இந்த இரண்டின் சேர்க்கைப் பயனை உணர்ந்து பழகுகிறவன் தன் ஜீவன் 'விராட்' அல்லது 'விசுவ புருஷன்' என்று உணர்ந்து கொள்கிறான்.

ஏஷ தேக்னிர் நசிகேதா ஸ்வர்க்யோ
யமவ்ருணீதா த்விதீயேன வரேண |
ஏத - மக்னிம் தவைவ ப்ரவக்ஷ்யந்தி ஜனாஸஸ்
த்ருதீயம் வரம் நசிகேதோ வ்ருணீஷ்வ ||

19. நசிகேதா, இது உன் அக்னி. (இது) சுவர்க்கத்துக்கு இட்டுச் செல்லக்கூடியது. இரண்டாவது வரமாக நீ கேட்டது. ஜனங்கள் இதை உன்னுடையதென்றே அழைப்பர். நசிகேதனே, மூன்றாவது வரத்தைக் கேள்.

சிடனின் அறிவு, உள்ளமைவு, ஈடுபாடு இவைகளைக் கண்டு மிக மிக மகிழ்ந்த யம தர்மன் அவனுக்கு வரங்கள்மேல் வரங்களாக அள்ளிச் சொரிகிறார். உலகத்திலுள்ள மனிதர்களுக்காக இந்தப் பையன் மூலம் அருளப்பட்ட இந்த யாகக்கிரியை என்றென்றும் நசிகேதன் பேரால் அழைக்கப்படும் என்று தர்மராஜன் ஆணையிடுகிறார்.

தவிர, இந்தச்சுலோகத்தில் சுருதித்தாய் மிகவும் சாதுரியமாக ஒரு கலைத் திறனை மறைத்து வைத்திருக்கிறாள். யமதர்மனுடைய

உள்ள வன்ஸன்மை, உண்மை இரண்டையும் அந்தக் கலை ஒளிப் பிரகாச வெள்ளத்தில் எழச் செய்கிறது. யமதர்மன் எவ்வளவோ வரங்களை மனமுவந்து அருளிவிட்டார். இருந்தும் மூன்றாவது வரத்தைத் தராதபடியால் இன்னும் கடமை தீரவில்லை என்றே எண்ணுகிறார். அது ஏற்கனவே வாக்களிக்கப்பட்ட ஒன்றல்லவா? நசிகேதனே யமன் முதலில சொன்னதை மறந்திருக்கலாம். 'மூன்று வரம் கேள்' என்று யமன் முதலில் சொல்லியிருந்தது உண்மைதான். என்றாலும் இவ்வளவு நேரத்துக்குப் பிறகு நசிகேதன் அதை மறந்திருப்பது என்பது நடக்கத் தகாத ஒரு செயல் அல்லவே! ஆனாலும் யம தர்மராஜன் பெருந்தன்மையுள்ளவர்: நெறியின் தலைவன்; அவர் தானே ஞாபகம் ஊட்டுகிறார்—பிராமணச் சிறுவனிடம், 'நசிகேதனே! கேள் மூன்றாவது வரத்தை!' என்று.

யேயம் ப்ரேதே விசிகித்ஸா மனுஷ்யே
அஸ்தீத்யேகே நாயமஸ்தீதி - சைகே |
ஏதத் - வித்யா மனுஸிஷ்டஸ் - த்வயாஹம்
வராணு - மேஷ - வரஸ் - த்ருதீய ||

*20.* ஒரு மனிதன் இறந்த பிறகு 'அவன்' இருக்கிறான் என்று சிலர் சொல்கிறார்கள். இல்லை என்று சிலர் சொல்கிறார்கள். இந்த ஓர் ஐயப்பாடு இருந்துகொண்டே இருக்கிறது. இதை நீங்கள் கற்றுக் கொடுத்து நான் அறிய விரும்புவேன். இதுதான் நான் வேண்டும் வரங்களில் மூன்றாவது.

உபநிஷத ரிஷிகள் பெருமையே பெருமை! கதாநாயகனுடைய சித்திரத்தைச் சொல்லாத வார்த்தைகளாலேயே எவ்வளவு திறமையாக அமைக்கிறார்கள். இது ஷேக்ஸ்பியரின் கற்பனை கூடச் செய்ய முடியாத ஒன்றாகும்! அந்த அமர ரிஷிகளுக்கு நம் வணக்கம் நிறைந்த வாழ்த்துக்கள் உரியனவாகுக.

நாம் முன்னால் பார்த்தோம்: லட்சிய (ஆன்ம வித்தை) மாணவனாக நசிகேதன் தன் தந்தையின் மனவமைதியையும் இன்பத்தையும் வேண்டி முதல் வரத்தைத் தீர்த்தான். இரண்டாவது வரத்தை மனித சமுதாயம் ஆசி பெற அர்ப்பணித்தான். இப்பொழுது, கடைசி வரம் என்றபொழுதுதான் தன் 'நலத்தை'ப் பற்றி நினைக்கிறான். தன் பெரிய சந்தேகங்களுள் ஒன்றைத் தீர்த்து வைக்குமாறு கேட்கிறான்.

தியாகம் வேண்டும். தனக்குரியவர் மட்டுமன்றி உலகம் முழுவதிலுமுள்ளவருக்கு நன்மை புரிந்து அவர் நன்மையைத் தன் ஆன்ம விடுதலையைவிட முதலில் என்னுமளவுக்குத் தன் னுள்ளே 'தயை' வேண்டும். உண்மையான ஆன்ம முன்னேற் றம் தேடுபவன், உண்மையைத் தேடிச் செல்லும் யாத்திரையில் முழு வெற்றியையும் பெறவேண்டும் என்றால் அவனுக்கு இன்றி யமையாத முக்கிய குணங்களில் ஒன்றாக அந்தத் 'தியாகமும் தயையும்' அமையவேண்டும். இது, இன்று பக்தர்கள் வர்க்கத்தில் மெதுவாக வந்து செறிந்து நிற்கின்ற நம்பிக்கைக்கு நேர்மாறா னதுதான். தப்பிதமாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் அவர்கள். அந்தத் தப்பர்த்தத்தில்தான் அவர்கள் சங்கடங்கள் தங்கும் குளவிக் கூடும் அமைகிறது.

மதத்தைப் பின்பற்றுவது நன்கமைந்த சமுதாய அல்லது சமூக வாழ்க்கைக்கு இடையூறு அல்ல; இடையூறாக இருக்கவும் முடியாது. ஆன்மிக வாழ்வு விழைபவன் ஊமையாகவும் செவி டாகவும் இருத்தல்வேண்டும் என்பதில்லை. அவனுக்குத் தன்னைச் சுற்றியுள்ள மக்கள் உலகின் தேவைகளும் துயர்களும் நன்கு தெரிந்திருக்கவே வேண்டும். அவன் தேடித் தேடித் தன்னுள்ளே ஓர் அன்பையும், பிறர் துயருக்கு அழுது கரைகின்ற உள்ளப் பொறையையும் பெறவேண்டும். தன் உறவினர், தன் தலைமுறை மக்கள் இவர்களுடைய உள்ளங்களுடன் தன் உள்ளத்தைப் பொருத்தி அறியும் ஆற்றல் இல்லாத ஒருவனுக்கு உண்மையின் கோவிலுக்குள் தூய்மையுள் தூய்மையான அந்த நிலையை அடையத் தகுதி கிடையாது.

இந்தச் சுலோகத்திலிருந்து உபநிஷதம் என்பது ஆரம்பிக் கிறது. இதுவரை செய்ததெல்லாம், ஒரு பக்குவமடைந்த ஜீவனைப் பூரணத் தகுதி வாய்ந்த ஆசாரியரின் எதிரே கொண்டுவருவதற் கான நாடக இயல் நிறைந்த ஒரு சந்தர்ப்பத்தைக் கட்டி அமைப் பதற்கான முயற்சிதான்.

அந்தப் பிராமணச் சிறுவன் எழுப்பிய சந்தேகம் அவன் 'சாஸ்திரப் பண்பாட்டையும் அவனது 'தன் வளர்ச்சி'யையும் காட்டித் தருகிறது. எப்பொழுதும் இந்திரிய சுகங்களையே தேடித் திரியும் மிருக மனிதன், வாழ்க்கையைப்பற்றி மூடசாக எண்ணி ஆழ்ந்த ஒரு முனைப்பட்ட இவ்விதமான சந்தேகத்தைக்

கொள்ள முடியாது. அவன் அதற்கான சம நிலையும் புத்தித் திறனும் கொண்டிருப்பது மிகவும் அபூர்வமே!

ஆகா! வாழ்க்கையில் கண்ணீர் வரவழைக்கும் இச் சம்பவம் இருக்கிறதே, சாவு என்ற ஒன்று, அதனுடைய பயங்கர அழகின் சுழலில் விழுந்து தத்தளிக்கிற சிந்தனையாளர்கள் எவ்வளவோ! இன்றும்கூடச் சாவு எல்லா நிலைகளிலும் எல்லாப் பகுதிகளிலும் உள்ள எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், ஆசிரியர்கள், தத்துவ வாதிகள் எல்லோரையுமே தன்பால் இழுக்கும் ஓர் அழகிய கருத்துத்தான். ஆனால் இந்தக் கம்பீரமான பிரச்னையைத் தீர்க்கும் அளவுக்கு அறிவாற்றல் உள்ளவர்கள் வருவது மிகவும் குறைவே என்றும் நாம் பார்க்கிறோம். ஆனால் முனிவர்கள் தம் அமைதியில் அவர்கள் அறியவும் உணரவுமான தம் கருவிகளை நன்கு தயார் செய்துகொண்டார்கள். அவற்றிற்கு வேண்டிய ஆற்றலைச் சம்பாதித்துக்கொண்டார்கள். பர நிலையான அந்த மேலேயுள்ள உத்தம நிலைக்கு உயர்ந்தார்கள். அமைதியாகக் கவனித்து, விஞ்ஞான முறையில் அலசி ஆராய்ந்து, இந்த அற்புத மான சாவு எப்படி, ஏன், என்கின்ற கேள்விக்கு முடிவையும் உண்மையாகக் கண்டுபிடித்தார்கள்.

இந்தியத் தத்துவ விசாரணையாளர்களையே எடுத்துக்கொண் டாலும் அவர்களிடையே சாதாரணமாக நிகழக்கூடியதாயிருந் தாலும் விசித்திரமான சாவைப்பற்றி முரணானதும் தம்மையே தாம் மீறுகின்றதுமான முடிவுகளைக் காண்கின்றோம். நசிகே தனே இந்தச் சுலோகத்தில் அதைத்தான் சொல்கிறான். சாவே முடிவு. அதற்கப்பால் சூனியத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்று நிலைநாட்டிய விசாரணையாளர்களின் சில வர்க்கங்கள் இருக்கின்றன. மாறுபட்ட சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள், "அது உண்மையல்ல. சாவுக் குழிக்குப் பின்னும் வாழ்வு இருக்கிறது" என்று தாங்கள் ஒப்புக்கொள்கிறார்கள்; வாதம் புரிந்து நிலைநிறுத்தவும் செய்கிறார்கள்.

'சாவுக்குப் பின் வாழ்வு உண்டா இல்லையா என்ற கேள்வி' மனதும் புத்தியும் புகக்கூடிய பிரதேசத்திற்கு உரிய ஒன்றன்று. நம் எல்லைக்கு அப்பால் ஓர் ஞான உலகம் பரவி இருக்கிறதென்பது உண்மை. உணர்ச்சி தரும் மனதும் 'சிந்தனை புரியும் புத்தியும், மிக மிக முயன்றாலும், அந்த உலகத்தைக் குறித்துக் கையை

நீட்டி விரலைக் காட்டி தெளிவற்ற சில வழிகளை மட்டுமே காட்ட முடியும். அந்தச் சுத்த அறிவின் தேசத்துக்குப் போக வேண்டுமே! சாதாரண மனிதனிடம் அதற்குத் தக்க வாகனம் கிடையாது. அவன் எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும் சரி; உணர்ச்சிப் பிழம்பாக இருந்தாலும் சரியே. துறவு, ஞானம் இவ்விரண்டின் சீமான்கள்தான் அந்த சகஜ ஞான ஆற்றல் பெற்றிருப்பார்கள். அவர்கள்தான் விருப்பப்படி ஒருவனை அந்த 'அப்பாலுள்ள' தேசத்துக்கு அழைத்துச் செல்ல முடியும்.

சுருங்கக்கூறினால், இப்படிப்பட்ட அப்பாலுக்கு அப்பாலைப் பற்றிய கேள்விகள் வார்த்தைகளாலே விளக்கப்பட முடியாதவை. நமக்குத் தெரிந்த சாதாரணமான நேர் அறிவு, அனுமானம், ஒத்திட்டு அறிதல் முதலிய எந்த அறிவு நிரூபணத்தின் மூலமும் காட்டி நிலைநாட்டிவிட முடியாதவை. அவைகளை அனுகித் தீர்க்க ஒரே முறைதான் உண்டு. 'ஆகம' மூலம்தான் அது முடியும்—ஆன்ம அறிவு கைவந்த மகான்கள் தந்த ஞானச் சொற்களைத்தான் 'ஆகமம்' என்கிறோம். அந்த ஞான சீலர்களைச் சாதுக்கள் என்றும் முனிவர்கள் என்றும் சொல்கின்றோம்.

ஆகவேதான் நசிகேதன் யமனிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான். அவர் தர்மங்களுக்கெல்லாம் அரசரல்லவா' அதனால் தான் அவரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டதில் நியாயம் இருக்கிறது.

முக்கியமாகப் புத்தரைப் பின்பற்றும் சூனியவாதிகளும், இந்துக்களிடையே உலகாயதவாதிகளான சார்வாகர்களுமே 'முடிவு ஒரு சூனியமே!' என்று முடிவு செய்கிறவர்கள்.

உலகாயதவாதிகள் வாதம் இதுதான். உடல்தான் எல்லாம். உயிர் என்பது கை கால்கள் முதலிய அங்கங்களைச் சேர்ப்பதால் தானே ஏற்படும் ஓர் அற்புதமே!

அவர்கள் வாதத்தில் உயிர்க்கும் இந்த உயிரின் இனிய வெம்மை உடலின் இன்ப துன்பங்களுக்கு இறைவனாக நிற்கும் அந்தத் தெய்வச் சக்தியல்ல. ஆனால் அதுதானாகச் சேர்க்கையின் பொழுது ஏற்பட்ட ஒரு சினைப் பொருள். வெற்றிலை பாக்கு சுண்

றும்பு சேர்த்து மென்றால் ஒரு செந்நிறம் தனித் தனித் தானாக ஏற்படுகிறதல்லவா, அந்த மாதிரி அந்த நிறம் இந்தத் தனித் தனி ஒன்றிலும் இல்லையே! அதேபோல அவர்கள் கட்சி: உடலின் அங்கங்களைச் சேர்த்தால், அதாவது இயற்கை அவ்விதம் சேர்க்கும்பொழுது உயிர் தோன்றுகிறது! அப்படிப் பேசுகிற குழுவினருக்கு, சாவு என்பது உடல் மறைவு. உயிரின் சூனியம். அவ்வளவுதான். சூனியத்திலிருந்து உயிர் வெளியாகிறது; கொஞ்ச நேரத்துக்கு நிச்சயமற்ற சில ஆட்டங்கள் போடுகிறது. பிறகு சூனியத்திலேயே மறைந்துவிடுகிறது!

பகுத்துச் சிந்திக்கும் ஒருவனுக்கு இந்தத் தத்துவம் தகரடப்பாச் சத்தம் என்று தெரியும். சூனியத்திலிருந்து ஒன்றும் ஆகாது. அதற்குள் ஒன்றும் மறையவும் முடியாது—மீண்டும் சூனியமாக!

புத்த மதத்தைச் சேர்ந்த சூனியவாதிகளின் கட்சி வாதங்களை எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் சொல்வதையே அவர்கள் வாதம் கண்டிக்கிறது. இதை நாம் வெகு சுலபத்தில் புரிந்துகொள்ளலாம். பரம உண்மை என்பது நிர்வாணம் அல்லது இல்லாதிருக்கும் தன்மை என்று நிலைநாட்ட அவர்கள் வாதம் புரிகின்றார்கள். அதுவே முன்னுக்குப்பின் முரணான வாதம். சங்கர பகவத் பாதாள் அதே வாதத்தையே எடுத்துக்கொண்டு பேசுகிறார்கள். வாதக் களத்திலிருந்தே அவர்களை விரட்டிவிடுகிறார்கள். அவர்கள் சொல்கிறதை அப்படியே ஒப்புக்கொள்வோம் என்றால் என்ன முடிவு ஏற்படும்? அவர்கள் இல்லாதிருக்கும் இருப்பை அறிந்தவர்கள் என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். சங்கராச்சாரியார் மற்றும் வேதாந்திகள் கருத்துப்படி. 'இல்லாதிருக்கும் நிலையை அறிகிறவன் அல்லது அந்த அறிவாகிற ஞானம்தான் பரம தத்துவம். நம் முன் இருக்கும் அந்த ஞானம் அல்லது அறிகின்ற அந்தப் பொருள் தேய்வதில்லை, சாவதில்லை.'

ஆகவே வெறும் ஏட்டுப் படிப்பெல்லாம் ஞானம் விழைபவனைக் குழப்பப்படுத்தும். பலதரப்பட்ட சிந்தனையாளர்கள் தங்கள் முறையில் தங்கள் மனப் பாங்கு பண்பாட்டுக்கு ஏற்றவாறு தனித்தனியே எண்ணி வாதம் புரிந்து முடிவு காணுகிறார்கள்.

அந்த முடிவுகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாயிருக்கின்றன. உண்மையான தீர்ப்பைத் தருவதுதான் யார்? எந்தத் தர்மபுத்திரன் நமக்கு உண்மையைச் சொல்வார்? அந்த உண்மையை உள்ளபடி அனுபவித்துணர்ந்த ஆத்ம ஞானிதான் செய்ய முடியும். ஆகவே நசிகேதன் யமதர்மனைப் பார்த்து இந்த ஆத்யாத்மிகக் கேள்வியைக் கேட்டது முற்றிலும் சரியே!

தேவை - ரத்ராபிப விசிகில்ஸிதம் புரா
ந ஹி ஸுஜ்ஞேய - மணுரேஷ தர்மா: |
அன்யம் வரம் நசிகேதோ வ்ரிணீஷ்வ
மா மோ பரோத் - ஸீரதி மா ஸ்ருஜைனம் ||

21. இந்த விஷயத்தில் பழங்காலத் தெய்வங்களே ஐயம் கொண்டிருக்கின்றனர். உண்மையில் அதைப் புரிந்துகொள்வது சுலபமில்லைதான். இதன் தன்மையும் உண்மைத்தே! இதை எனக்காக விட்டுவிடு.

இதிலிருந்து ஆரம்பித்து சுலோகங்களின் ஒரு தொடர் வருகிறது. இவற்றிலெல்லாம் யமன் தன் மாணவனைச் சோதிப்பதை நாம் காண்போம். நூற்றுக்கணக்கான மக்கள் இந்தமாதிரிப் பரம தத்துவத்தைப் பற்றிய ஒன்றிரண்டு சந்தேகங்களைப் பிடித்துக்கொண்டுவிடுவார்கள். அவர்கள் புத்தி அதற்கான பக்குவம் அடைந்திருக்க வேண்டும் என்பதில்லை. ஏதோ குருட்டாம்போக்கில் அந்தச் சந்தேகங்கள் அவர்கள் மனப்போக்கில் இடறியிருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் புத்தி பக்குவம் அடைந்தவர்களாகவோ மனம் தெளிந்தவர்களாகவோ இருக்க மாட்டார்கள். தேவையான அளவு பக்குவம் அடைந்த புத்தியும் தெளிந்த மனதும் இல்லாதவர்கள், சாத்திரங்களில் பேசப்பட்டிருக்கிற இந்த நுணுக்கமான உண்மையை உணர்ந்துகொள்ள முடியாது. அப்படிப்பட்டவர்களிடம் அந்தச் சுதந்திர நிலையைச் சொல்வதும் அவர்களிடம் நேராக அமர ஆத்மாவின் தெய்வத் தன்மையை விளக்குவதும் வீண் முயற்சியாம். கேட்பவர்களுக்கு அந்த முயற்சி எந்தப் பயனையும் அளிக்கப்போகிறதில்லை.

ஆகவேதான் பெரிய குருமார்கள் முதலில் தங்கள் சிடர்களைச் சோதனைக்குட்படுத்துகிறார்கள். அவர்கள் தகுதி

உள்ளவர்கள் என்று கண்டறிந்தபிறகே அவர்கள் சீடர்களுக்கு உள்ளபடி உண்மையை எடுத்து உரைக்கிறார்கள். அதற்காக நாம் வேதாந்தக் கொள்கைகளை ரகசியமாகவே வைத்திருந்து குறிப்பிட்ட மிகச் சிலருக்குத்தான் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணிவிடக் கூடாது.

நாமே நம் அன்றாட வாழ்க்கையில் இந்தப் புத்திசாலிக் கொள்கையைக் கையாள்கிறோம். உதாரணம் ஒன்று எடுத்துக் கொள்வோம். சிறு குழந்தை ஒன்று தந்தையைக் கேட்கிறது : "அப்பா, மழை எப்படிப் பெய்கிறது?" தந்தை புத்திசாலியாக இருந்தால் கறுப்பு மேகத்தின் பின் நிற்கும் 'வெள்ளை யானை'யைப்பற்றிச் சொல்கிறார். அந்த யானை மக்களின்மேல் தன் துதிக்கைமூலம் நீரைத் தெளிப்பதாகச் சொல்கிறார். பத்து வருஷங்கள் சென்றபிறகு அதே குழந்தை அதே தன் தந்தையிடம் அதே கேள்வியைக் கேட்டால் அவர் என்ன பதில் சொல்கிறார்? அப்பொழுது நீராவியைப்பற்றிப் பேசுகிறார். மேகங்களில் உள்ள நீராவி குளிர்ந்த அடர் காடுகளின் பிரதேசத்திற்குச் சென்றவுடன் குளிர்வதைப்பற்றி விவரிக்கிறார். இயற்கையின் ஒரே அற்புதச் செய்கைக்கு அதே குழந்தையிடம் இரண்டு வகை விளக்கங்கள் தரப்பட்டன; வளர்ச்சியின் நிலைமாற்றத்துக்கு ஏற்றவாறு. ஆம், பின்னால் சொல்லப்பட்ட விளக்கம் முன்பே சொல்லப்பட்டிருந்தால் குழந்தை திருப்தி அடைந்திருக்க மாட்டான்!

அந்த முறையில்தான் ஆசிரியர் மாணவனுடைய முதிர்ச்சியைச் சோதிக்கிறார். அவன் தரத்துக்கும் வகுப்புக்கும் ஏற்றவாறு தன் விளக்கவுரைகளைத் தருகிறார்.

இங்கே யம தர்ம ராஜன் உண்மையை அறியத் தேடும் நசிகேதனைச் சோதிக்க முயலுகிறார். ஒருவிதமான ஆழ்ந்த பாவனையை ஏற்றுக்கொண்டு பிராமணச் சிறுவனிடம் சொல்கிறார். "இறந்த பிறகு ஆத்மா என்ன ஆகிறது என்று கேட்கிறாய். அது வீண் கேள்வி. அதன் விவரம் அறிய விரும்புகிறாய். அதனால் ஒரு வரம் வீணாகிவிடும். அதை வீணாக்க நான் துணியவில்லை!." மேலும் விடாமல் சொல்கிறார் ஒரு செய்தியை : "இந்த விஷயம் மிகவும் சூட்சுமமானது, அறிவதற்குக்

கடினமானது. இன்னும் பழம் பெருந் தெய்வங்களே அதைப் பற்றிச் சந்தேகம் கொண்டிருக்கின்றனரே !''

தேவர் என்றால் ஒளியுள்ளவர் என்று பொருள். அச் சொல் சுவர்க்கத்தில் உள்ளவர்களைக் குறிக்கிறது. அவர்களுக்கு மன தும் புத்தியும் விரிவான ஒளியை உடையதாக இருக்கும். அத் தெய்வங்களுக்கு உணரும் சக்தி, விவாதிக்கும் ஆற்றல் எல் லாம் அதிகமாக இருக்கும். தவிர அவர்கள் ஆயுளும் நீளம்; ஆகவே விசாரணை செய்து பரிசீலனை செய்து அலசி அறிய அவ காசமும் அதிகமும் கிடைக்கும். ''அப்படிப்பட்டவர்களே ஆன் மாவின் இயற்கையைப்பற்றிய ஒரு முடிவான அறிவை அடைய வில்லையே'' என்கிறார் யம தர்மன். ஆகவே மிகவும் தெளிவாக, இது கடினமான சர்ச்சை; பெரிய தலைப்பைப் பற்றி ஒரு மனி தக் குழந்தை அறிய முயலுவது எவ்வளவு வீணான முயற்சி என்று புலனாகிறது.

உண்மையில் மிகத் திறமையாக விவாதித்திருக்கிறார் யம தர்ம ராஜன். இந்தச் சுலோகத்தில், நசிகேதன் இந்தக் கேள் விக்கு விடை அறிய விரும்புவதற்கு எதிராக நாம் ஒரு விஷயம் மறக்கக்கூடாது. யமதர்மன் பதில் சொல்லாமல் தப்பித்துக் கொள்ளவேண்டும் என்று எண்ணியவரல்ல. ஒருகால் உண் மையை அறிவதில் சீடனுக்கு இருந்த ஆர்வத்தைவிடக் குருவுக்கு இந்த ஞானத்தைத் தருவதில் ஆர்வம் அதிகம் இருந்திருக்கும். ஆனால் சீடன் தகுந்த முறையில் வாங்கி வைத்துக்கொள்ளும் திறன் பெறாதவனாயிருந்தால் வேதாந்தத்தின் புனித உண்மை களை அவனுக்குச் சொல்லிக்கொடுத்தல் வீண் என்பது மட்டு மல்ல; அப்படித் தயாராகாத மாணவனிடம் அந்த ஞானத் தைத் தருவதே பயங்கர விளைவை ஏற்படுத்தக்கூடியதாகவும் ஆகலாம். ஏனென்றால் புத்தி மந்தங்கள் சுருதிக் கூற்றின் உண்மைக் கருத்துக்களையும் அவற்றின் காரணங்களையும் தப் பாய்ப் புரிந்துகொள்ள ஏதுவாகிறது. வேதாந்தம் உண்மை யாகவே அறியப்படுமானால் உண்மை பக்தனை உலகில் ஒரு கடவுளாக மாற்ற முடியும். ஆனால் அந்த ஞானத்தைச் சரி யான அமைப்பில் சரியான பொருளுடன் பெற்றுக்கொள்ளத் தக்கவாறு அமையாதவனாயிருந்தால் பேயை ராட்சசனாகவும் ஆக்கிவிடும்! வயதானவர் கையில் தீப்பெட்டி ஒரு நற்சாத

னமாக இருக்கலாம்; ஆனால் குழந்தைகளின் கையில் கிடைத்தால் அதுவே அச்சத்துக்குக் காரணமாக மாறிவிடும் அன்றோ!

தேவை—ரத்ராபி விசிகித்சிதம் கில
த்வம் ச ம்ருத்யோ யன்ன சுஞேய மாத்த |
வக்தா சாஸ்ய த்வாத்ருகன்யோ ந லப்யோ
நான்யோ வரஸ்துல்ய யேத்ஸ்ய கஸ்சித் ||

22. மிருத்யுவே! நீ சொல்கிறாய், "கடவுளுக்குக் கூட இதில் சந்தேகம் உண்டு, இது அறிய எளிதன்று," என்று. உன்னைப்போல இதைச் சொல்லக்கூடிய வேறு ஒருவரையும் காண இயலாதே. வேறு எந்த வரமும் இதற்கு ஈடுமாகாதே.

யம தர்மராஜன் இதற்கு முந்திய சுலோகத்தில் சொன்ன சொற்கள் மிகவும் கவர்ச்சி உடையவை. மனச் சிக்கல் ஆராயும் வித்தைக்கு மூலமாக அமைந்த முறையில் அவை மிளிர்ந்த திறனுக்கு உதாரணம் என்றால் சீடன் பேசிய இந்தப் பேச்சும் மிகவும் சீரியதாகும். 'அறிந்தே தீருவேன், தெளிந்தே நிற்பேன்' என்ற அழுத்தமான உறுதியைக் காட்டும் இளகளில்லாத வார்த்தைகள் இந்தச் சீடன் பேச்சில் வெளியாகின்றன. 'அப்பாலைப்'பற்றிய இந்தப் பெரும் கேள்விக்கு விடை அறிவதற்குச் சமமாக வேறு ஒரு வரமும் கிடையாது என்பது அவன் துணிபு. ஏனெனில் மற்ற வரங்களிலிருந்து கிடைக்கும் பயன்கள் எல்லாம், உலகாயதமானவை. அழியும் தரத்தவை. தவிரவும், தெய்வங்களே தாங்களாக வழியறிந்து ஆத்மனின் இயற்கையைப் பற்றிய ஒரு முடிந்த அறிவைப் பெறுவதில் வெற்றி அடைய முடியவில்லை என்றால், பிறகு நாம், இந்த அறிவைப் பெறுவதற்கு அதைத் தர ஒரு பெரிய ஆசிரியரை அடைந்தால் தான் ஆகும் என்பது தெளிவாகிறதல்லவா? யம தர்மராஜனை விடப் பெரிய ஆசிரியர் யாருண்டு? ஒருவரும் இருக்க முடியாதே!

ஸதாயுஷ: புத்ர பௌத்ரான் வ்ரிணீஷ்வ
பஹூன பஸூன் ஹஸ்தி ஹிரண்ய-மஸ்வான் |
பூமேர் மஹத்-தாயனம் வ்ருணீஷ்வ
ஸ்வயஞ் ச ஜீவ ஸரதோ யாவதிச்சஸி ||

23. நூறு வயது வாழும் புத்திரர்கள், பேரர்கள், பசுக் கூட்டங்கள், யானைகள், தங்கம், குதிரைகள் இவைகளைக் கேள்; உலகத்தையே எடுத்துக்கொள். எவ்வளவு நாள் விரும்புகிறாயோ அவ்வளவு சரதங்கள் வாழ்வாய்!

மாணவன் மன நரம்பைச் சோதிக்க யமன் எல்லையற்ற ஆசைகளைக் காட்ட ஆரம்பிக்கிறார்.

தத்துவ விசாரணை செய்பவன் இந்திரியப் பொருள்களில் பொய்யான ஆசைகளிலிருந்து முற்றிலும் ஒட்டாமல் தனித்து நிற்கும் உணர்வைப் பெற்றாலொழிய, அந்த உண்மைத் தத்துவத்துடன் ஒட்டி அதன் அமர உலகத்திலும் நிலைத்து நிற்க வழியே கிடையாது. ஆசிரியர்கள் தங்கள் பிரிய சீடர்களைக் கடுமையாகச் சோதிக்கிறார்களே, அதற்கு நியாயம் இதுதான். இந்தக் காலத்திலே பரீட்சைகள் பையன் மனத்தை 'முறிக்க' என்று நடத்தப்படுகின்றனவே! ஆனால் வேத காலத்தில் இவ்விதப் பரீட்சைகள் சீடர்களின் மனத்தைச் சேர்க்க என நடத்தப்பட்டன. ஒருகால் இந்தப் பரீட்சைகளின் பலனாக மாணவன் தரத்துக்குக் கீழ்ப்பட்டவனாகத் தோன்றினால் அவனை 'உதவாக்கரை' என்று உதறுவது இல்லை. ஆனால் அவன் சுத்தமடைந்து, சீரடைந்து திறமையின் மிகச் சிறந்த தரத்துக்கு உயர்வதற்கான பாடங்களைக் குரு சொல்லித் தருவார்.

யமன் காட்டிய ஆசைகளின் பட்டியல், எல்லாவற்றையும் அடக்கிப் பரந்து நிற்கிறது. ஆளைக் கொல்லும் அவற்றின் பிடிப்பில் இருந்து சாதாரண மனிதன் தப்பித்துக்கொள்ள முடியாது. மிருத்யுவாசன் என்னென்ன தந்தான்! பல குழந்தைகள், பேரன்கள்! நூற்றாண்டு வாழ்பவர்கள்! அது மட்டுமா? பட்டியலில் சொத்து, ராஜ்யம், அதிகாரம், எல்லாம் அடங்கி இருக்கின்றன. பல்லாண்டு வாழ முடியாதவனுக்கு இதெல்லாம் பொருளற்றதாக ஆகிவிடுமே! அல்பாயுசில் போகின்றவனுக்குச் சொத்தும் ஒரு துயர் அல்லவா! நசிகேதனுக்கு அவன் விரும்பும் வரை வாழ்ந்து அனுபவிக்க ஆயுளும் தரப்பட்டது.

**ஏதத் துல்யம் யதி மன்யஸே வரம்**
**வ்ருணீஷ்வ வித்தம் சிரஜீவிகாஞ்ச |**
**மஹாபூமௌ நசிகேதஸ் த்வமீதி**
**காமானாம் த்வா காமபாஜம் கரோமி ||**

***24.** இதற்குச் சமமாக, கேட்பதற்குத் தகுதி என்று நீ விரும்புவதைக் கேள்: சொத்து, நீண்ட ஆயுள், பரந்த உலகத்தின் ராஜ்யம்; நசிகேதனே! நீ விரும்பியதெல்லாம் அனுபவிக்கும்படி நான் உனக்கு அருளுகிறேன்.*

*முதல் சுலோகத்தில் யமன் பல பரிசுகள் வாக்களித்தான். முன்பு வாக்களித்த அந்தப் பட்டியலுக்கு ஒரு பின் அனுபந்தத்தையும் சேர்த்து இப்பொழுது ஓர் இணைப்புப் பட்டியலைத் தருகிறார் யம தர்ம ராஜன்.*

*முதல் சுலோகத்தில் இறுதியில் யம தர்மராஜன் பரிசுத்தனான தன் மாணவன் நசிகேதன் முகத்தில் திருப்தியின் ஓர் ஒளிக் கீற்றை எதிர்பார்த்து ஏமாந்திருப்பார்!*

*அன்பர்களே! இந்த யாகசாலையில் நீங்கள் இருக்கிறீர்கள். இந்த ஊரின் வேறு ஒரு பகுதியில் ஐந்து ரூபாய் கிடைப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது என்று தெரிந்தால் அவசியம் எழுந்து ஓடிவிடுவீர்கள். இங்கே ஒரு தேடுபவன்; பாருங்கள். அவனுக்குப் பையன்கள், பேரர்கள், தங்கம், பசுக்கள், ராஜ்யங்கள், பட்டுமா? அசாதாரணமான நீண்ட ஆயுள் எல்லாம் சந்தேகமற்ற முறையில் வரமாகத் தரப்பட்டிருக்கின்றன! என்றாலும் உண்மையாகத் 'தேடுப'வனான அந்த நசிகேதன் முகத்தில் ஒரு திருப்திக் கோடு கூடத் தோன்றவில்லையே! இதைப் போன்ற வேளையில் ஒருமுனை மனதும், உண்மையின் பலி பீடத்தில் எல்லாவற்றையும் பலியிடும் ஒரு செயல்படும் சம்மதம் இவை இரண்டுமே வெற்றி கொள்ளும் தேடுபவர்களிடையே காணப்படும் உயிரான அம்சம்.*

*இந்தச் சுலோகத்தில் மிருத்யுவாசன் வாக்களித்த பொருள்களின் பட்டியலைப் பூர்த்தி செய்கிறான். அவன் கேட்ட முக்கியமான கேள்விப் பாதையிலிருந்து அவனை அப்பால் செலுத்திவிட முடியுமா என்று பார்க்கிறான். இருந்தும் ஒருசந்தேகம். 'ஒருகால்*

நசிகேதன் மனத்தில் சில ரகசியமான ஆசைகள் இருக்குமோ, அவை நான் தந்த பட்டியலுக்கு முன் அடங்கவில்லையோ, என்னமோ? அதனால்தான் அவன் முகத்தில் ஒருவித பாவனை மாற்றமும் ஏற்படாமல் 'இது யாருக்கு வேண்டும்' என்ற தோற்றம் பெரிதாக எழுதி வைத்திருக்கிறதோ' என்று யம தர்மன் எண்ணுகிறார். ஆகவே, ''எது வேண்டுமானாலும் கேள்; விரும்பிய எதுவும் வரமாகக் கேள். பெரும் சொத்து, நெடு வாழ்வு இரண்டோடு மட்டுமல்ல, எது வேண்டுமோ கேள்!' என்று அழைக்கிறார் அவர்.

இதைச் சொல்லியும் பையன் முகத்தில் ஆவல் தோன்ற வில்லை. ஓர் உற்சாகத்தையும் காணோம். ஆகவே யம தர்மன்; உலகம் முழுவதையும் ஒரே ராஜ்யமாக்கி அவனுக்குத் தருகி றேன் என்று சொல்கிறார். 'நீ விரும்பும் ஆசைகளை எல்லாம் அனுபவிக்கும்படி செய்கிறேன்' என்கிறார்.

இவ்வளவும் எதற்கு? 'சாவுக்குப் பின் வாழ்வு உண்டா?' என்று அறிய முற்படும் ஒரு கேள்வியைத் தொடராமல் விடுவ தற்குப் பதிலாக இவ்வளவும் தரப்படுகின்றன! என்ன சாதக மான வியாபாரம்! இருந்தும் வெற்றி யமனுக்கில்லை. வருந்தத் தக்க முறையில் அவருக்குத் தோல்வியேதான்!

இமா ராமா ஸ்ரதா ஸதூர்ய
ந ஹீத்ருஸா லம்பனியா மனுஷ்யை: |
ஆபிர்மத்-ப்ரத்தாபி: பரிசார்யஸ்வ
நசிகேதோ மரணம் மானுப்ராக்ஷீ ||

25. மனிதனின் அழியும் உலகில் என்னென்ன ஆவல்கள் பூர்த்தியடைவது கஷ்டமோ அவற்றையெல்லாம் உன்விருப்பப் படி கேள். இந்த அழகிய மங்கைகள், அவர்கள் ரதங்கள், வாத்யங்களுடன் வேண்டுமா?—மனிதர்களால் அடைய முடியா தவர்கள்—அவர்கள் உனக்கு ஊழியம் புரிவார்கள். அவர்களை நான் உனக்குத் தருவேன்! ஓ நசிகேதனே! சாவுக்குப் பிறகு ஆன்மா என்ன ஆகிறது என்று மட்டும் கேளாதே!

மனத்தின் பாதி மறைந்த பகுதியில் (Sub Conscious) நாம் அறியாத சந்தேகிக்கவும் இயலாதபடி ஓர் ஆவல் 'புழு

தங்கியிருந்தாலே அது உண்மை ஞானம் தேடுபவனுடைய மனவாழ்வின் அமைப்பையே ஆட்டிக் கலைத்துவிடும்! உண்மையான சாதகன்—வெற்றி பெறுவதற்காகவே வாழ்க்கை எடுத்த சாதகன் என்றால் உடல், மனம், ஆன்மா இம்மூன்று தளத்திலும் ஒத்த அளவில் வளர்ந்தவனாக இருப்பான். அம்மூன்றில் எந்த ஒன்று குலைந்திருந்தாலும் சேர்க்கை முற்றிலும் நிலைகுலைந்துவிடும். அப்படி நிலை கலைந்த வாத்தியத்திலிருந்து உண்மையான சங்கீதம் எழ முடியாது! ஆன்மாவின் சரியான மருத்துவர் யம தர்மராஜன். ஆசிரியன் அவர். ஆகவே சிடனுடைய உள் யந்திரத்தின் தன்மையையும் நிலையையும் நன்றாகப் பரிசோதிக்கிறார். அதற்காகத்தான் அவர் சாவுக்குப் பின் உள்ள வாழ்வைப் பற்றிக் கேட்டுப் பிடிவாதம் செய்ய வேண்டாம் என்று சொல்கிறார். அதைவிட்டுப் புறப்பொருள் பயனையோ இந்திரியங்கள் இன்பம் பெறும் பொருளையோ விரும்பிப் பெறு, அவைகள் உன் உள்ளே இருந்து நிறைவு பெற எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன என்று கேட்டுக் கொள்கின்றான்.

அப்ஸரஸ்கள் அவனுக்குப் பரிசாரகம் செய்ய! தெய்வ அழகு பெற்றவர்கள்! சுவர்க்கச் சீர்மை தாங்கியவர்கள். ரதங்கள், ஆபரணங்கள். என்னதான் இல்லை!

ஸ்வபாவா மர்த்யயஸ் யதந்தகைதத்
ஸர்வேந்த்ரியாணும் ஜரயந்தி தேஜ |
அபிஸர்வம் ஜீவிதமல்ப மேவ
தவைவ வாஹாஸ்தவ ந்ருத்த கீதே ॥

26. இவை எல்லாம் சீக்கிரம் அழியக்கூடியவை, அந்தகனே! இவை எல்லாம் மனிதனின் இந்திரியங்களுக்குள்ள ஒளியை அழித்துவிட முயலும். மக நீண்ட வாழ்வும் குறுகியதுதான்! உனக்கே இருக்கட்டும் ரதங்கள், நிருத்யம், கீதம் எல்லாம் உனதே!

மனோ விஞ்ஞான சிகிச்சை செய்பவன் யமன்! தகுந்த கேள்விகளைக் கேட்டு மனத்தைப் பிடுங்குகிறார். அவற்றுக்கு இலக்கானவனும் சரியான முறையில் நடந்து கொண்டு

விடுகிறான். நசிகேதன் கொடுக்கும் விடையிலிருந்தும் அதன் குரலிலிருந்தும் நன்கு தெரியவில்லையா? மேலும் நசிகேதன் கொடுத்த விடையில் ஒரு வாதம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதன் மேல்தான் அவன் முடிவுள்ள புலப் பொருள்கள் அழியாத மதிப்பை உடையன அல்ல என்ற புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்திருக்கிறான். அந்த வாதமே நமக்கு ஒரு விஷயத்தைத் தெளிய எடுத்துக் காட்டுகிறது. நசிகேதன் சிறிய பையன்தான். என்றாலும் புத்திசாலித்தனமான ஆத்ம சோதனை, மனிதர், பொருள்கள் இவைகளைப் பற்றி நன்கு மதிப்பிட்ட விவேகம் இவைகளைக் கொண்ட பயனுள்ள வாழ்வை வாழ்ந்திருக்கிறான்.

புலப் பொருள்கள் எல்லாமே முடிவுள்ளன, சீக்கிரம் அழியக் கூடியன என்று அவன் வகுக்கிறான். ஆகவே அவன் அவற்றை வெறுக்கிறான். உலகில் அவன் வாழ்ந்தது குறைவான நாட்களே! என்றாலும் வாழ்க்கையைச் செறிவாக வாழ்ந்திருக்கிறான். ஒரு கிடஷம்கூட வீணாக்காமல் வாழ்ந்திருக்கிறான். நல்ல விவேகம் பெற்றிருக்கிறான். இந்தப் புறப் பொருள்கள், அவைகள் தெய்வத் தன்மை பெற்றிருந்தாலும் சரிதான்...பொய்யே! நீண்ட காலம் தங்கமாட்டா—நாளைவரைகூடத் தங்கமாட்டா என்ற கெட்டிக்கார முடிவுக்கு அவன் வந்திருக்கிறான்.

இந்தப் புலனறி பொருள்கள் தாங்கள் முடிவுடையன என்பது மட்டுமல்ல, ஆனால் அவைகளில் சிக்குவதும் அவற்றைப் பெற்று அனுபவிப்பதும் பொறிகளைப் பலம் குன்றவைத்துவிடும்! இந்தப் பொறிகள் (ஐம்புலன்கள்) இல்லாமல் புலனறி பொருள்கள் நம் மனத்தில் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. சந்தோஷமோ துக்கமோ ஒருவித அனுபவமும் சாத்தியமாகாது. நசிகேதன் பெற்றது போன்ற விவேக ஒளி நமக்கும் கிடைத்தால் நாமும் இந்த உண்மையைத் தெளிவாகக் காண முடியும். நாசகாரிகளான புலனறி பொருள்கள் தாமே அழிபவையாயிருப்பது தவிர, பொறிகளின் தேய்வையும் நெருக்கிவிடும். முதல் லட்டு மிக இனிமையாக இருக்கும். ஆனால் ஐந்தாவது லட்டு அவ்வளவு இனிமையாயிருக்காது. இருபதாவது லட்டு வருத்தம் தரக்கூடியதாக இருக்கலாம். ஆனால் திண்ணமாக நாற்பத்திரண்டாவது லட்டு கொடுமை உரு

எடுத்ததேதான். உண்மை அதுவாக. (அறிவு காட்டிய வழி செல்லத் தக்க அறிவுறுதி கொண்ட) எந்த அறிவாளியும் புறப் பொருள் இன்பங்களின் பின் ஓடமாட்டான். அவை சீக்கிரம் அழியும் பொருள்களிலிருந்து எழுபவை. அவை அந்தச் சமயத் தில் எவ்வளவு பிரமாதமாகத் தோற்றமளித்தால்தான் என்ன?

யம தர்மன் நீண்ட ஆயுள் தந்தானே! நசிகேதன் அதைக் கேட்டு அர்த்தம் புரிந்த ஒரு வெறுப்புப் புன் முறுவலைத்தான் காட்டினான்! நசிகேதன் அறிவான், உடல் போர்த்திய உயிர் எவ்வளவு நீண்ட வாழ்க்கை பெற்றாலும் அது குறுகியதே. மனிதன் மனம் இந்த உலகில் எவ்வளவு நீண்ட நாள் வாழும் வசதியைப் பெற்றாலும் பூர்ணமாக ஒரு திருப்தி உணர்வைப் பெற முடியுமா? நீண்ட வாழ்க்கை என்றாலும் ஒரு நாள் முடிவு உண்டல்லவா? அந்த முடிவுக்குள் சாவு ஒளிந்து காத்துக் கொண்டுதானே இருக்கிறது! சாவு இன்று மாலை ஏற்பட்டால் என்ன? ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் ஏற்பட்டால் என்ன? அது கஷ்டம் கஷ்டம்தானே!

அதனால்தான் நசிகேதன் கூறுகிறான். நன்றாகத் தெளிந்த புத்தியுள்ள அவனுக்கு அவற்றில் வெறுப்பு. வெறுப்பின் உச்சியில் நின்று அவன் கத்துகிறான். 'உன் ரதங்கள், ஆடல், பாடல் எல்லாவற்றையும் நீயே வைத்துக்கொள்' என்று, வெடித்தபடி கூறிய இந்தப் பதில் மரியாதை பிறழ்ந்ததாகத் தோற்றம் அளிக்கிறது. என்றாலும் இதைக் கேட்டு யம தர்மன் எவ்வளவு ஆனந்தம் அடைந்திருப்பான் என்று அறிய வேண்டும் என்றால் அறிய வேண்டுபவன் தானே ஒரு சரியான குருவாக இருக்க வேண்டும். இந்தக் கூற்றின் புயல் தன்மையே பக்குவ மடைந்த ஆத்மாவின் ஒளி பெற்ற உள் சிறப்பை வெளிக்காட்டு கிறது. நசிகேதனின் உண்மை சொரூபம் நன்கு தெரிகிறது. நசிகேதன்போன்ற மாணவர்கள் ஆன்ம சாட்சாத்காரம் அடை வது உடனேயாகும். உறுதியும் ஆகும்.

**ந வித்தேன தர்ப்பணீயோ மனுஷ்யோ**
**லப்ஸ்யாமஹே வித்த மத்ராக்ஷ்ம சேத்த்வா |**
**ஜீவிஷ்யாமோ யாவதீஸிஷ்யஸி த்வம்**
**வரஸ்து மே வரணீய : ஸ ஏவ ||**

27. மனிதன் சொத்தினுல் திருப்தியடையக் கூடாது. சம்பத்து வேண்டும் என்ருல் உன்னைப் பார்த்தால் கிடைத்து விடும். நீ ஆளும் வரை நாங்கள் வாழவும் முடியும். ஆகவே நான் கேட்ட வரம் ஒன்றுதான் நான் தேடவேண்டியது.

நசிகேதன் சிறுவன்தான் என்ருலும் அவன் பெரிய ஞானி யின் அறிவைப் பெற்றிருக்கிருன். விரட்டி ஓடும் பசுக்களைப் போன்று அவன் வாழ்ந்திருக்கவில்லை. புத்திசாலித்தனமாக வாழ்க்கையைச் செலுத்தியிருக்கிருன். தன் அனுபவங்களையும் உன்னிக் கவனித்து ஞாபகம் வைத்திருக்கிருன். பிறர் அனுபவங் களையும் தெரிந்திருக்கிருன். அவ்விதம் வாழ்ந்த அவனுல். 'சொத்து மட்டும் சந்தோஷத்துக்கு இனுமாக அழைத்துச் செல்லாது. அதனுல் முடியும் முடியாது' என்ற புத்திசாலித் தனமான முடிவுக்கு வர முடிந்தது. இங்கே சொத்து என்ருல் பாங்கியில் போட்டு வைத்திருக்கும் பணமோ பங்கு மார்க் கெட்டில் இருக்கும் பங்குகளோ மட்டுமல்ல. அது மிக விரிந்த பொருளில் உபயோகிக்கப் பட்டுள்ளது. வாழ்வின் எந்தச் சூழ்நிலையிலும் எங்கெந்தப் பொருள் எல்லாம் உண்டோ அவை எல்லாவற்றையும் உண்டாக்கி நிற்கிறது அந்தச் சொல்.

நாம் வசிக்கும் புறவுலகை நம் இஷ்டப்படி ஏற்படுத்திக் கொண்டால் மட்டும் நம் சந்தோஷம் எழுதித் தரப்பட்டு விட் டது என்று சொல்ல முடியாது. இது யாவரும் அறிந்த உண்மை. சந்தோஷம் என்பது மனம் கொள்ளும் நிலையைப் பற்றியது. காலம், இடம், சூழ்நிலைகள் முதலிய வெளி அமைதிகளில் மனம் குறிப்பிட்ட போக்கை மேற்கொண்டு தானே வருகிற ஒரு நிலை தான் ஆனந்தமாகும். பொருள்கள் மாருமல் இருந்தும் மனம் அதன் நிலை, அது அப்பொருள்களால் பாதிக்கப்படும் காலம் இவ்விரண்டுக்கும் ஏற்றவாறு மாறி மாறிப் பாதிக்கப்படலாம். இப்படித்தான் எப்பொழுதும் இனிமையாயிருக்கும் ஒரு பணி யாரம் நாக்குக்குப் பின்னுல் இருந்து ருசியை உணர்த்தும் மனது ஏதோ வருத்தத்தினுலோ சங்கடத்தினுலோ கசந்திருந்தால் இனிமை தரமுடியாதபடி கசந்து காட்டலாம். ஆகவே நசிகேதன் சொன்னது உண்மையின் கூற்றே. நன்கு தெரிந்தது தான். ஆனுல் நன்ருக உணரப்படுவதில்லை. நசிகேதன், சம்பத்து மட்டும் பெற்று மனிதன் சந்தோஷமடைய முடியாது என்ற

வெளிப்படையான உண்மையைத்தான் சொல்கிறான். வாழ்க்கையில் எவ்வளவோ வருத்தமுற்ற பணக்காரர்களைப் பார்க்கிறோம். லட்சாதிபதிகள்கூடத் தற்கொலை புரிந்து கொண்டார்கள் என்று தெரியவருகிறதில்லையா?

நசிகேதன் மேலும் சொல்கிறான்- "எல்லா சௌகரியத்தையும் மனிதன் அடைந்ததாகவே வைத்துக்கொள்வோம். அவை எல்லாம் எது வரை அனுபவிக்க முடியும்? யமனைச் சந்திக்கும் வரைதானே?" இறந்தபிறகு மனிதனுக்கு அவன் பொக்கிஷத்திலிருந்து என்ன வேண்டும்? ஒரு சல்லிகூட அவனுக்குத் தேவை இராது.

அதே சுலோகத்தின் அந்தப் பகுதிக்குப் பின் வருமாறும் விளக்கம் சொல்லலாம்: "யம தர்மராஜனே! உன்னைச் சந்தித்த பிறகு எவன்தான் ஏழையாகத் திரும்புவான்?" அதாவது 'யம தர்மராஜனை ஒரு முறை தரிசனம் செய்தாலே போதும். பக்தனுக்கு எல்லாவிதப் பொருள் பயனும் கிடைத்து விடும். ஆகவே நசிகேதன், 'ஏற்கனவே கிடைத்துவிட்ட ஒரு பொருளை மீண்டும் பெற என்று மூன்றாவது வரத்தைப் பிரயோகப் படுத்துவது கெட்டிக்காரத்தனமாகாது' என்று சொல்வதாகவும் கொள்ளலாம்.

ஆம்! ஒரு பள்ளி ஆசிரியர் வெகு சிரமப்பட்டுக் கல்வி மந்திரியைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்று அவரிடம், 'என்னை ஒரு பள்ளிஆசிரியராக அமர்த்துங்கள்!' என்று எங்கேயாவது கேட்பாரா? அப்படிக் கேட்பதற்காக அவர் அந்தப் பாடு பட்டிருந்தால் அது வீண் வேதனையல்லவா? பித்துக்குள்ளித்தனம் அல்லவா ?

இப்படி எல்லாம் வாதங்களைப் புரிந்த நசிகேதன் என்கிற அந்தப் புத்திசாலியான விவேகமான சீடன் அழுத்தமாகத் தன் ஆசிரியனிடம், "நான் கேட்ட வரம்தான் வேண்டுகிறேன்," என்று சொல்லிவிடுகிறான்.

அஜீர்யதா-மம்ருதாணு-முபேத்ய
ஜீர்யன் மர்த்ய : க்வதஸ்த்த : ப்ராஜனன் |
அபித்யான் வர்ண-ரதி-ப்ரமோதான்
அதிதீர்க்கே ஜீவிதே கோ ரமேத ||

28. இம் உலகில் வசித்து அழிவடையும் எந்த மனிதன் தான் ஞானம் பெற்றுத் தேயாத அமரர்களை நெருங்கிய பிறகு, நெடு வாழ்வில் இன்பம் காண்பான்? (அதுவும்) ரதி, பிரமோதம் (அன்பு, அழகு, பாடல் ஆடல்) இவைகளின் உண்மைத் தன்மையை நன்கு சிந்தித்து அறிந்த பிறகு?

இந்தச் சுலோகம் அழுமூஞ்சியின் நம்பிக்கையிழந்த கூற்றல்ல. அழுகிய மனம், புலனின்பம், அறியாமை இவைகளில் அழுந்தி மூச்சு நெருங்கிய புத்தி இவைகளிலிருந்து எழும் அழுகைக் குரல் அல்ல. அது நல்ல ஆரோக்கியமான மனது, மேகமற்ற ஞான சூரியனில் ஒளி பெற்று மிளிரும் வளர்ச்சியடைந்த புத்தி இவற்றின் பயனுய்ப் பெற்ற ஞானம், நல்லதே ஏற்படும் என்ற நம்பிக்கை இவைகளின் ஆனந்த எக்களிப்பின் கீதமே இந்தக் கூற்று. அந்த வார்த்தைகளின் உற்பத்தியில் கேலி நிறைந்திருக்கிறது. மனிதப் புழுக்கள், மாமிசம் தரும் இன்பங்களாகிற குஷ்டரோகக் குழிகளில் அழுந்தி அதை இன்பமாக ஏற்று எக்காளம் போடுகின்றன. ஆனந்தக் கூத்து ஆடுகின்றன. அப்படி ஆடி, பூமியில் கடவுளாக வாழக் கிடைத்த தன் பரம்பரைப் பண்பாட்டைத் தேய்த்து அழிக்கின்றன. அவைகளைக் குறித்து ஏற்பட்ட சூடான கேலியும் இந்த வார்த்தைகளின் உயிராம்சமாக நிற்கின்றது.

நசிகேதன் மனிதனின் இந்த முயற்சியைக் கண்டிக்கிறுன். உலகியல் மனிதர்கள் சம்பாதிக்கப் போராடுகிறுர்கள். ஆஸ்திக்கு முதலாளியாக முயலுகிறுர்கள். செலவழிக்கப் பறக்கிறுர்கள். இந்தத் துயர் மிகுந்த வாழ்வை அவன் நிந்திக்கிறுன் என்றுலும், கூடவே அவன் இரக்கத்துடன் கூடி உண்மையையும் உணர்கிறுன். மனிதர் குலம் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் இந்தப் பொல்லாச் செய்கையைச் செய்து கொள்வது ஏன் என்றும் அந்த இரக்கத்தின் காரணமாக அவன் புரிந்துகொள்கிறுன்.

அவன் சொல்கிறுன்.

''தேயாத அமரர்களின் சேர்க்கையை அடைந்த பிறகு யாரும் தேய்ந்து அழியும் எந்தப் பொருள்களின் மேலும் ஆசையோ விருப்பமோ கொள்ள முடியாதே!''

எல்லா மதங்களுமே ஒருமித்துக் கூறுகின்றன: 'மனிதன் உடல்—மனம்—புத்தி—ஆகிய சேர்க்கையிலிருந்தும், அதன் உறவு களிலிருந்தும் தன்னைப் பிரித்துக் கொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று. ஆனால் பொதுவாக மக்கள் ஒன்றைப் புரிந்து கொள்வதில்லை. இந்த ஒட்டாத முயற்சியில் வெற்றியின் அளவு இன்னொன்றையும் பொறுத்து நிற்கிறது. ''உள் உண்மைத் தத்துவம்தான், அறிகின்றவனாகிற ஜீவன் என்கிற உள் இயந்திரங்களுக்கும் சக்தி அளித்து வழியும் காட்டுகிறது. அதுவே வெளிபுலகப் பொருள்களையும்—அவற்றை நாம் அறியப்படுபொருள் என்று சொல்கிறோம்—ஒளிதந்து ஊக்குவிக்கிறது. அந்தத் தத்துவத்திடம் ஒட்டுதல் 'எவ்வளவுக்'கெவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அதற்கேற்றபடிதான் நாம் உடல் மனம் புத்தியுடன் ஒட்டாத முயற்சியில் வெற்றி பெற முடியும். இந்த வேதாந்த உண்மையை மனத்தில் கொண்டுதான் நசிகேதன் தன் கூற்றை வெளியிடுகிறான். 'ஒருவரும் நீண்ட ஆயுளைக் கண்டு ஆனந்திக்கமாட்டார்கள்'' என்று. அதற்கு ஒரு நிபந்தனையும் போடுகிறான் அவன். ''அழிவில்லாத அமரரை ஒருமுறை அணுகிவிட்டால்?''

தெய்வத்தன்மையுடன் நம்மை இணைத்துக் கொள்வதென்றால் தெய்வீகமற்றவைகளிடமிருந்து நம்மைப் பிரித்துக் கொள்ளத் தெரியவேண்டும். வெளிச்சத்துக்குள் போக இருளை விட்டு வெளியேறவேண்டும். கரைக்கு நீந்த வேண்டும் என்றால் தண்ணீரைவிட்டு அப்பால் நகருவது விழிப்பென்பது ,கனவு நீங்கும் நிலையே. ஆகவே எல்லா உண்மையான மதங்களும் அவற்றின் வேதங்களில் வேதநாயகன் எதை அழுத்திக் கூறியிருக்கிறானோ அதற்கேற்ப அன்பு மதம் என்றோ பிரிப்பு மதம் என்றோ அழைக்கப்படலாம்.

யஸ்மிந்நிதம் விசிகித்ஸந்தி ம்ருத்யோ
யத்ஸாம்பராயே மஹதி ப்ரூஹி நஸ்தத் |
யோயம் வரோ கூட மனுப்ரவிஷ்டோ,
நான்யம் தஸ்மாந் நசிகேதா வ்ருணீதே ||

29 மிருத்யுவே! மனிதர்கள் இவ்வாறு சந்தேகம் கொண்ட அந்தப் பெரிய விஷயத்தைச் சொல்லும். அப்பால் வரப் போகிறதைப் பற்றியதான அந்த விஷயத்தையே சொல்லும்,

அறிவிற்கு மறைந்திருக்கிற அந்த வரத்தைத் தவிர வேறு ஒரு வரத்தையும் நசிகேதன் கேட்கமாட்டான்.

(முதல் அத்தியாயத்தின் முதல் பகுதி இத்துடன் முடிகிறது.)

முதல் அத்தியாயத்தின் முதற்பகுதி இந்த நிச்சயமான அசையாத தேவையைச் சீடன் கூறுகிறான் என்று சொல்லி முடிகிறது. நசிகேதனை அவனுடைய உறுதியிலிருந்து புரட்ட எந்த ஓர் ஆசைக்கும் சக்தி இல்லை.

இந்த வல்லி (பகுதி) இந்த உபநிஷதத்துக்கேற்ற நாடகப் பின்னணியை அமைத்துத் தருகிறது. அதுமட்டுமல்ல, அந்த இளம் பிராம்மணச் சிறுவன் தோற்கடிக்கமுடியாத கதாநாயகன் அவனுடைய குணம்சம் போற்றத்தகுந்தது என்கிற முறையில் மறக்கமுடியாத ஒரு சித்திரத்தையும் படிப்பவர்கள் மனத்தில் ஏற்படுத்திச் செல்கிறது. அவன் விவேகம்கொண்ட புத்தியுடையவனாக இருக்கிறான். அதுமட்டுமின்றி பொய்யோடு ஒட்டாமல் இருக்கும் தெய்வக் குணத்தையும் பெற்றிருக்கிறான்; உண்மையுடன் ஒட்டி நிற்கும் ஒரு சாதுவின் குணத்தையும் கொண்டிருக்கிறான்.

இந்த முதல் பகுதியில் 'உபநிஷத்' என்பதற்கு மிகவும் குறைவான பகுதியையே பார்க்கிறோம். இரண்டாவது பகுதியிலிருந்து தான் வேதாந்த விசாரணைகள் ஆரம்பிக்கின்றன. பகவதியான சுருதித் தாய் இந்தப் பகுதியில் வேதாந்த வித்தை பயிலும் உத்தம சீடனுக்கு வேண்டிய தனித் தகுதிகளை வலியுறுத்த மெனக்கெட்டிருக்கிறாள். அவையிருந்தால்தான் அவன் அந்தப் பரமான உண்மையைத் 'தானே தான்' என்று சகஜ புத்தி மூலம் உணர முடியும்.

அந்தத் தனித் தகுதிகள் என்ன?

1) வைராக்கியம்; இங்கேயும் மற்றும் எங்கேயும் இன்ப அனுபவங்களுக்கு ஏங்காதிருக்கும் தன்மை.

2) விவேகம்: உண்மை எது, பொய் எது என்று பகுத்தறியும் ஆற்றல்.

3) ஷட்சம்பத்தி: ஆறு நெறியுயர்வுகள் (1) சமம்: மனத்தின் அமைதி (2) தமம்; பொறியடக்கம் (3) உபரதி: ஆசைத் துறவு (4) திதிக்ஷை பாறுமை (5) சிரத்தை (6) சமாதானம்: மனப் பக்குவம்.

4) முமுக்ஷுத்வம்: நமக்கு உள்ளிருக்கும் தத்துவம்தான் உலகிலுள்ள எல்லாவற்றுள்ளும் இருக்கும் தத்துவம். அதைக் கைவரப் பெறவேண்டும் என்கிற பற்றி எரியும் ஆவல்.

இந்த நான்குமே அந்தத் தகுதிகளாம்.

# இரண்டாம் வல்லி

அன்யச்ரேயோன்யது தைவ ப்ரேயஸ்தே
உபே நானார்த்தே புருஷம் ஸினீத:
தயோ : ஸ்ரேய ஆததானஸ்ய ஸாது
பவதி ஹீயதேர்த்தாத்ய உ ப்ரேயோ வ்ருணீதே ॥

*1: யமன் சொன்னான்: ஒன்று சிரேயம் (நல்லது— அடையத் தக்கது) மற்றது ப்ரேயம் (விரும்பத்தக்கது, இனிமையானது.) இந்த இரண்டும் பலதரப்பட்ட பொருள்களுடையன. மனிதனைப் பிணைக்கின்றன. இந்த இரண்டில் நல்லதைத் தேடுபவன் சாது (பாராட்டுக்குரியவன்). ஆனால் இனிமையாயிருப்பதைத் தேடுபவன் உண்மை முடிவை இழக்கிறான்.*

யம தர்மன் சிடனைச் சோதனை செய்து ஞானம் ஏற்கத் தக்கவனே என்று கண்டுகொண்டுவிட்டான். அதனால் மிருத்யு ராஜன் சொல்கிறார்: "நல்லது ஒன்று. இனியது மற்றொன்று." மனிதன் செய்கிற ஒவ்வொரு வேலையும் இன்பம் வேண்டும் என்கிற தடுக்க முடியாத ஓர் இயற்கைத் தூண்டுதலாலேயே எழுகிறது. வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு போராட்டத்துக்கும் சச்சரவுக்கும் இன்பமேதான் முடிவாகத் தோன்றுகிறது. மலத்தில் நெளியும் புழுவும் இதைவிட அதிக இன்பம் கிடைக்கும் ஓர் இடத்தை அடையலாம் என்ற எண்ணத்தால் தூண்டப்பட்டேதான் நெளிகிறது! பூர்ணமான மாற்றில்லாத ஆனந்த நிலையில் எல்லா ஆசைகளும் நம்பிக்கைகளும் அமர்ந்து விடும். ஆசை, நம்பிக்கையற்ற இந்த மேலான திவ்ய வாழ்க்கையின் லட்சியமாகும். இதைத்தான் தெய்வநிலை அல்லது கைவல்ய நிலை என்கிறோம். ஆகவே தொழில் புரிவதே நம் விதி என்றாகிறது: இந்தப் பூரண ஆனந்த நிலையை அடைய முயலாமல் நம்மால் இருக்க முடியாதென்றால் நாம் நம்முடைய அனுபவங்களை அலசி ஆய்ந்து எந்த வழி

முயற்சி உண்மை முயற்சியாம் என்று முடிவு செய்து கொள்ள வேண்டும். அதில் தாமதம் ஏற்படக்கூடாது. இந்தப் பிரசினையை அணுகத் தேவை ஏற்பட்டதால்தான் யம தர்மராஜன் இந்த அறிவு நிறைந்த சுலோகத்தைச் சொல்லியிருக்கிறன்.

பயன்களை ஒட்டி, தர்மராஜன் செய்கைகளை எல்லாம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறன். செய்கைகளின் பயன் இரண்டுவிதமாக இருக்கக்கூடும்; வாழ்க்கையில் செழிப்பைத் தரக்கூடியன ஒன்று; அப்பால் அமரத்வத்துக்கு அழைத்துச் செல்லகூடியதுக் இரண்டு. அதாவது நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் உடனே லௌகிக லாபத்தைத் தரக்கூடியவையாயிருக்கலாம், அல்லது நாளாவட்டத்தில் நம்முடைய சுய வளர்ச்சியையும் சுயத் தூய்மையையும் தரக்கூடியவையாகவும் இருக்கலாம்.

இதயமே இல்லாது கள்ளச் சந்தை நடத்துபவனே அல்லது நெறியே இல்லாத லஞ்சம் வாங்கும் அதிகாரியோ, அசிங்கமான அரக்க முறைகள் மூலம், பேராசை போக இச்சைகளில் திளைத்துப் பணம் குவிக்கும் பந்தயத்தில் வெற்றிபெறலாம். அறிவில்லாது பொறியின்பம் தேடும் ஒருவனுக்கு இதைப் பார்த்தால் நல்ல வழி; வரவேற்கத்தகுந்த வெற்றி என்று தோன்றலாம்!

நாம் தனி முறையில் வேறுவிதமான வாழ்வையும் வாழச் சுதந்திரமுடையவர்களே. நேர்மை தெய்வ நம்பிக்கை, உண்மை பேசுதல், தயவு, அன்பு, பொறை, மற்றும் இன்னேரன்ன பிற கொள்கைகள் நீடித்த வாழ்வுடையவை. அவற்றைக் கைக்கொண்டு நம் வாழ்வைக் கட்டி அமைக்கலாம். அத்தகைய வாழ்வின் பயனுக சுயவளர்ச்சி, அதனுல் ஏற்படக்கூடிய உள் அமைதி, இன்பம் முதலிய சிறந்த சொத்துக்கு உரியவராகலாம்.

எந்தத் தனி மனிதனும் சுதந்திரமாகத் தன்னிச்சைப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்த இரண்டு வழிகளையும் தான் யம தர்மராஜன் 'ஒன்று நல்லது; மற்றது இனியது!' என்று கூறிக் குறிப்பிடுகிறர். நல்லதெல்லாம் எப்பொழுதும் இனிமையானதாகவே இருக்கவேண்டும் என்பதில்லை என்றுலும் நல்லவை

யாகவும்] இருந்த அதே சமயத்தில் இனிமையாகவும் உள்ள போக்குகள் இருக்கவும் இருக்கின்றன.

என்ன ஆனாலும், தான் மேற்கொண்ட உயர்ந்த போக்குகள் இனிமையற்றதாயிருந்தாலும் அல்லது லௌகீக முறையில் இல்லாமையின் தொந்தரவை ஏற்க நேரிட்டாலும் லட்சியம் செய்யாமல் 'நன்மை'யான வழியையே விடாது [பின்பற்றுகிறவன் உண்மையான முடிவான• தங்கி நிற்கும் இன்பநிலையை' அடையும் ஒருவன் ஆவான்.

•இந்த இரண்டும் அவனைச் (சங்கிலி யிட்டுப்) பிணைக்கின்றன' என்ற கூற்று அந்த உயர்விலும் உயர்ந்த நிலையையிட்டுப் பார்க்குங்கால் மிகவும் பொருள் பொதிந்ததாகும்• இனிமையை நோக்கிச் செல்லும் வழி அந்த வழி போகிறவனை ஏமாற்றி அழைத்துக் குற்றம் பாவம் இவைகளின் பயங்கரமான காடுகளில் விட்டுவிடுகிறது. அப்பொழுது கீழ் யோனிகளில் பிறக்கும் ஜீவன்களாக நெடுநாள் துயர் படும் வாழ்வு கிட்டிவிடுகிறது. அதாவது நாம் இனிமைப் போக்கை மேற்கொள்வதால் நம்மை நாமே கீழே இழுத்துக்கொண்டு பரிணாம ஏணியின் கீழ்ப்படிகளிலேயே இருக்கவேண்டிய ஏற்பாட்டைச் செய்துகொள்கிறோம்• பாவங்களும் குற்றங்களும் நம்மை இடரவைத்து மீண்டும் பரிணாம ஏணியின் கீழ்ப்படிக்குத் தள்ளிவிடும் தடைகளாம், (பரமபத சோபானப் படத்தின் பாம்புகள் அவை!)

அதேபோல நன்மையின் வழியைத் தெரிந்து, அதன் பயனை அனுபவிக்கவேண்டும் என்ற ஆசையுடன் பின்பற்றுவோமானால் தெளி நிலையின் மிருதுவான தளங்களுக்கு' மாற வேண்டும் என்று நாம் உரிமை கேட்கிறோம்—அந்தத் தளங்கள் தாம் கடவுளின் உலகங்கள். அங்கே சென்ற அந்த மனிதர்கள் தாம் செய்த நற்காரியங்களின் நற்பயனை அனுபவிக்கத்தக்க உடற் கட்டுகளை ஏற்கவேண்டி நேரிடும். ஆகவே அந்தப் பரநிலையைத் தேடுபவருக்கு இனிய வாழ்வும் சரி, நல்ல வாழ்வும் சரி இரண்டுமே கட்டுக்கள் தாம்.

ஸ்ரேயஸ்ச ப்ரேயஸ்ச மனுஷ்யமேத : ஸ்தௌ
சம்பரீத்ய விவினக்தி தீர : |
ஸ்ரேயோ ஹி தீரோபி ப்ரேயஸோ வ்ருணீதே
ப்ரேயோ மன்தோ யோக க்ஷேமாத் வ்ருணீதே ||

2. நன்மை இனிமை இரண்டுமே மனிதனை நெருங்குகின்றன. புத்திசாலி அவைகளைச் சோதித்துப் பிரித்து அறிகிறான். ஏனென்றால் புத்திசாலி இனிமையைவிட நன்மையை விரும்புகிறான். அறிவில்லாதவன் 'தன் உடலுக்காக' இனிமையானதைப் பொறுக்கி எடுக்கிறான்.

வாழ்க்கை என்பது பிரசினைகளின் (அறை கூவல்களின்) தொடரே! கணத்துக்குக் கணம் நம் முன்னே ஒரு கேள்விக் குறி (செய்வதா வேண்டாமா என்று கேட்டு) நிற்பதைப் பார்க்கிறோம். கால வெள்ளத்தில் நீந்தி அது நம் எதிரேயே வருகிறது. கவர்ச்சியின்மேல் கவர்ச்சியாய் இழுப்பின்மேல் இழுப்பாய்ப் பொருள்கள் நம்மை அழைக்கின்றன. வருங்காலம் நிகழ் காலமாக மாறுகிறது. பார்த்துக்கொண்டிருக்கும் போதே நம்மேல் விழுந்து புரண்டு அது அறுதியான இறந்த காலத்தில் சென்று மறைந்து விடுகிறது. நம் புத்தியும் விவேகமும் ஒவ்வொரு கணத்தையும் தனித் தனியே மதிப்பிட்டுப் பொருள்கள் உயிர்கள் இவைகளைப் பற்றிய தீர்ப்புச் செய்யுமாறு நேரிடுகிறது. வெளிப் பொருள்கள் முடிவுடையன என்பதால் அவை ஒரு கணம் கூட ஒரே நிலையில் இருப்பதில்லை. ஆகவே அவைகளின் சேர்க்கையும் அவற்றால் ஏற்படும் கோலமும் என்றென்றும் மூன்று பக்கம் அமைந்த கண்ணாடிப் பெட்டிக்குள் தோற்றம் அளிக்கும் வளைத் துண்டுகள் போல் மாறிக்கொண்டே இருக்கின்றன. இப்படி மாறிக்கொண்டேயிருக்கும் நிலையில்தான் யோசிக்கும் திறன் படைத்த மிருகமான மனிதன் கணத்துக்குக் கணம் நிலையைப் பரிசிலனை செய்து முடிவு நிறுவி வெளியுலகுடன் தன் உறவை நடத்திச் செல்ல வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு பிரசினை அறை கூவும் போதும் இரண்டு வழிகள் பின்பற்றத் தயாராகி நிற்பன போல் தோன்றுகின்றன. ஒரு பக்கத்தில் இனிமையின் வழி நம்மை 'விளையாட்டாக ஆடிக் கொண்டே செல்லலாம் வா' என்று அழைக்கிறது. அந்த வழி

பார்ப்பதற்கு நன்கு ஒளிகொண்டு விளக்கமாக இருப்பதாகவும் படுகிறது. ஆனால் கடைசியில் அந்த வழி துயரமும் முடிவில்லாத அழிவும் கொண்டுள்ள ஓர் இருண்ட குகைக்குள் இழுத்துச் சென்று விடுகிறது. மறு பக்கத்தில் ஒரு பாதை இருக்கிறது. அது அவ்வளவு கவர்ச்சியூட்டுவதாயில்லை. கரடு முரடாக இருக்கிறது. அதிகம் பழக்கப்பட்ட பாதையல்ல அது. சுற்றி வளைத்து மேடான மலையேறிச் செல்லும் பாதை என்றாலும் அது இறுதியில் நம்மை அழியாத இன்ப வாழ்வின் ஒளி பரவிய மேய்ச்சல் நிலத்துக்கு, மலர்கள் நிறைந்த இனிய சோலைக்கு அழைத்துச் செல்கிறது.

அறிவாளியான விவேக மனிதன் ஒவ்வொரு கணமும் தான் சிக்கியிருக்கும் பிரசினையின் பலதரப்பட்ட ஒவ்வொரு அங்கத்தையும் புத்திசாலித்தனமாக மதிப்பிடுகிறான். மதிப்பிட்டு உறுதியாக நன்மையின் வழியைத்தான் நாடுவது, அதைத்தான் பிடித்துக்கொள்வது என்று முடிவு செய்கிறான். அவன் தன் யாத்திரையைத் தொடர்கிறான். கடைசியில் தன் வாழ்வின் பயனைப் பூர்த்தி செய்கிறான். இதற்கு மாறாக அறிவிலி என்ன செய்கிறான்? பொதுவாகப் பெரும்பாலோர் மேற்கொள்ளும் போக்கை அனுசரித்துக் கழுதை வாழ்வை வாழ்கிறான். குறைந்த எதிர்ப்புள்ள வழியே செல்கிறான். உடலையே அறியும் அவன், மனம் வேண்டிய பொறியின்பங்களைத் தேடும் தூண்டுதல்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்க்கை நடத்துகிறான். அவன் இனிமை காட்டும் வழியைத் தேடுகிறான்: எப்பொழுதும் பசித்திருக்கும் பொறிகள் கேட்கும் ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்யும் புலன் வழி வாழ்வை மேற்கொண்டு அதன் முடிவாகப் பாபங்களையும் கொடுமைகளையும் புரியும் அளவுக்குத் தாழ்கிறான். அதன் பலனாகப் பரிணாமத்தின் கீழ்ப்படிகளில் என்றும் அழிந்து நிற்கும் வேதனை நிலைக்கு வந்து சேருகிறான்.

யமனுடைய இந்த வார்த்தைகள் வாழ்க்கையை லட்சிய முறையில் வாழ, தவறாது பலன் தரும் ஒரு நேரான திறவுகோலைத் தருகின்றன. இதை வாசிக்கும் எந்தப் புத்திசாலியும் இதைத் தெரிந்து கொள்ளலாம். அப்படி வாழ்ந்தால் அவன் உண்மையான நிலையான ஒரு வெற்றியையும் வெற்றிகரமாகக் கேட்டுப் பெறும் நிலைக்கும் வரலாம். நம் உணர்ச்சிகளின்

உத்வேகங்களுக்கும் புலன் தரு இன்பங்களுக்கும், ஆவல்களுக்கும் ஒவ்வொரு கணமும் அடிமையாய் வாழ்ந்தால் நாம் நம்முடைய யோசனையில்லாத அதி வேகத்தால் மிருகங்களினுடைய கீழ்த்தர நிலைக்கு மெதுவாக ஆழ்ந்துவிடுவோம்; இப்படிஇரண்டு கால் பிராணிகளாக மாறியவர்கள் மனிதனின் பாரம்பரியத்துக்கு உரியவர்களாகும் தகுதியைப் பெற முடியாதவர்கள் ஆவார்கள் என்பதும் இயற்கைதானே! மனிதன் பாரம்பரியம்தான் உண்மையான இன்பமும் சந்தோஷமுமாகும். சுய வளர்ச்சியின் பூர்ணத் தன்மையில் வாழப்படும் ஒரு நிலையாம் அது.

இந்த வல்லியின் (பகுதியின்) தொடங்கு நிலையில் உள்ள இந்த இரு சுலோகங்களாலும் சுட்டிக் காட்டப்படும் கருத்து சுய முயற்சியின் கோட்டாட்டையும் அதன் தர்க்க வாதத்தையும் நமக்குத் தருகிறது. பிரசினை அறை கூவி வரும் ஒவ்வொரு கணமும் நாம் பார்க்கிறோம் நம் எதிரே இன்பத்தின் வழி; நன்மையின் வழி இரண்டும் நீண்டு கிடக்கின்றன. ஆனால் இனிமையின் வழியே துன்பத்தின் குகைகளுக்கு அழைத்துச் செல்பவை என்பதைச் சொல்ல இறைவனோ கடவுளோ சந்திப்பில் நின்று கொண்டிருப்பதில்லை. அதே மாதிரி மாறும் இடத்தில் நன்மையின் வழியே நம்மைத் திருப்பி அனுப்ப எனவும் நம்மைச் சந்திக்க ஆண்டவன் வருவதில்லை.

ஒவ்வொரு கணமும் மனிதனுக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சுதந்திரம் உண்டு. அவன் நன்மையின் வழியைப் பற்றலாம் அல்லது இனிமையின் பாதையை ஏற்று நடக்கலாம். உண்மைதான். எல்லைக்குட்பட்ட சுதந்திரம்தான் உண்டு. புறத்தே அமையும் சூழ்நிலைகளின் மேல் மனிதன் தடையற்ற பூர்ண சுதந்திரம் கொண்டாட முடியாது. ஆனால் கணத்துக்குக் கணம் ஏற்படும் புற உலக உறவில் நல்லவனாகவோ பொல்லாதவனாகவோ இருக்க அவனுக்கு இந்த எல்லைக்குட்பட்ட சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த எல்லைக்குட்பட்ட சுதந்திரமே மனிதனுக்குத் தரப்பட்ட உண்மைச் சுதந்திர சாசனமாம். அதைப் புத்திசாலித்தனமாக உபயோகித்தால் அவன் பூர்ணத்துவத்தின் உயர்ந்த தளங்களுக்குப் பறந்து செல்ல முடியும்; அவனே கடவுளாகவும் ஆகமுடியும்.

சமயம் என்பது சுய பூர்ணத்வம் அடையும் கலையேதான். ஒவ்வொரு கணமும் நன்கு சிந்தித்த புத்திசாலித்தனமான தன்னடக்கத்துடன் விழிப்புடனிருந்து வாழ்வதாலேயே இது சித்திக்கிறது. பிரசினை அறை கூவும் நேரத்தில் ஆரம்ப நிலையிலுள்ள ஒருவன் இயற்கைக் குணத்தினால் தப்பு வழியில் செல்லத் தூண்டப்பட்டதாகக் காணலாம். ஆனால் இப்படித் தப்புக் காரியங்களை, 'தன்னை எதிர்த்தே' செய்யத் தூண்டும் ஆற்றல் அல்லது சக்தியைச் சோம்பேறித் தனமான உள்ளடைவு இல்லாத 'நம் விதி' என்கிற இரட்டை வார்த்தைகளால் புரிந்து கொள்ள முடியாது. பிறகு அது என்ன?

அது ஒரு சிந்தனை முறை. நாம் மீண்டும் மீண்டும் நம் மூத்திய அனுபவங்களில் ஒரு சீராய் அமைந்த ஒரே முறையில் சிந்தித்துச் சிந்தித்து வேண்டுமென்றே அமைத்துக் கொண்டதாகும். அவ்விதம் அமைத்துக் கொண்ட அந்தச் சிந்தனை முறையே தப்பு அல்லது சரியான செயல்களின் பாதைக்குத் தூண்டுகின்றது. உதாரணமாக ஒரு கசாப்புக் கடைக்காரன் அல்லது வேடுவன் தனக்கு ஏற்பட்ட எதிரியைக் கொன்று தீர்த்துவிடலாம். அது தவிர இயற்கையாகச் சரியானது என்று தன் இயற்கைக் குணத்துக்கு ஏற்ப யோசிக்கலாம். அதே சமயத்தில் அஹிம்ஸை முறையில் சிந்தனையும் செய்து வாழ்க்கையும் நடத்தும் ஒருவன் தன் எதிரியைக் கொலை செய்து தீர்த்துவிடுவோம் என்று எண்ணமாட்டான். ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் ஆட்கொல்லிக் காட்டுமிராண்டி தன் பசியைத் தீர்த்துக்கொள்ள அடுத்த வீட்டுக்காரன் குழந்தையைக் கொல்வதில் மனச்சாட்சி ஒருவிதத் தொந்தரவையும் தருவதை உணரமாட்டான். ஆனால் நீங்களும் நானுமோ? இந்த யுகத்தில், சமூகத்தின் புதிய வாழ்வுக் கொள்கைகளை வாழ்கிறோம். அடுத்த வீட்டுக் குழந்தை தான்செய்கிற அட்டகாசத்துக்குச் சாவைவிட அதிகமாகவே தண்டனைக்கு உரியது என்று நமக்குத் தோன்றினாலும் அந்தக் குழந்தையை நாம் ஒருவித தொந்தரவுக்கும் உள்ளாக்கமாட்டோம்!

மனிதன் என்பவன் அவன் மனமேதான். நாம் எப்படி நம் மனத்தைப் பண்படுத்திப் பழக்குகிறோமோ அப்படியேதான்

ஆவோம். எப்பொழுதும் நிலைத்திராத கீழ்த்தர எதிர்மறை மதிப்புகளை மனத்தைத் திருப்பி ஏற்க வைத்தோம் என்றால் நாம் மந்தமான, உணர்வற்ற இரண்டுகால் பிராணிகளாகி விடுவோம்! மனத்தை உயர்ந்தவையும் நிலைத்திருக்கக் கூடியவையுமான, அன்பு, பொறுமை, கருணை முதலிய மதிப்புகளைப் பற்றி நினைத்து அவற்றைக் கைக்கொண்டு நடக்கப் பழக்கினோம் என்றால் நம் வருங்கால வாழ்வு நன்கமையும்படி நாம் பண்பட்டுப் பூர்ணமடைவோம். இன்று நாம் எப்படி வேண்டுமோ அப்படி ஆகும்படி முடிவு செய்யலாம். வேண்டுமானால் நாளை ஏற்படும் நம் மரண சாசனத்திலும் ஒப்பம் இடலாம். அல்லது தெய்வ நிலைக்கும் ஒப்பந்தம் எழுதிக் கொள்ளலாம். அதற்கேற்றவாறு நாம் அழிவின் சங்கடத்தையோ அல்லது வாழ்வின் இன்பத்தையோ அடைவோம்.

நமக்கு அப்பாற்பட்டோ, நம்மை மீறி மேலேயோ நமக்கு ஒரு விதியும் கிடையாது. நாமே தான் நம் வருங்காலத்தின் சிற்பிகள். இரண்டாவது பகுதியை ஆரம்பிக்கும்பொழுது யான் சொல்லும் சொற்களின் புதைந்த கருத்து இதுதான் என்று தோன்றுகிறது.

ஸ த்வம் ப்ரியான் ப்ரியரூபாம் ஸ்சகாமான்
அபித்யாயன் நசிகேதோத்யஸ்ராக்ஷீ |
நைதாம்ஸருங்காம் வித்தமயீமவாப்தோ
யஸ்யாம் மஜ்ஜந்தி பஹவோ மனுஷ்யா: ||

3. ஏ நசிகேதா. நீ ஆசைகளையும், பிரியமான உருவம் கொண்ட ஆசைப் பொருள்களையும், அவைகளின் உண்மை மதிப்பையிட்டு ஒதுக்கிவிட்டாய். தனம் காட்டும் இந்தப் பாதையை நீ ஏற்றுக்கொள்ளவில்லை; இதில்தான் அனேக மனிதர்கள் அழுந்துகிறார்கள்.

இதோ, இந்தச் சுலோகத்தில் யமதர்மன் உள்ளத்திலிருந்து வெடித்து வரும் பாராட்டைக் கேட்கிறோம். அவ்வளவு சிறிய பிராம்மணச் சிறுவனை நசிகேதன் கவர்ச்சிகளையும், சோதனைகளையும் எதிர்த்து நின்றதைக் கண்ட யமதர்மன் உள்ளத்திலிருந்து அடக்க முடியாமல் எழுகிறது அந்தப் பாராட்டு; யமதர்மன் அவனைப் புலன் தரும் இன்ப வாழ்வின் சிக்கலில் செலுத்

தக்காட்டிய ஆசைகளும் சாதாரணமானவையல்ல. மனிதநாடு பூராவுமே சுலபமாக அந்த ஆசைகளில் சிக்கியிருக்கும். அவர்களுக்கு அனுபவிக்க எனத் திறந்து சொல்லப்படாவிட்டாலும் கூட அனுமதி இல்லாவிட்டாலும் கூடப் பேரைக் கேட்டவுடனேயே தலைகிறங்கி அடிமையாகியிருக்கும்!! இந்தப் பையன் இம் மாதிரிக் கவர்ச்சிகளைத் தடுத்து நின்றான். அவன் புத்தியின் விவேகத்தில் உண்மை பொய் இரண்டையும் பகுத்தறிய வேண்டிய அவ்வளவு ஆற்றல் இருந்தது. அதைக் கண்டவுடன் யமதர்மனுக்கு அவனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. பெரிய ஆசிரியர் தனக்குச் சமமாகப் பெரிய சிடனைச் சந்திக்கும் பாக்கியம் பெறும் வாய்ப்புக்கள் மிகவும் அபூர்வமானவையே!

நசிகேதன் பிள்ளைகள், பேரன்களைப் பெறுவான். அவர்களும் நூற்றாண்டுகள் வாழ்வர். அந்த வரம் மட்டும் தானா கிடைத்தது? ஆடல், பாடல்; தெய்வ மாதரின் இனிய ஊழியம்—ஒரு செலவு இல்லாமல்! ஆனால் நசிகேதன் பக்குவமடைந்த ஆன்ம நிலை பெற்றவன். அவனுக்கு இவை எல்லாம் விளையாட்டுப் பொம்மைகளே!

சிருங்கம் என்ற சொல் மாலை என்றும் பொருள் செய்யப் பட்டிருக்கிறது; வழி என்றும் அர்த்தம் காட்டப்பட்டிருக் கிறது. கல் பதித்த மாலையை வேண்டாம் என்றான் நசிகேதன். அந்த மாலையில் அவன் காட்டிய அக்கறையில்லாத தன்மையைக் கண்டு யமதர்மன் ஆச்சரியம் கொண்டான் என்றும் கொள்ள லாம். அல்லது பொதுவாகத் தனம் தரும் வழியைப் பின்பற்று வதில் ஒரு வெறுப்பைக் காட்டினான் அவன், அதைக் கண்டு யமதர்மன் ஆச்சரியம் அடைந்தான் என்றும் கொள்ளலாம்.

தூரமேதே விபரீதே விஷூசி
அவித்யா யா ச வித்யேதி ஞாதா |
வித்யாபீப்ஸினம் நசிகேதஸம் மன்யே
ந த்வா காமா பஹவோ லோலுபந்த ||

4. அவித்தை, வித்தை இந்த இரண்டும் மிகவும் ஒன்றுக் கொன்று விலகியவை. இவை இரண்டும் தனித்தனி இடங்கள் அல்லது லட்சியங்களுக்கு அழைத்துச் செல்லும். நான்

நசிகேதன் என்ருலே வித்தையை (ஞானத்தை) விரும்புகிறவன் என்று நினைக்கிறேன்; ஏனென்ருல் அநேக ஆசைகள்கூட உன்னை ஆட்டமுடியவில்லை!''

யமன் காட்டிய ஆசைகளும் தந்த சோதனைகளும் நசிகேதனுடைய.வைராக்கியம் விவேகம் இவற்றின் காரணமாக அவன் உள்ளத்தின் வாயிற்படியிலேயே நிறமையாகத் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டன. தான் காட்டிய ஆசைகளும் தந்த சோதனைகளும் அடைந்த நிலையைக் கண்டவுடன் யமன் உள்ளத்தில் ஊற்றெடுத்து எழுந்த எண்ணங்களின் நதியாக இந்த முதல் நான்கு சுலோகங்களையும் நாம் கொள்ளலாம். யமதர்மன் இந்த சுலோகத்தில்தான் அவனிடத்தில் கண்டவைகளையும் செய்த சோதனைகளின் பலன்களையும் தொகுத்து மதிப்பிடுகிருன். அவன் சொல்கிருன்: ''இனிமையின் வழி, நன்மையின் வழி இரண்டும் தொன்றுதொட்டே ஒன்றைவிட்டு ஒன்று மாறுபட்ட போக்கைக் கொண்டவை. ஆகவே அவை இரண்டும் தனித்தனிப் புள்ளிகளை அல்லது போக்கிடங்களை அடையப் பிரிந்து செல்லுகின்றன. அவை ஒளியும் இருளும் போலத் தன்னியற்கையாகவே ஒன்றையொன்று எதிர்த்தவை. இனிமையின்வழி, நன்மையின்வழி, அறிவின்மையின்வழி, அவித்தையின் வழி, நன்மையின் வழி, வித்தையின் வழி, பரம ஞானம், விஞ்ஞானங்களுக்கெல்லாம் சிறந்த விஞ்ஞானம் என்றெல்லாம் சொல்லப்படும் அந்தப் பிரும்ம வித்தையை உண்மையின் வழியை மிகவும் உழைப்புடன் பின்பற்றுகிறவர்களுக்குத்தான் காட்டித் தரமுடியும். நசிகேதன் நன்மையின் வழியைப் பிடிவாதமாய்ப் பின்பற்றுகிறவன் என்று ருசுவாகிவிட்டது. ஆகவே யமதர்மராஜன் இந்தப் பிராம்மணச் சிறுவன் உண்மையிலேயே இந்தப் பெரு வித்தைக்கு ஏற்ற மாணவனே என்று இங்கே முடிவு செய்கிருன்.

அவித்யாயா மந்தரே வர்த்த மாஞு :
ஸ்வயம் தீரா : பண்டிதம் மன்யமாஞு
தந்த்ரம்யமாஞு : பரியந்தி மூடா :
அந்தே நைவ நீயமாஞு யதாந்தா : ||

5. மூடர்கள், அவித்தையிருளின் நடுவேயே இருந்துகொண்டு, தங்களைப் பண்டிதர்கள், நன்கு அறிந்தவர்கள்

என்று நினைத்துக் கொண்டவர்களாக, குருடர்களால் அழைத்துச் செல்லப்படுகிற குருடர்கள் போல அநேக வளைந்த வழிகளில் மோகம் கொண்டு சுற்றிச் சுற்றி வருகிறார்கள்.

இங்கே காட்டப்பட்டிருக்கிற உவமை மனத்தில் அழுத்தமாகப் பதியும்படி இருக்கிறது. அதனாலேயே இந்தச் சுலோகம் பழமொழி போல் வழங்குகிறது. சில சமயம் அரைகுறைச் சிறு பண்டிதர்கள் தாங்களே தங்களை 'பண்டிதர்களாக' எண்ணி அதற்கேற்ற பெருமைகளை ஏற்று சமுதாயத்தை வழிகாட்டி அழைத்துச் செல்லும் கடமைகளை ஏற்றுக்கொள்ளும்போது அவர்களைக் கண்டிப்பதற்கு இந்தசுலோகம் உபயோகப்படுத்தப்படுகிறதும் உண்டு. எவ்வளவு புத்தகம் படித்தாலும் புத்தக அறிவு யாரையும் பண்டிதராக்க முடியாது. துறவு மனப்பான்மையுடன் சுயத் தூய்மை வளர்ச்சி. ஆன்ம ஞானம் இவைகளுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வை ஒருவன் நடத்தி வராத வரையில்அவனைப் புத்தக அறிவு உண்மைப் பண்டிதராக ஆக்கிவிட முடியாது. புத்தக அறிவு ஒருவனைப் புத்திசாலியாகவும் ஆக்கிவிட முடியாது. புத்திசாலி அநேக கிரந்தங்களைப் படிக்கின்றவனாக இருக்கவேண்டுமென்பதில்லை. வாசிக்காமலேயே அவன் கடவுள் பக்தி, புலனடக்கம் கொண்டவனாக வாழ்ந்து கொண்டிருக்க முடியும்.

வெறும் 'புத்தகப் புழுக்கள்' 'ராஜ குருவின் ஆசனத்தை' அலங்கரிக்க வந்தால் அவர்கள் வகுத்த வழி செல்லும் சமூகமோ அரசாங்கமோ நேரடியாக தேச—அழிவு, அகில உலகக் குழப்பம் இவற்றை நோக்கிச் செல்வது திண்ணம். அதே போலப் பிறப்பினாலோ. தந்தை-தாயின் பெருமையினாலோ ஒருவன் பண்டிதன் ஆகிவிடமுடியாது. அப்படிப்பட்ட பண்டிதர்கள் வழி காட்டுவதென்று ஆரம்பித்தால் என்ன ஆகும் என்று யமதர்ம ராஜா சொல்கிறார். ஒரு குருடன் மற்றொரு குருடனால் அழைத்துச் செல்லப்பட்டால் எந்த விதமான சங்கட நிலையைச் சென்றடைவானோ அதே மாதிரி துக்க நிலையைச் சென்று அடைவர். அந்த நிலை ஒரே சமயத்தில் வருத்தம் த ுவதாகவும், இழிவுக்கு இடம் அளிப்பதாகவும் இருக்கும்.

''அநேக வளைந்த வழிகளில் மோகம் கொண்டு'' மனிதன் ஆன்மீக அறிவுச் சூனியமாக இருந்து குறைகளை நன்கு பழகிக்

கொள்கிறான். அப்படிப்பட்ட அவன் உள்ளத்தில் அநேக ஆசைகள் எழுகின்றன. அவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டி அவன் காரியங்களைச் செய்கிறான். அந்தச் செயல்கள் நல்லவை, கெட்டவை இரண்டுமற்றவை என்ற முறையில் அமைகின்றன. ஆகவே இந்தச் செயல்களுக்கு ஏற்றவாறு நேரவேண்டிய பல பிரதி செயல்களின் பொக்கிஷம் தயாராகிறது. அவற்றை எல்லாம் அவன் அனுபவிக்க அவனுக்கு ஜன்மங்களின் தொடர் ஏற்படுகின்றது. அந்தத் தொடர் முடியாத தொடராக அமைகிறது. அப்படி நடக்கிறவர்களுக்கு ஆன்மாவின் உண்மை நிலை புரிகிறதில்லை. அந்த அறியாமை காரணமாக மிகக் கூர்மையான அகங்கார பாவம் ஏற்படுகிறது. அதன் பயனாக வருத்தங்களினால் புதிராக்கப்பட்ட "நான்" "எனது" என்கிற பாவனைகள் ஏற்பட்டு விடுகின்றன.

ந ஸாம்பராய : ப்ரதிபாதி பாலம்
ப்ரமாத்யந்தம் வித்த மோஹேன மூடம் |
அயம் லோகோ நாஸ்தி பர இதி மானீ
புன : புனர்வஸ மாபத்யதேமே ||

6. இனிச் செல்லவேண்டிய பாதை அறிவில்லாதவனுக்குத் தோன்றுவதில்லை. அவன் மூடனாயிருக்கிறான். தனத்தின் மோகத்தில் ஏமாந்திருக்கிறான். இதுதான் உலகம். இதற்கப்புறம் ஒன்றுமில்லை என்று அவன் நினைக்கிறான். ஆகவே அவன் மீண்டும் மீண்டும் என் வசத்தை அடைகிறான்.

ஒருவன் எப்பொழுதும் முழு மூச்சாய்ச் சொத்தாகும் புறப் பொருள்களை ஈட்டுவது, சேர்ப்பது, குவிப்பதாகிய செயல்களில் ஈடுபட்டிருக்கிறானே அவனுக்கு, "இந்த உலகுக்கப்பால் என்ன இருக்கலாம்?" என்ற சாத்தியக் கூறுகளைப்பற்றி விசாரணை செய்யவேண்டிய மூளையோ, இதயத்தின் நுண்மையோ, நேரமோ அல்லது வாய்ப்போ இருப்பது அரிது. மனமும் புத்தியும் வாழ்க்கையின் மதிப்புக்களில் முழுகிக் கிடக்கின்றன; அந்த மதிப்புக்களும் ஒருவன் நன்கு தெளியாத முடிவுகள். தன்னை இந்த உடல் முதலியன என்று கருதி யோசனையில்லாத அவற்றுடன் இயற்கையுணர்வாலே ஒட்டிக்கொண்டு நிற்றல் இவற்றின் மேல் எழுகின்றன. அப்படி அவன் முழுகிக் கிடக்கும்

வரையில் அவனுக்கு மனித எல்லைகளின் பிடிப்புகளுக்கப்பாலும் சென்று பார்க்கவேண்டும் அல்லது அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற தாகமே சுலபத்தில் எழுவதில்லை.

அப்படிப்பட்ட வெறும் புறப் பொருளியல்வாதிகளான மனிதர்களுக்கு இந்த விழிப்புத்தனத்தின் வாழ்க்கைதான் இருக்கும் வாழ்க்கை எல்லாம்! இந்த வாழ்க்கை பொதுவாக நோக்குமிடத்து கண்ணீருக்கும் வியர்வைக்கும், சிறிதே ஒளி காட்டும் புன்சிரிப்புக்களும் பெருமூச்சு விடும் சிரிப்புக்களும் கொண்டு நிற்கிறது. அப்படிப்பட்ட இந்தச் சிறு வாழ்வையே எல்லாமாக எண்ணுகிறவர்களுக்கு உயர்ந்த ஒரு தெய்வ வாழ்வு உண்டு என்ற கருத்தே ஆகக் கூடிய ஒன்றாய்த் தோன்றுகிறதில்லை. அவர்களிடத்தில் அப்படி ஓர் உயர்ந்த வாழ்வு உண்டு, அதை நாம் பெறுவதும் சாத்தியம்தான், அந்த வாழ்க்கை இன்னும் அதிகமான முழுமைகளைக் கொண்டது என்றெல்லாம் சொல்லப்பட்டாலும் அவர்களுக்கு அந்த வேதாந்த லட்சியத்தைப் புரிந்து கொள்ளத்தக்க புத்தி சக்தி இருப்பதில்லை; அந்தத் தெய்வத் தன்மையை உணரத்தக்க அளவுக்கு மன விசாலமும் இருப்பதில்லை.

அவர்களுக்கு இந்தக் குறுகிய நிலையில்லாத வாழ்க்கையின் சிறு நீளமேதான் எல்லாம். எங்கிருந்தோ 'வந்தது: ஒரு சூனியத்தில் தேய்ந்து மறையக்கூடியது. இருக்கும் காலத்தில் கடந்த காலத்தது என்ற ஓர் ஒட்டும் இல்லாதது; வருங்காலம் என்று ஒரு அபிலாஷையும் இல்லாதது; அதுதான் வாழ்க்கை!' என்று எண்ணுகின்றனர் அவர்கள். அவர்களுக்கு வாழ்க்கை, பைத்தியம் கொண்டு, விளக்கமில்லாது ரகசியம் நிறைந்து முன்பின் சேர்க்கை இருந்தும் அர்த்தம் இல்லாது குழப்பம் தரக்கூடியதாகவும் மயக்கக் கூடியதுமான ஓர் ஓட்டைப் பறை! நிச்சயமாக அவர்கள் வேதாந்த விசாரணைக்குத் தக்கவர்கள் அல்லர். தக்கவர்களாக ஆகவும் முடியாது; கண்டிப்பான விழிப்பு நிறைந்த புலனடக்கம் கொண்ட வாழ்க்கையைப் பழகுவதற்கும், மாறாத சுய அடக்கத்தில் தானாகவே ஒரு பிடிவாதம் கொள்வதற்கும் தகுதியற்றவர்களே.

ஸ்ரவணாயாபி பஹுபிர்யோ ந லப்ய.
ஸ்ருண்வன் தோபி பஹவோ யம் ந வித்யு: |
ஆஸ்சர்யோர் வக்தா குசலோஸ்ய லப்த
ஆஸ்சர்யோ ஞாதா குஸலானு சிஷ்ட:

7 எவனை (ஆத்மன்) அநேகர் கேள்வியினாலும்கூட அடைய முடிகிறதில்லையோ, எவனை கேட்ட பிறகும் அநேகர் அறிய முடிகிறதில்லையோ, அந்த மனிதன் ஆச்சரியமானவன்; எவன் கண்டுவிட்டால் இந்த ஆத்மனைப்பற்றிச் சொல்லித்தர முடியுமோ, திறமைசாலியான ஆசிரியனால் சொல்லித்தரப்பட்டு எவன் அந்த ஆத்மனை அறிந்துகொள்கிறானோ அந்த மனிதனும் மிகவும் ஆச்சரியமானவனே!

மிருத்யுவாசன் வாய்விட்டுச் சிந்திப்பதைத் தொடர்ந்து இந்த உண்மையை அறைந்து சொல்கிறார். இந்த உண்மைதான் பகவான் வியாசருக்கே தூண்டுதல் தருவதாக இருந்தது. உண்மையில் பகவான் வியாசர் அமரக் காதல் இலக்கியமாகச் சமைத்த ஸ்ரீமத் பாகவதத்துக்கே கடோபநிஷத் முக்கிய தூண்டுதலைத் தந்திருக்கும் எனத் தோன்றுகிறது. மேலே நாம் பார்க்கப் போகிறோம். இலக்கியத்துட் சிறந்து ஞான நூலாக விளங்குவது வேதாந்தக் கவியான வியாசர் எழுதிய ஸ்ரீமத் பகவத்கீதை, அந்த நூலிலே இருபதுக் கணக்கிலே கடோபநிஷத்திலிருந்து வாக்கியங்கள் அப்படியே எடுக்கப்பட்டு அமைக்கப்பட்டு இருக்கின்றன. கீதையில் 'மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு' என்று ஆரம்பிக்கிற சுலோகத்தில் இந்த மந்திரம் எதிரொலிப்பதைப் பார்க்கிறோம்,

பரத்தைப் பற்றிய விசாரணையின் மேல் தளத்தின் சிந்தனை விஷயங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டவையல்ல. உணர்ச்சி, சிந்தனைக்கான உள் யந்திரங்களின் பரிணாம வளர்ச்சியில் வேண்டுமளவு முன்னேறிய பொறுக்கிய சிலருக்கேதான் அந்த விசாரணைத் தளம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தை எல்லா வேதாந்த வகைகளும் ஒப்புக்கொள்கின்றன, அதற்காகப் பிரம்ம வித்தையை உடைந்த கோயிலின் ஓர் இருண்ட மூலையில் காற்றுப் புகாத மண்டபங்களில் வைத்துக் காப்பாற்றவேண்டிய ஒரு வித்தை என்று சொல்ல வரவில்லை. அல்லது காட்டில் மரத்

தடியில் புதைக்கப்பட்ட பொக்கிஷத்தைக் காக்கும் பூதங்கள் போல் பிராம்மணப் புரோகிதர்கள் தான் காக்கவேண்டும் என்ற கருத்தில் இது சொல்லப்படவில்லை. அல்லது வைக்கோற் போரைக் காக்கும் நாய்கள் போல் இந்தப் புரோகிதர்கள் உபநிஷத்துக்களில் குவிந்திருக்கும் ஞான வைக்கோலைத் தின்னவும் ஒன்றுமறியாத பசித்து வரும் பசுக்களைக் குரைத்து விரட்டிவிடவேண்டும் என்பதும் இல்லை. இன்று உள்ள பண்டிதர்கள், ஒரு வர்க்கம் அல்லது ஒரு வகுப்பினரின் ஏகபோக உரிமையே இந்த வித்தை என்று நிறுவ எவ்வளவு புத்திசாலித்தனமாகத் தோன்றுகிற எடுத்துக்காட்டுகளைச் சுலோகம் சுலோகமாகக் கூறினாலும் சரி, அவை எல்லாம் நமக்குச் சாத்திரங்களைத் தந்த வேத மனிதர்களின் கருத்துக்கு ஆபாசம் இழைப்பதாகும்.

சனாதன விதி நம்மில் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு சூழ்நிலையையும், இன்பம் கொள்ளவோ சங்கடப்படவோ ஒரு வாய்ப்பையும் நிச்சயமாக நம்முடைய பழமைக்கு ஒத்ததாய் அதன் தொடர்ச்சியை அளிக்கிறது. எதுவும் திடீர் என்று எழும்பிக் குதிப்பதில்லை. எதிர்பாராது ஏற்பட்ட சம்பவங்கள் என்று எதுவுமே கிடையாது. கணத்துக்குக் கணம், வாழ்க்கை முன்னேறுகிறது; தொடர்கிறது. காரிய காரணங்கள் ஒழுங்காகிக் கொண்டிருக்கிறது. அவற்றைப் பற்றிய ஒரு கணக்கு முறை உண்டு. அதனால்தான் ஒவ்வொருவருக்கும் அந்த அதிர்ஷ்டம் கிடைப்பதில்லை. ஓடி மறைகின்ற வாழ்க்கை வட்டத்தின் சலனப் படம் பார்க்க முடிகிறது. நேரடியாகத் தோற்றம் தருகிறது. நம்மைச் சுற்றி அது அன்றாடம் உண்மையாக நடக்கிறது. ஆனால் அதை ஊடுருவி எங்கும் பரவி நிற்கும் தத்துவம் உண்மையானது, கண்டிப்பாய் அருகே இருக்கிற ஒன்றுதான் என்றாலும் அதைப் பற்றிக் கேள்விப்படுகிற அதிருஷ்டம் கூட எல்லோருக்கும் கிடைக்கும் என்பதில்லை.

இந்தக் கூற்று அப்பட்டமான உண்மைக் கூற்றேயாகும். ஒரு பிரசாரகர் மிகைபடுத்திக் கூறியதல்ல, இந்த ஞான வேள்வி நடக்கும் ஐம்பது நாளைக்குள்ளேயே அதன் உண்மையை நீங்களே உணர்ந்துகொள்வீர்கள். உங்களுக்குள்ளேயே எவ்வளவு பேர் இந்தச் சாதுவிடம் வந்து, 'எங்களுடைய உறவினர் ஒரு

வரைக் கூப்பிட்டோம். எவ்வளவோ சொல்லிப்பார்த்தோம். 'இந்த யக்ஞத்துக்கு வா' 'என்று, ஆனால் எல்லாம் வீணாயிற்று!' என்று சொல்லியிருக்கிறீர்கள்! ஒரு சர்தார் அவர்கள் தினந்தோறும் வந்திருந்தவர் இன்று நம்முடன் இங்கு இல்லை. அவர் தன் வீட்டில் அநேகமாக ஒரு சிறைப்பட்டவர் போல் இருக்கிறார். எல்லையில்லாமல் உதாரணங்கள் எடுத்துக் காட்டிச் சொல்லலாம். எவ்வளவு பேர் அழைக்கப்பட்டு வாசல் வரை வந்த பிறகு, பெட்டியைத் திறந்து வைத்துவிட்டோம், அல்லது உணவுப் பங்கீட்டு அட்டையை மேஜைமேல் அப்படியே போட்டு விட்டு வந்துவிட்டோம் ஆகவே வீட்டுக்குப் போய்விடவேண்டும் என்று எண்ணி சத் சங்கம் ஆரம்பிக்கு முன்னமேயே ரஸ்தாவிலேயே திரும்பிப் போனவர்கள்.

இங்கே ஒழுங்காக வரும் நீங்கள் நிச்சயம் பெரிய பேறு பெற்றவர்கள் என்று நம்பலாம். தங்கள் முன் வாழ்க்கைகளைச் சேர்த்து அபூர்வமாக அதிருஷ்ட வாழ்க்கையைப் பெறும் மிக அதிர்ஷ்டசாலிகளான சிலருடன் நீங்கள் சேர்ந்திருக்கிறீர்கள். பக்தர்கள் பகவான் புகழ் பாடவும் பேசவும் கூடியிருக்கும் இடத்தில் வாயிலில் காவலாளிகள் வேண்டியதில்லை. 'டிக்கட்' வைத்தருக்கும் தகைமைசாலிகளே உள்ளே வருவர். ஒரு சாதகன் மற்றொரு சாதகனுடைய தகுதியைப் பற்றி விசாரணை செய்து தக்கவன் தகுதியற்றவன் என்று தீர்ப்புச் சொல்ல முயலுவது அவனுடைய தப்பிதமாகும்! சரியான தீர்ப்புச் சொல்ல வேண்டுமானாலும் வேண்டிய எல்லா விவரங்களும் தேவை. அவை இல்லாதபோது என்ன தீர்ப்புச் சொல்ல முடியும்.

வேதாந்தத்தை நீ எங்கு வேண்டுமானாலும் பிரசாரம் செய். அதன் 'சேதியை மிகவும் தகுதியுள்ளவன்தான் கேட்டுக் கொள்வான். மற்றவர்களை விதியின் அதிகாரமே கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளிவிடும்! உபநிஷத்தை எந்தப் பாஷையில் வேண்டுமானாலும் பெயர்த்து எழுத உலகம் முழுவதும் எங்கு வேண்டுமானாலும் யாருக்கு வேண்டுமானாலும் கொடு. அப்பொழுதும் மிகவும் தகுதியுள்ளவர்கள்தான் அதை ஏறெடுத்தும் பார்க்க வருவர்!

இந்த ரகசியமான பத்திரத்தின் ரகசியத்தைப் பத்திரமாக மனிதன் செய்கிற காவல்கள்தான் காக்க வேண்டும் என்பதில்லை. வெறுப்பின் உணர்ச்சியில் மனிதரை அழிக்க என்று தயார் செய்து வெட்கமில்லாமல் மனிதன் பேராசைக்கும் கெட்ட எண்ணத்துக்கும் அவமானச் சின்னமாய்க் காத்து வருகிறானே அந்த மாதிரி அணுகுண்டு அல்ல இது. பிரம்ம வித்தை உண்மையில் விஞ்ஞானம் மனிதன் மனமோ புத்தியோ தயாரித்ததல்ல. நம்மிலுள்ள கீழ்த்தரமான மிருகத் தூண்டுதல்களை நிலையுறுத்துவதற்காக அது ஏற்கப்பட்டுக் காக்கப்படுவதில்லை. ஆகவே அந்த விஞ்ஞானத்திலேயே ஒரு ரகசிய ஆற்றல் இருக்கிறது. அதுவே தன்னைத் தகுதியற்றவரது எல்லை மீறிய பிரவேசத்திலிருந்து காத்துக்கொள்ள முடியும்!

அதைக் கேட்பார்கள் என்றே வைத்துக்கொள்வோம். கேட்டவுடன் சுலபமாகப் புரிந்து கொண்டுவிடமுடியும் என்பதில்லை. கேட்டதை அதன் உண்மையான ஆழ்ந்த கருத்தில் உணர்ந்து கொள்வதற்கே மாணவனுக்கு அசாதாரணமான உள் சுத்தமும் அதனால் ஏற்பட்ட புத்தி நுண்மையும் வேண்டும். நம் மனம் ஒரே போக்கில் ஸ்திரமாயிருப்பதும், புத்தி நுண்மையாயிருப்பதும் ஏதோ தன் போக்கில் நிகழும் சம்பவங்களல்ல. தெரிந்தே தொடர்ந்து தெய்வ வாழ்வு வாழ்வதனால் பெறப்படும் செல்வங்கள் அவை. இக்கொள்கையை மனத்தில் கொண்டு தான் நம் சாத்திரங்கள் தகுதி குறைந்த அதிகாரிகளுக்குத் தர்மம் உபாசனை (பூஜை தியானம்) இவைகளில் தொடர்ந்த ஈடுபாட்டை விதிக்கின்றன. தகுதியில் குறைந்த அதிகாரி சுத்தமடைந்து சீர் பெற்றுப் பண்பட்டுத் தகுதியின் உயர்ந்த தனத்தின் ஆற்றலையடைய இவைகள் மிகவும் முக்கியமான செயல் முறைகளாம்.

தத்துவம் அமரத்தன்மை இவற்றைப் பற்றிய கருத்துக்களைக் குருவிடமிருந்து நேராகக் கேட்டோ அல்லது நூல்களிலிருந்து படித்தோ நன்குகப் புத்தி பூர்வமான சிந்தனைகளில் அம் சமாக்கிக் கொள்ளப்படும் பொழுதுதான் கவனிப்பவர் மனத்தில் அவை அழியாத பதிவுகளை விட்டுச் செல்லமுடியும். சோம்பி வழியும் தூக்க நிலையில் படித்தால் ஆறு அணுவுக்கு விற்கும்

துப்பறியும் நாவல் இன்பம் தரலாம். உபநிஷதம் அந்த நிலையில் படித்தால் ஒரு பயனும் தர முடியாது.

'சொல்லித் தர ஆற்றல் உள்ளவன் வியப்புக்குரியவனே'• உள்ளபடி தக்க மாணவர்கள் அபூர்வம் என்றால் பொருளைக் காட்டித் தரத் தக்க ஆசிரியர்கள் இன்னும் அபூர்வமே. உண்மையான ஆசிரியர் என்றால் உண்மையைத் தன்னால் உணர்ந்த தெய்வ மனிதனாக மட்டும் இருந்தால் போதாது. உபநிஷதங்களிலும் நல்ல திறமை பெற்ற நூல்வல்லோனாக இருக்க வேண்டும். நம் சாத்திரங்கள் ஆசிரியர்களை சுரோத்ரீயம், பிர்ம நிஷ்டம் என்று கூறி அவர்களுக்கு இருக்கவேண்டிய குணங்களை எடுத்துக் காட்டியிருக்கின்றன. சுரோத்ரீயம் என்றால் சாத்திரங்களின் கரை கண்டவன் என்று பொருள். பிர்ம நிஷ்டன் என்றால் பிர்மத்தின் தெளிவைப் பெற்றவன் என்று பொருள். சாஸ்திரிகளுக்கும் பண்டிதர்களுக்கும் முதலில் சொல்லப் பட்ட குணங்கள் நன்றாக இருக்கின்றன. ஆனால் உண்மைப் பொருளை நேரில் உணர்ந்த அனுபவம் இருப்பதில்லை. எவ்வளவோ சாதுக்களையும் முனிகளையும் உலகம் அறியும். அவர்க்கு உண்மைப் பொருளைத் தாமே உணர்ந்து அனுபவித்த பேறு உண்டு. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவர்களுக்கு நூல்களில் வல்லமையும் அவற்றின் ஆட்சியும் போதா. இந்த இரண்டு வர்க்கத்தினரும் (ஒன்றிருந்து மற்றொன்று) அமையப் பெறாத இருவரும், குரு' ஸ்தானத்துக்கு உரிமை கொண்டாட முடியாது• இதை மனத்தில் கொண்டுதான் சாவுக்கரசன் 'உண்மை ஆசிரியர் ஒரு வியப்பே!' என்று விம்மிச் சொல்கிறான்'

இதிலிருந்து, சடை பெரிதாக வைத்திருக்கிறார், தூங்குவதில்லை, ஆகாரம் உண்பதில்லை, நிர்வாணமாகவே இருக்கிறார், என்ற முறையில் 'விநோதமானவர் உண்மையாசிரியன்' என்று சொன்னார் என்று பொருள் செய்யக்கூடாது. இந்த வெளி அடையாளங்கள் எல்லாம் ஓர் ஆசிரியர் தக்கவரா அல்லவா என்று நிர்ணயிப்பதற்கு ஒரு விதத்திலும் உதவா. இது விஷயத்தில் மிகவும் விழிப்பாயிருக்கவேண்டும். •எவ்வளவோ சாதகர்கள் வெளித் தோற்றத்தை ஒப்புக்கொண்டு பின்னால் உள்ளே ஒன்றுமில்லை என்று கண்டிருக்கிறார்கள்.

'அறிந்து கொள்பவனும் அதிசயமானவனே..." ஒரு தலை முறை பூராவிலும் எவ்வளவு குறைவான சதவிகிதம் மக்கள் வாழ்க்கையின் பூர்ணத்துவத்தின் வாய் பேச இயலாத ஆழ்ந்த ஆனந்தத்தை அனுபவிக்கும் நிலைக்கு வருகிறார்கள்! சிரவண லாபம் பெறுவதே அபூர்வம். கேட்டாலும் அதைப் புரிந்து தன் அம்சமாக அந்தப் பொருளை ஆக்கிக்கொள்வது அதனிலும் குறைவு. ஒரு சீடனைப் பேருண்மையில் தீட்சை செய்து வைக்கும் ஆற்றல் உடைய குருவும் கிடைத்து; அவர் அவன் சந்தேகங்களை எல்லாம் தீர்த்துத் திருப்தி செய்து அவனைப் பர நிலையை அடையச் செய்வது என்பது அதை விட இன்னும் குறைவு. அப்படி மூன்று முறையிலும் தகுதியுள்ள குருவும் கிடைத்துவிடும்படி ஒரு சீடன் அதிருஷ்டம் செய்திருந்தாலும் மிகவும் பிரமாதமான பாக்கியம் பெற்ற ஒருவன்தான் இந்த வாழ்விலேயே தெய்வத்தன்மையை, குரு சுருதி வாக்கியங்களைப் பற்றிப் பேசும் போது கேட்டு அடைய முடியும் என்று யமன் சொல்கிறார்.

நண்பர்களே, மேலே சொன்னவற்றிலிருந்து இது அவ்வளவு அபூர்வமானது கஷ்டமானது என்றால் நாம் எங்கே வெற்றியடையப் போகிறோம் என்று முடிவு செய்துவிடக் கூடாது. ஏன் வெற்றியடையக் கூடாது? நீங்கள் இந்த ஞான யாகத்துக்கு வரும் பேறுபெற்ற அபூர்வ மக்கள் அல்லவா? எவ்வளவு பேர் வருகிறார்கள்? வந்திருப்பது அறுநூறுதானே! எவ்வளவோ மக்களில் நீங்கள் அறுநூறுபேர்தானே அதிசயமாக வருகிறீர்கள், அந்த அதிசயமான அறுநூறு பேரல்லவா நீங்கள்! இந்தப் பூமியில் பொறுப்பற்ற முறையில் மக்கள் கட்டுப்பாடின்றி வம்ச விருத்தி செய்து கொண்டிருக்கும் இந்த நாளில் தினந்தோறும் எவ்வளவு மக்கள் வருத்தச் சூட்டில் வறுக்கப் பட்டு, கண்ணின் உப்புநீரில், துரதிருஷ்டத்தின் இஷ்டப்படி ஊறுகாய் போடப்படுகிறார்கள். அவ்வளவு பேர்களில் பூனாவிலுள்ள நீங்கள் அறுநூறு பேர் அல்லது யக்ஞப் பிரசாதமான வாரப்பதிப்பைப் பெற்றுக்கொள்ளும் 20,000 பேர் உள்ளபடி பாக்கியம் பெற்ற மிகச் சிலரே அல்லவா!

ஒரு சாதகனும் நம்பிக்கை குறையக்கூடாது. அவநம்பிக்கை கொள்ள அவனுக்கு உரிமை கிடையாது. உங்கள் ஒவ்

வொருவருக்கும் பின்னல் பத்து லட்சம் மக்கள் இருக்கின்றனர். அவர்கள் எவ்வளவு முயன்றாலும் மெதுவான முன்னேற்றத்தின் கீழேயுள்ள படிகளைத்தான் அலங்கரிக்கமுடியும்! மனித உருவத்தில் உள்ள மிருகத்துக்குத்தான் அல்லது மிருக மனிதனுக்குத்தான் பிரும்ம வித்தை கடினம். மனித நிலையை அடைந்த மனிதன் விரும்பினால் போதும். அவன் வாழ்க்கையின் இலட்சிய நிலைக்குள் இஷ்டம்போல் நடந்து செல்லலாம். நம்பிக்கை கொண்டவர்களாக இருங்கள். உங்களால் முடியாதென்றாலும் சின்மயாவிடமிருந்து அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

"நீங்கள் உண்மையான அதிகாரிகளே! கொஞ்சம் சுய முயற்சி இருந்தால் போதும், இந்த ஜன்மத்திலேயே முடிவான அந்த வெற்றியை, தெய்வப் பேற்றை அடைந்து விடுவீர்கள்.

**ந நரேணாவரேண ப்ரோக்த ஏஷ**
**சுவிஞேயோ பஹுதா சிந்த்யமான:**
**அனன்யப்ரோக்தே கதிரத்ர நாஸ்தி**
**அணீயான் ஹ்யதர்க்ய மணுப்ரமாணாத் ||**

8. குறைந்த அறிவுள்ள ஒரு மனிதனால் சொல்லிக்கொடுக்கப் படும்பொழுது அந்த ஆத்மத்தை அறிவது சுலபமில்லை. ஏனென்றால் அது பலவிதங்களில் எண்ணிப் பார்க்கப்படவேண்டியது. ஆனால் பிரும்மத்துடன் இயைந்த (அதனின்றும் மாறுபடாத) ஓர் ஆசிரியரால் சொல்லித்தரப்பட்டால் அதைப்பற்றிய சந்தேகம் இல்லை. ஆத்மம் சூட்சுமத்திலும் நுண்ணியது. ஆகவே அது தர்க்கத்தினால் பெறப்படாதது.

இதற்கு முந்திய மந்திரத்துக்குத் தரப்பட்ட விளக்கவுரைகளில் பெரும்பகுதி இந்த மந்திரத்தை நன்குபுரிந்து கொள்வதற்கு உபயோகமாயிருக்கும். அழுத்தம் ஏற்படுவதற்காக யம தர்மராஜன் போன மந்திரத்தில் குறிக்கப்பட்ட கருத்துக்களுக்கே மீண்டும் ஒளி தருகிறான். ஏற்கனவேயே நாம் பார்த்தோம். வெறும் புத்தகப் படிப்பு மட்டுமோ அல்லது பிரும்ம அனுபவம் மட்டுமோ, உலகுக்கு உபயோகமாகத் தக்க ஆசிரியனாவதற்குத் தனித்தனியே போதாது. ஞானமும் அதற்குத்தக்க அனுபவமும் உள்ள ஓர் குரு சுருதி மந்திரத்தை எடுத்து

விளக்கினால் சீடன் அவனும் நல்ல தரத்தனாக ஆகி நின்றிருந்தால் பூரண ஞானத்தையும் உடனே பெற்றுவிடுகிறான்.

இந்த மந்திரத்தில் 'அனன்ய ப்ரோக்தே:கதி' என்ற சொற்கள் நான்கு பொருள்களைச் சுட்டலாம் ஸ்ரீமத் சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் என்று விளக்கியிருக்கிறார்கள்.

1) 'இரண்டு' (த்வைதம்) என்ற சந்தேகத்திலிருந்து விடுபட்டு அதனால் ஆத்மனுடன் ஒன்றாக நின்ற ஓர் ஆசிரியர் ஆத்மனைப்பற்றிச் சொல்லித் தந்தால் சிஷ்யனுக்கு விளக்கங்களில் சந்தேகம் ஏற்படாது.

2) 'ஆத்மன்' என்பது சீடனுக்குள்ள ஆத்மாவேதான் என்று சொல்லித்தரப்பட்டால் அதற்குமேல் ஒரு சந்தேகமும் எழாது.

3) கதி என்ற சொல் போக்கு அல்லது வழியைக் குறிக்கும். அந்தக் கருத்தில் 'ஆத்மன் தன்னை விட்டு வேறானது அல்ல' என்பது சொல்லித்தரப் பட்டு விட்டால் பிறகு இந்தச் சம்சாரத்தில் போக்கு அல்லது பிரயாணம் இனி இராது.

3) கதி என்ற சொல் சிந்தை அல்லது சந்தேக எண்ணத்தையும் குறிக்கலாம். அந்தக் கருத்தில் இதற்கு விளக்கம் வருமாறு இருக்கலாம். பிரும்மவித்தை பேருண்மைத் தெளிவில் நன்றாகத் திளைக்கும் ஒருவரால் அளிக்கப்பட்டால் சீடன் உள்ளத்தில் தயங்கும் சந்தேகங்கள் இருக்க முடியாது.

இந்த விவரமான விளக்கவுரைகளை எல்லாம் மெனக்கெட்டு எடுத்துக் காட்டினதற்கு ஒரு காரணம் உண்டு. ஸ்ரீமத் சங்கரர் மற்றும் மற்ற உரையாசிரியர் எவ்வளவு பிரயத்தனத்துடன் அசாதாரணமான நுண்ணிய புத்தி கொண்டு நம்முடைய மதத்தின் புனித வேத மந்திரங்களை அணுகி ஆராய்ந்து பிறகே தான் இந்த மந்திரங்களின் உண்மைப் பொருள்களைப் பற்றி முடிவு செய்திருக்கிறார்கள், இந்த உண்மை எல்லோருக்கும் தெரிந்திருக்கவேண்டும் என்பதற்குத் தான் முன்னால் இதை எடுத்துத் தந்தோம். அந்தப் புண்ணிய புருடர்களது பேராசிரிய உள்ளங்கள் நூல்களை ஆராயும்போது அவர்களுக்கு

இருந்த திறமை தான் என்னே! புத்தியின் பேராற்றல்; மனத்தின் அமைதி. அமைந்த தெளிவு, சிரத்தை, நம்பிக்கை இந்தக் குணங்களை அவர்கள் காட்டியது வெளியாகின்றது. தனியாகவோ சேர்ந்து கூட்டமாகவோ நாம் எல்லாம் அவர்கள் செயலிலிருந்து வெளியாகிற அந்த ஆற்றல்களைப் பெற்று இந்த மந்திரங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கும் தியானம் செய்வதற்கும் பயன்படுத்த முடியுமா? முடியாது. ஏன்? நம்பிக்கையே இல்லை!

சங்கராச்சாரியார் அவர்கள் எடுத்துக்கூறிய விளக்கங்களை அப்படியே புரிந்து ஒப்புக்கொள்ள முடியும் என்றாலே நம் புத்திக்கு ஒரு பாராட்டுரை வாசித்துத் தந்துவிடலாம்! அதை எண்ணித்தான் இப்பொழுது சங்கரர் இரண்டு மிகச் சாதாரண வார்த்தைகளுக்குத் தந்த நால்வகை விளக்கங்களையும் பற்றி விரிவாகப் பேசினேம்.

நைஷா தர்கேண மதிராபனேயா
ப்ரோக்தான்யே நைவ ஸுஞானய ப்ரேஷ்ட
யாம் த்வமாப: ஸத்யத் ருதிர்பதாஸி
த்வாத்ருங்ஞே பூயான் நசிகேத: ப்ரஷ்டா

9. இந்த அறிவு தர்க்கத்தினால் அடையக்கூடியதல்ல. ஆனால் உத்தம அன்புக்குரியவனே! வேற்றுமை பார்க்காத ஒரு ஆசிரியரால் சொல்லித் தரப்படும் பொழுது அதை அறிந்து கொள்வது சுலபம். நீ அதை இப்பொழுது அறிந்துகொண்டாய். நீ இப்பொழுது உண்மையில் நிலைபெறுகிறாய். உன்னைப் போலக் கேள்வி கேட்கிறவன் ஒருவன் நமக்குக் கிடைக்கட்டும்.

யம தர்மன் உள்ளத்தில் இதுவரை பையனைப் பற்றிய ஒரு கௌரவ உணர்ச்சி நிறைந்து திக்கு முக்காட வைத்துக் கொண்டிருக்கிறது. முதன் முறையாக இப்பொழுதுதான் நேரடியாக அவர் பையனைப் பாராட்டுகிறார். முன் கூறப்பட்ட இரண்டு மந்திரங்களின் உள்ளக் கருத்துக்களின் தொடர்ச்சியாக இந்த மந்திரத்தில் யம தர்மன், "உண்மை" என்பது புத்தியின்சாதுரியத்தினாலோ சாகசத்தினாலோ அறிந்து கொள்ளக் கூடிய அல்லது அடையக்கூடிய ஒரு பொருள் அல்ல என்கிறார்.

தர்க்கம் அல்லது காரண-காரியப்பேச்சு புறப்பொருள் உலகத்தை மட்டும் தான் பரவி நிற்க முடியும், அந்தப் பேருண்மை, உலகம், மனம் புத்தி இவற்றின் அதிகார எல்லைக்கு அப்பால் விரிந்து கிடக்கிறது.

நாம் ஏற்கனவே கேனோபநிஷத்தின் மந்திரங்களைப்பற்றிப் பேசும் பொழுது பார்த்திருக்கிறோம். நம்முள் உள்ள அந்த உண்மைப் பொருள் அதாவது உயிர்ப்பின் ஒளித்துண்டம் தான் கட்டை போன்ற உயிரற்ற மனம் புத்தி என்கிற பொருள் சூழலை இயக்கி, நடத்தி, அடங்கவும் செய்கிறது.

உள்ளபடி அந்தப் பொருள்கள் ஜடம்; உயிர்ப்பு அற்றவை. இவைகளை ஆக்கும் அந்த ஜடப் பொருள்கள் நம்முன்னே உள்ள ஆற்றலின் பிழம்பான உயிர்க்கேந்திரம் அல்லது ஆத்மனுடன் சேர்ந்தவுடன் உயிர்த்தன்மையின் இயக்கத்தைப் பெறுகின்றன. இந்தத் தெய்வ ஒளித் துண்டம் தான் மனத்தையும் புத்தியையும் வலிவு பெறச் செய்கிறது. அப்பொழுதுதான் அவை உணர்ச்சி, செயல் துணிபுகள் இவற்றின் மூலம் தங்கள் வேலையைச் செய்கின்றன.

ஆத்மாதான் மனத்தையும் புத்தியையும் ஆட்டுகிறது என்று தெரிந்த பிறகு வெறும் சாதனங்களான அவை அவற்றின் பின்னே இயங்கும் பொருளைக் காணமுடியாது என்பது தெளிவு. நம் கண்கள் பார்ப்பதில் எவ்வளவோ திறமை காட்டினாலும் அவை அவற்றையே பார்த்துக்கொள்ள முடிவதில்லை. நாம் எவ்வளவு களைத்திருந்த போதிலும் ஒரு கஜம்கூட நாம் நம் பேரிலேயே சவாரி செய்ய முடியாது. அதைப்போல மனதும் புத்தியும் அந்தப் பேருண்மையைத் தாமே கவனித்து ஆய்ந்து பார்க்க ஏற்ற பொருளாகப் பிரித்துக்கொள்ள முடியாது. எந்த நிமிஷம் அந்த உண்மை மனது-புத்தி இவற்றிலிருந்து பிரியுமோ அதே கணம், பாவம், இந்த மனமும் புத்தியும் செத்துக் கட்டையாகிவிடும். ஒரு காரோட்டியை அவன் ஓட்டும் கார் ஓட்ட முடியாது! காரோட்டி தன் இடத்தை விட்டு நகர்ந்து கீழே இறங்கிய அக்கணமே, சக்கரங்கள் சுழல்வது நின்றுவிடும். அவன் உடனே எதிரே வந்தாலும் கார்

அவன் மேல் ஏறி ஓட முடியப்போவதில்லை. அதைப் போல புத்திக்கு அதன் ஆற்றலைத் தந்து அடக்கி நடத்தும் ஆத்மா ஆய்ந்து அறிய என்று புத்தியை விட்டுப் பிரிக்கப்பட்டு அதற்கு முன்னே ஓர் ஆராய்ச்சிப் பொருளாகக் கொண்டு வரப்படு மானால் அதற்குள் புத்தி செத்துக் கட்டையாகி விடுமே! அதனால் தான் 'இந்த அறிவு தர்க்கத்தினால் பெறக்கூடியது அல்ல' என்று யமதர்மன் சொல்கிறார்.

சரிதான். மனம், புத்தி ஆகிய அறிவுச் சாதனங்கள் அந்த உண்மையை அறிய முடியாதென்றால், வேத இலக்கியங்கள் யாவும் அடைய முடியாத ஓர் இலட்சியத்தைப்பற்றிப் பேசுகின்றன போலும், என்று முடிவுசெய்யக்கூடாது. உபநிஷதங்கள் வேதங்களின் தனித்தனி மூன்றாவது அங்கங்கள். அவை எல்லாம் முடிவேயில்லாத வரிசையில் வந்த, கடவுளைத் தங்கள் தங்கள் முறையில் அறிந்து பழகிய மகான்களின் உள் அனுபவங்களின் தொகுப்பேயாகும். இந்த நம் நாட்களில் கூட, சரித்திரத்தின் சமீப காலத்தில்கூட இப்படிப்பட்ட தெய்வ மனிதர்களின் உதாரணங்கள் எவ்வளவோ காணலாம். அவர்கள் எல்லாம் நம்முடன் வசித்தவர்களே! உருவத்தில் மனிதர்களாகவும் உண்மையில் தெய்வமாகவும் விளங்கியவர்கள்.

இந்த ஆன்ம சாட்சாத்காரம் நடக்கமுடியாத ஒன்றன்று. ஏன்? நம் ஒவ்வொருவருள்ளும் மறைந்து மறந்து கிடக்கிற தெய்வத் தன்மையைக் கைவரச் செய்து-கொள்வதென்பது மனிதனுக்கு உரிமைப் பொருளேதான். உடல் எடுத்த மனித வாழ்க்கை முழுப்பயனையும் 'இந்தப் பெருங்காரியத்தை சாதிக்கும்பொழுது தான் பெற்றதாகிறது. நம்மைப் போர்த்திருக்கும் எல்லைக் குறிகளாகிற கட்டுப்பாடுகளிலிருந்து கொண்டே, சுயத் தூய்மை, சுய வளர்ச்சி இவைகளுக்கான ஒரு விஞ்ஞான பூர்வமான முறைவழி சென்று தெய்வத்தின் முழுவளர்ச்சி, முழு அறிவு, ஆற்றல், அதிகாரம், பெருமை, அளவு எல்லாவற்றையும் அடையமுடியும். இந்தப் பூர்ண நிலையை அடைவதுதான் இயற்கை வளர்ச்சியின் இலட்சியத்தை அடைவதாகும் மனிதன் பெரியவன். அதற்குக் கருத்து மனிதனுக்குத்தான் இயற்கையில் வெகு மெதுவாகச் செல்லும் பரிணாம அல்லது உயிர் வளர்ச்சிப்

போக்கைத் துரிதப்படுத்த வேண்டி உபயோகப்படுத்தக்கூடிய ஆற்றலும் தேவையான உபகரணங்களும் அமைந்திருக்கின்றன.

இந்தப் பூர்ணத்வம் அடையக் கூடிய ஒன்றுதான்; அப்படியானால் யமதர்மராஜன் என்ன சொல்கிறான்? இந்த உண்மை அறிவினால் பெறப்படாத ஒன்று என்கிறாரே, அதற்கு என்ன கருத்து?

நம் அறிவுக்கு இது இயலாத ஒன்று என்றதன் பொருள் முதல் வரியின் இரண்டாவது பகுதியில் விளக்கப்படுகிறது.

'அது பல வழிகளில். எண்ணப்படுகிறது!' சூட்சுமமான வேதாந்த வெளியில் புத்தியைக் கொண்டுமட்டும் அறியவும், கற்பனை செய்யவும் முயன்றால் எவ்வளவு 'தலைகள்' யோசிக்கத் தொடங்குகின்றனவோ அவ்வளவு 'முடிவுகள்' தோன்ற ஆரம்பித்துவிடும்.

நசிகேதன் எல்லாச் சோதனையிலும் வெற்றி பெற்றுவிட்டான். ஆகவே அவன் வேதாந்தத்தில் பாடம் கேட்கத் தகுதி வாய்ந்த மாணவன் என்று உறுதியாயிற்று. எனவேதான் 'நீ ஏற்கனவேயே பிருமம்வித்தையின் லட்சியத்தையே அடைந்துவிட்டாய்!' என்று சொல்கிறார். இது இந்தப் பொருளைப்பற்றி முதல் பாடம்கூடச் சொல்லிக் கொடுக்கப்படாத நிலையில் சொல்லப்படுகிறது என்பதையும் கவனித்தல் வேண்டும். ஆன்ம அறிவு பெறச் சிரமம் ஏற்படுகிறதெல்லாம் நாமாகவே முயன்று நமக்காக உள் தூய்மை பெறுவதில் ஏற்படும் தாமதத்தால் தான் அந்தத் தூய்மை அடையப்பட்டுச் சாதகன் தகுதியை அடைந்துவிட்டால், தெய்வ வெளியின் அனுபவப் பிரதேசத்தில் சிறகடித்துப் பறப்பது என்பது தன்னைத் தானே கண்டு கொண்ட ஒரு புளகம் கொண்ட மௌனம் மூலம் திறமையாகச் சறுக்கிச் செல்வது தான்!

இந்த மந்திரத்தின் முடிவில் யம தர்மராஜன் தன் அன்பு உள்ளத்தின் அடியிலிருந்து ஒரு பிரார்த்தனை செய்கிறான். 'உன்னைப்போல் அநேக தத்துவ விசாரகர்கள் நமக்குக் கிடைக்கட்

டும்' என்று அவன் வேண்டுகிறுன். 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உணர்ச்சி அடக்கமுடியாமல் இயல்பாகப் பீறிட்டு வரும் உள்ளப் பண்பு கொண்ட எந்த உண்மை ஆசிரியரும் இந்த விதம்தான் தீவிரமாக வேண்டிக் கூவுவார்கள். இந்த லட்சியத்தை மனத்தில் கொண்டு நாம் நம்மைச் சுற்றி நோக்குவோமாளுல், இந்நாளில் நம் மிடையே உள்ள பள்ளி உபாத்தியாயர்களில் உண்மையான ஓர் ஆசிரியரைப் பார்ப்பது அபூர்வமாக இருக்கிறது. இதற்கு என்ன கருத்து? ஆசிரிய-வர்க்கமே அருவருக்கத்தக்க முறை யில் தன்மை இழந்து வீழ்ச்சியடைந்திருக்கிறது என்பது மட்டு மல்ல, மாணவ சமுதாயத்தின் உள்தரமும் விழுந்து விட்டது. இது மிகவும் துக்ககரமான விஷயம்.

ஆசிரியர்மார்கள் கூட அதிகச் சம்பளம் கோரி வேலை நிறுத்தம் செய்கிற நாட்களாகிவிட்டன இப்பொழுது. பிறகு மாணவர்கள் ஆசிரியர்களை வெறும் சம்பளம் வாங்கும் வேலைக் காரர்களாகவும் தாங்கள் எஜமானர்கள் என்றும் அவமதிப்பாக எண்ணுவது இயற்கைதானே.

ஜாநாம்யஹம் சேவதி ரித்யநித்யம்
ந ஹ்யத்ருவை: ப்ராப்யதே: ஹி த்ருவம்தத்:
ததோ மயா நாசிகேதச் சிதோ-க்னி:
அவித்யைர் த்ரவ்யை: ப்ராப்தவானஸ்மி நித்யம்

10. "அந்த 'நிதி' நீடிக்காத ஆயுளையுடையது என்று அறி. ஏனென்ருல் என்றுமுள்ள பொருள்களை என்றுமில்லாத பொருள்கள் மூலம் அடையமுடியாது. ஆகவே 'நசிகேத அக்னி'யை வேண்டி அநித்யமான திரவியங்கள் மூலம் நித் யத்தை நான் அடைந்திருக்கிறேன்.

தன் மாணவனுக்குப் பாராட்டுக் கூறும் வாயிலாக யமதர்ம ராஜா அசட்டுத்தனமாயிருந்த தன் பழைய வாழ்க்கையை நினை வுறுத்தி ஒத்திட்டுப் பேசுகிருர். புதிதாகப் பெற்ற அறிவில் தன் அசட்டுப் பழைமையை மீறி வந்துவிட்டாலும் சென்ற காலத்தில் செய்த தப்புக் காரியங்களுக்காக அவர் நெடிய காலம் சங்கடப்பட வேண்டியே இருந்தது. அவர் நிதிகள் (சேவதி: எல்லைக்குட்பட்டது) அழியும் தன்மையுடையவை

என்று அறிவார். இங்கே நிதிகள் என்பது செய்கைளின் பலனாகும். கர்மம் என்பது தாமே அழியும் இயற்கையுடைய திரவியங்களின் உதவிகொண்டு செய்யப்படுகின்றன. அநித்ய மான பொருள்களைக் கொண்டு செய்யப்படும் அல்லது அவற் றின் பயனாகப் பெறப்படும் பொருள்கள் தாமும் அவற்றைப் போல அழியக் கூடியவையாகத்தான் இருக்கும். மண் குவிய லிலிருந்து உடையக் கூடிய மண் பானையைத்தான் செய்ய முடி யும். அதிலிருந்து ஒரு சிறிய தங்க நகையாவது செய்யமுடி யாதா என்று முயலுவது வீணான முயற்சி! மனிதன் முடிவில் லாத எல்லைக்குட்படாத ஆனந்தத்தை விரும்பி நன்மையின் வழி செல்கிறான்; சாத்திரம் விதித்து அதிகாரமும் தந்த அநேக வேள்விகளைச் செய்கிறான். சுவர்க்க இன்பம் கூட மோட்சஇன் பத்தின் அமரத்தன்மையும் எல்லையில்லாத தன்மையும் வைத் துப் பார்க்குமிடத்து சீக்கிரம் அழியக் கூடியதே என்று யமன் குறிப்பாகச் சொல்கிறார்.

இந்திரன், சூரியன், சந்திரன் வருணன், வாயு, அக்கினி முதலிய உருவம் கொண்ட தேவதைகளைத்தான் வேதகால பக்தர்கள் அறிந்திருந்தனர். அந்தப் பதவிகளை நம் போன்ற மனித வாழ்க்கை நடாத்தி வந்தவர்கள் பல வேள்விகள், கருமங் கள், சாதகங்கள் செய்து உயர்வு பெற்று அடைந்தார்கள். ஆகவே அந்த வாழ்க்கையின் பயன்களை அனுபவிப்பதற்காக அந்த ஜீவன்கள் இந்தப் பதவி வகிப்பவர்களாக ஆகிவிடுகிறார் கள். இதுதான் எல்லா வேதாந்திகளும் குறிப்பாக வைசேஷிகர் களும் கொண்டிருக்கும் பொதுவான நம்பிக்கை. நம் வேதாந்தி கள் நம்பிவந்த இந்த நம்பிக்கைக்கு இங்கே யமதர்மராஜன் ஆதாரம் சொல்கிறான், "நான் அநித்ய வாழ்வு வாழ்ந்தபோது நசிகேத யாகம் செய்தேன். அதன் பயனாக யமதர்மனுடைய பதவியான இந்தப் பதவிக்கு வந்திருக்கிறேன்" என்கிறான்.

"நான் நித்யத்துவத்தை அடைந்திருக்கிறேன்" இங்கே கூறப்படுவது உண்மையான நித்யத்வம் அல்ல. இது வேறொன் றின் எதிரில் கூறப்படும் நித்யத்வமேயாகும். அநித்ய உலகில் அந்தந்த மணியில் ஏற்படும் அழிவை எண்ணினால் யமனுடைய பதவி 'நித்யம்'தானே! அது மாறாமல் தொடர்ந்து பிரளயம் வரை நீடிக்கக் கூடியது அல்லவா!

சுருக்கமாக, யமதர்மராஜன் தானே நசிகேதன் நிலையில் சாதகனாக இருந்தபொழுது தான் இருந்த நிலையையும் தான் கொண்டிருந்த கருத்துக்களையும் எண்ணிப் பார்க்கிறார். அந்த நிலையுடன் இன்று நசிகேதன் நிலையையும் ஒப்பிடுகிறார். தன் சிடனுக்கு இருக்கும் அசாதாரணமான பாக்கியமான வைராக்கியம், விவேகம் இவற்றை மனதாரப் பாராட்டுகிறார்.

சில விளக்க உரையாளர்கள் இந்த சுலோகத்தை நசிகேதன் சொன்னதாகச் சொல்வார். ஆனால் அது எந்த வகையிலும் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. ஏனென்றால் அந்தப் பையனுக்கு நசிகேத யாகத்தின் தீட்சையை யமதர்மராஜன் அப்பொழுதுதானே தந்தார்!

காமஸ்யாப்திம் ஜகத: ப்ரதிஷ்டாம்
க்ரதோரனன்த்யமபயஸ்ய பாரம் |
ஸ்தோ மமஹதுருகாயம் ப்ரதிஷ்டாம் த்ருஷ்ட்வா
த்ருத்யா தீரோ நசிகேதோ-த்யா-ஸ்ராக்ஷீ: ||

காமங்களின் முடிவு, உலகத்தின் அத்திவாரம், கர்மாக்களின் முடிவில்லாத பரிசு, பயம் இல்லாத அக்கறை, புகழுக்குரியது, மகத்தானது, நன்கு பரந்த விரிந்த உலகம்; ஆன்மாவின் இருப்பிடம்; இவற்றை எல்லாம் நீ பார்த்திருக்கிறாய். கெட்டிக்காரனானபடியால், நசிகேதா, நீ உறுதியான முடிவுடன் எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டாய்!

இந்த இலட்சிய மாணவனிடத்தில் இருக்கும் தகுதிகள் அனந்தம், அனந்தம், எவ்வளவு வாயாரப் புகழ்ந்தாலும் அது தகும். சொல்லச் சொல்ல யமதர்மன் ஊக்கம் மேலும் மேலும் வேகம் பெறுகிறது. வேதாந்த விசாரணைக்குத் தக்க இந்தச் சிடனின் குணங்களை யமதர்மன் மீண்டும் மீண்டும் சொல்லிக் கீர்த்தனம் செய்கிறார்.

இரணிய கர்ப்ப நிலை அல்லது பிரம்மலோகம் மனிதர்களுக்கு ஒரே லட்சியமாக இருந்து வந்திருக்கிறது. மனது புத்தி இவைகளின் முழுப் பூர்ண நிலையின் கவர்ச்சிகரமான தளத்தில் இருக்கின்றது அது. அது முடிவேயடையாத

ஆனந்தங்களையும் கவர்ச்சிகளையும் கொண்டது. எந்த பக்தனும் அந்தக் கவர்ச்சிகளைக் கண்டு ஒதுங்க முடியாது. கர்மம் செய்கிறவர்களை எல்லாம் மனமுறையில் ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொருவரும் இந்த பிரும்ம லோகத்தில் கொஞ்சகாலமாவது ஆனந்தம் அனுபவிக்க வேண்டும் என்று அதற்கான நேர் வழியைப் பிடிக்கிறவர்களே. அதற்குப் பிறகுதான் கர்ம முக்தியின் மூலம் பிரளய சமயத்தில் கைவல்யத்தை அடைய விரும்புகிறார்கள். யமதர்மனுக்கு என்ன ஆச்சரியம் என்றால் நசிகேதன் இந்த நிலையைக் கூடத் தாண்டியவனாயிருக்கிறானே என்பதுதான். இந்திரியங்கள் மிகவும் பிரயாச எல்லையில் தரக்கூடிய சூட்சும இன்பங்கள் கூட அவனைக் கவர முடியவில்லை!

இந்த மந்திரத்தில் உபயோகிக்கப் பட்டிருக்கிற உரிச்சொற்கள் எல்லாம் 'இரணிய கர்ப்ப' நிலையைத்தான் வருணிக்கின்றன.

"உலகங்களுக் கெல்லாம் அத்திவாரம்" இரணிய கர்ப்ப நிலை வெளியாகாத நிலைகளிலிருந்து முதல் முதல் எழும் தோற்றமாகும். இணையான ஓர் உதாரணம் சொல்ல வேண்டும் என்றால் "மனதின் பூர்ண நிலை" விதையில் மறைந்து இருக்கும் மரத்தின் முதல் தோற்றமாகிற முளை எனலாம். அது அப்பொழுதுதான் மர வாழ்க்கையை ஆரம்பிக்கும் பொழுது மறைந்த நிலையிலிருந்து முதல் முதல் தோற்றத்தைக் காட்டுகிறது. இந்த உதாரணத்தால் முளை மரத்துக்கு ஆதாரம் அல்லது அத்திவாரம். அதேபோலே மற்ற கன்மான தோற்றங்கள் உலகத்தின் பொருள்கள். அவற்றை எல்லாம் இரணிய கர்ப்ப நிலை தாங்கி நிற்கிறது என்று சொல்லப் படுகிறது. ஆத்யாத்ம, ஆதி பூத, ஆதி தெய்வப் பொருள்கள் எல்லாம் இந்த இரணிய கர்ப்ப நிலையால் தாங்கப் படுகின்றன.

"புத்தி சாலியாக இருந்து நீ எல்லாவற்றையும் வேண்டாம் என்று சொல்லிவிட்டாய்!" என்று யமன் சொல்கிறார். அந்தப் பையனிடத்தில் தராதரமறியும் விவேக புத்தியும் வைராக்கிய குணமும் நிறைந்திருப்பதை யமன் பார்த்துத்

தெளிவான முறையில் அவற்றைப் பாராட்டுகிறார். உண்மையான சாதகனான நசிகேதன் தான் அடைய விரும்பும் அந்தப் பூர்ணத்வத்தின் தலை சிறந்த நிலையிலிருந்த எந்த விதமான ஏற்ற இறக்கப் பேச்சுக்கும் தயாராக இல்லை. அப்படிப் பேச்சை நினைத்தாலே ஒரு கோபம் கொள்கிறான்.

தம் துர்தர்சம் கூட மனுப்ரவிஷ்டம்
குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம் |
அத்யாத்ம யோகாதி கமேன தேவம்
மத்வா தீரோ ஹர்ஷசோகௌ ஜஹாதி ||

12. ஆன்மத் தியானத்தின் மூலம் எந்தத் தீர புருஷன் அந்தப் பழம் பொருளை, பார்க்கக் கஷ்டமானவனை, ஆழம் காண முடியாது கரந்து நிற்பவனை இதயக் குகையில் ஒளிந்து நிற்பவனை, பாதாளத்தில் வசிப்பவனை, புத்தியில் இருப்பவனை, துக்ககரமான சூழ்நிலையில் இருப்பவனை, எவன் அறிகிறானோ அவன் இன்பத்தையும் துன்பத்தையும் துறக்கிறான்.

இரணிய கர்ப்ப நிலையையும் ஒதுக்கிவிட்டால் உண்மைச் சாதகன் விரும்புவது எது? அதைவிடச் சூட்சுமமான பொருள் ஏதாவது உண்டா? கடோபநிஷத்தைப் படிக்கிற எந்தச் சீடன் மனத்திலும் இந்த வகைக் கேள்விகள் எழத்தான் செய்யும். இக்கேள்விகளுக்குப் பதில்தான் உபநிஷதப் பகுதியாகும். அந்தப் பகுதி இங்கே தொடங்குகிறது. இந்த மந்திரத்திலிருந்தே ஆன்ம பூர்ணத்வத்தின் சித்தாந்தமும் செயல் முறையும் தொடங்குகின்றன. 'பூர்ண மன நிலைக்கப்பால் அதைவிட சூட்சுமமான நிலை—அமர உண்மை—உண்டு, அதை ஒரு சாதகன் உணரமுடியும். 'அயம் அஹம் அஸ்மி' என்று அந்த நிலையை அடையவும் இயலும் என்று யமதர்மன் தெளிவாக இந்த மந்திரத்தில் குறித்துக் காட்டுகிறான்.

புராணம் (பழமையானது): புத்தி, மனம், உடல் முதலிய பொருள் போர்வைகளை அடக்கி நடத்துகிற அந்த உண்மைத் தத்துவம் உண்மையிலேயே பழையதுதான். ஏனென்றால் அதன் சாரக் கருத்தில் அது என்றும் பிறந்ததில்லை. ஒரு பானைக்குள் இருக்கும் இடமும் (வெளியும்) வெளியே எங்கும்

பரவியிருக்கிற வெளியும் ஒன்றே தான். அதே போலவே சுத்த உணர்வு அல்லது ஞான ஒளி முன்பே இருந்த ஒன்று. அது புதிதாகப் பிறப்பதில்லை. அறிவு அல்லது தேய்வையும் அது மேற்கொள்ளப் போவதில்லை. ஆகவே பழமையானது என்று தான் அது பேசப்படவேண்டும்.

துர்தாசம் (பார்ப்பதற்குக் கடினமான): புறப் பொருள் போர்வைகள் அந்த உண்மையைப் போர்த்து நிற்பது போல் தோன்றுகின்றன. உண்மையில் அவை உயிரற்றவை; அந்த முறையில் செயலற்றவையே. அவற்றிற்கு மனம்-புத்தி-உடல் உயிரளித்துத் தலைமையாய் நிற்கிறது அந்த உண்மை. கண்கள் அதைப் பார்க்க இயலாது. சுருக்கமாகக் கூறினால் 'உண்மை உணர்வு' அல்லது ஈசுவர தரிசனம் என்பது மற்றப் பொருள் களைக் கண்டு கேட்டு உணர்கிறோமே, அதைப் போலப் பொறி களால் கண்டு கேட்டுத் தொட்டுச். சுவைத்துப் பார்க்கக் கூடிய தல்ல. மனம் புத்தியாலும் உணரக்கூடிய அல்லது அறியக் கூடிய ஒன்றல்ல. அந்த உண்மை அனுபவிக்கப்பட வேண்டிய ஒன்று. அனுபவிப்பவன் தன் உள்ளேயே அதை நெருங்கி அனுபவிக்க வேண்டும்.

உள் குகையில் தங்கி நிற்பது: எங்கும் ஊடுருவும் ஒன்றை உள் குகையில் தங்கியிருப்பதாக அறுதியிட்டுக் கூறினாலே அதை இல்லை என்று சொல்வதற்கொத்துவிடும். ஆனால் யம தர்மராஜா அபசாரம் செய்யக் கூடியவரல்லர். சுருதி என்பது "இங்கர் சால்" போன்ற அநீசுவரவாதியின் எழுத்து அல்ல! 'குகையில் தங்கியிருப்பது' என்று குறிப்பிட்டிருப்பதால் அது வெளியிலில்லை என்று பொருளல்ல. நம் உள்ளுக்குள்ளே சூட்சுமத்துள் சூட்சும சித்தாந்தமாக இருப்பதும் அதுவே என்றே பொருள்.

மிகவும் மொத்தையான போர்வை, அதாவது இந்தச் சதை யுணர்வுள்ள சரீரம் எல்லாவற்றிற்கும் வெளியே யுள்ள போர்வை. இருந்தும் அதற்குள் பிராணன் ஆட்சி செலுத்துகிறது. பிராணன், உருவமுள்ள பொருளைவிட சூட்சும மானது என்று நாம் அறிகிறோம் சூட்சுமம் என்பது வியா பகத்வத்தை அதாவது ஊடுருவிப் பாயும் தன்மையைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

பிராணனைவிட மனது சூட்சுமமானது. ஏனென்றால் பிராணன் ஏற்படுத்துகிற சலனம் நம்மைச் சுற்றி அதிகமான இடவெளியில் பரவி ஆட்டி வைக்கிறது என்றால் நம் மனது ஏற்படுத்தும் எண்ணச் சலனங்கள் அவற்றைவிட மிகவும் அதிகமாக ஆட்டி வைக்கின்றன. அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் நம்முள்ளேயே பிராணன் பரவி நிற்கிற இடத்தைவிட இன்னும் ஆழமான எங்கோ மனம் இருந்து இயங்குவதாக நாம் கருதுகிறோம்.

மனது, பிராணன், உடல் இவற்றை எடுத்துக்கொண்டு பார்க்குங்கால் இன்னும் சூட்சுமமாய் அதனால் இன்னும் ஆழ்ந்த இடத்தில் புத்தி இருப்பதாகச் சொல்கிறோம். அதைவிட நுணுகியது ஆனந்தப் போர்வை.

இந்த மேலே சொல்லப்பட்ட எந்தப் போர்வை அல்லது உறைகளும் கேவலம் ஜடப் பொருள்களாலானவை. அவற்றை எல்லாம் உயிர் தந்து அடக்கி நடத்துகிறது ஆத்மா அல்லது 'உண்மை' (சத்தியப் பொருள்). அதுதான் நம்முள் ஏற்படும் உயிர்ப்புக்கெல்லாம் ஆதாரசக்தி. தெய்வஸ்பரிசத்தின் ஒருபொறி என்றால் அது சூட்சுமத்துக்கெல்லாம் சூட்சுமமாகத் தானே இருத்தல் வேண்டும். ஆகவே அது நம்முள் புனிதத்துக்கெல்லாம் புனிதமான இடத்தில் அமைந்திருக்கிறது. இந்தக் கருத்தில்தான் சுருதி அந்தச் சத்தியம் அல்லது ஆத்மன் எல்லாவற்றையும்விட உள்ளே குகையில் நிலவுகிறது என்று சொல்கிறது.

கஹ்வரேஷ்டம் (துக்கரமான சூழ்நிலையின் நடுவே அமைந்த): சாதாரண மனிதன் வாழ்வை எடுத்துப் பார்க்கலாம். தன்னால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட மன மயக்கங்களில் ஆழ்ந்து கிடக்கும் ஒருமனிதனுக்கு இதயக்குகை பித்துப் பிடிக்க வைக்கும் தாறுமாறான எண்ணங்களின் குழப்பத்திலேதான் இருக்கிறது. இந்தக் குழப்பத்தின் இடையில் சம்சாரியினுடைய புத்தி அதிகம் வேலை செய்ய நேரிட்டு வலுவிழந்து விடுகிறது. அந்த நிலையில் அது பரம உச்ச நிலையிலுள்ள அந்த சத்தியத்தையும் ஆன்ம இயற்கையையும் பற்றிச் சிந்திக்க முற்றிலும் ஆற்றலற்றதாக இருக்கிறது. அந்த உண்மையைத்தான் இந்தச் சொல் மிகவும் சரியாகக் குறிக்கிறது.

அத்யாத்ம யோகம் (தியான முறை): தியானம் என்பது சுய பூர்ணத்வம் அடைவதற்கான வழிமுறை ஆகும். அதன் மூலம் அடைய இயலாததெல்லாம் அடையமுடியும். தியானம் என்பது, சுத்தமடைந்து அதனால் மிகவும் உயரிய முறையில் ஒருமுகப்படுத்தப்பட்ட மனத்தை வேறு ஒரு பொருளையும்பற்றி எண்ணவிடாமல் முற்றிலும் தடுத்து ஆத்மாவின் இயற்கையைப்பற்றியே சிந்திக்கச் செய்யும் ஒரு முறையாகும். மனது குறிப்பிட்ட வழி செல்ல வேண்டும். அதற்கு ஒவ்வாத வேறு எண்ண ஓட்டங்கள் வந்து எடுத்துக்கொண்ட போக்கைக் கலைத்துக் கலக்கிச் சேறுக்கக் கூடாது.

அப்படிப்பட்ட தியானி தனக்குள் ஒளி தரும் ஆத்மாவின் இயற்கையைப்பற்றி நெடுங்காலம் சிந்தித்துத் தெய்வ நிலையை நேரடியாகச் சுய அனுபவமாக உணரும் நிலையை அடைகிறான். அன்றாடம் புறப்பொருளைப்பற்றி அறிவதற்கான நம் சாதனங்களும் முறைகளும் அந்த உண்மையை அறியவோ. உணரவோ சாதனமாவதில்லை. என்றாலும் நம்முள் நம் அறியாமையின் அடித்தளத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் உணரும் சக்தியை (Power of Intution.) எழுப்பி வளர்ப்பதற்கான ஒரு தனி வழி உண்டு.

உண்மை அவ்வளவு சூட்சுமம். அதை அடையும் முறை அவ்வளவு சிக்கல் நிறைந்தது. வெற்றியின் சதவிகிதம் மிகவும் குறைவு. இந்த நிலையில் அதைக் காண்கிறேன் என்று உலகைத் துறந்து இமயக் காட்டில் ஒரு குகைக்குள் சென்று தொல்லை ஏற்று உடலைவாட்டி எடுப்பது, அதுவும் கற்பனையிலேயே இருக்கும் நேரடியில் கைவரப் பெறாத கருத்துக்களுக்காக என்றால் இது சுத்தப் பைத்தியக்காரத்தனம் அல்லவா?

அதைவிட இங்கேயே வியர்வை வர உழைத்துக்கொண்டு அழுது தேம்பிக் கொண்டோ, பெரு மூச்சு விட்டுக்கொண்டோ, பெரு மகிழ்ச்சியில் சிரித்துக் கொண்டோ. ஆடித் திளைத்துக் கொண்டோ தங்கி இருந்துவிடுவது நல்லதல்லவா? இப்படி ஒருவன் கேட்டால் அவனுக்குச் சரியான பதில் இல்லைதான். கேள்வி கேட்பவன் வாழ்க்கையைப் புத்திசாலித்தனமாக நடத்தினவனாயிருந்து ஓர் உண்மை கண்டு பிடித்தவனாயிருந்தால் அவனுக்குத்தான் உபநிஷதம் பேசுகிறது. அந்த உண்மை

என்ன? அதுதான், வாழ்க்கை மிகமிகச் சிறந்த பயனைத் தந்தால்கூட அது ஒரு குறைவின்மைகள் கொண்ட குளவிக் கூடுதான், முடிவில்லாத தொல்லைகளையும் துயரங்களையும் தரக்கூடியதே தவிர வேறில்லை, என்ற புத்திசாலித்தனமான முடிவு. அந்த முடிவைக் கண்ட அப்படிப்பட்ட சாதகர் களுக்குத்தான் இந்த மந்திரத்தில் அத்யாத்ம வித்தையைப் பழகி ஆன்ம சாட்சாத்காரம் செய்துகொள்வதன் பயன் கூறப் படுகிறது. "அப்படிப்பட்ட ஒருவன் இன்பம் துன்பம் இரண் டையுமே துறக்கிறான்," என்று உபநிஷதம் கூறுகிறது.

சம்சாரத்தின் பாசறையில் த்வந்தங்கள் (விபரீத இரட்டைகள்) நிரப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. சூடு குளிர்; சந்தோஷம் துக்கம்; வெற்றி தோல்வி; புகழ் அவமானம்; இப் படியே பல. சுய பூர்ணமடைந்த சாது தெய்வத் தன்மையையும் ஞானத்தையும் உணர்ந்தவன். அவனே ஒளியாக மாறுகிறான். அவன் மனத்தின் மாறுபாடு காட்டும் இந்த இரட்டை நிலையை உணருகிறான். அப்படிப்பட்டவன்தான் தெய்வ மனிதன். அவன் தன் இருக்கை மூலமே உலகை ஆசிர்வதித்து வாழ வந்தவன்.

ஏதச்ருத்வா ஸம்பரிக்ருஹ்ய மர்த்ய:
ப்ரவ்ருஹ்ய தர்ம்யமணு மேதமாப்ய |
ஸ மோததே மோதனீயம் ஹி லப்த்வா
விவ்ருதம் ஸத்ம நசிகேதஸம் - மன்யே ||

13. இதை (ஆன்ம ஞானத்தை) கேட்டு நன்கு பிடித் துக்கொண்டு மனிதன் (மர்த்யன்) த...மயமான ஆத்மனைத் தனித்து எடுத்து இந்த அணுவாக நுணுகிய 'தன்னை' அடைந்து (அவன்) இன்பத்தில் திளைக்கிறான். ஏனென்றால் அவன் ஆனந் தத்தின் மூல ஊற்றை அடைந்துவிட்டான். பிரும்ம லோகம் நசிகேதனுக்கு நன்கு திறந்திருக்கிறது என்றே எண்ணுகிறேன்.

அந்தப் பரமன் நிலை இலக்கணங்களுக்குள் அடங்காது. கடவுளுக்கு இலக்கணம் கூற முற்பட்டால் கடவுள் இழிவுபடுத் தப்படுகிறார். கடவுள் எல்லையற்றவர். மொழிகள் எல்லாம் எல்லைக் குட்பட்ட (கருத்துக்கள் கொண்ட) சொற்களாலானவை. பிறகு எந்த மொழியின் சொற்கள்தாம் அவரை விவரிக்க முடியும்? இது ஏதோ முரண்பட்ட பேச்சு என்று எண்ணக்

கூடாது. உபநிஷதமும் 'இலக்கணம் கூறிவிடுவேன், உண்மையைச் சொற்களில் வடித்துத் தந்துவிடுவேன்,' என்று மார் தட்டிப் பேசவில்லை. அது செய்வதெல்லாம் எந்த முறையில் ஏற்கனவே அதற்கெனப் பதப்படுத்திய மனம் புத்தி கொண்டு தனியே சிந்தனை செய்தால் அந்தப் பேருண்மையை அனுபவ பூர்வமாக உணர முடியுமோ அந்த முறையை எடுத்துச் சொல்வதுதான். நேரடி அனுபவங்களை எடுத்துச் சொல்வதென்றால் உண்மையில் பேச்சு நொண்டத்தான் செய்யும். நான் அமெரிக்காவுக்குச் சென்று ஒரு நண்பனுக்கு லட்டைப் பற்றிப் பேசத் தொடங்கினால் நான் என்ன செய்வேன்! மிகவும் முயன்றால் அதன் தோற்றம் மற்ற குணங்களைப் பற்றி ஒரு வெளி விவரணம் தரலாம். இந்தியாவில் செய்யப்படும் லட்டு ஒன்று நாக்கில் இருக்கும் போது அது தரும் இனிய சுவையை எடுத்துக் கூறும் முயற்சியில் தோல்வி தானே கிட்டும்.

அதனால்தான் இந்த மந்திரத்தில் யமதர்மராஜன், 'சாதகன் இதற்கு முதல் மந்திரத்தில் சொல்லப்பட்ட குறிப்புக்களை நன்கு கேட்டுப் புத்தி பூர்வமாய் அவைகளை அறிந்துகொண்ட பிறகு அந்த மந்திரத்தின் பொருள் பொதிந்த கருத்துக்களின் பேரில் தியானம் செய்தானானால் தனக்குள் இருக்கும் வாழ்க்கையின் நடுப்புள்ளியின் நேரடியான மிக நெருங்கிய அனுபவத்தைப் பெற முடியும்' என்கிறார். நமக்குள் இருக்கும் உண்மையின் சாரம் அழியாததும் எங்கும் ஊடுருவி நிற்பதுமான சுத்த 'சித்'தே என்று அறிந்துகொண்டால் நாம் பொய்யும் மயக்கம் தருவதுமான நம்முடைய உடல்—மனம்—புத்தி அவைகளையே நாம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் இணைப்பைச் சுருட்டி வைத்துவிட்டு நம்முள் இருக்கும் உண்மைத் தத்துவத்துடன் ஒட்டி நிற்போம்.

நாம் வெகு நாளாக நம்மை இந்த அழியும் மனிதர் என்று எண்ணிக் கனவு கண்டு வந்தோம். ஆனால் நாம் உண்மையில் அந்தப் பரம் பொருளே. இந்த அறிவு உண்மையான தற்பெருமையாகும். இந்த அறிவை நாம் மீண்டும் பெற்றுவிட்டோமானால் நாம் ஆனந்தமடைவோம்.

'ஆனந்தத்தின் காரண எல்லையை அடைந்து' என்று மந்திரம் பேசுகிறது. கொஞ்சம் சரியான முறையில் நாம்

யோசித்தோமானல் ஓர் அறிவை முடிவாகப் பெறலாம். நமக்கு மிகவும் அதிக ஆனந்தத்தைத் தருவது நம்முடைய உண்மைத் தன்மையின் அறிவேயாகும். அதனுல்தான் நாம் நம்மை மிகவும் அளவு மீறி நேசிக்கிறோம். ஒரு முறை ஒரு அதிகாரிக்கு போனில் அவர் வீடு நெருப்புப் பற்றி எரிகிறதென்று தெரிவித்தனர். பாய்ந்து வந்துசேர்ந்தார் தம் தெருவுக்கு. 'ஐயோ குழந்தை மாடியிலேயே தங்கிவிட்டது! தொட்டிலில் தூங்கும் குழந்தையை நெருப்புத் தகித்துப் பொசுக்கிக்கொண்டிருக்கிறது' என்ற பயங்கர உண்மையைக் கேள்விப்பட்டார் அவர். அலற ஆரம்பித்தார். 'ஐயோ. இந்தக் கூட்டத்தில் உள்ளே சென்று என் குழந்தையை எடுத்துவருவார் யாருமில்லையா? அப்படிச் செய்பவருக்கு இன்று என்னிடம் இருப்பதையெல்லாம் தந்துவிடுவேனே!' என்று கையை உதறினர்.

ஒருவரும் முன்வரவில்லை. அதிகாரியின் குழந்தை எரிந்து சாம்பலாயிற்று.

அதிகாரியான அந்தத் தந்தை தன் குழந்தையை மனதார விரும்பினர், நேசித்தார். அந்தக் குழந்தையை அடைய அவர் தன்னிடமுள்ள எல்லாவற்றையும் தியாகம் செய்ய விரும்பினர்—தன் உயிரைத் தவிர! அவர் உள்ளத்தில் 'குழந்தை தன் உயிருக்குத் தக்க மதிப்புள்ள மாற்றுப் பொருளாகாது!' என்ற எண்ணம் அவரறியாமலே இருந்து வந்ததாகும்!

'நாம் நம்மை இவ்வளவு அதிகம் நேசிக்கிறோம் என்றல் நாம் நம்முள் எதை இவ்வளவு தீவிரமாக நேசிக்கிறோம்?' என்று விசாரணை செய்வது நல்லது. இந்த உடல் சாதனத்தில், ''காலை வெட்டவேண்டும் அல்லது கண்களைப் பிடுங்கவேண்டும். எதை விரும்புகிறாய்?' என்ற கட்டம் வந்தால் நாம் நிச்சயமாய்க் காலை வெட்ட அனுமதித்துவிடுவோம். அதாவது அறிவுச் சாதனங்களான அங்கங்களா, கர்ம சாதனங்களான அங்கங்களா எதை விடுவது என்று கேள்வி எழுந்தால் அறிவு அங்கங்களை வைத்துக் கொள்ளவே விழைவோம்.

அறிவுச் சாதன அங்கங்களையே எடுத்துக்கொள்வோம். காதைப் பற்றிப் பார்க்கலாம். காதில் ஒரு பிளவை ஏற்பட்டு மிகவும் சங்கடப்படுத்துவதாக வைத்துக் கொள்வோம்.

டாக்டர் மனத்தில் ஏற்படும் வருத்தச் சலனம் நிற்க ஆப ரேஷன் செய்யவேண்டும் என்று சொன்னால் நாம் காது போனா லும் சரி என்று ஆபரேஷன் செய்துகொள்ளத் தயாராகி விடுகிறோம். இங்கே நமக்கு மனது பெரிதாய்ப் போயிற்று. ஏற்படும் வருத்தம் பெரிதாகின்றது. ஆகவே காதைவிட மனது அதில் நம்முடன் அதிக நெருக்கம் கொண்டதாக ஆகிறது. ஆகவே அதினிடத்திலுள்ள பிரியம் அதிகமாக இருக்கிறது. ஆகவே ஞானேந்திரியங்களைவிட மனம் நமக்கு அதிகப் பிரிய மான ஒரு அங்கம் என்பது தெளிவாகிறது.

நண்பர்களே, நீங்கள் அநேக உயிர்த் தியாகிகள் கதையைக் கேட்டிருப்பீர்கள். தங்கள் கருத்துக்களையும் கொள்கைகளையும் நிலை நாட்டி வளர்க்க அவர்கள் கொடுமை மன்னர்களின் ஈவிரக்கமற்ற கசையடிகள் தாங்கி, தொல்லை வாழ்வு வாழ்ந்து அநேக சங்கடங்களைத் தாங்கி நின்றதிலிருந்து என்ன தெரிகிறது? புத்தி தந்த கருத்துக்கள், கொள்கைகள் மனது ஏற்க நேரிடும் உணர்ச்சிகள் இவ் விரண்டில் எதற்கு மனி தன் அதிகம் மதிப்புத் தருகிறான் என்றால் பண்பட்ட மனிதன் புத்தியின் கருத்துக்களைத் திருப்தி செய்வதைத்தான் பெரிதாக மதிப்பான். அதிலிருந்து மனத்தைவிட நாம் புத்தியை அதிகம் அன்பு செய்து போற்றுகிறோம் என்பது தெளிவாகிறது.

இப்படியே அலசிக்கொண்டுபோய் நாம் கடைசியில் நம் முடைய உயிரின் ஊற்றுச் சுனைக்கே வந்து சேருவோம். நம் முள்ளே மிக ஆழத்தில் இருக்கிற அதன் காரணமாகத்தான் புத்தி, மனம், உடல் எல்லாம் வலிவும் பெற்று இயக்கமும் பெறுகிறது. அதுதான் நம்மால் மிக மிக அன்பு செய்யப் படுகிற ஒன்று. ஏனென்றால் அதன் காரணமாகத்தான் நமக்கு அதைவிட உயர்வற்ற இன்பம் கிட்டுகிறது. ஆகவே அந்தத் தெய்வ ஒளி தான் - நம்முள்ளே மிகவும் ஆழத்தில் மறைந்திருக் கிற அது தான், எதற்காக நாம் அதைவிட ஸ்தூலமான பொருள் களைகள் எல்லாவற்றையும் நாம் தியாகம் செய்யத் தயாரா யிருப்போமோ அதுவேதான், எல்லா ஆனந்தத்துக்கும் மூலம் என்று உபநிஷதம்பேசுகிறது. சாதகன், தான் 'அதுவே' என்று இணைந்துகொள்ளத் தெரிந்து கொண்டுவிட்டால் பிறகு அந்த

நிலையில் அவன் அடையும் ஆனந்தத்தை என்ன என்று சொல்வது? எப்படி அளப்பது?

யமதர்மராஜன் தன் சிடனுக்கு இதுவரை தந்த பாராட்டுரைகள் எல்லாவற்றிற்கும் சிகரமாக அந்தப் பேருண்மையின் திருக்கோயிலின் வாயில் நசிகேதனுக்காக நன்கு திறந்திருக்கிறது, என்ற கூற்று அமைந்திருக்கிறது. அதன் கருத்து என்ன? நசிகேதன் தகுதியுள்ள சாதகன் என்பதே. அவனுல்தான் நெருங்கிய சுருதி மந்திரங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும் பொழுதே அவன் உள்ளச் சுய உணர்வின் நிலையிலேயே அந்தப் பேருணர்வு, ஆத்மா என்ன என்று அறிந்துகொள்ள முடியும்.

அன்யத்ர தர்மாதன்யத்ராதர்மா தன்யத்ரா
ஸ்மாத் க்ருதாக்ருதாத் |
அன்யத்ர பூதாச்ச பவ்யாச்ச
யத்தத் பச்யஸி தத்வத ||

14· நசிகேதன் சொன்னுன். தர்ம அதர்மத்துக்கு மீறியதாய், காரிய காரணங்களுக்குப் புறம்பானதாய், நடந்தது, நடக்க விருப்பது என்ற இரண்டுக்கும் அப்பாற்பட்டதாய் நீ எதைப் பார்க்கிருயோ அது எது!

இவ்வளவு பாராட்டுரைக்கும் பதிலாக நசிகேதன் பேசுகிஞன், பதில் என்ன தெரியுமா? அதே கேள்விதான். அவன் உள்ளத்தைப் பொசுக்கிக் கொண்டிருக்கும் அதே கேள்வியை வேறு வார்த்தையில் திரும்பவும் கேட்கிருன். நேரடியாய்க் கேட்காமல் அவன் ஏதோ புரியாத புதிர் கேட்பது போலக் கேள்வியைப் போடுகிருன்.

அவன் விசாரணையின் பயனுய் ஓர் உண்மை தெரியவந்தது; அது தர்மம் அதர்மம் இரண்டுக்கும் அப்பாற்பட்டு இருப்பது, அது காரணம், காரியம் இரண்டையும் மீறியது. அது கடந்த காலத்தையும் கடந்துவரும் காலத்தையும் தாண்டி இரண்டுக்கும் சொந்தமில்லாமல் இருக்கிறது.

தர்மம் அதர்மம் என்ற இரு சொற்களும் மிகவும் ஆழம் அகலம் கொண்டு விளங்குகின்றன. ஒன்றை ஒன்று எதிர்க்கும் ஜோடிக் கருத்துக்களான இன்பம் துன்பம், வெற்றி தோல்வி,

நம்பிக்கை அவநம்பிக்கை, உடல்நலம், வியாதி போன்ற எல்லா வற்றையுமே சுட்டுவதாகக் கொள்ளவேண்டும். அந்தப் பேருண்மை, அதாவது முடிவுச் சத்தியம் ஒன்றே, இரண்டாவது அற்றது என்றால் அது ஒன்றை ஒன்று முரண் கொள்ளும் ஜோடிகளுக்குள் ஒன்றாக எப்படி இருக்க முடியும்? அதன் இயற்கையே அதற்கு மாறாயிற்றே. அதர்மம் என்றால் தர்மம் என்ற கருத்தை ஒட்டித்தானே அதன் வாழ்வு இருக்கமுடியும்? இருளின் துணையின்றி ஒளியைப் பற்றி அறிவது எப்படி? சாவு இல்லை என்றால் வாழ்வுக்குக் கருத்து ஏது? ஆகவே அந்தப் பேருண்மையைத் தர்மம் என்று ஒப்புக்கொண்டால் உண்மை எவ்விதம் தனிப்பெரும் பொருளாக இருக்க முடியும்? அதர்மம் கூடவே இருக்கும் ஒரு பொருளாக அல்லவோ மாறிவிடும். ஒன்றுக்கொன்று மாறுபாடு கொண்டு இரண்ட பொருள்கள் ஒட்டி இருந்தால் ஒன்று மற்றொன்றைக் கட்டுப்படுத்தவே செய்யும். உதாரணமாக ஒரு டம்ளரில் பாதி பால் இருந்து, நீர் கொண்டு அந்த டம்ளரை நிரப்பினால் அந்த டம்ளரி லுள்ளதைப் பால் என்று நாம் கூசாமல் சொல்ல முடியாது அல்லவா? நீர் பாலைக் கட்டுப்படுத்தி விட்டது.

மீண்டும்: அந்தத் தனிப்பெரும் உண்மை, அழியாத சுத்தத் தன்மையில் தர்மமயமாக இருக்கும் என்று கொண்டாலும் அந்த உண்மை அழியக் கூடியதாகவும் எல்லை முடிவுக்குட்பட்டதாகவுமான ஒரு பொருளாக அல்லவா கொள்ளவேண்டியதாக ஆகிவிடும். இதிலிருந்தெல்லாம் ஒரு விஷயம் தெளிவாகிறது.

அறிய முடிந்த அந்தப் பரம்பொருள் என்றும் இருந்து அழியாமல், தர்மம் அதர்மம் என்ற இரண்டு கருத்துக்களுக்குமே அப்பாற்பட்டு இருப்பது. ஆனால் தர்மம் அதர்மம் இரண்டுமே அது இல்லாமல் இருக்கவே முடியாது. அப்படிப்பட்ட குணகம் (Factor) என்ன, எத்தகைய குணத்தைக் கொண்டது, அதை நன்றாய் விளக்கிக் கூறவேண்டும் என்று அந்த அந்தணச் சிறுவன் யமதர்மராஜனைக் கேட்கிறான். அவன் தன் கேள்வியின் மூலம் அந்தப் பரம்பொருளைப் பற்றிய தெளிவான அறிவைத் தான் வேண்டிக் கேட்டான். கேள்வியின் தெளிவான பொருள் ஆத்மாவைப் பற்றிய சர்ச்சைதான்; அதுவே சுத்த மனச்

சாட்சி, நம்முன் இருக்கும் உயிர் உணர்வாம்' அதுதான் தர்மம் அதர்மம் இரண்டையும் ஒரே மாதிரி ஒளிபெறச் செய்யும் வெளிச்ச உத்தரம்! அமரச் சாட்சி.

தெரு விளக்கு தன் இயற்கையாகத் தெருவில் ஓர் ஒளி வட்டம் ஏற்படுத்தி வைக்கிறது. அந்தப் பகுதியில் எந்தப் பொருள் ஊர்வலம் வந்தாலும் அவை எல்லாம் ஒளிபெறுகின்றன. அவை எவ்வளவு நேரம்வரை அந்த ஒளி வட்டத்தில் தங்குகின்றனவோ அதுவரை அவை ஒளிபெற்று நிற்கின்றன. அந்த ஒளி வெறும் சாட்சிதான். அந்த ஒளி மேகத்துக்குள் புதிதாக மணம் ஆன ஒரு தம்பதிகள் புகுந்து புறப்பட்டார்கள் என்பதற்காக அது ஆனந்தக் கூத்து ஆடுகிறதில்லை - போதையிலுள்ள ஒருவன் அந்த வழி போனால் அதற்காக அது வெறியில் தலைசுற்றி ஆடப்போவதில்லை. கண்ணீர் சிந்திச் செல்லும் ஒரு பிண ஊர்வலம் செல்லும் பொழுது அது அழவும் போவதில்லை. காட்சியின் பெருமையையோ நொய்மையையோ லட்சியம் செய்யாமல் அந்த ஒளி தன் குடைக்குள் வரும் எதையும் விளக்கம் பெறச் செய்கிறது.

அதே போல நம் முன்னேயும் நித்தியமான, எல்லாவற்றிற்கும் சாட்சி பூதமான ஒரு ஞான ஒளி இருக்கிறது. அதுவேதான் எல்லா உயிர்க்கும் மூல ஆதாரம். அந்த ஒளியின் உதவியால் தான் நம் மனத்திலும் புத்தியிலும் தர்மம் அதர்மம் என்கிற கருத்துக்கள் ஒளி பெறுகின்றன. ஆகவே திண்ணமாக இந்த உத்தம சாட்சி, அதாவது ஆத்மா, தர்மம் அதர்மத்தையும் மீறியது. அது சாட்சி பூதமான ஒன்றேதான்.

இனி கேள்வியின் இரண்டாவது பகுதியை எடுத்துக் கொள்ளலாம். காரணமும் இல்லாமல் காரியமுமில்லாமல் இருப்பது எது என்று விசாரிக்கலாம். ஒவ்வொரு காரியமும் ஒரு காரணத்தின் பூர்த்தியேதான். ஆகவே காரியம் என்பது காலப் போக்கையும் தக்கவாறு மாறும் சூழ்நிலையையும் பற்றி நிற்கும் காரணம்தான். விதைக்கப்பட்ட விதை காரணம். தக்க பருவம், உதவியாக இருக்கக்கூடிய சூழ்நிலைப் பொருள்கள் பெற்றால் காரியமாக மாறுகிறது. அது நாற்று அல்லது பயிராகும். அம்மாதிரியே எல்லாப் பயனுருவான காரியங்களையும்

அவற்றின் காரணங்களாக இறக்கி நோக்க முடியும். எனினும் ஒவ்வொரு தடவையும் இந்தக் காரணத்துக்கும் காரணம் எது என்று கேட்கமுடியும். இந்தக் கேள்வியை மீண்டும் மீண்டும் எழுப்பவதன் மூலம் முடிவேயில்லாத ஒரு சங்கிலித் தொடர் ஏற்படும். இந்த முடிவற்றுத் தொடரும் தொல்லையைத்தான் சம்ஸ்கிருதத் தர்க்க சாஸ்திரத்தில் அனவஸ்த தோஷம் (முடிவடையாத பின்னேக்குப் போக்கு) என்னலாம். இந்தத் தோஷத்தை நிவர்த்திக்கத்தான் எல்லாவகை வேதாந்தங்களும் கடவுள் தத்துவம் என்கிற தோற்றம் தரும் உலகத்தின் முதல் காரணத்தை ஸ்வயம்பூ அதாவது காரண மற்ற காரணம், அல்லது தானே தோன்றிய காரண மூலம் அல்லது தானே பிறந்தது என்று கருதுகின்றன,

நசிகேதன் கேட்ட கேள்வி கடவுள் தத்துவம் அல்லது காரணம் அற்ற காரணத்தையும் தாண்டித் தைக்கிறது. ஏன் என்றுல் காரணம் ஏற்படுத்தாத காரணம் என்று அதைப் பேசினுலே ஒரு தகராறு ஏற்படுகிறது. காரணம் என்றுலே அதற்கு விளைவாக ஒரு காரியம் இருக்கவேண்டுமே. காரியம் என்ற விளைவின் ஆதாரத்தின் மேல்தான் காரணம் இருக்கையையும் இருக்கத் தகுதியையும் உடையதாக ஆக முடியும். ஆனல் இங்கே விசாரிக்க முற்படுவது அப்படிப்பட்ட ஒன்றையல்ல என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். காரணமும் காரியமும் அல்லாத ஒரு சித்தாந்தத்தைப் பற்றியே இங்கே விசாரணை நடக்கிறது.

ஆகவே அந்தணச் சிறுவன் இந்தச் சொற்களின் மூலமும் யமதர்மராஜனை அந்த சாட்சி பூதமான அறிவு ஒளியின் தன்மையைப் பற்றித் தான் விசாரிக்கிறுன். அது தான் காரணங்கள் காரியங்கள் இரண்டையும் அறிகின்றது. ஆனுல் அது காரணம் காரியம் இரண்டும் அல்ல.

கடைசியாக அந்தச் சிறுவன், ''இறந்த காலமும், வருங் காலமுமல்லாத அதைப் பற்றித் தெளிவு படுத்துங்கள்!'' என்று கேட்கிறுன்' அவனுக்கு அதை அறிவதிலுள்ள பசி நன்கு தெளிவாகிறது.

நாமேதான் நம்முள் இருக்கும் அந்த அமர உணர்வு நிலை. பழமை அல்லது சென்று போனவைகளின் சங்கிலிப்

பிணைப்பினின்று நாம் நம்மைக் கத்தரித்துக் கொள்ளவேண்டும். அதே போல ஆசைகள் அபிலாஷைகள் வீண் நம்பிக்கைகளாச சிற பட்டு வலைகளில் அமர்ந்து கொண்டு பிறவாத வருங்காலத் துடன் காதல் சரஸமாடுவதையும் நிறுத்தவேண்டும். அப் பொழுதுதான் அந்த உண்மையை உணர முடியும்' சுருங்கக் கூறின் உடனே ஏற்பட இருக்கும் கணத்தின் உள் பொருளே சாசுவத நிலை அல்லது அமர நிலை. சென்ற காலம் அல்லது வர இருக்கும் காலம் இரண்டின் விலங்குப் பிடியி லிருந்து நீங்கிய ஒரு கணத்தை நாம் கைப்பற்றி அந்தக் கணத்தை அப்படியே தனியாக அதேவாக நன்கு பூராவாக உணர முடியு மானல் அதுதான் சாதகனின் அறிவு யாத்திரையின் எல்லை யாம். இதைத்தான் சமாதி என்கிறோம். அதில் நாம் பெறுகிற அனுபவமே உண்மையின் அனுபவமாம்.

இதைத் தெரிந்து கொண்ட பிறகு நசிகேதனைப் பற்றிய ஒரு செய்தி தெளிவாகிறது. அவன் பல பகல்கள் பல இரவுகள் தனக்குள்ளும் தனக்கு வெளியேயும் நடந்துகொண்டிருந்த நிகழ்ச்சிகளைப் பற்றி சிந்தித்தே கழித்திருக்கவேண்டும். அவனது கேள்விப் பொருளாக விளங்குவது நம்முள் இருக்கும் ஆத்மன் தான். அதுவே எல்லாவற்றிற்கும் சாட்சி பூதமாய் நிற்கும் தெய் வப் பொருள்; நம் ஞாபகங்கள், ஆசைகளைத் தூண்டும் சக்தி. அவற்றை அடக்கிச் செலுத்தும் ஆற்றல். அதாவது சென்ற காலத்தையும் வருங்காலத்தையும் அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய உணர்வு தன் சாஸ்திர ஞானத்தில் மாறாத நம்பிக்கை கொண்டுள்ள நசிகேதன் சாஸ்திரங்களில் சொல்லி யவற்றைத் திருப்பிச் சொல்ல வேண்டாம் என்று யமதர்மனை எச்சரிக்கிறான். தன் குருவிடம் தான் கேட்டதையும் மீண்டும் கேட்டுக்கொள்ளவும் அவன் தயாராயில்லை. ஆனல் யமதர்மன் எதைப் பார்த்தாரோ அதை விளக்கவேண்டும் என்று கேட் கிறான். அதற்குக் கருத்து யமதர்மன் தான் சுய அனுபவமாக உணர்ந்த சத்தியத்தைப் பற்றி முழுவதும் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும் என்பதே அவன் விருப்பம்,

சர்வே வேதா யத்பதமா மனந்தி
தபாம்ஸி சர்வாணி ச யத்வதந்தி |
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி
தத்தே பதம் சம்க்ர ஹேண ப்ரவீம் யோமி த்யேதத் ||

15. யமன் சொன்னான்: எந்த லட்சியத்தை, பதத்தை, (வார்த்தையை) வேதங்கள் எல்லாம் பேசுகின்றனவோ (புகழ்கின்றனவோ), தவங்கள் எல்லாம் எடுத்துச் சொல்கின்றனவோ எதை அடைய விரும்பி அவர்கள் எல்லாம் பிரம்மச்சரிய வாழ்வை நடத்துகின்றனரோ அந்தப் பதத்தை நான் உனக்குச் சுருக்கமாகச் சொல்கிறேன்—அது 'ஓம்'!

இந்த மந்திரத்திலிருந்து ஆசாரியன் இந்த உபநிஷதத்தின் முக்கிய அம்சமான தன் பிரசித்திபெற்ற பிரவசனத்தை ஆரம்பிக்கிறார்.

தர்மம், அதர்மம் இரண்டுக்கும் அப்பாற்பட்டதும், காரண காரியம் இரண்டுக்கும் வேறுபட்டதும் பூதம், பவிஷ்யம் இரண்டுக்கும் மாறுபட்டதுமான அந்தத் தத்துவத்தைப்பற்றித் தான் சொல்ல இருக்கும் எல்லாவற்றையும் சேர்த்துச் சுருக்கம் தந்து யம தர்மராஜன் தன் பேச்சைத் தொடங்குகிறார்.

உபநிஷதம் ஏற்றுக் கொண்டிருக்கும் மொழிநடைக்கே ஒரு தனிச் சிறப்பு உண்டு. ஓர் எழுத்துக்கூடத் தேவைக்கு அதிகமாக உபயோகித்தால் அது பாவம் என்று எண்ணும் அது. அது புனித ஆற்றலுக்கும் அப்பாற்பட்டுச் சுருங்கக் கூறும் முறையைக் கொண்ட இலக்கியம்.

பதம் என்ற சொல் பார்ப்பதற்குச் சிறியதாகவும் எளிதாகவும் தான் தோன்றுகிறது. ஆனாலும் அதற்குப் பரம்பரையாக அறிந்துவரும் பொருளை ஒரு புத்தகமாகவே எழுதிவிடலாம். எளிதாகத் தோற்றம் தரும் இந்தச் சொல்லுக்கு இடம், குடியிடம், நிலை...போன்ற இருபத்திரண்டு அர்த்தங்களுக்கு மேலும் உண்டு.

எல்லா வேதங்களும் என்றால் எல்லா உபநிஷதங்களும் என்று பொருள்படும். அவை எல்லாம் வெவ்வேறு வழியை மேற்கொண்டாலும் அவை எல்லாம் குறிப்பிடுவது ஒன்றைத் தான், தத்துவத்தின் ஒரே லட்சியத்தைத்தான். நூற்றெட்டு உபநிஷதங்களும் ஒரே வட்டத்தின் வெளிக் கோட்டில் ஒரே

மையப் புள்ளியைச் சுட்டி நிற்கும் அவ்வளவு அம்புகளின் நுனிகளாகக் கொள்ளலாம். யம தர்மராஜன் அதனால்தான் சொல்கிறான்: ஆகவே எல்லா உபநிஷத்துக்களும் தம் போக்கில் குறிப்பது நீ எந்தத் தத்துவத்தைப்பற்று என்னைக் கேட்கிறாயோ அந்தத் தத்துவம்தான். அந்தத் தத்துவத்தையும் பொருள் பொதிந்த அந்த 'ஓம்' என்ற சூத்திரம் சுருவில் காட்டிக் கொடுக்கிறது.'

ஸ்ரீமத் பகவத் கீதையின் அத்தியாயம் எட்டில் ஒன்பதாம் சுலோகத்தில் இந்த அமர மந்திரத்தின் அழகான எதிரொலியைக் கேட்கலாம். கீதையில் இந்த மந்திரத்தின் இரண்டாம் பாதி சாரமாகத் திருப்பிச் சொல்லப்பட்டிருக்கிறது என்கிற விஷயம் கவனத்துக்குரியது.

ஓம் என்கிற அடையாளத்தின் குறிப்பால் அந்த நித்தியப் பொருள் சுட்டப்படுகிறது. ஆனால், அதனால் 'ஓம்' உண்மைக்கு இலக்கணம் கூறுகிறது என்று சொல்லிவிட முடியாது. அதற்கு இலக்கணம் கூற முயல்வது அதை அவலட்சணப்படுத்துவதாக முடியும். சுயபூர்ணத்வம் அடைய உபநிஷத ரிஷிகள் கண்டு தந்த வித்தை முறையில் 'ஓம்' என்கிற அடையாளம் ஒரு சூத்திரம். அது ஒரு லட்சியத்தைச் சுட்டுகிறது; பிர்மத்தின் ஒரு மூர்த்தி. வழிபாட்டுக் காரியங்களுக்காக ஏற்பட்டது. ஒரு சகுணம்—தியானத்திற்காக ஏற்பட்டது.

ஏத தத்யேவாக்ஷரம் ப்ரம்ஹ
ஏத தத்யேவாக்ஷரம் பரம் |
ஏத தத்யேவாக்ஷரம் ஞாத்வா,
யோ யதிச்சதி தஸ்ய தத் ||

16. இந்தச் சொல் (அக்ஷரம்) பிரும்மமே. இது உண்மையில் மிகவும் உயர்ந்தது. இந்த அக்ஷரத்தை எவன் அறிகிறானோ உண்மையில் அவன் விரும்பினதை எல்லாம் அடைகிறான்.

சென்று போன மந்திரத்தில் பதம் என்ற சொல்லுக்கு இருபது பொருள்கள் உண்டென்று பார்த்தோம். அதைப் போலவே இங்கே அக்ஷரம் என்ற சொல் வந்திருக்கிறது. அதற்குக் கிட்டத்தட்ட பதினான்கு பொருள்கள் இருக்கின்றன! அதனால் தான் இப்படிச் சொற்கள் உள்ள இந்த மொழியை சம்ஸ்கிருதம்

அல்லது ஸம்ஸ்காரிதம் (பண்பட்டது) என்று சொல்கிறோம். அதன் மூலம் ஒவ்வொரு சொல்லும் பல கருத்துக்களுக்கு இடம் தருவதில் தடையிராது; ஆழ்ந்த குறிப்புக்களை உள்ளடக்கி இருக்கும் என்று பெறப்படுகிறது.

இந்த மந்திரத்தில் யமதர்மராஜன் 'ஓம்' என்ற அடையாளத்தை வழி படுவதை விளக்குகிறார். நாம் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். 'ஓம்' அதன் அர்த்தத்தின் மூலம் அந்தப் பெருலட்சியத்தைச் சுட்டுகிறது அதே சமயத்தில் தியானம் செய்வதற்கும், அந்தப் பரம உண்மைப் பொருளின் பிரதிநிதியாகத் தரிப்பதற்கு ஓர் அடையாளம் அல்லது உருவமாக நிற்கிறது. முன்னமே நாம் மற்றொரு விஷயத்தையும் கவனித்திருக்கிறோம். அதாவது சுயநலமற்ற தியாகங்களும் வழிபாடுகளும் உள் தூய்மையை அதிகரிக்கச் செய்வதற்கும் அதன் பயனாக சாதகனின் புத்தி சக்தியை அதிகரிக்கச் செய்வதற்கும் மிகவும் பயன் தரக் கூடிய வழிகளாக அமைந்துள்ளன என்பதாம். இந்த மந்திரத்தில் ஐயந்திரிபற ஓம் தான் உண்மைப் பொருள் என்று விளம்பப்படுகிறது. சிவலிங்கமே சிவபக்தனுக்குச் சிவதத்துவமாம். உதாரணமாக, அரசன் இல்லாவிட்டாலும் அவன் கிரீடம் அதிகாரத்துக்கும் அரசுக்கும் அடையாளம்.

வேதாந்தியைச் சாதாரண நாகரிக மக்கள் கூட்டம் மதத்தை நிந்திப்பவன் கடவுள் திருவுருவத்தை உடைப்பவன் என்று எண்ணுகிறது. உண்மை அப்படியல்ல. மூர்த்தி பூஜைக்கு அவன் விரோதி இல்லை என்பது அவன் வழிபட்டு அதன்படி நடக்கும் உபநிஷதங்களிலிருந்தே தெளிவாகிறது. எல்லாமறிந்த தெய்வத்தன்மை வாய்ந்த ரிஷிகளே ஓர் அடையாளத்தை வழிபடச் சொல்லி அறிவுறுத்துவதை நாம் இங்கே இதோ படித்துக்கொண்டிருக்கிறோம். இந்தியாவில் மூர்த்தி பூஜைக்கு எதிராக வெறி பிடித்துப் பேசி யாராவது அந்த வெறிப் பாட்டுக்குத் தாளம் போட்டு ஆடுகிறார்கள் என்றால் அவர்கள் தங்களுக்கும், சுய பூர்ணத்வம் அடைய என வகுத்த சாஸ்திரத்துக்கும் தீங்கு புரிகிறார்கள். பாவம், அறியாமையால் இப்படிச் செய்கிறார்கள் என்று பரிதாபப்பட்டு, நினைவிலிருந்தே ஒதுக்கிவிடலாம் அவர்களை.

ஓம் என்ற அடையாளம் அந்தத் தனிப் பெரும் உண்மைப் பொருளின் "மூர்த்தி" (உருவம்) என்று சொன்னோம். அது மட்டுமின்றி அது உண்மைப் பொருளுடன் உறவையும் கொண்டிருக்கிறது. வழிபடுபவன் அல்லது தியானம் செய்பவன் அந்த நித்தியப் பொருளாகவும் வழிபட்டுத் தியானம் செய்யலாம். நன்ருக ஆழ்ந்து நெடுங்காலம் தியானம் செய்தால் தியானம் செய்கிறவன் ஒரு நிலையில் அந்த அடையாளம் சுட்டி நிற்கும் அந்தப் பொருளுடன் தான் ஒட்டிவிட்டதை உணர்வான். அல்லது அந்த அடையாளத்துடன் தான் இணைவதை உணர்வான். அந்த நிலையில் அவன் தன் ஆன்ம சாட்சாத்காரத்தின் பிரதேசத்தை அடைகிருன்.

தியானம் செய்பவன் தியானப் பொருளுடன் ஒன்றியவனுக ஆகிவிடுங் காலத்தில், அவனுக்கு இந்த அடையாளம் அபரப்பிரும்மனின் (இரணிய கர்ப்பனின்) பிரதிநிதியாக இருக்குமேயாஞல் அவன் பிரம்மலோக வாசத்தை அடைகிருன். இந்த 'ஓம்' தனிப்பெரும் உண்மைப் பொருளைத்தான் குறிக்கிறது என்ற நிச்சயத்துடன் தியானம் செய்கிறவனுக்குப் படிப்படியாக ஆத்மசுத்தம் ஏற்படுகிறது. ஏகாக்ரசித்தத்துடன் இருக்க அதிக ஆற்றல் ஏற்படுகிறது. மேலும் ஆத்மனின் தனிமையைச் சிந்தித்துச் சிந்தித்து அவன் கடைசியில் 'அயம் அஹம் அஸ்மி' (இது நான்) என்ற நிலையில் ஒன்றிவிடுகிருன்.

"உண்மையில் விரும்பிய எல்லாவற்றையும் பெறுகிருன்," என்று கூறும்பொழுது யமதர்மராஜன் ஓர் உண்மையை வெளியிடுகிருர். அந்த உண்மை இன்று நிரூபிக்கப்பட்டதாக ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது. நவீன மனோ விஞ்ஞான உலகத்திலும் கூட வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளைக் கவனித்தாலும் உண்மை சரிதான் என்று சொல்ல ஆதாரங்கள் கிடைக்கின்றன. 'நீ எப்படி எண்ணுகிருயோ அப்படியே ஆகிருய்!-எண்ணத்துக்கு வேண்டிய ஆற்றல் கிடைத்துவிட்டால்.' ஆம். உண்மையான சிரத்தையுடன் நாம் விரும்பவேண்டும். அவ்வளவுதான். அந்த விருப்பம் அல்லது வேண்டுதல் உண்மையாகிவிடுகிறது;

ஆகா! நீங்கள் எண்ணுகிறீர்கள், 'சுவாமிக்கு என்னவோ கோளாருகி விட்டது மண்டையில். என்னென்னவோ

சொல்கிறார்," என்று. காரணம். நீங்கள் எண்ணுகிற எண்ணங்களுள் ஒன்றுகூடப் பலிப்பதில்லை! அதுதான் உங்கள் அனுபவம். அன்பர்களே, சின்மயாவுக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை. சுருதியும் பல பரம்பரைப் பைத்தியங்களின் பேச்சுக் குவியல் அல்ல. சுருதி தப்பிதம் பேசாது என்றால் சுருதியின் மந்திரங்களின் கருத்துக்களை வெளிக்காட்ட முயலும் இந்தச் சாதுவும் தப்புவழி செல்ல முடியாது:

அது சரி. ஏன் நாம் விரும்பும் ஒன்றும் பலிப்பதில்லை? நாம் நம்மையே அலசி ஆய்ந்து பார்ப்போம்.

நாம் ஒரு பிரமை கொண்டிருக்கிறோம். எண்ணம் என்பது ஏதோ சோம்பேறித்தனமான நேரத்தில் அர்த்தமும் ஆற்றலும் அற்ற ஒரு செய்கையாக நம் முன் நிகழ்கிறது என்று நாம் எண்ணியிருக்கிறோம். இந்தவிதமாக எண்ணுவதில்தான் குடும்பத் தொல்லை, தொந்தரவு இவைகளின் விதையே இருக்கிறது. எண்ணத்துக்குத் தெய்வ சக்தி உண்டு. ஒவ்வொரு எண்ணமும் நம் மனத்தின் குறுக்கே செல்லும்போது அதன் ரகசிய வீரியம் நமக்கெதிரே அந்த எண்ணத்தை நம்மைச் சுற்றி நடமாடும் ஓர் உண்மைப் பொருள் போல் காட்டத் தயாராய் இருக்கும் ஓர் ஏஜெண்டாக எழுகிறது. அலாவுதீனும் அதிசய விளக்கும் என்ற கதையில் வரும் பூதம்போல் நம் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க அது தயாராய் இருப்பதுமட்டும் அல்ல, ஆற்றலும் பெற்றிருக்கிறது. அலாவுதீன் தன் விளக்கைத் தேய்த்தான்- உடனே வெளிவந்தது பூதம். தனது உரிமையாளனை வணங்கியது. எதை விரும்பினாலும் நிறைவேற்றத் தயாராய் நின்றது. உண்மையில் அந்தப் பூதத்துக்குச் செய்ய முடியாதது என்று ஒரு வேலையும் கிடையாது. அதைப் போல ஆயிரம் மடங்கு ஆற்றல் கொண்டது நம் மனதில் எழும் இந்தப் பூதம்.

அன்பர்களே, நாம் யோசிக்க வேண்டும். உண்மையில் நம் ஆசைகள் நிறைவேறவில்லை, உண்மையில் நமக்குத் தோல்விதான் கிட்டுகிறது என்றிருந்தால் நாம் முயன்று காரணங்களைக் கண்டுவிடமுடியலாம். ஏற்கனவே நான் சொன்னபடி மனத்தின் அடிமைப் பூதமாகிற எண்ணத்தின் தெய்வம் நம்மனத்திலிருந்து அடித்துவரும் ஒவ்வொரு விருப்பத்துடனும் எழுந்து வருகிறது.

எண்ணம் முடித்தவுடன் அந்தப் பூதம் மனிதனுடைய திரும்பி விழித்த மனத்தின் உத்தரவை நிறைவேற்றச் செல்கிறது. ஆனால் அந்தோ, அத் தேவதை தன் வேலையைச் செய்ய முதல் அடி எடுத்து வைத்தவுடனேயே நாம் மற்றொரு ஆசையின் மூலம் மீண்டும் எண்ண அலைகளை எழுப்பிவிடுகிறோம். நம் உள் ளுலகத்தில் எழும் அந்த எண்ண அலைகள் அந்தத் தேவதை யைத் திருப்பி அழைத்துவிடுகின்றன. 'இந்தா இந்த உத்தரவு களையும் எடுத்துச் செல்!' என்று அந்த அழைப்பு- உத்தரவு கிடைத்தவுடன் தேவதைக்கு வேறு வழியில்லை. திரும்பித் தன் முதலாளிக்குப் பணியத் திரும்பி வந்துவிடுகிறது, பாவம். இந்தத் தேவதையின் பரிதாப நிலையைப் பாருங்கள். தெய் வத்தின் பிரதிநிதியான அந்தச் சக்தி நாம் கொண்ட வழவழக் குணத்தின் காரணமாக முன் பின் முரணாக எழும் குழப்ப உத் தரவு களுக்குக் கீழ்ப்படிய நேரிடுகிறது. அதனால் அது அங்கேயே நின்று பம்பரம்போல் சுழன்றுவிடுகிறது. முதல் உத்தரவுக்கு ஒரு பாகம் சுற்றினால் மறு உத்தரவைக் கேட்கத் திரும்பும் போது மறுபாகம் திரும்பிச் சுற்றுகிறது. நம் விருப்பத்தின் வேகம் அதை எந்த ஒரு வேலையையும் முழுசாகச் செய்ய விடுவ தில்லை.

இப்படி ஒன்றை யொன்று தாக்கும் எண்ணங்களால் அலை யும் மனது — அம்மை முத்துகள்போல் எழும் ஆசைகளால் பொங்கும் மனதுதான் தன் ஆற்றலின்மைக்கு அழும் மனதா கும். ஒரே முனையை நோக்கிச் செல்லும் மனது ஒன்றை யொன்று தாக்கும் எண்ணங்களை எல்லாம் ஒதுக்கி ஒரே ஒரு பொருளை மட்டும் விரும்புமானால் அந்த விருப்பம் கண்டிப்பாய் உடனே நிறைவேறிவிடும்.

இந்தக் கருத்தில் யோகம் என்பது மனத்தின் இயக்க ஆற் றலை அடக்கிச் சேர்த்துக் காப்பாற்றும் முறைதான். இந்த முறை நன்கு தெரிந்தவன், தன் மனத்தை நன்கு கட்டுப் படுத்தியவன் இந்த உலகத்தில் நடமாடும் தெய்வமாவான். அவ னுடைய எண்ணங்கள் அல்லது விருப்பங்கள் மனத்தில் எழ வேண்டியதுதான் தாமதம், உடனே நடந்துவிட்ட செயல்களா கப் பரிணமித்து விடுகின்றன.

அதேபோலத் தியானம் செய்பவன் 'ஓம்' என்ற மந்தி ரத்தை, பிரம்மலோகத்தின் சூட்சும ஆனந்தத்தை அனுபவிக்க

வேண்டும் என்ற விருப்பத்துடன் தியானம் செய்தானுனுல் அவன் உணர்வின் அந்தத் தளத்தை அடைகிருன். அதுவன்றி அவன் நசிகேதனைப்போல என்றும் அழியாத அந்தப் பரம் பொருளை அடையவேண்டும் என்று தியானம் செய்தானுனுல் அவன் கண்டிப்பாக அந்தப் பரம்பொருளாகவே மாறுகிருன்.

ஏதத் ஆலம்பனம் ச்ரேஷ்டம்
ஏதத் ஆலம்பனம் பரம் |
ஏதத் ஆலம்பனம் ஞாத்வா.
ப்ரம்ஹ லோகே மஹீயதே ||

17. இந்த ஆலம்பனம் (ஆதாரம்) மிகவும் பெருமை பொருந்தியது. இது மிகவும் சிறந்ததிலும் சிறந்த மூலா தாரம். இந்த ஆதாரத்தை அறிந்தவன் பிரும்மலோகத்தில் இன்பமடைகிருன்.

'ஞானேனவது கைவல்யம்'—அதாவது ஞானத்தின் மூலம் தான் முக்தி என்பதுதான் எல்லா வேதாந்திகளுடைய அடிப் படைச் சித்தாந்தம். பழுதையைப் பாம்பு என்றேம். உண் மைதான் என்ருலும் நாம் எவ்வளவுதான் இரவு முழுவதும் அந்தப் பாம்பை அடி அடி என்று அடித்தாலும் அது சாகப் போகிறதில்லை. ஆனுல் வெளிச்சம் அந்தப் பழுதைமேல் பட்டு நமக்கும் அது பழுதையே என்ற அறிவும் (ஞானமும்) ஏற்பட்டு விடுமேயானுல் உடனே பாம்பு தொலைந்துவிடுகிறது. அதே போல நாம் நாமே அந்தப் பரம ஞானத்தை உணர்ந்தபொழுது தான் நாம். அந்த நித்யப் பொருளாக மாறமுடியும். வெற்றி யின் முடிவு பூர்ணத்துவத்தின் முடியைச் சேரமுடியும். இங்கே உபநிஷதம் அவ்வளவு வளர்ச்சியடையாத ஜீவர்களுக்குப் பேசு கிறது. உபாசனை அல்லது வழிபடுதல் என்ற கட்டுப்பாட்டைப் போதிக்கிறது. சுருதி திட்டவட்டமாய் வழிபாட்டைத் திறம் பட நடத்தி வெற்றிபெறுகிறவன் பிரும்மலோகத்தை அடை வான் என்றே கூறுகிறது. பிரும்மலோகம் அல்லது இரணிய கர்ப்ப நிலை உண்மையில் உயர்வற உயர்ந்த நிலையில்லை.

சம்ஸ்கிருதத்தில் பிரும்மலோகம் என்ற சொல்லிலிருந்து இரண்டு அர்த்தங்கள் கொள்ளப்படும். ஒன்று, பிரும்ம ரூபீ லோகம்-ஆன்மாவின் இயற்கையின் ஒரு தளம். மற்றென்று

பிரும்மணி லோகா. அதாவது படைப்புக் கடவுளான பிரும்ம தேவனிருப்பிடம். உபாஸகன் தன் கர்மங்கள் மூலம் படைப்புக் கடவுளின் இருப்பிடத்துக்குச் செல்லத்தான் வழி செய்து கொள்கிறான். ஆனால் 'ஓம்' என்ற மந்திரம் சுட்டும் உண்மைகளை எல்லாம் தெரிந்து 'நாம் அந்த நித்ய உண்மையே' என்ற இணைவு எண்ணத்துடன் தியானம் செய்பவன் இந்த ஞானத்தின் மூலம் அந்தப் பரம்பொருளாகவே ஆகிறான். எனவே இந்த உபநிஷத மந்திரத்தில் யமதர்மன் வழிபாட்டுச் செயலின் எல்லை, ஞானத்தின் எல்லை இரண்டையும் சுட்டுகிறார் என்று கண்டுகொள்ளலாம்.

நஜாயதே ம்ரியதே வா விபச்சித்
நாயம் குதச்சின்ன பபூவ கஸ்சித் |
அஜோ நித்ய: சாஸ்வதோ-யம் புராணோ
ந ஹன்யதே ஹன்யமானே சரீரே ||

*18.* ஞானமயமான ஆத்மன் பிறப்பதில்லை. இறப்பதுமில்லை. அவன் எதிலிருந்தும் பிறக்கவில்லை. அவனிலிருந்தும் ஒன்றும் எழுவதில்லை. பிறப்பில்லாமல், நித்யமாய், சாசுவதமாய் (என்றும் இருப்பவனாய்) புராணமானவனான இவன், சரீரம் அழிந்தாலும் தான் அழிவதில்லை.

இந்த மந்திரத்தில் ஆசிரியர் நேரடியாக நம் உடல், மனம், புத்தி என்கிற பொருள்களின் போர்வைக்குள் ஆட்சி செலுத்தும் தெய்வ ஒளிப் பொறியையே குறித்துப் பேசுகிறார்.

ஆத்மன் பிறப்பதில்லை; அது இறப்பதுமில்லை. அழியக் கூடியவையும், முடிவுள்ளவையுமான பொருள்கள் எல்லாம் விகாரங்களை அடைகின்றன. அம்மாறுபாடுகளை ஐந்து தலைப்புகளில் வகுக்கலாம். அவையாவன: பிறப்பு, வளர்ச்சி, வியாதி, தேய்வு, அழிவு. நம்முன்னே இருக்கும் உண்மைத் தத்துவம் இந்த மாறுபாடுகளில் முதல், இறுதி ஆகிய இரண்டு மாறுபாடுகளையும் அடைகிறதில்லை என்று இங்கே நமக்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. அதாவது அதற்குப் பிறப்பும் இல்லை, சாவும் கிடையாது. இந்த இரண்டையும் சொன்னாலே மற்ற மூன்று மாறுபாடுகளும் இல்லையென்றாகிவிட்டன. விகாரங்களை ஏற்பவை அளவு, எல்லை, முடிவு உள்ளவையாம். விகாரம் அற்றது

என்று சொல்லி யமதர்மராஜனுன அந்த ஆசிரியர் மனிதனின் ஆத்மாவினுடைய நித்யத் தன்மையைச் சுட்டுகிருர்.

ஆத்மா பிறந்ததில்லே. உடல்தான் பிறக்கிறது.

ஆகவே ஆத்மன் அல்லது அந்த உண்மை சாகிறதுமில்லே. பொய்யான அகங்காரமானது பண்படாத நியானங்கள். அசட்டு எண்ணங்கள் இவற்றின் மூலம் தனக்கென்று அழியக் கூடிய உடல், மனம், புத்தி என்கிற சாதனத்தை ஏற்படுத்திக் கொண்டது. அதற்குள் எங்கும் உறையும் அந்த நித்ய உண்மை கட்டுப்படுத்தப்பட்டதுபோல் தோன்றுகிறது. உடல் சாதனம் மறையலாம். உண்மைத் தத்துவம் மறையாது.

குயவன் பானே செய்கிருன். பானே தயாராகிவிட்டது. அதற்குள்ளிருக்கும் இடம்? அதை குயவன் தனியாகப் பானேக் கென்று ஏற்படுத்தியதா? அல்ல. வெளியே. பானே ஏற்படு முன்பே இருந்த இடம்தான், பானே ஏற்பட்ட பின்பு பானேக் குள் இருப்பது.

அதேபோல ஆத்மாவில்தான் உடல் பிறக்கிறது. ஆத்மா வுடன்தான் பிறக்கிறது. இந்த உண்மைத் தத்துவம் உடலின் உள்ளேயும் வெளியேயும், என்றும், அதன் பிறப்பு, வளர்ச்சி, வியாதி, தேய்வு அழிவு எல்லா நிலேகளிலும் அதன் மேல் ஆட்சி புரிகிறது.

இந்தக் கருத்துக்களே மனத்தில் வாங்கிக் கொண்டோ மாளுல் இந்த மந்திரத்தின் இரண்டாவது வரி தானே புரிந்து விடும்.

ஹன்தா சேன்மன்யதே ஹன்தும்
ஹதசேஷன்மன்யதே ஹதம் |
உபௌ தௌ ந விஜானீதோ
நாயம் ஹன்தி ந ஹன்யதே ||

19. கொல்லுகிறவன் 'நான் கொல்கிறேன்' என்று எண்ணிஞலும், கொல்லப்பட்டவன், 'நான்கொல்லப்பட்டேன்' என்று எண்ணிஞலும் அப்பொழுது இருவருமே நன்கு தெரிந்த வர்களல்ல. இது கொல்வதுமில்லே, கொல்லப்படுவதுமில்லே. இதற்கு இணேயாக ஒரு கருத்தை நாம் கீதை இரண்டாவது

அத்தியாயம் பத்தொன்பதாவது சுலோகத்தில் இருப்பதை எடுத்துக்காட்டினால் அது அனேகமாக இதன் நகலெனவே தோன்றும். இந்த மந்திரமே, அதுவும் இரண்டாவது வரி அப்படியே அதில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

ஒரு கொலைகாரன் உடலைச் சிதைத்துவிட்டு ஆத்மாவைக் கொன்றுவிட்டான் என எண்ணினாலும்; அல்லது அடிபட்டவன் சாகும் தறுவாயில்,' ஐயோ, ஆத்மா சாகிறதே' என்று அழுதாலும் இரண்டுபேரும் மயக்கம் கொண்டவர்களே. உடலையே ஆத்மா என்று எண்ணி அவர்கள் ஏமாறுகிறார்கள். அப்படி எண்ணுவதின் முட்டாள்தனத்தை உறுத்தும் வகையில் புரிந்து கொள்ள நாம் ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்ளலாம். ஒரு கிண்ணத்தைத் தரையில் எறிந்துவிட்டு அதனுள்ளிருக்கிற இடத்தை உடைத்துவிட்டேன் என்று சொல்வதைப் போலவே அது.

முன்னால் சொல்லப்பட்ட மந்திரங்களின் விளக்கப் பேச்சுக்களையெல்லாம் புரிந்துகொண்டு வந்திருக்கும் யாருக்கும் இந்த மந்திரத்தின் அர்த்தம் எளிதில் புரிந்துவிடும்.

அணோரணீயான் மஹதோ மஹீயான்
ஆத்மாஸ்ய ஜந்தோர் நிஹிதோ குஹாயாம் |
தமக்ரது: பச்யதி வீதசோகோ
தாது ப்ரஸாதான் மஹிமான மாத்மன: ||

20. ஆத்மா அணுவுக்கும் அணுவாய், மகத்துக்கும் மகத்தாய் இருக்கிற ஆத்மா உயிருள்ள ஒவ்வொரு ஜீவனுக்கும் இதயத்தில் அமர்ந்திருக்கிறது. ஆசைகளிலிருந்து விடுபட்டு மனமும் இந்திரியங்களும் அடங்கியவன் ஆத்மாவின் மகிமையை அறிந்து சோகத்திலிருந்து விடுபடுகிறான்.

இங்கே மஹத் அல்லது பெரியது என்றால் அது புலனாகக் கூடிய உலகம் முழுவதையும் உள்ளடக்கி நிற்கிறது. சுருதி சொல்லுகிறபடி அந்த நித்திய உண்மைப் பொருள் உலகம் பூராவும் பரந்திருப்பது, ஊடுருவுவது, சூழ்ந்திருப்பது மட்டுமல்ல. வெளியில் சுற்றும் கோடிக் கணக்கான உலகங்களையும் தாண்டி அப்பால் சென்றிருப்பது என்கிறது.

இவ்வாறு எல்லாம் கூறிய பிறகு எல்லா ஜீவன்களுடைய இதயங்களிலும் இந்த ஆத்மா இருக்கிறது என்று சொல்லுவதால் மேற்கத்திய மாணவர்கள் புதிர் எனத் திகைக்கிறார்கள்.

'இதயத்தில் அமர்ந்திருக்கிறது' என்று கூறுவது ஒருவன் எந்த இடத்தில் மனத்தை நிறுத்தித் தியானம் செய்தால் முடிவில் 'அந்தப் பொருளை' அடையலாமோ அந்த இடத்தைக் குறிப்பிடச் சொன்னதாகும்.

கேட்டு அதைப் பற்றிச் சிந்திக்கிறது என்கிற வேதாந்த சாதனையின் நல்ல முடிவு மனிதன் மட்டுமே செய்யக்கூடிய தெய்வத் தொழிலான தியானத்தில்தான் தன் பூர்ணத்துவத்தை அடைகிறது. தியானம் மனிதன் தன் பந்தங்களின் விலங்குகளிலிருந்தும், ஆசைப் பிணைப்புக்களிலிருந்தும் விடுபட்டு மேலேறித் தெய்வீக ஆனந்தத்தையும் சுதந்திரத்தையும் பெற உதவும் ஒரு முறையாம். ஆசைகளிலிருந்து விடுபட்டு ஒருவன் நீண்ட கஷ்டமான சாதனைகள் மூலம் தன் பொறிகளையும் மனத்தையும் அடக்கிவிட்டானானால் அவன் புண்ணிய புருஷனாகிறான். அவனே சுயம்பிரகாசமான அந்த நித்ய ஆத்மாவை அனுபவிக்கிறான். ஆகவே அவன் தான் ஆத்மாவே என்கின்ற உண்மையான ஒருணர்வை அடைந்த பிறகு அவன் சுகம் துக்கம் இரண்டையும் மீறுகிறான். ஏனெனில் 'அவை யெல்லாம் உடலையும் மனத்தையும் மட்டுமே பொறுத்தவையாகும். 'ஆத்மாவாகிய நான் உடல் அல்ல; மனம் புத்தி என்கின்ற கருவிகளல்ல. கார் களைத்தால் காரின் சொந்தக்காரன் களைக்க வேண்டியதில்லை. காரில் போகும் அதன் சொந்தக்காரனுக்குத் தான் மோட்டார் அல்ல என்பதும் தெரியும்.

ஆஸீநோ தூரம் வ்ரஜதி
சயாநோ யாதி ஸர்வத: |
கஸ்தம் மதாமதம் தேவம்
யதன்யோ ஞாதுமர்ஹதி ||

21. உட்கார்ந்தே அவன் தொலைவில் செல்கிறான். படுத்திருந்து எங்கும் அடைகிறான். ஆகவே, என்னைத் தவிர யார் தான் இன்பம் அடைந்து இன்பமும் அடையாமல் இருக்கும் அந்தக் கடவுளை உணரமுடியும்?

'உட்கார்ந்தே வெகுதூரம் செல்கிறான்': செயல்கள் புரியும் திறன்களை ஆட்சி செய்யும் 'அந்தப் பரிசுத்தப் பேருணர்வே 'உட்கார்ந்திருக்கும் ஆத்மா'வாகப்பாவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த உண்மையிலிருந்து, உறுதி பெற்ற ஓர் எண்ண அலை இங்கிருந்து ஐரோப்பாவுக்குப் பறந்துசென்று இத்தாலியின் சூரிய ஒளி வீசும் பிரதேசங்களைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது அங்கே ஏற்கனவே இருக்கும் ஓர் இருப்பை அல்லது உணர்வைச் சந்திப்பதுபோல் தோன்றுகிறது. இந்தக் கருத்தில் ஆத்மா தொலைவில் வெகுதூரம் செல்வதாகப் பேசப்படுகிறது. அதைவிட்டு உண்மையில் அந்தப் பரம்பொருள், அதாவது எங்கும் பரவி நிற்கும் அந்த உண்மை எங்கும் நகர்வதுமில்லை, நகர்வதும் முடியாது. நாம் அடுத்த அறைக்குச் செல்கிறோம் என்று சொன்னோமானால் நாம் இருந்த இடத்தைவிட்டு அப்பால் போய் விடுகிறோம் என்றுதான் குறிப்பு. நாம் இருக்கும் ஓர் இடத்தை விட்டு நாம் இல்லாத இடத்துக்குப் பிரயாணம் செய்கிறோம். உரியகாலம் கழிந்ததும் அந்த இடத்தில் இருக்கவும் செய்வோம் இந்த நகர்வு. நகரும் பொருள் அளவுக்குட்பட்ட பொருளாக இருந்தால் தான் முடியும். ஆனால் எங்கும் உள்ள «உண்மை» எங்குதான் செல்லமுடியும்? ஏற்கனவே அங்கே இல்லை, இங்கே இல்லை என்று ஏதாவது இடமிருந்தால் தானே! உதாரணமாக என் வலது கை என் வலது கைக்குள் எங்கும் நகரமுடியாது. ஏனென்றால் என் வலது கை என் வலது கையில் எங்கும் பரவி நிற்கிறது. ஒரே சமயத்தில் ஒரே இடத்தை இரண்டு பொருள்கள் ஆக்ரமிக்க முடியாது என்பது தற்கால உலகம் கண்டு சரி என்று கைத்தட்டிய உண்மையாம். இந்த விதமாக ஆத்மா அல்லது அந்த ''உயிர் மையம்'' நகர்வு இல்லாத தத்துவம். ஆனால் மனத்தினால் பாதிக்கப்பட்டதாக எண்ண அலைகள் உருவத்தில் மனத்தின் தோற்றங்களாக இயங்கும்போது மட்டுமே நகர்வதாகத் தோன்றுகிறது.

இந்த மந்திரத்தின் இரண்டாவது வரி, மிகுந்த தற்பெருமை நிறைந்ததாகப் படலாம்.

'என்னைத் தவிர யார்தான் அக் கடவுளை உணரமுடியும்?' ஆகா. என்ன தற்பெருமை!

நண்பர்களே, அது தான் இல்லை. தற்பெருமையோ அகங்காரமோ இங்கே காட்டப்படவில்லை.

ஆசாரியர் சொல்ல விரும்புவது இதுதான்.

முகம் பார்க்கும் கண்ணுடியைப் போல அந்த உண்மை தனக்கெதிரே உள்ள பொருளைப் பிரதிபிம்பத்தில் காட்டுகிறது. உதாரணமாக: கோவிந்தன் என்பவர் கண்ணுடிக்கு எதிரே தலை துவட்டும் துண்டுடன் நின்ருலும், ஆபீஸ் உடையுடன் நின்ருலும் அல்லது திருமணக் கோலத்துடன் நின்ருலும் அல்லது தான் விரும்பும் எந்த விநோத உடையுடன் இருந்தாலும் கண்ணுடி அதே கோவிந்தனைத்தான் அவர் உடுத்தியிருக்கும் உடையில்தான் பிரதிபலிக்கும். சுத்தமாகாத புத்தி மங்கிய உண்மையைத்தான் காட்டும்.

அசரீரம் சரீரேஷ்வன்
அவஸ்தே ஷ்வவஸ்தி தம் |
மஹாந்தம் விபூ மாத்மானம்
மத்வா தீரோ ந ஸோசதி ||

22. ஆத்மாவை அழியும் உடல்களில் உறுதியாய் அமர்ந்திருக்கும் உடலற்றது, மகத்தானது எங்கும் நிறைந்தது என்று அறியும் அறிவுத் திறம் கொண்டவன் என்றும் கலங்குவதில்லை.

'நாம் இந்த மனம் - புத்தி ஆகின்ற கருவிலே இவற்றிற்கப்பால் நம்முள் உள்ளது எதுமில்லை' என்கின்ற இந்தத் தப்பான அறிவே நாம் ஏற்றுக்கொண்டு அவதியுறும் துன்பம், சங்கடம், வியாதி, சாவு, நிராசை, அவநம்பிக்கை, ஆசைகள் அபிலாஷைகள் எல்லாவாறுக்கும் குமிழியிடும் காரணம்.

மனிதன் தெய்வமாக வேண்டும். அதற்குச் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவு தான். அகங்கார பாவனையை ஒழிக்க வேண்டியது. அழுக்கு நீங்காத தன் மனது அடங்காத பிசாசுத் தன்மை கொண்டு உளறும் உளறலைக் காதால் கேட்கக் கூடாது. பொய்யிலிருந்து ஒதுங்கி மெய்ப்பொருளுடன் இணைந்துகொள். அங்கே தான் உண்மையான முன்னேற்றம்.

நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ
ந மேதயா ந பஹுனா ஸ்ருதேன |
யமே வைஷ வ்ருணுதே தேன லப்ய:
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூம்ஸ்வாம் ||

23. இந்த ஆத்மா வேதப் படிப்பினுலோ, அறிவின் திறத்தினுலோ, அல்லது கேள்விகளாலோ அறியப்பட முடியாதது. யார் தன்னைத் தேடுகிருரே அவனுல் தான் அடையப்படுகிறது. அவனுக்கே ஆத்மா தன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

மந்திரத்தை உருப்போடுதலோ அல்லது அதைப்பற்றி வியாக்கியானம் செய்தாலும்கூட அதனுலெல்லாம் சுருதி காட்டும் லட்சியத்தை அடைய ஒருவிதப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

சரிதான். அந்தப் பேருண்மையைப் படிப்பும் காட்டித் தர முடியாது, அதைத் தானே உணர்ந்து அனுபவிக்க நெட்டுருப் போடுதலும் பயன்படாது. பின் அது சாத்தியமேயில்லாத ஒரு பொருளா? சுருதி மந்திரம் இரண்டாவது பாதியில் அழுத்தமாகச் சொல்கிறது, அதை அடைவது, உணர்ந்து அனுபவிப்பது சாத்தியம் சாத்தியம் என்று யோகிகள் காட்டிய வழியை உள்ளப் பற்றுடன் பின்பற்றவேண்டும். அதில் பக்தியும் விடாமல் செய்யும் குணமும் இருத்தல் வேண்டும்.

தேடுவது என்ருல் என்ன? நம் உள்ளும் புறமும் இருக்கும் அழுக்குகளை எல்லாம் மெதுவாக விலக்கவேண்டும். ஜாதி, வகுப்பு என்கிற எண்ணப் பிடிப்புகள், பணக்காரர் என்ற டம்பம், அல்லது ஏழ்மையைப் பற்றியே எண்ணி ஏங்கும் குணம், சுயநலம், அகங்காரம், வெறுப்புக்கள், பொருமைகள், பேராசைகள், வீணுசைகள் இவை எல்லாம் அந்த அழுக்கு வர்க்கத்தைச் சேர்ந்தவை. அந்தக் குற்றங்களைச் சுட்டுகிறது அடுத்த மந்திரம்.

நாவிரதோ துச்சரிதாத்
நாசான்தோ நாஸமாஹித; |
நாசான் தமானஸோ வாபி
ப்ரஞானேனைன மாப்னுயாத் ||

24. கெட்ட நடத்தையினின்று திரும்பாதவன், இந்திரியங்களை அடக்காதவன், மனம் ஒருமைப்படாதவன், மனம் அமைதி பெருதவன், இந்த ஆத்மாவை ஞானத்தின் மூலம் அறியமுடியாது.

ஆத்மானுபவமும் அதன் பயனான தெய்வத் தன்மையின் ஆனந்தமும் இந்த மந்திரத்தில் மூன்று வகையான மனித னுக்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. (அ) அதர்மங்களின் பாதையிலிருந்து திரும்பாதவன் (க) இந்திரியங்களை அடக்கி அதன் பயனாக மனத்துக்கு ஒரு மையப் படுத்தும் சக்தியைப் பெறாதவன் (ங) செய்கைகளின் பலன்களைப் பற்றி எண்ணிப் படபடக்கும் காரணத்தால் மனத்தில் அதற்குள்ளே ஓர் அமைதி பெறாதவன்.

முதன் முதலில் சாதகன் நெறி பிறழ்ந்த அதர்மமான எல் லாச் செயல்களிலிருந்தும் ஓய்வு பெற்று விடவேண்டும். ஒருவன் தர்ம மார்க்கத்தின் நெறி வழியில் நன்கு முன்னேறினால் ஒழிய எவ்வளவு ஜபம் செய்தால் என்ன? தவம் செய்தால் என்ன? மணி அடித்து மலர் சொரிந்து சந்தனம் பூசிச் சூடம் காட்டினால் தான் என்ன? கோவில்களும் மசூதிகளும் மாதாகோயில்களும் மட்டும் ஆத்மீக வளர்ச்சிக்கு உதவப் போவதில்லை.

ஒருவன் கொஞ்ச காலமாவது தர்மத்தைப் பாலனம் செய் திருந்தால்தான் ஆன்மீகப் பயிற்சி என்னும் கோட்டை வாச லில் நுழைய அனுமதிச் சீட்டுக் கிடைக்கும். தர்மச் செயல்களைப் பின்பற்றுவதனால் ஒருவனுடைய வீண் ஓட்டம் குறைகிறது. அப்பொழுது அவனுக்கு இந்திரியங்களின் அடக்கம் கொஞ்சம் ஏற்படுகிறது. மனம் தானே ஆற்றல் அதிகம் பெறுகிறது. அதிக வேகமும் பயனும் கொண்டு தன் வேலையில் தனித்த கவனத்துடன் ஈடுபட அது பதப்படுகிறது.

யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச
உபே பவத ஓதன:
ம்ருத்யுர் யஸ்யோப ஸேசனம்
க இத்தா வேத யத்ர ஸ:||

25 பிராமணன் க்ஷத்திரியன் இரண்டு பேரும் யாருடைய அன்னமோ, (சாப்பாடு போலவோ) யாருக்கு மரணம் ஊறு காயோ, அப்படிப்பட்ட ஆத்மன் எங்கே இருக்கிறது என்று யார் அறியமுடியும்?

(முதல் அத்தியாயத்தின் இரண்டாவது வல்லீ முடிகிறது)

தேடுபவர்கள் நாடும் அந்தப் பர தத்துவம், அதாவது ஆத்மன், பெயரும் தோற்றமும் கொண்ட இந்த உலகப் பொருள்கள் இருக்கவும் இயங்கவும் சாத்தியமாகி ஆட்சி புரியும் பொருளாக இருக்கிறது.

அதுதான் இந்த மந்திரத்தில் கவிதை மொழியில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. மனிதன் சிருஷ்டிப் பொருள்களில் சிறந்த சிகரம், கிரீடம்! அம்மனிதனுக்குள் சிறந்தவர் பிராமணனும் க்ஷத்திரியனும் அவர்களையே உண்டு ஜீரணித்துவிடுமாம், அந்த பரதத்துவம்! அதுவும் சுலபமாக, ஆனந்தமாக! அதாவது உலகம் பூராவுமே அதற்கு ஒரு கண ஆகாரம் என்று கருத்து. அப்படிப்பட்ட பரம்பொருளுக்குப் பயங்கரமான சாவு வழிகூட ஊறுகாயாம்.

# மூன்றாவது வல்லி

ர்தம் பிபன்தௌ சுக்ருதஸ்ய லோகே
குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்தே |
சாயாதபௌ ப்ரஹ்மவிதே வதந்தி
பஞ்சாக்னயோ யே ச த்ரிணாசிகேதா: ||

*1. அந்தப் பரம் பொருளின் இருப்பிடமான இதயக் குகையில் அமர்ந்து, அவர்கள் நற்செய்கைகளின் பலனை அனுபவிக்கிற அந்த இரண்டையும் பிரும்மத்தை அறிந்தவர்கள் நிழல், ஒளி என்று அழைக்கிறார்கள். ஐந்து அக்னி வளர்ப்பவர்களும், நசிகேத அக்கினியை மும் முறை வழிபட்டவர்களும் அப்படியே.*

*இந்தப் பகுதியில்தான் அழியாததும் புகழ் கொண்டதுமான ரத உருவகம் இருக்கிறது. ரதத்தில் உரியவனும் ஓட்டுபவனும் அமர்கிறார்கள். உடலில் பரமாத்மனும் ஜீவாத்மாவும் அமர்ந்திருக்கின்றனர், அதாவது 'தான்' என்கிற தத்துவமும் நான் என்கிற தத்துவமும் அமர்ந்திருக்கின்றன.*

*இந்த இரண்டு தத்துவங்களையும் அதாவது ஆத்மன், ஜீவன் இரண்டையும் அறிமுகப் படுத்தவேதான் இந்த வல்லியின் தொடக்க மந்திரத்திலேயே இந்த விஷயம் சொல்லப் பட்டிருக்கிறது.*

*பிரதி பிம்பம் அல்லது நிழலுக்குத் தனி இருப்புக் கிடையாது.. ஒளி இருந்தாலே நிழல் உண்டு.*

*ஆசை தூண்டிய எண்ணங்கள் ஆரவாரம் செய்துகொண்டு நம்முள்ளே இருக்கும் ஞான ஒளிக்கெதிரே தன் ஆட்டங்களைப் போடுகின்றன. ஆகவே அவை நம் மனத்தின் எதிரே ஒரு மொத்தமான நிழல் உருவத்தை வீசுகின்றன. அந்த உருவம் எப்பொழுதும் ஆடிக் கொண்டும் மாறிக் கொண்டும் இருக்கிறது.*

மனிதன் வெளிப்புறமே பார்க்கும் நோக்கு உடையவனாக இருக்கிறான். இந்த நிழலை வெளியிலிருந்து பார்த்துவிட்டு இது தான் 'நாம்' என்று எண்ணுகிறான். இந்த நிழல் 'நான்' என்கிறவன். அதாவது உடல், துயரங்கள், மன வதைகள், புத்தித் தோல்விகள், ஆன்மீக ஏழ்மை இவற்றின் அழியும் வேதனைக் குத்தல்களை ஏற்று வாடும் சம்சாரி. இந்த நிழல்தான் ஜீவாத்மன் என்பது. இதற்குக் காரண பூதமாக இருக்கிறதே அந்தப் பெரிய உண்மை 'நான் தான்' தத்துவம். அதாவது தெய்வத்துவம்; அது பரமாத்மனாகும். செய்கைகளின் பயன்களை ஜீவாத்மாவே அனுபவிக்கிறான். சிறிய நிழல் "நான்" இங்கே ஒருமை உபயோகிக்கவில்லை. பன்மை எண் உபயோகப்பட்டிருக்கிறது. ஆகவே சுருதி அந்தப் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் சேர்ந்தே பயன்களைக் கொள்கின்றன என்று சொல்ல வருகிறது.

இந்த இடத்தில் கருத்தை வார்த்தை குறிக்கும் அளவில் அப்படியே கொள்ளக் கூடாது. அப்படிக்கொண்டால் சுருதி முரண்பட்டதாக ஆகிவிடும். நித்யமான அந்தப் பூரண ஆத்மன் செய்வதுமில்லை, அனுபவிப்பதுமில்லை என்பது வாக்கு. அது செய்கை, அனுபவம் இவற்றிற்கு ஒளி விளக்கம் தருவது மட்டுமே!

அப்படி இருந்தும் மந்திரத்தில் இருமை எண் வந்துள்ளதே, அந்த இரண்டும் தம் நல்ல செய்கைகளின் பயன்களை உண்ணுகின்றன என்றல்லவா பேசுகிறது மந்திரம்! இந்தச் சங்கடத்தை ஸ்ரீ சங்கராசாரியார் தன் பாஷ்யத்தில் தீர்த்து வைக்கிறார். இந்த 'நிழல்' நான், அந்த 'உண்மை ஒளி' நான் இல்லாமல் எங்கிருந்து வரும்? ஆகவே அவை இரண்டும் பொதுவாகப் பார்த்தால் இணைந்தவையே. இப்படி இணையும் பல உதாரணங்களை நாம் நம் வாழ்க்கையிலேயே பார்க்கிறோம். ஒரு கூட்டம் போய்க்கொண்டிருக்கிறது, அந்தக் கூட்டத்தில் சிலர் குடைபிடித்துச் செல்லாமல் இருக்கலாம், அல்லது காதிக் குல்லாய்கள் அணியாமல் இருக்கலாம்: இருந்தாலும் நாம் பொதுவாகப் பேசும் இடத்துக்குக் குடைதாங்கியவர்கள் செல்லுகிறார்கள் என்றோ காங்கிரஸ்காரர்கள் போகிறார்கள் என்றோ தானே குறிக்கிறோம்!

அதேபோலவே அதே கருத்தில் ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் சேர்ந்தேயிருக்கிற காரணத்தைக் கொண்டு நிழல் அல்லது பிரதிபிம்ப 'நானையும்' உண்மையான 'நானையும்' பிரிக்காமல், செய்கைகளின் பயனைத் துய்க்கிறது ஜீவாத்மனாக இருக்க, வெறும் சாட்சி பூதமாக நிற்கும் நித்ய ஞான ஜோதியையும் அதாவது பரமாத்மாவையும் சேர்த்தே பேசுகிறோம்

இரண்டுமே இதயக் குகையில் இருப்பதாகவே இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அங்கேதான் புத்தியும் இருக்கிறது

ய: ஸேதுரீஜானுனமக்ஷரம் ப்ரஹ்ம யத் பரம் |
அபயம் திதீர்ஷதாம் பாரம் நாசிகேதம் சகேமஹி ||

2. யாகம் செய்கிறவர்களுக்குப் பாலம் போன்றிருக்கும் அக்னியை நாம் அறியமுடிகிறது: அதைப் போலவே சம்சார சாகரத்தைக் கடக்க விரும்புகிறவர்களுக்குப் பயமற்ற அக்ஷரப் பரப்பிரும்மம், அக்கரை எல்லாமும்...

தொடக்கத்தில் இருக்கும் இந்த இரண்டு மந்திரங்களும் பின்னால் சேர்க்கப்பட்டவை போலும். இரண்டும் இரண்டு வெவ்வேறு விஷயங்களைப்பற்றித் தனித்தனி விளக்குகின்றன. பின்னால் இந்தப் பகுதியில் விளக்கம் பெறும் விஷயங்களுடன் சம்பந்தம் கொண்டவையாகவும் காணோம்.

சேது (பாலம் அல்லது தங்குமிடம்) :- முன்னே நசிகேதாக்னி விவரிக்கப்பட்டிருக்கிறது. அது இந்த மர்த்ய உலகத்தை சுவர்க்கத்திலிருக்கும் அமர வாழ்வுடன் இணைக்கும் பாலமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மந்திரம், கர்மம் ஞானம் இரண்டின் லட்சியங்களையுமே பெருமைப் படுத்துவதாகத் தோன்றுகிறது. இந்த மந்திரத்தின் முதல் பகுதி அறுதியிட்டுக் கூறுகிறது. இந்தப் புனித அக்னி, நேர்மை, நம்பிக்கை, பக்தி ஆகியவற்றுடன் செய்யப்பட்டால் அது 'நானை' மையமாகக் கொண்ட ஆத்மாவை சுவர்க்கம் என்று அழைக்கப்படுகிற அந்த உணர்வுத் தளத்துக்கு அழைத்துச் செல்லும். அங்கே கிடைக்கும் பூத உடல் வாழ்வு

இந்த உலகத்தில் கிடைக்கும் வாழ்வைவிட நீண்டிருக்குமாதலால் அது அழியா வாழ்வு என்று சொல்லப்படுகிறது.

இம்மந்திரத்தின் இரண்டாவது பகுதியில் ஞானி தன் ஆன்மாவின் தன்மையையும் அதற்கும் "அகண்ட ஆன்மாவுக்கும்" உள்ள உறவையும் பற்றித் தியானம் செய்வதன் மூலம் அடையும் லட்சியத்தின் பெருமை பேசப்படுகிறது.

ஆத்மாநம் ரதிதம் வித்தி
ஸரீரம் ரத மேவ து |
புத்திம் து சாரதிம் வித்தி
மன :ப்ரக்ரஹமேவ ச ||

3. ஆத்மாவை ரதத்தின் அதிபனாக அறி. உடலை ரதம் என்றும், புத்தியை ரதம் ஓட்டுபவனாகவும் அறி. மீண்டும், மனத்தைக் கடிவாளம் என்றும் அறி.

இந்த உருவகம் ஹிந்து வேதாந்த இலக்கியத்தில் புகழ் பெற்றது. பகவத் கீதையில் இந்த ரத உருவகம், வண்ணம் சிறக்கச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு ரதம்; அதை இழுக்கும் ஆத்திரம் கொண்ட ஐந்து குதிரைகள்; புத்தியின் சிகரமான கிருஷ்ணன் ரதம் ஓட்டுகிறான். குழப்பம் கொண்டு குழம்பும் அர்ஜுனன் ரதத்திற்கு உரியவனாக அதில் அமர்ந்திருக்கிறான். இவ்வாறு காட்டப்படுகிறது கீதையில். ரதத்தின் இரண்டு மருங்கிலும் கௌரவ, பாண்டவ படைகள்; சைகை கிடைத்தவுடன் பாய்ந்து அடிப்பதற்குத் தயாராய் நின்று கொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட நரம்பு முறுக்கேறும் தருணங்களில்தான், உண்மை யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் பெரு நூலான கீதைக்குப் பின்னணி அமைந்திருக்கிறது.

ரதத்தின் உருவகத்தில் ஆத்மாதான் ரதத்திற்கு உரியவன்; தலைவன். சுத்தமான விவேகம் கொண்ட புத்திதான் ரதம் ஓட்டி. ஜீவனின் உடலே ரதம். புத்தி, உடலின் செய்கைகளை அடக்க உபயோகப்படுத்தும் கடிவாளங்களே மனமாம். ஸ்வேதாச்வதாரா உபநிஷத்திலும் இந்த மாதிரி ஓர் உதாரணம் இருக்கிறது என்பது குறிக்கத்தக்கது.

இந்திரியாணி ஹயாநாஹுர் விஷயாம் ஸ்தேஷு
கோசரான் |
ஆத்மேந்திரிய மனோ யுக்தம் போக்தேத் யாஹுர்
மநீஷிபி ||

4. இந்திரியங்களைக் குதிரைகள் என்று சொல்கின்றனர். அவை செல்லும் பாதைகளே புலன் நாடும் பொருள்கள். உடல் இந்திரியங்கள், மனம் இவைகளுடன் சேர்ந்து அனுபவிப்பவன் என்று ஆத்மனை ஞானிகள் கூறுகின்றனர்.

அதே உபமானத்தைத் தொடர்ந்து ரதத்தின் குதிரைகள் எதைக் குறிக்கின்றன என்று மந்திரம் விவரிக்கிறது. குதிரைகளின் காது, கண், மூக்கு, நாக்கு, மெய் இல்லாமல் உடல்—ரதம் நகரமுடியாது. நாம் சாதாரணமாக ஒன்று கவனிக்கலாம். குருடனாக ஒருவன் இருந்தால் அவனுக்குக் கேட்கும் சக்தி கொஞ்சம் அதிகமாக இருக்கும். ஆனால் குருடும் செவிடும் சேர்ந்து பிறப்பதைப் பார்ப்பது அரிது. குருடாயும் செவிடாயும் இருந்து தொட்டுணரும் சக்தியும்இல்லாமல் பிறப்போரைப் பார்க்கவே முடியாது. உண்மையில் அப்படிப் பிறந்தவரே கிடையாது. சுருங்கக் கூறினால் நம்மிடையே ஒன்று அல்லது இரண்டு இந்திரியங்கள் இல்லாத அபாக்கியவான் இருக்கலாம். ஆனால் ஒரே சமயத்தில் இரண்டுக்கு மேல் இந்திரியங்கள் இல்லாதவர் இருக்கவே முடியாது.

இது ஒன்றும் விநோதமில்லை. ஏனென்றால் நாம் இந்த வாழ்க்கை எடுத்ததற்கு ஒரு காரணம் உண்டு. தனித்தனி ஜீவன்கள் தனித்தனி உடல்களை ஏற்றுக் கொள்கின்றன. அவை குறிப்பிட்ட நேர அளவுக்குக் குறிப்பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்ட வாழ்வை வாழ்ந்து அந்த அனுபவங்களை ஏற்க எனவே தான் அந்த விதம் ஏற்றுக்கொள்கின்றன. வெளி உலக அனுபவங்களைத் தருவன இந்திரியங்ளே.

பொறிகள் இல்லாவிடில் நாம் உடல் எடுத்ததன் பயன் நிறைவேறாது போய்விடுகிறது. எனவே இயற்கை ஒரு குழந்தையும் இந்திரியங்கள் இல்லாமல் பிறக்காதவாறு பார்த்துக் கொள்கிறது: ஏனென்றால் இந்திரியங்கள் இல்லாமல் குழந்தை பிறந்தால் அதற்குப் பிறவி அளித்தவன் எண்ணமே வீணாய் விடும்.

கண்கள் உருவத்தோற்ற உலகைத் தான் ஒளிபெறச் செய்யமுடியும். அதாவது நாம் ஒருகாலும் கண்களைச் செவி களாக்க முடியாது. அப்படியேதான் காதுகளை எடுத்துக்கொண் டாலும், அவை கேட்க உதவுமே தவிரப் பார்க்க உதவப் போவ தில்லை; என்றுமே; ஒவ்வொன்றும் தத்தம் வழியேதான் நடக்க முடியும்.

நம் இன்ப துன்பங்களை அனுபவிக்கிற உண்மை வஸ்து எல்லாவற்றிற்கும் சாட்சி பூதமாய் நிற்கும் சுயபுத்தியான ஆத்மனல்ல. ஆனால் அது (பிரகிருதியினால்) மாற்றம்பெற்ற ஆத்ம உருவமாகும் ஒன்று. பரம சுயம்புத்தி உடல் மனத்தினால் மாற்ற நிலை பெறும்பொழுது 'நான்' என்கிற ஜீவனாகிறது. அதேதான் இந்த சம்சாரம் என்கிற சலன வாழ்க்கையின் இன்ப துன்பங்களை நுகர்வது போல் தோன்றுகிறது. இப்படி நம்மில் இருந்து நுகர்பவனைபற்றிப் பேசிவிட்டு சுருதி நம்முள் இருக்கும் அந்த இரண்டின் வேற்றுமையையும் கூறுகிறது. அந்த உண்மைத் தத்துவம், ஒன்றும் செய்யாமல் ஒன்றையும் அனுபவிக்காமல் இருக்கும் அது ஒன்று. மற்றொன்று நிழல். 'நான்' ஜீவன்; மன ஏரியில் ஏற்படும் அந்தப் பரம சுயம் புத்தித் தத்துவத்தின் பிரதிபிம்பமே தவிர வேறு இல்லை. இது இரண்டாவது.

யஸ்த்வவிஞாநவான்பவத்ய யுக்தேன மனஸா ஸதா |
தஸ்யேந்திரியாண்யவஸ்யாநி துஷ்டாஸ்வா இவ
ஸாரதே: ||

5. யார் கட்டுப்படுத்தாத மனதும் உண்மை அறிவும் இல்லாதவனாக இருக்கிறானோ அவனுடைய இந்திரியக் குதிரை கள் ஒரு சாரதியினுடைய குணம் கெட்ட (துஷ்டக்) குதிரைகள் போல் அடக்கமுடியாதவையாக ஆகிவிடுகின்றனன.

இந்த மந்திரத்தில்: ஒரு வேலை தெரியாத சாரதி தன் குதிரையின் கடிவாளங்களைத் தளர்த்திவிடுகிறான். உடனே பலம் வாய்ந்த குதிரைகள் தன்னிச்சையாக வேகமாக எங்கும் ஓடுகின்றன. ரதமும் தூளாகிறது. ரதத்துக்கு உடையவனும்

வழியோரத்தில் விழுந்து அழிகிறன். இந்த உதாரணத்திலிருந்து நாம் அறியவேண்டியது இது. நன்கு பகுத்தறியத் தெரியாத புத்தி மனத்தின் கடிவாளங்களைத் தளர்த்திவிடும்படி நாம் விட்டு விடுவோமேயானல் இந்த இந்திரியங்கள் புலப் பொருள்களாகிற வழியின் வழியே "திராட்"டில் ஓடி எல்லைமீறி இன்பம் நுகர்ந்து எல்லையையே உடைத்து எறிந்துவிடும்.

யஸ் து விஞானவான் பவதி
யுக்தேன மனஸா ஸதா |
தஸ்யேந்திரியாணி வஸ்யாணி
சதஸ்வா இவ சாரதே : ||

6. விஞ்ஞானம் பெற்று நன்கு அடக்கப்பட்ட மனம் கொண்டவன் எவனே அவனுடைய புலன்கள் சாரதியின் நல்ல குதிரைகளைப் போல் என்றும் அடக்க சாத்தியமானவை.

ஒரு கெட்டிக்காரனை சாரதி கடிவாளங்களை அறிவுடன் கையாண்டு தன் எசமானன் செல்ல விரும்பும் சாலை வழியாகத் திறமையுடன் ஓட்டுவான். அதேபோல ஒரு விவேகியான சாதகன் தன் சுத்த புத்தியின் உதவியால் மனத்தைப் பிடிக்குள் வைத்து அடக்கி குதிரைகளை அவை நினைத்த வழி ஓடிக் கவிழ்ந்து நிலையற்ற இன்பங்களாகிற சகதி வயல்களில் பதிந்து ரதத்தையும் உடைத்து வழியில் சேதமாகும் ஒரு துர்ச் சம்பவத்தை ஏற்படுத்த விடாமல் தெய்வ வழியில் ஒழுங்காக ஓட்டிச் செல்வான்.

யஸ்த்வவிஞானவான் பவத்யமனஸ்க : ஸதாஸுசி. : |
ந ஸ தத் பதமாப்னோதி ஸம்ஸாரம் சாதி கச்சதி ||

7. சரியான அறிவு இல்லாத ஒருவன், யோசனையின்றி எப்பொழுதும் அசுசியாக இருந்து ஒருபொழுதும் லட்சியத்தை அடையமாட்டான். இந்தப் பிறப்பு இறப்புச் சுழல்களுக்குள் சிக்கிக் கொள்வான்.

சாதகன் முதன் முதலில் தன் அன்றாட வாழ்வை அறிவுத் திறமையுடன், நீதி நெறி முறைகளைக் கடைப்பிடித்துத் தர்ம

வழியில் வாழப் பழகிக்கொள்ளவில்லை என்றால் தெய்வ வாழ்வை அடையும் முயற்சியில் அவன் வெற்றி பெறுவது 'நரிக்குக் கொம்பு முளைத்தது' போல்தான். சுருதி அடிக்கடி கூறத் தயங்கியதேயில்லை வெறும் ஆன்மப் பயிற்சிகள் யோக முறைகள் மட்டும் முழு ஆன்ம வளர்ச்சியையோ சந்தோஷத்தையோ தந்துவிட முடியாது. அதற்குச் சாதகனுக்கு முதன் முதலில் உண்மை நிறைந்த முழுத் தன்னடக்கம் கொண்ட வாழ்வு இன்றியமையாதது. இந்த விஷயம் மிகவும் முக்கியமான விஷயமாம்.

வேத காலங்களில் மக்கள் புலன் அடக்க வாழ்வு வாழ்ந்தார்கள், நேர்மையும் நல்ல குணமும் கொண்டிருந்தார்கள், என்று நாம் அறிவோம். அந்தக் காலத்தில் பேசிய சுருதியே ஒவ்வொரு சாதகனும் முழுத் தன்னடக்கம் கொண்ட வாழ்வு வாழவேண்டியதன் தேவையையும் பயனையும் பற்றிப் பேசிற்று என்றால் பாவம் நம் சாதகர்களின் நிலை என்ன? சந்தைக் கடையின் மணம் கெட்ட குணங்கள் கள்ளச் சந்தையின் பேராசை, லஞ்சத்தின் சூழல் வாழ்வு இவற்றினிடையே வாழ்பவர்கள். அவர்கள் சில நேரம் ஜபம் செய்துவிட்டதால் முழு வளர்ச்சிப் பூர்ணத்துவத்தின் இன்பத்தைப் பெற்றுவிட முடியுமா? அப்படிப்பட்டவன் செய்யும் கீர்த்தனம், பஜனை, ஜபம், தபம், கோவில் குளம், செய்விக்கும் பிராமண போஜனம் எல்லாம் பணத்துக்கும் நேரத்துக்கும் விளைந்த கேடேயன்றி வேறில்லை. அவன் தன் மனத்தை எப்பொழுதும் அடக்கி வைத்துப் படிப்படியாய் இந்திரியங்களையும் தறிகெட்டுப் பாய்வதைக் குறைத்துக் கடைசியில் முழுவதும் அடக்கினால் அது வேறு சமாசாரம். இந்தப் புகழ் பெற்ற உண்மைதான் இங்கே சுருதி சுட்டும் கருத்து.

யஸ்து விஞானவான் பவதி
ஸ மனஸ்க: ஸதாஸுசி: |
ஸது தத் பத மாப்னோதி
யஸ்மாத் பூயோ ந ஜாயதே |

8. ஆனால் விஞ்ஞானம் படைத்தவன் (உள்ளறிவு கொண்டவன்) எப்பொழுதும் சுசியாகவும் அடக்கப்பட்ட மனத்தை

யுடையவனுகவும் இருந்து கொண்டு மீண்டும் பிறக்காத அந்த லட்சிய நிலையை அடைகிருன். (எங்கிருந்து மீண்டும் பிறக்க வரவேண்டியதில்லையோ அந்த இடத்தை அடைகிருன்.)

யஸ்மாத் பூயோ நஜாயதே (எங்கிருந்து மீண்டும் ஒருவன் பிறக்கிறதில்லையோ): சாதாரணமாக ஆரம்ப நிலையிலுள்ள சாதகர்கள், நன்கு தெளியாதவர்களுக்கு எழும் ஒரு சந்தேகம் இங்கே தீர்கிறது. உயிருடன் இருக்கிருேம் என்றுல் ஒரு நிமிஷம் கூட நம்மால் வேலை செய்யாமல் (இயங்காமல்) இருக்க முடியாது. வேலை செய்தால் அதற்கேற்றவாறு எதிர் இயக்கமும் (பயனும்) இருக்கத்தான் செய்யும். ஆகவே சாகும் காலத்தில் ஒவ்வொரு ஜீவனிடத்திலும் அனுபவித்துத் தீர்க்க வேண்டிய பயன் மூட்டை இருக்கத்தான் இருக்கும், எனவே ஜீவன்கள் மீண்டும் பயன்களை அனுபவிக்கத்தக்க இடத்தில் அதற்கேற்ற சாதனமாகத் தகுந்த உடற் போர்வை கொண்டு பிறக்கின்றன. உபநிஷதம் பேசும் வாழ்வை ஓர் உண்மை பக்தன் வாழ்ந்து அந்தப் பரமபதத்தை அடைகிருன். அவனும் இந்தப் பிறப்பு இறப்பு என்கிற சம்சாரச் சுழலுக்குத் திரும்பி வருவானு? ஏன் மாட்டான்?

மனிதன் மீண்டும் இந்த மாயாலோகத்துக்கு வருவான் என்றுல் பிறகு அவன் பட்ட கஷ்டம் பயின்ற தன் அடக்கம் முதலியவற்றின் பயன்தான் என்ன? பிறகு அவனுக்கும் சாதாரணமாக இந்திரிய சுகத்தில் குணம் கெட்டவைகளில் வாழ்ந்த மிருக - மனிதனுக்கும் மாறுபாடுதான் என்ன? இந்தச் சந்தேகம் சாதகனின் மனத்தைக் குடைகிறதல்லவா? அன்புகொண்ட சுருதி அன்னை அதை இங்கே தீர்த்து வைக்கிருள். 'அப்படிப் பட்ட ஒருவன் அந்தப் பரம லட்சியத்தை அடைகிருன். அங்கிருந்து ஒருவரும் மீண்டும் பிறக்கிறதில்லை.'

பரம லட்சியமே, நாம் அந்தப் பரமாத்மாவான பிரம்மமே தான் என்ற உணர்வை அடைவதுதான். இந்தத் தத்துவ உணர்வை அடைந்தபிறகுதான் மனம் புத்தி யந்திரத்துடன் ஒன்றி நிற்கும் தப்பபிப்பிராயமான 'நான்' என்கிற அசட்டுப் புத்தி போகும். ''பழுதை, பாம்பு'' இரண்டையும் ஏககாலத்தில் நாம் ஏற்கமுடியாது. அதேபோல ஆன்ம அறிவையும்,

ஜீவனுகிற 'நான்' என்கிற புறப் பொருளுடன் ஒன்று தலையும் ஏக காலத்தில் கொள்ள முடியாது. சாவும் பிறப்பும் அறியாமையான 'நான்' ஏற்படுத்திக் கொண்டவையாகும். இந்த 'நான்' நம்முடைய உண்மைத் தன்மையின் ஞானத்தைப் பெற்று முடிந்துவிட்டதானல் சாவு வாழ்வுக் கனவுகள் எல்லாம் முடிவடைந்துவிடும்.

விஞானசாரதிர்யஸ்து மன: ப்ரக்ரஹவாந்நர : |
ஸோத்வன : பாரமாப்னேதி தத்விஷ்ணே:
பரமம் பதம் ||

9. புத்தியைச் சாரதியாகவும் மனத்தைக் கடிவாளமாகவும் எவன் கொள்கிருனே அவன் பிரயாணத்தின் இறுதியை அதாவது விஷ்ணுவினுடைய பரமபதத்தை அடைகிருன்.

நம் வாழ்க்கையில் நாம் சாதாரணமாகவே கவனக் குறைவாக இருக்கிருேம். தெளிவில்லாத புத்தி உத்தரவிட அடக்கம் இல்லாத மனம் தரும் ஆசை வெறிகொண்ட கசையடிகளால் வலி ஏற்பப் புலப் பொருள்களின் மேல் ஓடிவிடுகிருேம். நம்மை ஓர் அரண்மனையில் வைத்துப் பட்டுப் பட்டாடை அணிவித்து புஷ்ப சயனத்தில் வைத்தாலும் சங்கடம் சங்கடம்தான். உடைந்த மனிதனுக்கு உண்மையான இன்பத்தின் ருசியையோ. தெய்வீக அமைதியையோ நல்க முடியாது.

அதற்கு எதிர்ப்பதமாக நாம் ஒரு சாதுவைப் பார்க்கலாம். அவனருகில் எங்கேயும் புலன்கள் மகிழும் பொருள்கள் ஒன்றும் கிடையாது. குடியிருப்போ ஒரு மரத்தடியில்; உடுத்திருப்பது கந்தை. படுக்கை கற்களின் மேல்! அப்படியிருந்தும் என்ன அமைதி. என்ன ஆனந்தம். எல்லாம் தெய்வீகம்! நாம் கண்ணைத் திறந்து இந்த இரண்டு வகை வெற்றிகளையும் பார்த்துக் கவனித்தோமானல் உண்மையான சாந்தி புலன் நாடும் பொருள்களின் சேர்க்கையிலிருந்து பெறப்படும் ஒரு பொருள் அல்ல என்று நன்கு தெரியவருகிறது: நல்ல கட்டுப்பாட்டில் மனத்தைப் பழக்கியவன் உள்ளத்திலிருந்துதான் அதிருப்தியும் உள்ளின்பமும் பொங்கிக் குமிழியிட்டு வரமுடியும்.

அந்த பரம லட்சியத்தைத்] தான் இங்கே விஷ்ணுவின் லோகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதாந்தம் படிக்கும் ஒருவன் விஷ்ணு லோகம் என்பது புராணம் கூறும் வைகுண்டம் என்று எண்ணினால் அது தப்பிதமாகும்: எங்கும் நிறைந்த தத்துவமாக அதைப் பொருள் கொள்ளவேண்டும்.

இந்திரியேப்ய : பரா ஹ்யர்த்தா
அர்த்தேப்யஸ்ச பரம் மன : |
மனஸஸ்து பரா புத்திர்
புத்தேராத்மா மஹான்பர : ||

10. புலன்களுக்குப் புறத்தேயுள்ளன புலன் நாடும் பொருள்கள். அவைகளுக்கும் அப்பாற்பட்டதே மனம். அதற்கும் அப்பாற்பட்டது புத்தி. புத்திக்கும் அப்பாற்பட்டதே மகத்தான 'தான்'.

இந்த மந்திரம் கீதையின் மூன்றுவது அத்தியாயத்தில் நாற்பத்தாறுவது சுலோகத்தில் எதிரொலிப்பதைக் காணலாம்

இந்த மந்திரத்தின பகுதிகள் எல்லாம் சுலபமே. பொருள் தெரிந்து கொள்வதில் கஷ்டம் இருப்பதாகத் தோன்றவில்லை. இருந்தாலும் புலன்களைவிடப் புலன் நாடும் பொருள்கள் சூக்ஷ்மமானவை என்ற கூற்றுடன் ஆரம்பிக்கிறது இந்த மந்திரம். இதைப் புரிந்துகொள்வதில் கொஞ்சம் சிரமம் ஏற்படலாம். காதிலே அமைந்திருக்கும் கேட்க உபயோகப்படும் ஜவ்வு. கண்களிலே தானே வேண்டியவாறு மாறும் வண்ணம் அமைந்திருக்கும் புகைப்படப் பெட்டி, ஏன், நாம் தொட்டோ சுவைத்தோ அறியும் வண்ணம் அமைந்திருக்கும் அவயவங்கள் இவற்றை விட சூக்ஷ்மமான பொருள்களை எந்த யந்திரமும் இதுவரை மனிதன் கற்பனை கூட செய்ய முடிந்ததில்லை என்றே விஞ்ஞானம் சொல்கிறது. இந்த விஞ்ஞான யுகத்தில் மனிதன் கண்டு பிடித்துத் தயார் செய்த எந்தப் பொருளும் மேலே குறிப்பிட்ட அவயவங்களை மிஞ்ச முடிந்ததில்லை. இருந்தும் சுருதி இங்கே துணிவாகப் பொறிகளைவிடப் புலப் பொருள்கள் சூட்சுமமானவை என்றே கூறுகிறது. எனவே இந்த மந்திரத்தைப் படிக்கும் மாணவன் சற்று நின்று, "அது எப்படி? தோற்றங்கள் கண்களைவிட எவ்விதம் 'பெரியவை? காதுகளைவிட சப்தம்

ருசி பார்க்கும் அவயவங்களைவிட ருசி எவ்விதம் பெரியவையாய் இருக்க முடியும்?'' என்று யோசிப்பது இயற்கை.

உள்ளபடி வெளியே தோற்றங்கள் அல்லது உருவங்கள் (கொண்ட பொருள்கள்) இல்லை என்றால் நமக்குக் கண்கள் இருக்கின்றன என்றே சொல்லவோ உணரவே முடியாது போகும்.

இந்தக் கருத்தில்தான் புலப் பொருள்கள் பொறிகளுக்குக் காரணம். காரணம் காரியத்தைவிடச் சூக்ஷ்மமானது என்பது உண்மை.

இப்பொருள்களுக்கும் அப்பால் மனது: இதன் குறிப்பு தானே புரிந்து விடும்படியுள்ளது. பொறிகளுக்குக் காரணமாயுள்ள பொருள்களைவிட மனம் மிகவும் சூக்ஷ்மமானது. மனம் இல்லை என்றால் புலப்பொருள்கள் பொறிகளின் மூலம் எழுப்பும் உணர்வுகள் எங்கே சுவடுபடும்; எப்படி இது மேஜை இது நாற்காலி என்று அறியும் வகையில் சேரும்?

மனத்துக்கு அப்பால் புத்தி: நாம் ஏற்கனவே பேசியுள்ளவைகளில் மனது உள்ளேயுள்ள காரியாலயத்தில் தபாலை வாங்கி அனுப்பும் குமாஸ்தா என்று சொன்னோம். ஐந்து பொறி வாயில்கள் மூலம் உள்ளே வரும் உணர்வுச் சுவடுகளை மனது ஏற்கிறது. அவைகளை எல்லாம் ஒரு 'பைல்' ஆகச் சேர்க்கிறது. பிறகு அதைப் புத்தியின் வசம் அனுப்புகிறது.

புத்தி செய்யும் முடிவுதான் 'பைலைப்' பற்றிச் செய்யும் முடிவு. புத்திக்கு வந்த சுவடுகள் அங்கே ஞாபகத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் பழைய அனுபவங்களை ஒட்டி அவற்றுடன் ஒத்துப் புது உணர்வுச் சுவடு மதிப்பிடப்பட்டு பாகுபாடு செய்யப்படுகிறது. பிறகு புத்தி தன் நிர்ணயத்தைச் சொல்லுகிறது. அதன்படி நடவடிக்கை மேற்கொள்வதற்காகப் புத்தியின் நிர்ணயத்தை மீண்டும் மனது வழியே இந்திரியங்களுக்கு அனுப்பப்படுகிறது. அவைகளும் பிசகில்லாமல் உடனே உத்தரவுப்படி புலப் பொருள்களில் செயல்படுகின்றன.

உள் 'அரசாங்கம்' செயல்படும் விதத்தை விஸ்தாரமாகச் சொன்னோம். இதிலிருந்து புத்தி எப்படி மனத்தை ஆளுகிறது

என்று நன்கு தெரிந்துகொள்ளலாம். ஆகவே புத்தி மனத்தை விடச் சூக்ஷ்மமானது என்று சுருதி சொன்னால் அது முற்றிலும் சரியே.

புத்திக்கும் அப்பால் மஹத்தான தான் (ஆத்மா) உண்மை. மஹத்தான ஆத்மா என்பது நாம் சொல்லிவந்த அந்த 'முழு தான் மனது அல்லது முழுப் புத்தித் தத்துவமேயாகும். அதாவது இரணிய கர்ப்பம் நமக்கு ஏற்பட்டுள்ள தப்பான 'நான்' உணர்வும் பிரமை ஏற்படுத்திய பிரிவு மனப்பான்மையும் காரணமாக நாம் தனியாகவே மற்றவர் எண்ணங்களுடன் ஒப்பாமலேயே எண்ணுகிறோம் என்று கொள்கிறோம். 'நம் எண்ணங்கள் நம்முடையதே; நம் எண்ணங்கள் ரகசியமானவை, நமக்கே உரியவை. அவற்றின் அமைப்பு, தன்மை இவற்றைப்பற்றி யாருக்கும் கவலைப்பட என்ன இருக்கிறது?' என்றெல்லாம் நினைக்கிறோம். இது மிகவும் தப்பிதமானது. பொய்யான கூற்று.

ஓர் உதாரணம் எடுத்துப் பார்த்து இதைப் புரிந்துகொள்ள முயலலாம். திரு. தாஸ் என்பவர் ஆபீசிலிருந்து வந்து தன் டிபனைச் சாப்பிட்டுவிட்டுப் பைஜாமாவை அல்லது நாலு முழம் வேட்டியை அணிந்து துண்டு போட்டுக்கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்கிறார். ஓர் எண்ணம் தோன்றுகிறது, 'இன்று படம் பார்க்கப் போகலாமே' என்று. அவர் என்ன நினைக்கிறார்? படம் பார்க்க எழுந்த இந்த நம் ஆசை நம்முடைய ஆசையே!'' என்றுதான் அவர் நினைக்கிறார். அன்பர்களே! நீங்கள், இந்தக் குமாஸ்தா ஒருவர்தான்— ஆபீஸ் வேலை செய்துவிட்டுச் சாய்ந்திருக்கிறாரே இவர் ஒருவர்தான்—இந்த எண்ணத்துக்குக் கர்த்தா என்று ஒப்புக்கொள்கிறீர்களா? அவர் தன் காலத்தில் எங்கும் பரவியிருக்கும் எண்ணங்கள் அல்லது மதிப்புகளின் ஏற்பாட்டினால் அல்லவா அப்படி எண்ணுகிறார்! பல இடங்களில் பேசாமல் அழைக்கும் விளம்பரங்கள், அங்கங்கே கேட்ட நண்பர்களின் பாராட்டுதல்கள் இவற்றிற்குள் பிடிபட்டல்லவா அவர் அந்தப் படத்தைப் பார்க்கவேண்டும் என்று விரும்பத் தொடங்கினார். எவ்வளவு புத்திசாலியாயிருந்தாலும் அவர். 'நான் போக விரும்புகிறேன்' என்று ஏதோ இந்த எண்ணம் முற்றிலும் அவர்க்கே உரியதுபோல் வெட்க

மில்லாமல் சொல்கிறுரே, ஏதோ அந்த நிமிஷத்தில்தான் அவர் மூளையில் மட்டும் திடீர் என்று உதித்ததுபோல!

உண்மையில் நாம் முற்றிலும் சுதந்திரமாக எண்ணவும் முடியாது. உணரவும் முடியாது. ஒருவராலும் முடியாது. ஒவ்வொரு கணமும் நாம் மற்றவர் பிடிக்குள்பட்டுத்தான் வாழ்கிறோம். ஒருகால் நமக்கு நம் தீர்மானங்களில் உறுதிப்பாடு இருக்குமானுல், நம் வாழ்க்கை உன்னதமாகவும் இருக்குமாயின் அந்த வரை நாமே மற்றவர்களுடைய எண்ணங்களையும் நம் எல்லைக்குள் கொண்டுவருவோம்.

முழுப் புத்தி என்பது தெய்வத் தத்துவத்தின் காணிப்பு. இங்கே புத்தி என்பது உள் அமைப்பு, அந்தக் கர்ணம் முழுவதையும் சேர்த்துக் குறிக்கிறது. இப்பொழுது நமக்கு முழுப் புத்தித் தத்துவமாகிற அந்தப் பரம்பொருள் தனிப்பட்ட மனிதனின் புத்தியைவிடச் சூக்ஷ்மமானது என்று புரிந்திருக்கும்.

மஹத: பரமவ்யக்த மவ்யக் தாத் புருஷ: பர: |
புருஷான்ன பரம் கிஞ்சித் ஸா காஷ்டா பரா கதி: ||

*11.* மஹத்துக்கும் அப்பால் தோன்றுத பொருள் இருக்கிறது (அவ்யக்தம்). அவ்யக்தத்துக்கு அப்பால் புருஷன் இருக்கிறுன். புருஷனுக்கும் அப்பால் ஒன்றும் இல்லை. அதுவே முடிவு. அதுவே லட்சியம்.

மேலே மந்திரத்தில் நாம் விவரித்த முழுப் புத்தித் தத்துவம் இரணியகர்ப்பத்தைக் கொண்டது. அதாவது இந்த உலகம் விதை நிலையிலிருந்து முளையாக முளைத்துவரும் தருணத்தில் உள்ளதைக் குறிக்கும் நிலை. ஓர் அத்தி விதையில் அத்திமரமே மறைந்து இருக்கிறது என்று அறிவோம்.

அதேபோல அந்தப் பரம உண்மை, எங்கும் ஊடுருவும் அந்தச் சுத்த சத்வம் எப்பொழுதும் அலைக்கட்படாத அந்தப் பூர்ணத்வ நிலையில் நித்தியமாய் அமைந்திருக்கிறது. மாயையின் லீலையால் அந்தச் சுத்த உணர்வு ஸ்தூலத்தின் பல பட்டைகள் மூலம் படர ஆரம்பித்துக் கடைசியில் உலகமாக (ஜகத்) மலர்ந்து தோற்றமளிக்கிறது. விதையின் உதாரணத்தை எடுத்துக் கொண்டோமானுல் முழுப் புத்தி முளையின் நிலை என்று கொள்ளலாம். அப்பொழுதுதான் தோற்றம் ஏற்பட

ஆரம்பித்திருக்கிறது. அப்பொழுது மரம் எந்த நிலையிலிருக்கிறது. உள்ளே அல்லது பின்னால் வெளித் தோன்றாத நிலையில் இருக்கிறது. அந்த நிலையில்தான் மந்திரம் கூறும் அவ்யக்தமும் இருக்கிறது அவ்யக்த நிலை ஜகத் வெளிப்படாத நிலை. அதனுடன் நாம் தாயின் கர்ப்பத்தில் இருந்திருக்கும் நிலையை ஒருவாறு ஒப்பிடலாம். அவ்யக்தம், பிரதானம், மூலப் பிரகிருதி, மாயை, அவ்யாகிருதி என்ற எல்லாம் ஒரே கருத்தைக் குறிக்கும் சொற்கள் என்று இங்கே குறித்துவிடுவது நல்லது.

அவ்யக்தத்துக்கு அப்பால் புருஷன் இருக்கிறார்: வெளித் தோற்றம் ஏற்படாத (அவ்யக்த)நிலைக்கு அப்பாற்பட்டது. அந்தப் பரமதத்துவம். அதாவது சுத்த சத்வம். இந்த உபநிஷதத்தில் இந்த மந்திரத்தில் அதை 'புருஷன்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் சூக்ஷ்மத்துக்கெல்லாம் சூக்ஷ்மமான உண்மை. இந்தத் தோற்றம் கொண்ட உலகத்துக்கெல்லாம் அது தான் பரம லட்சியம்.

முதலில் மிகவும் ஸ்தூலமானது பொறிகள் என்று கண்டோம். மனது அதைவிடச் சூக்ஷ்மமானது. மனத்துக்கும் அப்பால் புத்தி இருக்கிறது. புத்தியையும்விட நுணுகியது 'முழுப் புத்தி.' அதைவிட நுணுகியது அவ்யக்தம். அவ்யக்தத்தைவிட நுண்ணியது நாம் தேடும் பரமலட்சியம். அதுதான் புருஷன்: உண்மை.

ஏஷ சர்வேஷு பூதேஷு கூடோத்மா நப்ரகாஸதே |
த்ருஸ்யதே த்வக்ரயயா சூக்ஷ்மயா சூக்ஷ்மதர்ஸிபி : ||

*12.* இந்த ஆத்மா எல்லா ஜீவனுக்குள்ளும் கரந்து நிற்கிறது. பிரகாசிக்கிறதில்லை. ஆனால் சூக்ஷ்மதர்சிகளால் அவர்களுடைய கூரிய நுண்ணிய புத்தியால் பார்க்கப்பெறுகிறது.

வேதாந்தத்தில் ஆத்ம அறிவு என்பது நம்முடைய தெய்வத் தன்மையின் உண்மையை அனுபவ பூர்வமாக அறிவதுமட்டுமல்ல. தான்மட்டும் கடவுள் என்றும் மற்றவர் எல்லாம் மனிதப் புழுக்கள் என்றும் ஒருவன் உணர்ந்தானால் அது அபத்தமான

உணர்வு குறைபாடுள்ளது, அதே போல ஒரு சாதகன் தொடர்ந்து பொறுமையாய் சாதகம் செய்து தன் 'நான்' என்ற எண்ணத்தையும் அதனுல் மனம் புத்தி உடலுடன் கொண்டிருந்த மற்ற பொய்த் தொடர்புகளேயும் அழித்துவிட்டானென்ருல் இனி அவன் இந்த முழுமையுமே சத்தியம், அதுவே நான். அதுவே நான் என்று உணர்ந்து கொள்வான்.

சுருக்கமாக ப்ரதாப - கத்ம - பிரம்ம ஐக்யத்ய—ஞானமே (நம் உள் ஆத்மாவும் எங்கும் நிறைந்திருக்கும் பரமாத்மாவும் ஒன்றே என்ற ஞானம்) ஞானப் பாதையின் உண்மையான வழி.

எல்லா ஜீவனுள்ளும் கரந்து ஒளிந்து நிற்கிறது: ஜீவனின் 'தான்' என்ற தத்துவம்தான் ஆத்மா. அது நம்மிடமிருந்து (ஜீவனிடமிருந்து) எப்படி ஒளியமுடியும்? இருந்தும் அறியாமைத் திரை, இல்லாத கருத்துக்கள் மாயை இவற்றின் கனத்த சுவர்களின் பின் இருப்பதால் அது 'நான்' என்ற தத்துவத்தைச் சுற்றியுள்ள அறிவுச் சாதனங்களுக்கு மறைந்து நிற்கிறதுபோல் தோன்றுகிறது.

யச்சேத்வாங மனஸி·ப்ராஞஸ் த்தயச்சேஞ்ஞான
ஆத்மனி |
ஞானமாத்மனி மஹதி நியச்சேத் தத்யச்சேச் சாந்த
ஆத்மனி ||

13· ஞானி தன் பேச்சை மனத்தில் அழுத்திவிடட்டும், மனத்தைப் புத்தியில் லயித்துவிடச் செய்யட்டும். புத்தியை அந்தப் பரமாத்மாவிடத்திலும், பரமாத்மாவை அமைதியுள்ள ஆத்மனிடத்தில் அழைத்து நிறுத்தட்டும்.

பேச்சை மனத்தில் ஆழ்த்து: இங்கே "பேச்சு" மட்டும் தான் உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாம் அப்படியே எடுத்துக்கொள்ளக் கூடாது. கர்ம இந்திரியங்கள் ஞான இந்திரியங்கள் எல்லாவற்றையுமே அவைகளுள் ஒன்றைக் குறிக்கும் அந்தச் சொல் குறிப்பிடுவதாக நாம் கொள்ளவேண்டும். சுருதி, கர்மேந்திரியம் ஞானேந்திரியம் எல்லாவற்றையுமே மனத்துக்குள் அடக்கவேண்டும் என்று புத்திமதி கூறுகிறது.

பிறகு மனது புத்திக்குள் முழுக்கப்படவேண்டும். அதாவது மனத்தின் ஊஞ்சலாட்டங்கள், சந்தேகங்கள், ஆவல்கள் உத்வேகங்கள் முதலியவை புத்தி அதன் பகுத்தறியும் சக்தி இவைகளின் இரும்புப் பிடிக்குள் கொண்டுவரப்பட வேண்டும். இது மீண்டும் மூலக்காரணமான துரிய அவஸ்தை தூக்கமில்லாத தூக்க நிலைக்குள் இணைக்கப்படுகிறது. அதையும் தாண்டி உயர்ந்து சாதகன் உயர்ந்த தியான நிலையில் வாழ்க்கையின் இறுதி இலட்சியத்தை அடைகிறான். அங்கே வலுப்பொருந்திய ஆத்ம அனுபவத்தில் அவன் தானே 'புருஷன்' என்று ஆகிறான்.

உத்திஷ்ட ஜாக்ரத
ப்ராய்ய வராந்நிபோதத |
துர்கம் பதஸ்தத் கவயோ வதந்தி ||

14. எழு. விழி. பெரியவர்களை அடைந்து (ஆத்மானுபவத்தை) கற்றுக்கொள். கத்தியின் கூர்மைபோல் தாண்டக் கஷ்டமானது. நடக்கக் கடினமானது, அந்தப் பாதை-ஞானிகள் அவ்விதம் கூறுகிறார்கள்.

நம் பண்டைய ரிஷிகள் உண்மையைப் பற்றி மௌனமாய்ச் சிந்தித்தார்கள் ஜீவனின் தெய்வத் தன்மையை அறிந்தார்கள். நம் தன்மை நித்யத்வம் என்று கண்டார்கள். பூர்ண நிலையின் அழகை உணர்ந்தார்கள் உடனே அவர்கள் தங்கள் தலைமுறை மக்களிடம் ஆனந்தக் கூவல்களையும் வெற்றிப் பறை முழக்கையும் செய்தார்கள். வழியே செல்லுங்கள், உண்மையைத் தேடுங்கள். தெய்வ நிலையுடன் தான் ஒன்றும் வரை சென்றுகொண்டே இருங்கள் என்று நாம் பார்க்கும் இந்த மந்திரத்தில் ஆன்மீக சாம்ராஜ்யத்தின் அந்தப் பெரும் அழைப்புக் காணப்படுகிறது. அது, துன்பம், குன்றிய நம்பிக்கைகள் இவற்றில் உழலும் மனிதனுக்கு நம்பிக்கை பெருமை இவைகளின் அழைப்பு. சுவாமி விவேகானந்தர் தாம் நிறுவிய மடத்தின் அடையாள மந்திரமாக 'எழு. விழி' என்ற இந்தப் பிரசித்தி பெற்ற அழைப்பைத்தான் பொறித்திருக்கிறார்.

சொத்து தொலைந்தது; யாரோ இறந்து துக்கம் ஏற்பட்டுவிட்டது, காதலில் பெரும் தோல்வி என்றவாறெல்லாம்

திடீரென ஏற்படும் இடிகள் ஒருவாறு தாற்காலிகமாக நமக்கு ஓர் உணர்வைத் தருகின்றன. போட்டி சுயநலம் இவற்றுடன் நாம் வாழ்ந்த வாழ்க்கைக்கு நாம் தந்திருந்த மதிப்பு சுத்தப் பொய்யானது என்று கொஞ்ச நேரம் உணருகிறோம்.

அப்படிப்பட்ட அழுங்கிய நேரங்களில் மனிதன் தன் வாழ்க்கை வெறும் கூடு போன்று இருக்கிறது என்று உணருகிறான். அந்தச் சமயத்தில் உடல் நலம் தரக்கூடியது என்று தோன்றும் வைராக்யத்தையும் ஏற்றுக் கொள்கிறான். ஆனால் இது நிலையான மனம் அல்ல. வாழ்வின் கூட்டுத் தன்மையைத் தற்காலிகமாவாவது உணரும் நிலையிலிருக்கிறதே அதைத் தான் இங்கே, 'எழு' என்ற சொல் குறிக்கிறது.

இப்படி எழுந்தவன் உடனே நேரடியாக ஒரு குருவின் சரணத்துக்கு ஓடவேண்டும், சாஸ்திரங்கள் நன்கு அறிந்து பிரும்மானுபவத்தில் லயித்திருக்கும் அவரிடமிருந்து பிரும்ம வித்தையைக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அந்தச் சாதகன் முழு விழிப்பையும் அடையமுடியும்.

குரு வேண்டும் என்பதே எதற்காக? டைப்-ரைட்டிங் கற்றுக்கொள்வது கேவலம் ஓர் இயந்திரத் தன்மை கொண்ட வேலை. அதற்கே தேர்வுபெற ஓர் ஆசிரியர் இல்லாமல் முடிகிறதில்லை. ஆன்மானுபவ நிலைபெற ஆசிரியர் இல்லாமல் யார் முயல முடியும்?

அந்த வழி கடினமானது. ''கத்தியின் கூர்மையைப் போன்று இருக்கிறது அந்த வழி.'' பூர்ணத் தன்னடக்கம், கட்டுப்பாட்டுக்கு அர்ப்பணம் செய்த வாழ்வு, எப்பொழுதும் விழிப்புடனும் விவேகத்துடனும் வாழும் வாழ்வு சுலபமான ஒன்றல்ல. டவுனில் பிறந்து பழகிய ஓர் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டோ, அல்லது காட்டிலே விறகு வெட்டிப் பிழைக்கும் ஒருவனோ, மரத்தடியில் மௌனமாய் அமர்ந்திருக்கும் சாதுவை 'சோம்பேறி' என்று நினைக்கலாம். ஆனால் அந்த இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் ஒரு மணி நேரம் சாது செய்வதைச் செய்து பார்க்கவேண்டும்!

சுருதி 'அந்த வழி கத்தி நுனிபோல் அபாயம் நிறைந்தது' என்று சொல்கிறது. எந்த நிலையிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும்

அந்த வழியை விடாமல் கைக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தவே அது அப்படிச் சொல்கிறது. அதற்காக அந்த வழி செல்லவே முடியாதபடி முற்றிலும் கடினம் என்று பொருள் கொண்டுவிடக் கூடாது. உண்மையாகத் தேடுபவனுக்கு அப்படி ஒன்றும் இருக்கவே முடியாது.

ரிஷிகள் கருத்தில் தெய்வானுபவம் நீங்கிய எந்த நாகரிகமும் அல்லது பண்பாடும் நெடும் தூக்கத்தில் ஆழ்ந்த வாழ்வே,

அஸப்தமஸ்பர்ஸ மரூ பமவ்யயம்
ததாரஸம் நித்யமகன்த வச்சயத் |
அனாத்யனந்தம் மஹத : பரம த்ருவம்
நிசாய்ய தன் ம்ருத்யு முகாத் ப்ரமுச்யதே ||

15. சப்தமற்றதும், ஊறு அற்றதும் (அஸ்பர்சம்) உருவமற்றதும், ருசியற்றதும், என்றும் இருப்பதும், நுகர்ச்சி அற்றதும், ஆரம்பம், முடிவு அற்றதும் மஹத்துக்கு அப்பாற்பட்டதும் மாறுதலற்றதுமான அந்தப் பொருளை அறிந்தவன் சாவின் வாயிலிருந்து விடுதலையடைகிறான்.

நசிகேதன் யம தர்மராஜனிடம் கேட்ட முக்கியமான கேள்வி, 'சாவுக்கப்பால் ஓர் இருப்பு உண்மையில் உண்டா?' என்பது. அது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். யம தர்மனோ நேரடியாக உண்டு இல்லை என்று சட்டசபை முறையில் பதில் சொல்ல மறுக்கிறார். அதைக் கண்டு சந்தேகப் பிராணிகளும் நாஸ்திகர்களும் சமயம், சமயக் கல்வி முறை இவற்றை அறிந்துகொள்ளும் அறிவு இல்லாத காரணத்தால் இந்த எடுத்துக் காட்டுகளை எல்லாம் சொல்லி, "பாருங்கள், மிகப் பெரிய ஆசிரியர்களே சாதகன் தெரிந்துகொள்ள விரும்பிக் கேட்கும் கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்!" என்று சத்தமிட்டுவிடுகிறார்கள். விஞ்ஞான முறையிலே பேசினோமானால் அந்தக் கேள்வி நேர்மையானதாகவும் சரியானதாகவும் காணப்படுகிறதே தவிர வேதாந்த ரீதியில் அது தப்பு. உண்மையான சிந்தனையாளர் அப்படித் தப்பான கேள்விக்கு விஞ்ஞான முறையில்பதில் சொல்லவும் முடியாது. யம தர்மராஜன் சாவுக்கு அப்பால் இருக்கும் நிலை இல்லை," என்று சொல்லியிருந்தாரா

ஞல் அது முற்றிலும் பொய்யான பதிலாக இருந்திருக்கும். ஏனென்ருல் சுத்த சத்வ நிலை என்றும் உள்ள நிலை. இதற்கு மாருக சாவுக்குப்பின் வாழ்க்கை உண்டு என்று சொல்லியிருந் தால் அதுவும் விஞ்ஞான முறையில் பொய்தான். ஏனென்ருல் சுத்த சத்வ உலகத்தில் வாழ்வின்மை என்ற நிலையே கிடையாது. வாழ்வின்மை என்ற எதிர்மறை நிலை ஒன்று இருந்தால்தானே அதை ஒட்டி வாழ்வு என்ற பேசப்பட முடியும் இப்படிப்பட்ட ஒரு நிலைதான் புத்தருக்கும் ஏற்பட்டது. சிஷ்யர்கள், 'கடவுள் உண்டா இல்லையா!' என்று கேட்டு நேரடிப் பதிலை விரும்பி ஞர்கள். அவர் மௌனமாக இருந்துவிட்டார்.

இருப்பினும் யம தர்மராஜன் நேரடியான சொற்களில் விடை தராத போஞலும் அந்தப் பதில் அவர் சொன்னவற்றில் இருக்கத்தான் இருக்கிறது. விவேகிகள் இயற்கை உள்ளறிவி ஞலேயே உணர்ந்து கொள்ளுமாறு அது அமைந்திருக்கிறது.

மொழிகள் எல்லாம் எல்லைக்குட்பட்ட புறப்பொருள் உல கத்தின் எல்லையில் போக்கொழிகின்றன. அதற்கு அப்பால் ஆன்மாவின் மொழியான மௌன தியானம் தான் செல்லமுடி யும். ஆன்ம சம்பாஷணைக்கு அந்த மொழிதான் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவேதான் சுருதிக்கு விளக்கமுடியாத பொருளை விளக்க, இல்லை இல்லை என்று பேசும் பாஷை தவிர சுலபமானதும் விஞ்ஞான முறையைக் கொண்டதுமான ஒரு மொழி கிடைக்கவில்லை.

ஆகவே இந்த மந்திரத்தில் உயர உயர உயரும் பெருமை கொண்ட ஆத்மன், இல்லைப் பேச்சில் அசப்தம், அஸ்பர்சம், அரு வம், அரசம், அகந்தம் என்றெல்லாம் சொல்லித் தெளிய வைக்கப்படுகிறது. எல்லைக்குட்பட்ட மொழி வகைகளின் உதவியைக் கொண்டு உண்மையை விளக்கத் தத்துவ சாஸ்திரத் தில் இது ஒரு முறைதான் உண்டு.

நித்யம் உண்மை, ஐம்பொறி நுகர்ச்சிகளுக்கு அப்பாற்பட் டது, அதனால் அது என்றும் இருப்பதாகும். நம் இந்திரியங் கள் அறியக்கூடிய பானை, நாற்காலி அல்லது மேஜை ஆரம்பம் முடிவுக்குள் பட்டவை.

அநாதி அனந்தம்: சாதகன் மனத்தில் இந்தக் கருத்து பசு மரத்தாணி போல் பதியவேண்டும் என்பதற்காகச் சுருதித்தாய்

அது தொடக்கம் முடிவு இரண்டும் அற்றது என்று மறுபடியும் சொல்கிறுள்.

முடிவுள்ள பொருள் அழியும் பொருளாகும். அதாவது அது இருக்கின்ற தன் நிலையை இழக்கின்றது. அதை இழந்த வுடன், அது காரண பூதமாக இருந்த மூல நிலையை அடையும். மண் பானை அழிந்தால் மூல நிலையான மண் நிலையை அது அடைகிறது. விதையின் முடிவு மரமாகும். மரம்தான் அதன் நெருங்கிய மூல காரணம். அல்லது அது அழிந்து அது ஆவ தற்குக் காரணமாயிருந்த மூல தத்துவங்களாகலாம். நாம், 'குப்தா அவர்கள் இல்லை, இறந்துவிட்டார்' என்று சொன்னுல் அவர் மீண்டும் அந்த உருவகத்துக்குக் காரணமாக இருந்த மூல தத்துவங்களாக மாறிவிட்டார்; அந்த மூலதத்துவங்கள் இனி அத்தோற்றத்தைத் தாங்கி நிற்காமல் சாம்பாராகிவிட்டன என்று தான் பொருள். பெளதிக சாஸ்திரம் அதனுல் தான் 'மெழுகுவர்த்தி எரிந்தால் இழப்பது ஒன்றுமில்லை' என்று பேசு கிறது.

இம்மாதிரி முடிவுள்ள பொருள்கள் எல்லாம் அவை உரு வாகக் காரணமாயிருந்த மூலதத்துவங்களுள் சென்று அடை கின்றன. உண்மைக்கு முடிவு இல்லை என்று பேசும் சுருதி உண்மை காரணங்களுக்கெல்லாம் காரணம், அதற்குக் காரண மாயிருந்து அது சென்றடையும் என்று ஒன்றும் கிடையாது என்று பொருள் தருகிறது. அதாவது உண்மை ஏதோ ஒன் றுடைய மாற்றம் அல்ல என்ற கருத்தையும் இது தருகிறது. அது பரம்பொருள் எல்லையிலுள்ள பொருள். ஆகவே அது ஆரம்பமுமற்றது.

உண்மையின் தளம் அப்படி இருக்குமாயின், இந்திரியங் களின் அறிவுக்கப்பால், மனம் புத்தி எட்டாத இடத்தில் மாறு மல், நித்யமாய் இரணிய கர்ப்பத்துக்கும் அப்பால் ஆரம்பம் இறுதி அற்று இருக்கும் என்ருலும் சாதகன் அதனுடன் உள்ள தன் இணைப்பை நிலை நிறுத்திக்கொள்ளல் ஏன் வேண்டும்? அன் ருடச் சந்தை வாழ்வில் நின்று அனுபவித்து முயன்றும் போரா டியும், வியர்வை பெருக்கியும் உடலை வருத்தியும் அழுதும் கேவியும், சிரிப்புக்கும் ஆனந்தத்துக்கும் இடையே ஆடியும்

பாடியும் காலத்தைக் கழிப்பதான இந்தத் துன்ப வாழ்வின் விளையாட்டை ஆடுவது நல்லதல்லவா, நிச்சயமாகக் கிட்டக்கூடியதல்லவா? பயன் தரக் கூடியதல்லவா?

சுருதி பதில் சொல்கிறது. நித்ய இன்ப நிலையை அறிந்தவன் சாவின் முகத்திலிருந்து தப்புகிறான். சாவின் பயம்போன்று எல்லோருக்கும் பொதுவான வேறொரு பயம் உலகில் இல்லை. இங்கே சாவு என்றால் நாம் சாதாரணமாகக் கொள்கிறோமே, மனிதன் முதலிய ஜீவன்கள் கடைசி மூச்சை விடும்பொழுது ஏற்படும் ஓர் அழிவை, அந்தக் குறுகிய பொருளில் கொள்ளக்கூடாது. பொருள்களுடன் உலகத்தில் ஏற்படக்கூடிய எல்லா முடிவுகளையுமே அணைத்துப் பேசக்கூடிய அளவு அதன் பொருளை விசாலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

எனவே இந்த மந்திரம், தப்புக் கருத்தில் மறந்து நிற்கும் மனிதன் தொடர்ந்து முயன்று அந்தப் பரிபூர்ண நிலையுடன் தன்னை இணைத்துக் கொள்வதில் வெற்றி பெற்றுவிட்டால் அவனுக்குச் சூறுவளித் துன்பங்களையும் பேரியக்கத் தொந்தரவுகளையும் வாரிக் கொணர்ந்து தந்து அவன் பூர்ண இன்பத்தை அழித்து விடமுடியாது என்று தெளிவாக்குகிறது.

நிசாய்ய (அறிந்த பிறகு) அறிவது என்றால் நாம் மேஜை நாற்காலி என்று அறிகிறோம் என்று சொல்லும்பொழுது கொள்கிறோமே அந்தப் பொருளில் அல்ல. இங்கே அறிந்த பிறகு என்றால் சுயமாக அனுபவித்த பிறகு என்று கருத்து. தானே உள்ளுணர்வில் அனுபவிப்பது தான் அந்தப் ப்ரம உண்மையை அறிவதாகும்.

நாசிகேத முபாக்யானம்
ம்ருத்யு ப்ரோக்தம் சநாதனம் |
உக்த்வா ஸ்ருத்வா ச மேதாவீ .
ப்ரஹ்மலோகே மஹீயதே ||

16. மேதாவியான ஒருவன் யம தர்மராஜன் சொன்ன நசிகேதன் கதையைக் கேட்டுத் திருப்பியும் சொல்வானானால் பிரம்மலோகத்தில் பெருமை அடைகிறான்.

சங்கராசாரிய ஸ்வாமிகள் தன் பாஷியத்தில் இந்த இடத்தில் தரும் விளக்கவுரை கவனத்துக்கு உரியது. பிரும்ம லோகத்துக்கு இரண்டு கருத்துகள் பெறப்படும். அது சிருஷ்டி கர்த்தாவான பிரும்மாவின் உலகத்தையும் குறிக்கலாம். அதாவது இரணியகர்ப்ப நிலையாம். அல்லது அது பிரும்மரூபி லோகம் அதாவது பிரகாச ரூபம். லோகம் என்ற கருத்தில் பிரும்மம் என்ற ஜோதி என்றும் பொருள்படலாம். சுருங்கக் கூறின் ஒரு மேதாவி நல்ல ஞாபக சக்தி பெற்றிருந்து இந்த உப நிஷதத்தின் முதல் மூன்று வல்லிகளை வரப்பண்ணி மற்றவர்கள் எதிரில் ஒப்பிக்க முடிந்து இவை பரவ உதவ முடியுமானுல் அவன் உயர உயர உயரும் பிரும்மலோகத்தின் இன்பத்தை நுகரலாம்.

ய இமம் பரமம் குஹ்யம்
ஸ்ராவயேத் ப்ரஹ்மஸம்ஸதி |
ப்ரயத : ஸ்ராத்தகாலே வா
ததானந்த்யாய கல்பதே
ததானந்த்யாயகல்பத இதி ||

17 பிராம்மணர்கள் முன்னிலையில் அல்லது பித்ருக்கள் சிரார்த்தத்தில், யார் இந்த ரகசியத்தைச் சிரத்தையுடன் சொன்னுலும் அவன் அழியாத் தன்மையை அதன் மூலம் அடைகிருன். அழியாத்தன்மையை அடைகிருன்.

இவ்வாறு கடோபநிஷதத்தின் முதல் அத்தியாயம் மூன்ருவது வல்லி முடிகிறது.

ஆனந்த்யாய கல்பதே. அழியாத் தன்மையை அடைகிருன். இதன் நேரடியான பொருளில் மாணவன் குழம்பக் கூடாது. அழியாத்தன்மை சில சாஸ்திரங்களைத் திரும்பி ஒப்பித்தால் மட்டும் வந்துவிடாது; அது எவ்வளவு பெரியவர்கள் முன்னிலையில் ஒப்பித்தாலும் சரியே! சமாதி மூலம் பெறும் கைவந்த அனுபவம். அதாவது தன் சொரூபத்தில் தானே பரமாத்மனுக உணர்ந்து நிற்கும் நிலைதான் பிரமை தந்த 'நான்' என்ற எண்ணத்தைச் சூழ்ந்து நிற்கும் மோகமானவைகளை அறுத்துத் தள்ள முடியும். இங்கே அழியாமை என்பது சுவர்க்கவாசிகளுக்குக் கிட்டும் அழியாமையைத்தான் குறிக்கிறது, அது அந்த நிலையை ஒட்டிப் பேசும் பேச்சுத்தான்.

இந்த அழிவுலகத்தில் ஏற்படும் சாவை நினைத்துப் பார்த்து சுவர்க்கத்தில் வாழ்பவர்கள் அனுபவிக்கும் பல்லாயிரக் கணக்கான வருஷ ஆனந்த வாழ்வை எண்ணிப் பேசினால் சுவர்க்க வாழ்வு அழியாத வாழ்வு என்று சொல்லப்படலாம்.

பிரும்ம வித்தையைப் புகழ்வதுடன் இந்த உபநிஷத்தின் முதல் பாதி முடிவடைகிறது. சாஸ்திரங்கள் கடைசி மந்திரத்தின் கடைசப் பகுதியை இருமுறை சொல்வது நடைமுறை. அம்மாதிரியே இங்கேயும் அத்யாயம் முடிகிறது என்று காட்டச் சொற்றொடர் திருப்பிச் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர் நம்மிருவரையும் காப்பாராக. நமக்கு ஞானத்தின் ஆனந்தத்தை அருளுவாராக. நாம் சேர்ந்து முயலுவோம். படிப்பதை நன்கு படிப்போம். ஒருவரையும் நாம் வெறுக்காமல் (சண்டையிடாமல்) இருப்போமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

# இரண்டாவது அத்யாயம்

## முதல் வல்லி

பராஞ்சி காணி வ்யத்ருணத் ஸ்வயம்பூ:
தஸ்மாத் பராங்பஸ்யதி நான்தராத்மன் |
கஸ்சித்தீர: ப்ரத்யகாத்மானமைக்ஷத்
ஆவருத்த சக்ஷுரம்ருதத்வ மிச்சன் ||

சுவயம்புவானவன் (பிரும்மன்) வெளியே பரவும் இந்திரியங்களைச் சிருஷ்டித்தான். அதனால் மனிதன் வெளியுலகத்தைப் பார்க்கிறான். உள்ளேயுள்ள தன்னை (ஆத்மனை) பார்க்கிறதில்லை. ஆனால் சில ஞானிகள் புலப் பொருள்களிலிருந்து திருப்பப் பட்ட கண்கள் கொண்டு, அமரத்தன்மையை விரும்பி உள்ளேயுள்ள ஆத்மனைப் பார்க்கின்றனர்.

கடவுள், சிருஷ்டிகர்த்தா, ஐம்பொறிகளையும் சிருஷ்டித்திருக்கிறார். அவை தத்தம் புலப்பொருள்களின் உலகத்தில் சென்று நுகர்ந்து நிற்கும் பலமான ஆவலையும் கொண்டவையாய்க படைக்கப் பட்டிருக்கின்றன. நம் காதுகள் தொலைவில் அமர்ந்து கூவும் பறவையின் மிகவும் மெதுவான குரலைக் கூடக் கேட்டுவிடுகின்றன, இடையே டிராம்கள், லாரிகள் சென்று பிரமாதமான இரைச்சலையும் சத்தத்தையும் ஏற்படுத்தும் சந்தை இருந்தால்கூட! நம் கண்கள் காது அறிய முடியாத பொருளைப் பார்த்து உணர்கின்றன. இதற்கு மிகவும் ஸ்தூலமான உதாரணத்தை நாம் இன்றைய கிளப்புகளில் கூடப் பார்க்கலாம். இரண்டு நண்பர்கள் என்ன முணுமுணுக்கிறார்கள் என்று காதால் கேட்காமலேயே உதட்டசைவிலிருந்தே தெரிந்து கொள்கிறார்கள் சிலர். இதே மாதிரி நம் இந்திரியங்கள் எல்லாமே எப்பொழுதுமே வெளிப்புறமே பாய்ந்து பறந்து தத்தம் பொருள்களிடம் சென்று கொண்டிருக்கின்றன. அவை ஒரு பொழுதும் உள்ளே திரும்பிக் கவனித்துக்

கேட்பதில்லை; பார்ப்பதில்லை. நுகர்வதில்லை, தொட்டுப்பார்ப்பதில்லை. உள்ளே என்ன நடக்கிறதென்று அவை அறிவதில்லை.

சாதகன் ஆத்மாவின் தன்மையை அறியவேண்டும், உயிருடன் பூர்ணத்வத்தை அனுபவித்து இன்புறவேண்டும் என்று அடக்கமுடியாத ஆவலைக் கொண்டாலொழிய அவனுக்கு வேண்டிய அளவு உள்திருப்பம் ஏற்படாது. வேண்டிய அளவு நெறித்துணிவும் ஏற்படாது. புத்தியில் உறுதியும் கொள்ள மாட்டான். மனத்தில் வீரம் எழாது. மனப்போக்கில் வேண்டிய அளவு அழுத்தம் காணாது. இந்திரியங்களின் போக்கை அணையிட்டு நிறுத்தி கவனத்தின் தாரையை அதன் மூலச் சுனைக்கு அதாவது ஆத்மனிடத்தில் செலுத்தும் ஆன்ம நரம்பு முறுக்கு ஏற்பட இயலாது. உண்மையாக நம் தலைமுறையில் அப்படி முழுதும் மலர்ந்த மனிதர் மிகவும் அபூர்வமே!

பராச : காமானனு யன்தி பாலஸ்தே
ம்ருத்யோர் யன்தி விததஸ்ய பாஸம் |
அத தீரா அம்ருதத்வம் விதித்வா
த்ருவமத்ருவேஷ்விஹ ந ப்ரார்த்தயன்தே ||

2 (பிள்ளைகள்) அறியாதவர்கள் வெளியின்பங்களை விரும்பித் தேடுகின்றனர். (அதனால்) அவர்கள் பரந்த சாவின் விரிந்த வலையுள் விழுந்து விடுகின்றனர். ஆனால் அறிவாளிகள் இந்த உலகில் ஒன்றையும் விரும்புகிறதில்லை, அழியும் அவற்றுள் அமரமானது எது என்பதை அறிந்து.

இந்த இரண்டு மந்திரங்களிலும் ஆன்ம சாட்சாத்காரத்திற்கு இடையே நிற்கும் இரண்டு பெரிய இடையூறுகள் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. (1) மனிதன் செலுத்தக்கூடிய கவனத்தை எல்லாம் கவர்ந்துகொண்டு இந்த இந்திரியங்கள் வெளியுலகத்தில் ஓடும் இயற்கைத் தன்மை (2) இந்த உலகம் அடுத்த உலகம் இரண்டிலும் விஷயங்களை அனுபவிக்க வேண்டும் என்கிற ஆசை.

ஆசைகளைத் தேடி மனத்தின் சாட்டையை ஏற்று இந்த இந்திரியங்கள் தங்கள் தங்கள் பொருள்களின் உலகத்தில்

குடல் தெரிக்க ஓடுகின்றான. இடையறாத தொடர்ந்து நிலை பெற்ற இன்பத்தைத் தேடுவது வீணாகிறது. மனிதன் அமரத் தன்மையைப் பெற்றால்தான் உண்மையான திருப்தியை அடைய முடியும். முடிவுள்ள எதுவும் மனிதனுக்கு அலுப்பை யும் ஆத்திரத்தையுமேதான் தரமுடியும், முடிவில்லாத ஒன்றைத் தேடி நாம் நம் அறியாமை காரணமாக புலப் பொருள்களில் நம்மை அழித்துக்கொள்கிறோம். இந்த வீண் வேட்டையில் களைத்துச் சளைத்து, இளைத்து, வலிவிழந்து நம் முன் ஒவ்வொருவரும் சீக்கிரமே நம் கடைசி மூச்சை வெளியே விட்டுவிடுகிறோம். அதனால்தான் சுருதி வளர்ச்சியடைந்த மனி தனின் விவேகம் அடையாத பிள்ளைகள் போன்ற இம் மக்கள் கடைசியில் மாயை தரும் கனிகளான சாவின் பரந்த வலைக்குள் விழுந்து விடுவார்கள் என்று உறுதி சொல்கிறது.

உன் எதிரிகள் அறியாமை., ஆசை, காமம் இவைதான். இதை அறிந்ததால்தான் விவேகிகள் தங்கள் காமங்களைக் கெட்டிக்காரத்தனமாக அடக்கியாள்கிறார்கள்; அடக்கித் தமக்கென ஆசையற்ற ஒரு மன நிலையை ஏற்படுத்திக் கொள் கிறார்கள். ஆசைகள் என்பது நன்கு பதிந்த அறியாமையின் தோற்றங்கள் தானே. ஆகவே ஆசையற்ற நிலைமையில் அறி யாமையும் விழுந்து அழிகிறது. அறியாமை முடிவு எய்தினால் அதன் மறு பிறவிகளான ஆசைகளும் காமங்களும் தொலை கின்றன. அறியாமை அழிந்தவுடன் ஞானம் உதித்து ஒளி பெறுகிறது. அவித்தை ஞானத்தில் முடிவடைகிறது. அப்ப டிப்பட்ட ஞானிகளைத்தான் தீரர்கள் என்று இங்கே அழைக் கப்பட்டிருக்கிறது. அவர்கள், பாய்ந்து மறையும் புலப்பொருள் இன்பத்தை விரும்பி வேண்டமாட்டார்கள். அதை மாயையுட் பட்ட சாதாரண சம்சாரிதான் செய்வான்.

**யேன ரூபம் ரசம் கந்தம் சப்தான்**
**ஸ்பர்ஸாம்ச மைதுனான் |**
**ஏதேனைவ விஜானாதி கிமத்ர பரிஸிஷ்யதே |**
**ஏதத்வை தத் ||**

3. எந்த ஆத்மாவின் ஆற்றலால் ஜீவன், உருவம், ருசி, சத்தம், இந்திரிய சுகங்கள் இவற்றை எல்லாம் நுகர்ந்து

அறிகிருனே அந்த ஆத்மன் அறிய இயலாத பொருள் இந்த உலகத்தில் என்ன இருக்கிறது? இதுதான் அது. (அதாவது நீ அறிய விரும்பிய பொருள்.)

ஒரு தூர தர்சினியை எடுத்துக்கொள்ளலாம். அது தானே எந்தக் கிரகம் அல்லது நட்சத்திரத்தின் போக்கைக் கண்டு புரிந்து கொள்ள முடியுமா? அதை உபயோகப்படுத்துகிருனே அவனல்லவா ஆகாயத்தில் இருக்கும் கிரகங்களைப் பார்க்கிருன். அதே போல மனிதனுடைய ஞானேந்திரியங்கள் உபகரணங்கள் மட்டுமே! ருசி, நாற்றம், சத்தம், தோற்றம் ஊறு முதலிய உணர்வுத் தூண்டுதல்களைப்பெற உள்ளே ஆட்சிபுரியும் ஓர் ஆற்றல்கொண்ட ஒன்றுதான் இந்த உபகரணங்களை உபயோகிக்கிறது.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் அந்த ஆற்றல்தான் அதாவது நம் கண்கள் பின்னுல் இருந்து பார்ப்பது, காதுகளை உபயோகப்படுத்திக் கேட்பது, மூக்குக்குப் பின் இருந்து நுகர்வது, நாக்கில் அமர்ந்து ருசி பார்ப்பது, தோலில் இருந்து தொடுவதை உணர்வது எல்லாம் அந்த ஆத்மன், 'நான்' என்று நாம் பேசுகிற அந்தத் தத்துவம்.

மைதுனன் : (இந்திரிய சுகங்கள்) இந்தச் சொல் பன்மையில் உபயோகப்பட்டிருக்கிறது. அதிலிருந்தே நாம் வெறும் ஆண் பெண் சேர்க்கை இன்பம் மட்டும் குறிக்கப்படவில்லை என்று கண்டு கொள்ளலாம். ஆனுல், அது வெளி உலகிலிருந்து இந்திரியங்கள் மூலம் பெறும் எல்லா இன்பங்களையுமே கூட்டிச் சொல்கிறது.

'தர்மம் அதர்மம், காரணம் அதன் முடிவான காரியம் இரண்டுக்கும், இறந்த காலம் வருங் காலம் இவற்றிற்கும் அப்பால் உள்ளது எது?' என்பதே அந்தக் கேள்வி. அந்தக் கேள்விக்கு இங்கே நேரடியாகப் பதில் சொல்லப்படுகிறது. நம்முள் இருக்கும் உயிர்க்கேந்திரம் நம்முடைய உடல், மனம், புத்தி இவை செய்யும் செயல்களை எல்லாம் அடக்கி ஆள்கிறது. அதுதான் உண்மையின் தெய்வப்பொறி. 'நான்' என்கிற ஆன்ம தத்துவம். அது தன்மையில் நித்யமானதாயும் ஆதாரமானதாயும் இருப்பதால் அது மொழியின்

இவ்வண்ணம் கூறும் சக்திக்கு அப்பாற்பட்டதாய்த்தான் இருக்க வேண்டும். ஆகவே உபநிஷத முறைக்குத் தன்னை ஒத்தவாறு ஆக்கிக் கொண்டு யமதர்மராஜன், நம்மைச் சூழ்ந்து இருக்கும் செத்து ஜடமான பொருள் கூடுகளின் செயல்களின் மூலம் நம் முன்னே வீற்றிருக்கும் சத்தான இயக்கம் பொருந்திய தெய்வத்தன்மையின் இருப்பைச் சுட்டுகிறார். பிறகு அவர் நசிகேதனிடம், "இது அதுவேதான்" என்று தெளிவுறுத்துகிறார்.

நம் சாதாரண வாழ்க்கையில் பொருள்களை இது அது என்ற பிரதிப் பெயர்ச் சொற்களின் உதவி கொண்டு பேசுகிறோம். நாம் அந்த நாற்காலி இந்தப் பேனா என்று சொல்லும்போது நாற்காலி நம்மை விட்டுத் தொலைவில் இருக்கிறது என்றும் பேனா அதைவிட அருகில் இருக்கிறது என்பதும் தெளிவு. ஆனால் அதே பேனா, நம் சட்டையின் தூரத்தை ஒட்டிப் பேசும்போது 'அது' என்றாகிவிடும். அப்பொழுது 'அந்தப் பேனா' 'இந்தச் சட்டை' என்று பேசுவோம். அதே போல 'அந்த' உடல் இந்த 'மனம்' என்றும் அந்த மனம் இந்த புத்தி என்றும் சொல்லலாம், நாம் நமக்குள் நம் உடல் மனம் புத்தி இவைகளை ஒன்றுக்கொன்று ஒத்திட்டுப் பேசும்போது. ஆகவே அந்த 'நான்' என்கிற ஆன்மா நமக்குள் மிக உள்ளேயிருக்கும் சத்துவம் ஆனபடியால் 'இது' என்று பேசப்படுகிறது.

ஸ்வபனுந்தம் ஜாகிரிதாந்தம்
சோபௌ யேனனு பஸ்யதி |
மஹாந்தம் விபுமாத்மானம்
மத்வா தீரோ ந ஸோசதி ||

4. தீரன் (ஞானவீரன்) எந்த ஆற்றலின் உதவியால் 'நாம் கனவிலேயோ அல்லது விழித்திருக்கும்போதே, பார்க்கிறோமோ அதுவே எங்கும் நிறைந்து விளங்கும் ஆத்மன்!' என்று எப்பொழுது அறிவானோ அதற்குப்பிறகு அவன் துயர் அடைவதில்லை.

முதல் மந்திரத்தில் நாம் பார்த்தோம். இந்திரியங்களின் மூலம் நாம் அறியும் விழிப்புலகம் உள்ளே இருந்து உடலில்

ஆட்சி புரியும் புத்திச் சக்தினால்தான், உயிர் நாடியான ஆற்றலினால்தான் சாத்தியமாகிறது. எந்த உடலிலாவது உயிர் இல்லாதபோனால், அவன் மிகப் பெரிய உதாரகுண மகாத்மாவாயிருந்தாலும் சரி, புத்திசாலியான விஞ்ஞானியானாலும் சரி உணர்ச்சிப் பிழம்பான கவியாயிருந்தாலும் சரி, திறன் பெற்ற ஓவியக்காரனாயிருந்தாலும் சரி, யாரும் உடலை உயிர் விட்டுப் போன பிறகு ஒரு வேலையும் செய்ய முடியாது. நாம் ஏற்கனவே பார்த்தோம், நம்முள் இருக்கும் புத்தி தத்துவம் அதாவது ஆத்மன்தான் நம்முடைய விழிப்பு நிலையில் விழிப்பு நிலை உலகத்தின் அறிவை விளக்கம் பெறச் செய்கிறது, என்று.

இங்கே கனவு என்றால் என்ன என்று அனுபவித்து உணராதவர் ஒருவரும் இருக்க முடியாது. இப்பொழுது நீங்கள் ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொள்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதை எப்படிப் படிக்கிறீர்கள்? எழுத்துக்கள் வார்த்தைகள் முதலியன புலப்பட்டு வாசிக்க ஏதுவாகும்படி ஒரு வெளிச்சம் வேண்டாமா? இரவு நேரம் என்றால் நீங்கள் சந்திர நிலவொளியில் படிக்கலாம். இருட்டு இரவில் நட்சத்திர ஒளியில் படிக்கலாம். மேகம் சூழ்ந்து நட்சத்திரமும் தோன்றாத கும்மிருட்டில் நெருப்பின் ஒளியைக் கொணர்ந்து அதில் படிக்கலாம். சுருங்கக் கூறின் ஏதாவது வெளிச்சம் இல்லாமல் பொருள்களைப் பார்க்க முடியாது இருந்தும் நாம் எல்லோரும் கனவுகளைக் காண்கிறோம். இந்தக் கனவுலகம் நிச்சயம் நம்முள்தான் இருக்கிறது. நாம் பார்க்கிறோம். அவை புலப்படும் விஷயங்கள். அப்படியானால் நம் மனவெளியில் உள்ள அந்த உட்பொருள்களை விளக்கம் பெறச்செய்ய ஏதாவது ஒளி வேண்டும். தர்மராஜன், "கனவு உலகையும் நமக்காக விளக்கம் பெறச் செய்வது அதே தெய்வ அறிவொளிதான்; நம்முள் தலைமை புரியும் நம் 'உண்மைத் தன்மை' தான் என்று விளக்குகிறார்.

மஹாநந்தம் விபும். *(பெரியவர், எங்கும் நிறைந்தவர்)* அந்தத் தெய்வ உணர்வின் எல்லை நிலையில் பூர்ணமடைந்த ஒருவன் தன் ஆத்மாவுடன் தன் இணைப்பை நிலைநிறுத்துகிறான். உடனே தானும் பெரியவன், எங்கும் நிறைந்தவன் என்று

அறிந்து கொள்கிறன். ஏனென்றல் ஜீவனுடைய ஆத்மாவும் பரமாத்மாவும் ஒன்றேதான்.

பூர்ணமடைந்த (நிறைவு கொண்ட,) மனிதன், தன்னைப் பற்றிய தப்புக் கருத்துக்களை யெல்லாம் மாற்றிக்கொண்டு தானேதான் தன்னுள் இருக்கும் அந்தச் சுத்த சத்துவ உணர்வு என்று அறிந்துகொண்ட பொழுது, நிறைவின் பரம உணர்வைக் கொண்டவனுகிறன். அந்தச் சமயத்தில் அவன் இந்திரியங்கள் வேண்டும் புலப்பொருள் எதையும் இனி விரும்பமாட்டான். அப்படிப் பூர்ணத்வமடைந்த மனிதன் உலகில் நடமாடும் தெய்வ மனிதன். மனிதன் கண்ட மதங்களுளெல்லாம் சிறந்த மதமான ஹிந்து மதம் காட்டும் குறிக்கோள் இதுவே. வேதாந்த மதம் மனிதனைத் தன்னைத்தான் அறிந்து தெய்வத்துக்கு மாறுபட்டவனல்ல, என்று கண்டு பிடித்துக் கொள்ளச் சொல்கிறது. ஒரு மனிதன் இதைச் சிந்திக்கப் பெற்று நீங்காது தெய்வ உணர்வில் வாழ்வானேயானுல் கண்டிப்பாய் அவனை ஒரு துன்பமும் அணுக முடியாது.

ய இமம் மத்வதம் வேத
ஆத்மானம் ஜீவமன்திகாத் |
ஈஸானம் பூதபவ்யஸ்ய ந ததோ விஜுகுப்சதே |

ஏதத்வை தத்

5. தேனைப் பருகுகிறவன், உயிரை நிலைக்கச் செய்கிறவன் இறந்தகாலம் வரும் காலம் இரண்டுக்கும் பிரபுவான இந்த ஆத்மாவை எவன் மிக நெருங்கியிருப்பதாக அறிகிறனே அதற்குப் பிறகு அஞ்சுகிறதில்லை. இதுதான் அது.

அப்படி நிறைவு அடைந்த மனிதன் கண்ணீர் சேவல்களின் மூலச் சுனைக்கும் அப்பால் போகிறன் என்பது மட்டுமல்ல.

இந்த மந்திரம் அவன் பயமற்ற ஓர் உலகத்துக்கே சென்று விடுகிறன் என்று உறுதி கூறுகிறது.

மத்வதம்: (தேனைச் சுவைப்பவன்) தேன் என்பது ''நான்'' என்ற மத்தியப்புள்ளி உடைய ஜீவன்கள் செய்த மதிப்புக் குகந்த நற்செய்கைகளின் பயன்களைச் சொல்லுகிறது. தயவு, கருணை, அன்பு முதலியன காட்டிப் பழைய ஜன்மங்களில்

செய்த நற்செய்கைகளின் பயனைச் சேர்ந்த நல்ல பயன்கள் நல்ல அதிர்ஷ்டங்கள், பாக்கியங்களை அவன் அனுபவிக்கிறான்.

இந்தக் கூற்று அப்படியே சொற்பொருளில் பார்த்தால் வேதாந்தத்தின் தத்துவத்தின் இழைக்கே எதிர்த்துப் பேசுவது போல் தோன்றலாம். ஏனெனில் ஆத்மா செய்வதுமில்லை அனுபவிப்பதுமில்லை. ஆத்மாவை அனுபவிப்பவன் என்று கொண்டோமானால், அந்தச் சுத்த உணர்வாகிற இரண்டற்ற நிலையில் என்றும் சாசுவதமாய் அனுபவிக்கிறவனை நீக்கி அனுபவிக்கிறதற்கென்று என்ன இருக்கமுடியும்?

ஆத்மா என்பது நாம் செய்யும் சரியான வேலைகள் தப்பான செயல்கள், மதிப்புக்குகந்த செயல்கள் அல்லாத கருமங்கள் இரண்டு வகையையுமே விளக்கம்பெறச் செய்கிற 'புத்தி'யாகும். நம் இன்பம் துன்பம் இரண்டையுமே ஒளி பெறச் செய்கிற விளக்கும் அதுவே. சூரியன் ஓர் இடத்தில் நடக்கும் கொலைக்கும் வெளிச்சம் தரலாம். அதே சமயத்தில் வேறு இடத்தில் நடக்கும் வேள்விக்கும் வெளிச்சம் தரலாம். ஆனால் சூரியன் கொலையில் சிந்திய இரத்தத்தால் பாவம் கொள்வதில்லை. யாக மந்திரத்தால் பரிசுத்தனாகிறான் என்பதுமில்லை. அதேபோல ஆத்ம சைதன்யம் என்பது 'நான்' என்று மயங்கும் ஜீவன் தன்னை மறந்த வாழ்வு வியாபாரத்தில் செய்த எல்லாச் செய்கைகளுக்கும் தன் உணர்வைத் தந்து நிற்கும் சுத்த அறிவே தான்!

ய : பூர்வம் தபஸோ ஜாதமத்ப்ய: பூர்வமஜாயத |
குஹாம் ப்ரவிஸ்ய திஷ்டந்தம் யோ பூதேபிர்
வ்யபஸ்யத ‖ ஏதத்வை தத் ‖

6. ஐந்து இந்திரியங்களுக்குள் அமர்ந்திருக்கும் அவனை (பிரம்மதேவனின்) தபஸிலிருந்து பிறந்த அவனை, ஜலங்களுக்கு முன்னால் சிருஷ்டி செய்யப்பட்ட அவனை இதயத்துக்குள் புகுந்து அங்கே குடிகொண்ட அவனை எவன் பார்க்கிறானோ அவன்பிரும்மத்தைப் பார்க்கிறான். இது தான் அது. (நீ அறிய விரும்பியது.)

உபநிஷத இலக்கியங்களில் சிருஷ்டியைப் பற்றிய வாதம் சிக்கல் நிறைந்தது. நவீன புத்தகங்களில் நுனிப்புல் மேய்கிறவர்

களும், உபநிஷதங்களை அவசரமாகப் படிக்கிறவர்களும். "தானுகத் தோற்றம் பெறும் அறிவினுல் காணப்பட்ட முடிவுகள் சரியல்ல; அது இந்தப் புனித கிரந்தங்களிலிருந்தே விளங்குகிறது. உலகம் பிறந்த கதையை விளக்கும் கருத்துக்கள் ஒன்றுக்கொன்றுமுரணுனவகையில் இவற்றில் கூறப்பட்டிருக்கின்றன!" என்றெல்லாம் சொல்கிருர்கள். சிருஷ்டி நடாத வகையை விவரிப்பதில் எந்த இரண்டு உபநிஷதங்களும் ஒத்துக்கொண்டதில்லை. ஒவ்வொரு உபநிஷதமும் அதனதன் வகையில் கவரும் வண்ணம் ஒப்பற்ற முறையில் ஒரு வழியையும், ஒரு போக்கையும் எடுத்துச் சொல்கிறது. ஒவ்வொன்றும் படிப்பதற்கு ரசமாக மட்டும் இல்லாமல் மற்ருெரு உபநிஷதத்தை எடுத்து அதில் வெளியிடப்பட்டிருக்கும் மற்ருெரு முறையைப் படித்து அறியும் வரை இது முற்றிலும் சரி என்று முழுவதும் திருப்தி அடையும் வண்ணம் அமைந்திருக்கிறது.

உண்மையை அறிந்த ரிஷிகள் இந்தச் சிருஷ்டி விளையாட்டைப் பிரமாதமாகக் கருதியிருந்திருக்க முடியாது. அவர்கள், இந்தத் தோற்றம் மனிதன் மனது சிருஷ்டித்த மாயை என்று ஞான நிலையில் நன்கு உண்மையாக நம்பினுர்கள். நம்முடைய கனவுகள் எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மைதான் இந்த உலகமும். அதே சமயம் ரிஷிகளுக்குத் தங்களிடம் வந்த சாதகன் சம்பந்தப்பட்ட வரை அவன் இருக்கும் அறியாமை நிலையில் அவன் மனதே ஏற்படுத்தின இந்த மாயைத் தோற்றங்களும் உண்மை என்றே அவன் நம்புவான் என்றும் தெரியும். ஒவ்வொரு சிடனையும் மெதுவாக ஜாக்கிரதையாக அவன் குருவிடம் வந்த சமயம் இருந்த நிலையிலிருந்து ஞானத்தின் உயர்ந்த தளங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது.

மீண்டும் எந்த இரண்டு மாணவர்களும் ஒரே மாதிரி மனத்தரம் கொண்டவர்களாக இருப்பதில்லை. பண்பாடு, பாங்கு, திறமை எல்லாம் மாறியிருக்கின்றன. ஆசிரியர் மாணவன் தன்மையைப் பொறுமையுடன் நன்கு கவனித்து அறிகிருர். அறிந்து அவன் மனத் தரத்துக்கு ஏற்றவாறு வகைப்படுத்துகிருர்.

ஆனுல் இங்கே உபநிஷதம் ஆத்மாவை அதன் சந்தர்ப்பங்களால் மாறிய நிலையிலேதான் நற்செய்கைகளின் பயன்களை

அனுபவிக்கிறவனாகச் சொல்கிறது. நாம் ஏற்கனவேயே இந்த உடல் மனம் புத்தி என்ற உபகரணங்கள் உயிரற்றவை என்று அறிந்து கொண்டிருக்கிறோம். ஏனெனில் அது ஜடப் பொருள் களாலானது. நம்முள் இருக்கும் உயிர்தான் இவற்றிற்கும் வாழ்வு பெற்றது போன்ற ஒரு நிலையை அளிக்கிறது.

இந்தக் கருத்து தெளிவாக ஓர் எடுத்துக் காட்டைக் கொள்ளலாம். கண்ணாடி பல்புக்கோ அல்லது அதற்குள் இருக்கும் பிலமெண்ட் என்ற சிறிய கம்பிக்கோ இருட்டறையில் உள்ள பொருள்களைத் தெரியவைக்கும் ஒளி கிடையாது. ஆனால் அந்தக் கம்பி மூலம் தகுந்த அளவு மின்சாரம் பாய்ச்சப்படு மானால் பல்புக்கு அறைப் பொருள்களைத் தெரியவைக்கும் ஒரு தனியாற்றல் வந்துவிடுகிறது. உண்மையில் மின்சாரம் தனி நிலையில் பொருள்களுக்கு ஒளி தரவில்லை. இருந்தும் நாம் மின்சாரம் அறைக்கு ஒளி தந்ததாகத்தான் அன்றாடப் பேச்சில் பேசுகிறோமா இல்லையா? அதேபோலத்தான் ஆத்மா செய்கைகளின் பயனை நுகர்கிறவன் என்பதும் உடல் மனம் புத்தியினால் சேர்ந்து மாறிய அதன் நிலையைத்தான் இங்கே குறித்திருக்கிறது.

ஆத்மாவை அறிந்தவன், "இனிப் பயப்படமாட்டான்." ராகம் (விருப்பப்பிடிப்பு) இருக்கும் இடத்தில் பயமும் இருக்கும். சென்ற மந்திரத்தில் நாம் பார்த்தபடி நிறைவடைந்த ஜீவன் ஆசை கொள்ளாத நிலையை அடைந்து விடுகிறான். அவனுக்கு உலகில் எந்த விஷயத்திலும் பிடிப்புக் கிடையாது. ஆகவே அவனிடம் பய உணர்வும் இருக்க முடியாது. அவன் ஞான நிலையை அடைந்து இந்தக் கனவு உடலின் நிழல் வெற்றுத் தன்மையைப் புரிந்து கொள்கிறான். எனவே அவன் சாவுக்கும் அஞ்சுகிறதில்லை. ஏனெனில் சாவு என்பது நாமாக ஏற்படுத்திக் கொண்ட பூச்சிக் கூட்டுச் சூழலிலிருந்து தப்புவதுதான் என்று அவனுக்குத் தெரியும். அவனுக்கு உடலிலிலும் பிடிப்புக் கிடை யாது. உடலுணர்வை விட்டு அவன் முற்றிலும் நீங்கி உயர்ந்து விடுகிறான். இது தான் நீ கேட்ட அந்தப் பிரும்மம்.

அந்த மஹான்களான ரிஷிகள் ஒவ்வொரு சீடனுக் கும் இந்த மாய உலகத்தைப் பற்றிய ஒவ்வொரு "புராண"

விளக்கத்தைத் தருகின்றனர். உள்ளபடி இல்லாத ஓர் உலகத்தைப் பற்றித் தாங்கள் தந்த விளக்கங்களை அவர்கள் விளையாட்டாகவே சொன்னார்கள். கொடுத்த விளக்கங்கள் எப்படி இருந்தாலும், விவரிக்கப்பட்ட முறை எதுவாயிருந்தாலும் ஒவ்வொரு ஆசிரியரும் தன் சிடனைக் கடைசியில் அந்தச் 'சுத்த உணர்வு' நிலைக்கு அழைத்துச் சென்றார்கள். அந்த நிலையின் சுத்தத் தன்மையிலிருந்து பார்த்தபோது இந்த சிருஷ்டி உண்மையில் ஏற்பட்டிருக்கவில்லை; ஜீவன் மனத்தில் எழுப்பிய மாய உலகமே என்று அவன் புரிந்துகொண்டான்.

நம் கயிற்றில் தோன்றும் பாம்பின் மாயையை விளக்க நேர்ந்தாலும் கடிக்கப்பட்டபின் தன்மைக்கு ஏற்றவாறுதான் நமக்கு விளக்கம் தரவேண்டியிருக்கும். பண்பாட்டுக்கு ஏற்றவாறு மாறும். 'பாம்பு கடித்துவிட்டது' என்று எண்ணுகிறவனுக்கு உகந்த வகையில்தான் நாமும் நம் விளக்கத்தைக் கூட்டியோ குறைத்தோ மாற்றியோ சேர்த்தோ சொல்லவேண்டும்.

இந்த மந்திரத்தில் சிருஷ்டிதத்துவத்தைப் பற்றிய சில அவசரக் குறுக்குக் குறிப்புக்கள் மட்டுமே இருக்கின்றன. இந்த விஷயம் மற்ற உபநிஷதங்களில் மிகவும் விரிவாக விளக்கப் பட்டிருக்கிறது.

அந்த சமஷ்டியில் பரம சத்துவமான பிரும்மம் இரணிய கர்ப்பமாகும். வியஷ்டி (அதாவது தனி உலகில்) ஜீவனாகும் இந்த இரண்டு நோக்குகளிலும் பிரும்மத்தை அறிந்தவன் உண்மையை அறிந்தவனாகும்.

அத்ப்ய பூர்வம்: (ஜலங்களுக்கு முன்பே):— இரணிய கர்ப்பர் அல்லது அதித 'முழுமனது' ஐந்து மூலதத்துவங்களுக்கு முன்பே பிறந்தது. இங்கே ஜலம் எல்லா மூலப் பொருள்களையுமே குறிக்கிறது. ஆகாயம் (வெளி) அந்த முழு மனத்தில் இருந்து எழுந்த ஸ்தூலத் தோற்றமாம்.

தபஸ: (தபஸ் மூலம் அதாவது ஞானத்தின் மூலம்) வேறு வேறு உபநிஷதங்களில் சிருஷ்டியின் முறைகளை விவரிக்கும் பகுதிகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்று, அந்தப்

பரமன் பலராக ஆகவேண்டும் என்று முடிவு செய்தான். பலர் வந்தனர். எல்லாம் ஆயினர். இந்த மந்திரத்தில் அந்தக் கருத்துத் தான் எதிரொலிக்கின்றது.

சுருங்கக் கூறின் இந்த மந்திரம் ஒரு சாதகன் வியஷ்டி, சமஷ்டி இரண்டிலுமே அரியாத் தத்துவமாக நிற்கும் அந்தப் பரம சத்துவத்தை உணர்கிறான் என்று கூறுகிறது.

பிரும்மம் அவித்தை ஏற்படுத்தும் மாறுதலினால் ஜீவனாக விளங்குகிறான். மாயையின் ஏற்பாட்டினால் ஹிரண்யகர்பனாக விளங்குகிறான். இந்த மாற்றும் ஏற்பாடுகள் நின்றால் ஹிரண்ய கர்பன் ஜீவன் இரண்டுமே அந்த உயர்ந்த பிரும்மமாகி விடுகின்றனர். நீ நம்மைக் கேட்டது இதுதான். இதுவே அது.

யா ப்ராணேன ஸம்பவத்யதிதிர்தேவதாமயி |
குஹாம் ப்ரவிஸ்ய திஷ்டன்தீம் யா பூதேபிர்வ்யஜாயத ||
ஏதத் வை தத் ||

7. பிராணனுடன் தேவர்களாகப் பிறந்தவன், இதயத்தில் புகுந்து அங்கே வசிக்கிறவன், மூலப் பொருள்களுடன் பிறந்தவன் எவனோ அவனை அறிபவன் பிரும்மத்தையே அறிகிறான். இதுவே அது.

இங்கே பிராணன் ஹிரண்யகர்பனைக் குறிக்கிறது. ஆகவே இதன் பொருள்: "பிராணன் அல்லது ஹிரண்ய கர்பனாக எவன் பிறந்தானோ" என்பது ஆகும்.

தேவதர்மயீ: (தேவர்களாக அல்லது தேவர்கள் உருவத்தில் தேவர்களின் ஆத்மாக்களாக) இங்கே தேவதைகள் இந்திரியங்களை ஆட்கொண்டிருக்கும் தேவதைகள் குறிக்கப் பட்டிருக்கின்றனர். இந்திரியங்களில் வியாபார சக்திக்கு பிராணன்கள் (உயிர் வாயுக்கள்) தாம் உயிர் தரும் சாரம்.

அதிதி (சாப்பிடுகிறவன், உண்கிறவன்) அவன் தான் இந்த உலகத்தின் எல்லாவற்றையும் அனுபவிக்கிறவன். ஏன் என்றால் அவன்தான் வியஷ்டி உலகம் சமஷ்டி உலகம் இரண்டிலும் உயிர் அல்லது பிராணன் அல்லது 'புத்தி'யாகும், ஒவ்

வொரு உயிர்த் தோற்றமும் அனுபவிக்கும் இன்பங்கள் எல்லாம் வியஷ்டி மனது அல்லது சமஷ்டி மனதில் சுவடுபெற்று இன்பமேயாகும். இதுதான் (நீ கேட்ட) பிரும்மம்.

அரண்யோர்நிஹிதோ ஜாதவேதா கர்ப இவ
சுப்ருதோ கர்பிணீபி: |
திவே திவ ஈட்யோ ஜாக்ருவத்பிர் ஹவிஷ்மத்பி :
மனுஷ்யேபி ரக்னி: ||
ஏதத் வை தத் ||

8. சூல் கொண்ட பெண் கர்ப்பத்தைக் காத்து வைப்பது போல் இரண்டு கட்டைகளிடையில் வைக்கப்பட்ட அக்னி 'விழித்த' மனிதர்களாலும் அவியளிப்பவர்களாலும் பூஜை செய்யப்படுகிறது. இது அதுவே.

ஞானியின் பிரும்மமும் கிருஹஸ்தர்களின் அக்னியும் ஒன்றே. எந்தக் கருத்தில்? எல்லா பூஜையுமே ஆசீர்வாதத்தின் மூலச் சுனைக்கே சென்றடைகின்றது. அந்த மூலச்சுனைதான் பரம தத்துவம்.

வேத யக்ஞங்களில் நெருப்பு கனிந்திருக்கும். கரித்துண்டி லிருந்தோ அல்லது நவீன விஞ்ஞான வசதியிலிருந்தோ அல்லது சிகரெட் கொளுத்தும் யந்திரத்திலிருந்தோ அல்லது நெருப்புப் பெட்டியிலிருந்தோ கொளுத்தப்பட்டதில்லை. யாகங்களில் பிரதிஷ்டை செய்வதற்கான அக்னி இரண்டு கட்டைகளைக் கடைந்து பெறப்பட்டு வந்தது. அதாவது கிண்ணம்போல் ஒரு கட்டையில் உருளை வடிவமுள்ள ஒரு கட்டையை வைத்துக் கடைந்து நெருப்புப் பற்றவைக்கப்பட்டது. ஒரு ருத்விக் அந்தக் குழியில் சொருகிய உருளைத் தடியை அமுக்கிக் கொள்வார். மற்றொரு பிராமணர், நிற்கும் தடியில் கயிற்றைச் சுற்றி அந்த மரக்கிண்ணத்தில் கடைவார். சுழலும் கட்டையை அமுக்கி நிற்கும் துண்டுக்கு உத்தராரணி என்று பெயர். கீழேயுள்ள துண்டுக்கு அதராரணி என்று பெயர்.

அதராரணியில் குழிக்கருகே கொஞ்சம் பஞ்சை வைப்பார்கள். கடையப்படுவதால் மரத்திலிருந்து நெருப்புப் பொறி எழும். அந்தக் குட்டில் பஞ்சு பற்றிக்கொள்ளும்.

இந்த நெருப்பு ஹவன குண்டத்தில் பாதுகாக்கப்படுகிறது ஒருமுறை எழுப்பிய நெருப்பைப் பிறகு எப்பொழுதும் அணைய விடுவதில்லை, பூர்ணாஹுதி முடியும்வரை அதைக் காப்பாற்றி ஜ்வாலையுடன் வைத்துக் கொண்டிருப்பார்கள். ருத்விகர்கள் அந்த நெருப்பைத் தாயின் அன்பு மிருதுத்தன்மை ஜாக்கிரதை முதலியவற்றுடன் காப்பாற்றும் அழகு சூல்கொண்ட தாய கர்ப்பத்தைக் காப்பதுபோல் என்ற உவமை மூலம் நன்கு வெளிக்கொண்டு வரப்பட்டிருக்கிறது.

சாதகர்கள் 'ஓம்' என்றதன் குறிப்புப் பெருமைகளைப் பற்றித் தியானம்செய்து அந்தப் பரம்பொருளைப் பூஜித்தார்கள். கிருஹஸ்தர்கள் அதே தத்துவத்தை அதன் தோற்றத்தின் சத்துவப் பொருளாய் நிற்கும் அக்னியைப் பூஜித்தார்கள்.

பூஜை என்பது புலப் பொருள்களின் ஸ்தூலத் தளத்தி லுள்ளது. ஆகவே அதற்கு ஒரு சாய்கால் வேண்டும். அது ரிஷிகளுக்கு ஓம் மூலம் கிடைத்தது. கிருஹஸ்தர்கள் அதன் அடையாளமாக அக்னியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஓம், அக்னி இரண்டின் பெயர்களும் உருவங்களும் எடு பட்டுவிட்டால் சுத்த சத்வம், அதாவது பரம உண்மைத் தத் துவம், இரண்டு சாய்கால்களுக்கும் ஆதாரச் சுவர் ஒன்றாகி விடுகிறது. எனவேதான் உபநிஷதம் ரிஷிகள் கிருஹஸ்தர்கள் இரு வகையினரும் பூஜிக்கும் தத்துவம் ஒன்றேதான் என்று சொல்கிறது. இதுதான் (நீ கேட்ட) அது.

யதஸ்சோதேதி சூர்யோ அஸ்தம் யத்ர ச கசசதி |
தம் தேவா: ஸர்வே அர்பிதாஸ்தது நாத்யேதி கஸ்சன ||
ஏதத் வை தத் ||

9. சூரியன் எதிலிருந்து எழுகிறதோ. எங்கே மறை கிறதோ அதன் மேல்தான் எல்லா தேவதைகளும் அர்ப்பணிக் கப்பட்டிருக்கிறார்கள் (தங்குகிறார்கள்) அதற்கப்பால் ஒருவரும் போவதில்லை. இதுவே அது.

எல்லா வடிவமுள்ள பொருள்களும் ஆரம்பமும் முடிவும் கொண்டுள்ளன என்று கவனித்திருக்கிறோம். அநித்யப்

பொருள்கள் பிறவி எடுக்கின்றன. பிறக்கும் ஒவ்வொன்றும் ஒரு காலம் இருந்துவிட்டு இறந்தேயாக வேண்டும். நவீன கால வான் ஆராய்ச்சியாளர்களும், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், நாம் இருக்கும் இந்த பூமி எல்லாமே பிறந்தவை ஆகவே அவை பல கால வரைகளில் ஒன்றுமில்லாமல் மறைந்துவிடும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

உபநிஷத ரிஷிகள் சூரியன் தோற்றம் கொள்ளும் காலத்தில் உதயமாகும் பொழுது எதிலிருந்து எழுந்து, தன் தோற்றங்களை எல்லாம் சுருக்கி இழுத்துக்கொண்டு எதற்குள் மறையுமோ அந்தச் சார உண்மை சுத்த சத்துவ நிலையே என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார்கள்

அந்த நித்தியப் பரம தத்துவத்தில், சுத்த தத்துவ நிலையில் தான் எல்லா தேவதைகளும் தங்கியிருக்கிறார்கள். தேவதைகள் என்ற சொல் சுவர்க்கவாசிகள் என்ற கருத்தில் இங்கே ஆளப்படவில்லை. வேதாந்தத்தில் பல இந்திரியங்களில் அதிதேவதைகளாக வீற்றிருப்பவர்களானபடியால் அவர்கள் தேவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அறியாமை கொண்ட தற்கால கல்லூரி மாணவர்கள் தாம் அறந்த விஞ்ஞானம் தந்த மருந்தற்ற கர்வ வியாதி காரணமாக இந்திரியங்கள், அவைகளை ஆட்சி நடத்தும் தேவதைகள் என்றெல்லாம் கேட்டுச் சிரிக்கலாம், இப்படிப்பட்ட அவமரியாதைப் பேச்சு அதிகம் கேட்கப்படுவதால் ஒரு நிமிஷம் இந்த விஷயத்தைப் பற்றி நன்கு யோசித்து இந்த நம்பிக்கைக்கு ஏதாவது ஆதாரம் உண்டா என்று பார்ப்பது நல்லதேயாகும்.

உபநிஷதம் சொல்லிய இந்தப் பேச்சின் கருத்தை நம் காலத்தில் வெளியான விஞ்ஞானம் கண்டுபிடித்த உண்மைகளின் ஒளியில் வைத்துப் பார்ப்போம். காதின் தேவதை ஆகாசம் என்று சொல்லப்படுகிறது. நம் தற்கால விஞ்ஞானிகள் சத்த அலைகள் வெளியில்தான் ஏற்பட்டுப் பரவ முடியும் என்று ஒத்துக்கொள்வார்கள். இடைவெளி இல்லை என்றால், சத்தம் எழாது, பரவாது. வெளி என்ற கற்பனைக்கு அப்பால் உள்ள உலகம் நாமறிந்தவரை தூக்க உலகம்தான். அங்கே கண்டிப்பாக சத்தம் புக முடியாது, இந்தக் கருத்தில் பார்த்தால் உப

நிஷத ஆசிரியர்கள் காதுக்குத் தேவதை ஆகாசம் என்று சொன்னதில் என்ன தப்பிதம்? ஒரு இருட்டறையில் நாம் என்ன தலைகீழாய் நின்று முயன்றாலும் இருட்டைத் தவிர நாம் ஒன்றையும் பார்க்க முடியாது. அறையில் விளக்கு ஏற்பட்டால் நாம் எல்லாவற்றையும் பார்க்கத் தொடங்கிவிடுகிறோம். எனவே பொருள்களுக்கு முன்பிருந்தும் கூட ஒளித் தெய்வத் தின் அருள் இருந்தால் ஒழிய நாம் அவைகளைப் பார்க்க முடி யாது. சுருக்கமாக ஒளியின் மூலம்தான் கண் என்ற கருவி செயல்பட முடியும்; ஒருகால் சில பிராணிகள் இருட்டில்கூடப் பார்க்கலாம். ஆனால் அப்படிப்பட்ட உதாரணங்கள் குறைவு. அப்படிப்பட்ட நிலையில் உபநிஷத ரிஷிகள் தங்கள் காலத்தில் வழங்கி வந்த மொழியின் காவிய நடையில் கண் என்ற கருவிக்கு ஒளிக்கெல்லாம் மூலக் களஞ்சியமான சூரியன் அதிதேவதை என்று சொல்லியிருந்தால் அதில் என்ன தப்பிதம் இருக்க முடியும்?

எனவே இந்த மந்திரம் தெளிவாக உரைக்கிறது. ஐந்து பெரும் மூலத் தத்துவங்கள் சுத்த சத்துவம் அந்தப் பரமாத் மாவை அண்டித்தான் இருக்கின்றன என்று. ஐந்து இந்திரியங் களின் தேவதைகள் அந்தப் பரமசத்யத்தின், சுத்த சத்துவத் தின் ஆரங்கள் போல்தான், அச்சில் தங்கும் ஆரங்கள்போல் தங்கி இருக்கின்றன. நடு அச்சு இல்லை எனின் தனித் தனி ஆரங்கள் தாங்கள் தங்கவும் முடியாது. சக்கரத்தை வலுப் படுத்தத் தங்களுக்குக் கேற்ற செயற் பாகத்தைச் செய்யவும் முடியாது. இது நாம் நன்கு அறிந்த விஷயமே!

ஐந்து மூலத் தத்துவங்களுக்கு அடிப்படையாக விளங்கும் இந்த உண்மைதான் நீ கேட்ட அது.

யதேவேஹ ததமுத்ர
யதமுத்ர ததன்விஹ |
ம்ருத்யோ : ஸ ம்ருத்யுமாப்னோதி
ய இஹ நாநேவ பஸ்யதி ||

10. இங்கே (உலமாகத் தோற்றம் கொண்டு) இருப்பது தான் அங்கே (பிரும்மமாய்) இருக்கிறது. அங்கிருப்பதுதான்

இங்கும் இருக்கிறது. இதில் பிரும்மத்துக்கும் உலகத்துக்கும் இடையே வேற்றுமையைப் பார்க்கிறவன் சாவிலிருந்து சாவுக்குப் போய்க்கொண்டே யிருக்கிறான்.

எல்லா அலைகளும் சமுத்திரமே. சமுத்திரம் மட்டும்தான் இருக்கிறது என்று சொல்லலாம். படத்திலோ, நடு நீளத்திலோ அல்லது வாலிலோ சரி, கயிற்றில் காணும் பாம்பில் உண்மை இருப்பு கயிற்றினுடையதுதான். உண்மையில் அலைகள் சமுத்திரம் தவிர வேறில்லை; பாம்பு கயிறு தவிர வேறில்லை. கானல் நீர்த்தோற்றம் பாலைவன மணல் வெளி தவிர வேறில்லை,

இந்தக் கருத்தில் இந்த மந்திரம் நம்மிடம் மட்டற்ற அன்பு கொண்டு அந்தப் பரம உண்மைக்கும் மாயைத் தோற்றங்களும் பெயர்களும் கொண்ட உலகத்தின் பின் நிற்கும் சத்துவ உண்மையும் ஒன்றே, வித்தியாசமில்லை என்று விளக்குகிறது. அடிப்படை உண்மையில்லாத (சத்துவம் இல்லாத) இடத்தில் வெளியாகும் தோற்றங்களின் உலகம் இருக்க முடியாது. காணப்படும் நிழல் தோற்றங்களுக்கெல்லாம் பின்னால் நாம் காண்பது நித்யமாக எங்கும் ஊடுருவி நிற்கும் உண்மையே. கதை துக்கத்தில் முடியலாம், இன்பத்தில் முடிவதாக இருக்கலாம், அல்லது இசை நிகழ்ச்சித் தொகுப்பாக இருக்கலாம். காட்டப்படும் படத்தின் கதை எப்படியிருந்தாலும், பார்ப்பவர்கள் கதையைப்பற்றிய ஒரு தொடர்ந்த கருத்தை, நிழலும் ஒளியும் மாறிமாறி ஆடும் போது தாங்கி நிற்பதற்கான அசையாத திரை ஒன்று இருந்தால் தான் பெறமுடியும். திரை இல்லை என்றால் கதை காட்டுவது என்பது இயலாத காரியமாய்விடும்.

சுருங்கச் சொல்லின், தன்னை அறிபவன் தன் வாழ்க்கையின் அந்தத் தலை சிறந்த தருணத்தில் அதாவது ஆன்ம ஒளிபெற்ற நிலையில் உலகைத் தாங்கி இயங்க உதவிபுரியும் அந்த உண்மைத் தத்துவத்தைப்பற்றிய ஒரு உயிர்கொண்ட உணர்வு இல்லாமல் உலகத்தைக் கற்பனையே செய்ய முடியாது. அந்த ஞானத்தை அடைந்த பிறகு, அவன் காட்சி மாறுகிறது. பிறகு அந்தத் தெய்வ மனிதனுக்கு மிகவும் பாதகமான பாபம் கூட எங்கும் நிறைந்திருக்கும் ஆத்மாவின் ஒரு செயலாகவே தோன்றுகிறது. அவன் எந்தச் செயலையும் இகழ்ந்து கண்டிக்கிறதில்லை; புகழ்ந்து

தூக்குகிறதுமில்லை. அவனுக்கு எல்லாச் செயல்களுமே பொய் தான். அதே சமயத்தில் அவை எல்லாம் அந்த 'மைய உண்மையை' நினைவூட்டும் கனமான ஞாபகமூட்டிகளே!

விஷயம் புரியாத இளைஞர்கள் இது விழுங்கத்தகாத உண்மையாயிருக்கிறதே என்று எண்ணலாம். கவ்வும் ஒரு உதாரணத்தின் மூலம் இதன் உண்மைக் கருத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

நாம் சில குருட்டாசை கொண்ட தந்தைகளைப் பார்த்ததில்லையா? மிகவும் மோசம், பொல்லாதவர்கள் அடங்காதவர்கள் உருப்படமாட்டார்கள் என்று முடிவான பிறகும் கூட அந்தமாதிரிக் குழந்தைகளை வைத்துக்கொண்டு இந்த உலகத்தில் இதுவரையும் என் குழந்தைகள் போல் பிறந்ததில்லை; இனியும் பிறக்கா! என்று பெருமையடிக்கிறதில்லையா அவர்கள்? அந்தத் தந்தைகளை நன்ருய்க் கவனியுங்கள். மற்ற குழந்தைகளைப்பற்றிய மதிப்பீட்டில் அவர்கள் புத்தி சிறந்தவர்களாயிருப்பார்கள். ஆனுல் தங்கள் குழந்தைகள் என்ருல் அவற்றின் குறைபாடுகளைக் காணக் கண் இருப்பதில்லை! அதைப்போல ஒரு தெய்வ மனிதன் ஒருமுறை எங்கும் கரந்து பரந்து நிற்கும் அந்த அழகைக் கண்டுவிட்டானுனல் ஆன்மாவின் பரிபூர்ண நிலையை அடைந்துவிடுகிருன். அதற்குப் பிறகு அவன் துன்பம், வலிக்கும் இடையேயும் ஆன்ம இன்பத்தையும் ஆனந்தத்தையுமே அனுபவிக்கிருன்,

சித்தியடைந்த சாதுவுக்கு, உயர உயர உயரும் காட்சியில் இங்கு இருப்பதெல்லாம் அங்கேயும் இருக்கிறது. அங்கு எது இருக்கிறதோ அதுவே இங்கும் காணப்படுகிறது. இன்னமும் இந்தக் கூற்றின் பொருள் உங்களுக்குப் புரியவில்லை என்ருல், கூற்று நின்று பேசும் தனம் கொடுத்த ஸ்தூலத்தன்மை கொண்ட உங்கள் மனதுக்கு மிகவும் எட்டாத உயரத்தில் இருக்கிறது என்றுதான் பொருள்.

எல்லாம் சரி. எதற்காக ஒருவன் இந்த ஒற்றுமையின் தெய்வக் காட்சியைக் காணவேண்டும்? இந்த மனிதனுக்கு அதனுல் என்ன லாபம்? தயாராகாதவர்கள் இந்த வித்தையில் வித்யா

ரம்பம்கூடச் செய்யாதவர்கள் இவர்கள் மனதில் இந்தக் கேள்வி கள் அல்லது இவற்றைப் போன்ற கேள்விகள் எழலாம். சுருதி அந்தமாதிரி மாணவர் மனத்தில் எழலாம் என்று இருக்கும் எல் லாக் கேள்விகளுக்கும் மிகவும் அன்புடனும் கருணையுடனும் பதில் சொல்கிறது. அந்தத் தாய் சொல்கிருள்; யார் வாழ்க்கை யின் இந்தப் பெரிய கடமைச் செயலைப் பூர்த்தி செய்யவில் லையோ. எங்கும் எந்த நேரங்களிலும் நித்தியமான சத்துவத் தின் சுந்தர தரிசனத்தைப் பெறவில்லையோ அந்த அப்பாவி த்வந்தவம் நிறைந்த உலகத்தில் உழல்வான்; மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்புச் சுழலில் விழுந்து சிக்கிக்கொள்வான்.

குறிப்பு என்ன என்ருல், அந்த 'ஒன்று' என்ற நிலையை தெய்வ நிலையை அனுபவித்தவன் மீண்டும், என்றும் நிற்காது சுழன்றுகொண்டேயிருக்கும் சம்சாரச் சங்கடமான சக்கரத் தில் சிக்கமாட்டான். அவனுக்குச் சாவு பிறப்பு, பிறப்பு சாவு என்ற குறுகிய தூர ஓட்டப் பந்தயத்தில் மீண்டும் மீண்டும் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.

மனஸைவேதமாப்தவ்யம்
நேஹ நாநாஸ்தி கிஞ்சன |
ம்ருத்யோ: ஸ ம்ருத்யுமாப்னோதி
ய இஹ நாநேவ பஸ்யதி ||

11. மனத்தினுல் தான் இது (பிரும்மம்) அடையப்படும். பிறகு இங்கே ஒரு மாறு பாடும் கிடையவே கிடையாது. இங்கே மாறுபாட்டைப் பார்ப்பவன் சாவுக்குச் சாவு அலைகிருன்.

நாம் ஏற்கனவே அறிந்தபடி ஆரியர்களுடைய காரியத் தில் கண்ணுன மனது வெறும் கருத்தளவில் சித்தாந்தம் பேசி மட்டும் திருப்தியடைந்ததில்லை. அது எவ்வளவு சிறந்து இருந்தாலும் சரியே! வேதாந்தம் சிறக்கக் கூறும் இலட்சி யத்தை நேரில் அடைய 'வாழ்க்கை வழி யொன்றைக் காட்டி ஞல் ஒழிய ஆரியன் அந்த வேதாந்தத்தை ஏற்றுக் கொண்ட தில்லை. ஆரியன், குணத்தின் உள் ஆவலைத் தணிக்கவும் தேசத்தின் குணத்துக்கேற்றவாறும் உபநிஷத், போன மந்தி ரத்தில் சொல்லப்பட்ட ஒரு வேதாந்த உண்மையைக் கூறிய

வுடனேயே. அந்த உண்மைக்காட்சியை அடைய காரியாம் சமான வழிகள் என்ன என்று தன் மாணவர்களுக்கு மெனக் கெடாமல் உடனே சொல்கிறது மனம்தான் தெய்வ அனுபவத் துக்கு உரிய சாதனம். இந்தக் கூற்று சுருதி ஏற்கனவே சொல்லிய கூற்றுகளுக்கு எதிரிடையாகச் செல்வது போல தோன்றலாம். ஏற்கனவே மனதையும் புத்தியையும் தாண்டி உயர்ந்தால் தான் ஆன்ம சாட்சாத்காரம் கிட்டும் என்று வலியுறுத்திச் சொல்லப்பட்டு வந்ததே?

உண்மையில் இது முரண்படும் எதிரிடைப் பேச்சு அல்ல. சுருதி அன்னை மனதுதான் தக்க வாகனம் என்று சொல்லும் போது அவள் கருத்து மனதைத் தக்க முறையில் பழக்க வேண் டும் என்பது தான். அடக்கி ஒழுங்கு படுத்தப்பட்ட மன தின் போக்குகளைக் குறைத்துக் குறைத்துக் குறைத்து பூஜ்யத் துக்குக் கொண்டு வந்து விட்டோமானால் அது தானே ஒடுங்கி விடும். 'மனதை ஒடுக்கும்' இந்த வழி முறை ''கொலை'' செய் தல்ல, 'தற்கொலை' செய்து பெறப்படுகிறது!. ரிஷிகள் பெரிய வராக இருக்கலாம்; அவர்கள் தந்த சாஸ்திரம் மிகக் உயர்ந்த தாக இருக்கலாம் என்றாலும் சாதகன் தானே முயற்சி செய்து தன் மனதை ஒடுக்க கற்றுக் கொண்டால் ஒழிய அவை என்ன செய்ய முடியும்?

மனத்தின் மூலம் தான் இது அடைய முடியும். ஆன்மீக விசாரணையின் ஆகாயத்தில் பறக்கும் மனத்தை நாம் தியா னம் மூலம்தான் ஒடுங்கி ஒன்றுமில்லாத தாகும்படி அடக்க முடியும். பீனிக்ஸ் என்று புராணங்களில் ஒரு பறவை உண்டு. அது தான் சாவுப்பாட்டைப் பாடிக்கொண்டே நெருப் பில் விழுந்து இறந்து போகும். அதன் சாம்பலிலிருந்தே மீண் டும் ஒரு பீனிக்ஸ் எழும் என்பார்கள். அதேபோல சாதகன் மனமும் தியானம் என்கிற சங்கீதத்தைப் பாடிக் கொண்டு தானே ஏற்றிய சிதையில் எரிந்துவிட வேண்டும். அந்த எரி சாம் பலிலிருந்து 'சகஜ அறிவு' என்கிற ஒரு சக்தி 'வரும்' அதன்மூலம்தான் சாதகன் கடைசியாக ஆன்ம சாட்சாத்காரம் செய்கிறான். மனது இவ் விதம் தியானம் மூலம் ஒடுங்கி ஜீவாத் மாவும் தன் உண்மைத் தன்மையை அறிந்து கொண்டவுடன் பிறகு ஒரு வித்தியாசமும் கிடையாது.

ஒரு உறுதியும் அழுத்தமும் தருவதற்காக சுருதி இங்கே உண்மை வழி நடக்கத் துணிவற்று இந்த வாழ்விலேயே வாழ்வின் இறுதிக் குறிக்கோளை அடைவதில் வெற்றி பெருத போனுல் என்ன நடக்கும் என்ற பயனை மீண்டும் எடுத்துச் சொல்கிறது. இங்கு மாறுபாட்டைப் பார்ப்பவன் சாவுக்குச் சாவு அலேவான் என்று சுருதி சொல்கிறது.

அங்குஷ்டமாத்ர: புருஷோ
மத்ய ஆத்மநி திஷ்டதி |
ஈசாநோ பூதபவ்யஸ்ய நததோ
விஜுகுப்சதே || ஏதத் வை தத் ||

*12.* அங்குஷ்ட (கட்டைவிரல் அளவு) ப் பிரமாணம் உள்ள புருஷன் உடலின் நடுவே வசிக்கிறன்; இறந்த காலம் இனிவரும் இறந்த காலம் எல்லாவற்றிற்கும் கடவுள். (அவனை அறிந்த) பிறகு பயப்படுகிறதில்லை. இதுவே அது.

சுருதி கூவிச் சொல்கிறது. ஜீவன் எல்லாம் தானே என்கிற உண்மையை மீண்டும் கண்டுபிடித்தால்தான் அவன் வாழ்க்கை போற்றக்கூடிய வெற்றியில் மலர்ந்ததாக ஆகும். இந்த சாதனை மனதை அடக்கி பூர்ணமாக ஒடுக்குவதால்தான் முடியும். இயற்கை ஆட்டங்கள் சந்தேகங்கள் ஆவல் தூண்டுதல்கள் இவை இருக்கும்வரை தான் மனம் இருக்கிறது. மனதில் எண்ணங்கள் எழவில்லை என்ருல் அதுவே 'மனமற்ற நிலை' தான். அந்த மனமற்ற நிலையை அடையத்தான் யோகி தன் அடக்கம் சுயக் கட்டுப்பாடு கொண்ட படிப்பு, ஒதுங்கியிருத்தல் இந்த முறையில் வாழவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல. அவன் புதிதாகக் கிடைத்த மனத்தின் சக்தியை யோசிக்கும் சக்திவரை ஒரே மையத்தில் குறித்த இடத்தில் நிறுத்திப் பழகவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது.

பக்தி மார்க்கத்தில் செல்கிறவர்களுக்கு ஒரு சாய்கால் இயற்கையாகவே கிடைத்து விடுகிறது. அவர்கள் வழிபடும் தெய்வம் பெயர் உருவம் கொண்டவராக இருக்கிருர். அவரைப் பற்றித் தியானம் செய்யவோ அதே வழி மனத்தைச் செலுத்தவோ சுலபமாகிவிடுகிறது.

ஹடயோகிகளுக்கு குண்டலினி சக்தி இருக்கிறது. கர்ம யோகிகளுக்கு, நாம் உலகத்தின் தலைவனை ஸ்ரீமன் நாராயண னுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறோம் என்ற மாறாத ஒரு ஞாப கம் துணையாக இருக்கிறது. ஞானயோகம் என்கிற குன்றுவழி நடக்கும் சிலருக்குத்தான் புத்தி பூர்வமாக உபயோகப் படுத்தக் கூடிய ஒரு துணை அல்லது சாய்கால் கிடைப்பது கடினமாயிருக்கி றது. அவர்கள் எதில் மனதை நிறுத்தி ஏகாக்ர சித்தத்தின் உயர்ந்த ஆற்றல்களை வளர்ப்பார்கள்?

ஆம். வேதாந்த சாஸ்திரங்களே வேதாந்தத்தின் சிஷ்யர் களின் தியானத்துக்கு ஆதாரம்தான். என்றாலும் சாதகன் தன் உள்ளேயிருக்கும் தெய்வப் பொறி, ஜீவாத்மாவைப்பற்றிய வேதாந்த யோசனையில் இறங்கு முன்னமே அப்படித் தியான நிலையில் இருக்கவேண்டிய அளவு தியான சக்தியை அடைந் திருக்கவேண்டுமே, ஏற்கனவே கிடைக்கவேண்டிய அந்தப் பழக்கம் இந்த மந்திரத்தில் சுருதி சொல்கிற முறையில் சித்த ரிக்கப்படுகிறது. அன்புக்கு இருப்பிடமான சுருதியன்னை இதயத்தின் நடுவே இருக்கும் புருஷனைத் தியானி. அந்தப் புருஷன் அங்குஷ்டப் பிரமாணமாய் (கட்டைவிரல் அளவில்) இருக்கிறான். என்று சொல்கிறாள்.

எங்கும் பரவி நிற்கும் உண்மைக்குக் கட்டைவிரல் அளவைக் கற்பித்து. சுற்றி அளவு சொல்லக்கூடிய இதயம் என்ற இடத் தில் அமர்த்தி விடுவது புனிதத்தன்மையை அவமதிப்பதாகும்! ஆம். ஆனால் சுருதி ஏன் இந்த விதம் கீழே இறங்கத் துணிந் தாள்? தன் குழந்தைகள் ஒரு சாய்கால் பெற்று ஞான உலகத் துக்குள் தவழ்ந்துவர எப்படியாவது கற்றுக்கொள்ளட்டும் என்ற பெரிய மனது அவளுக்கு.

இரண்டாவது வரி இதே உபநிஷதத்தின் 4-ம் வல்லி 5-ம் மந்திரத்தில் கூறியதையே கூறுகிறது. விளக்கத்துக்கு அங்கே பார்த்துக்கொள்ளவும்.

அங்குஷ்டமாத்ர: புருஷோ ஜ்யோதிரிவாதூமக:
ஈசானோ பூதபவ்யஸ்ய ச ஏவாத்ய ச உ ஸ்வ: ||

ஏதத் வை தத் ||

13. கட்டைவிரலளவுள்ள அந்தப் புருஷன் புகையற்ற நெருப்புப்போல் இருக்கிறான். பூதம் பவிஷ்யம் (சென்றது வருவது) இரண்டுக்கும் ஈசன் அவன்தான். இன்றும் இருக்கிறான் நாளையும் இருப்பான். இதுதான் உண்மையில் அது.

கட்டைவிரலளவுள்ள எந்தப்புருஷன் அல்லது ஆத்மாவைத் தியானம் செய்பவன் தன் இதயத்தில் ஜோதி அல்லது ஒளி உருவத்தில் பார்க்கிறானோ அவன் (அது) எக்காலத்தும் இறந்த நிகழ் வருங்காலத்தும் உள்ளது. இப்பொழுதும் எல்லா ஜீவன்களுள்ளும் இருக்கிறான். நாளையும் எல்லா ஜீவன்களுள்ளும் இருப்பான்.

சில சாதகர்கள் இந்தக் கருத்தை அப்படியே சொல்லளவில் எடுத்துக்கொண்டு தங்கள் இதயத்தில் கட்டைவிரலளவு ஜோதி பிரகாசமாய் எரிவதாகக் கற்பனை செய்து அதைத் தியானம் செய்கிறார்கள். அதுவும் வெகுகாலம் அப்படிச் செய்கிறார்கள். நேரடியாக இந்த சாதுவுக்கே அப்படிப்பட்ட ஒருவரைத் தெரியும். அவர் இருபத்து மூன்று வருஷங்கள் அவ்விதம் இந்த ஜோதியை எண்ணித் தியானம்'செய்தார். பிறகு ஒருநாள் இந்தச் சாதுவிடம் (சின்மயாவிடம்) வந்து, இந் நாட்களில் ஆன்ம தரிசனம் கிட்டவில்லையே, ஆன்ம வளர்ச்சித் துறையில் வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டதே என்று அங்கலாய்த்தார்.

இது ஒரே ஒரு எடுத்தக்காட்டு. அறியாமைகொண்ட சாதகர்கள் பலர் தங்கள் கீழற் கற்பனையில் உதித்த ஜோதியை ஆத்மா என்று எண்ணி ஏமாறுகின்றனர். உள்ளபடி வேதாந்த மார்க்கத்தில் மீண்டும் மீண்டும் சாஸ்திரங்களை வாசிக்காமல், மஹான்களுடன் சத்சங்கம் செய்யாமல் நடந்துசெல்ல முயலுவது ஆபத்துக்கிடமானதே! மஹான்கள் என்றால் ரேகை நிபுணர்கள், நக்ஷத்திரம் பார்த்துச் சொல்பவர்கள் பச்சிலை விற்பவர்களை எண்ணிச் சொல்லவில்லை.

பாவம், அப்படிப்பட்ட மஹாத்மாக்கள்தான் தற்சமயம் தெருவில் நமக்கு அதிகம் கிடைக்கிறார்கள். அவர்களை சர்வகலாசாலைகளிலிருந்து பட்டம் பெற்று வெளியேறும் அசடர் கூட்டங்கள் தேடித் திரியட்டும். உண்மையை நாடும் சாதகர்

கள். மதத்தைப் புத்திசாலித்தனமாய் வாழ்ந்து காண விரும்பு பவர் அப்படிப்பட்ட மஹாத்மாக்களை ரிஷிகளுடைய புனித தேசமான இதை விஷமாக்கும் மண் பூசிய குற்றவாளிகள் என்றே கருதுவர். நம்மிடையே தேசத்துக்கு நல்ல உண வளித்து அதன் மக்களுக்கு நல்ல வேலைதரும் அளவுக்குத் திறமையுள்ள அரசாங்கம் வந்துவிடுமானால், நம் சந்தைக் காட்சி களிலிருந்து இந்தப் பயங்கரப் பிராணிகள் அழிந்தேபோய்விடும்! அதுவரை தப்பமுடியாது என்பதற்காக அவர்களையும் நாம் சகித்துக்கொள்ள வேண்டியதுதான்.

கட்டைவிரலளவுள்ள ஜோதி, ரிஷிகளால் சாதகனுக்கு வேண்டுமே என்று தரப்பட்ட ஒரு தியான ஆதாரம்தான். ஆரம்ப நிலையில் அவன் அதன்மூலம் மனதின் தியானச் சக்தி களை அதிகரித்துக்கொள்ள முடியும். சிவனின் கல் உருவம் சிவனேயல்ல. அதைப்போல ஜோதியும் தியானம் செய்பவ னுக்குச் சாதனையில் மனதை நிறுத்த எனத் தரப்பட்ட ஒரு 'மூர்த்தி'யேயாகும். அது ஆத்மாவே அல்ல. ஒரு மூர்த்தியை ஒரு கோவிலிலிருந்து துரதிருஷ்டவசமாக யாராவது தூக்கிக் கொண்டுபோய் விட்டானானால் கடவுளே திருட்டுப் போய் விட்டார் என்று சொல்லக்கூடாது.

சாதகன் தியான சக்தியை நன்கு வளர்த்து விட்டானானால் பிறகு அவன் படிப்படியாக பல உபநிஷதங்களில் சுருதி உபதேசிக்கும் தியானத்தின் உயர்ந்த நிலைகளை அடைகிறான். கடைசியாக அவன் ஒளி ஆற்றல் ஞானம் இவற்றிற்கு மூல ஸ்தானமான ஆத்மாவும் தானும் ஒன்றே என்பதை அனுபவ பூர்வமாக உணர்கிறான்.

யதோதகம் துர்கே வருஷ்டம்
பர்வதேஷு விதாவதி |
ஏவம் தர்மான் ப்ருதக் பஸ்யன்
தானேவானுவிதாவதி ||

*14.* மலைத்தொடரில் பெய்யும் மழைநீர் மலைக்குஅடிவாரத் தில் பல இடங்களில் சிதறி ஓடுவதுபோலவே பொருள்களை தனித்தனி மாறுபட்டு நிற்பதாகப் பார்க்கிறவன் அவைகளின் பின்னாலேயே (என்றும்) ஓடுகிறான்.

மீண்டும் எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் திரும்பத் திரும்ப எடுத்து ஆளும் உபநிஷத மந்திரங்களுள் ஒன்றை நேருக்கு நேர் சந்திக்கிறோம்.

மனிதன் மனது என்பது உண்மையில் தெய்வீக சக்திகளுக்கும் மஹா மனித ஆற்றல்களுக்கும் உற்பத்தி யந்திரம் போன்றதே. இருந்தும் சாதாரண மனிதன் தன் மனதுக்கு எஜமானனாயில்லாமல் அதற்கு அடிமையாகவும் வேலைக்காரனாகவும் இருப்பதைப் பார்க்கிறோம். அதேபோல முக்கியமாக இந்த யந்திர யுகத்தில் வெளிபுலகத்திலும் மனிதனுக்கு ஒரு ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்று சொல்லலாம். மனிதன் இயந்திரங்களைத் தனக்கு வேலை செய்ய என்று கற்பனைசெய்து கண்டுபிடித்தான். ஆனால் இன்று இரும்பு இதயம் படைத்த அவற்றின் எப்பொழுதும் சுழலும் சக்கரங்களுக்குள் அடிமையாகிச் சிக்கித் தவிக்கிறான்.

உள்ளுலகத்தில் மனிதனுக்கு ஏற்பட்ட இந்த ஆபத்துக்குக் காரணம் அவன் தன் அறியாமை, மோகம் இவற்றின் காரணமாக தன் இதயத்தின் தூண்டுதல்களையும் மனதின் சிற்றின்ப எழுச்சிகளையும் அடக்கும் ஆற்றலை இழந்துவிட்டதுதான். மிகச் சிறந்த ஞானமும் ஆற்றலும் மனிதனுள் இருக்கிறது. அதை எல்லாம் அறியாமை மலையில் இருந்து பாயும் பல அருவிகளின் வழி செலுத்திக் கீழ்நோக்கிச் செல்லும் அந்தப் பாய்ச்சலிலேயே அந்த ஆற்றின் நீரை வற்றவைத்து விடுகிறான். இந்தச் செயல் ஒரு வழுக்கைப் பாறை மலையில் பெய்யும் மழையின் சாயல் உருவகமூலம் இந்த மந்திரத்தில் எடுத்துக் காட்டப்படுகிறது. மலையில் விழும் நீர் எல்லாவற்றையும் நன்கு திட்டமிட்டுப் பலமாகக் கட்டப்பட்ட ஓர் அணை மூலம் தேக்கி நலம் விரும்பும் ஒரே கால்வாய் மூலம் செலுத்த முடியுமானால் அதன் மூலம் நாம் எவ்வளவு பயனுள்ள காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். அதைப்போல மனிதன் வீணில் பாய்ந்து அழியும் ஆற்றலை விவேகத்துடன் அடக்கித் தேக்கிக் கெட்டிக் காரத்தனமாக நல்வாழ்வு உயர்ந்த சிந்தனை இவற்றின் வகைகளில் செலுத்த முடியுமானால் அதே உள் உபகரணம் மூலம்

இந்த உலகில் தெய்வ ஆற்றலையும் அதன் பெருமையையும் பெற முடியும்.

ஆனால் தன்னைப்பற்றிய அறியாமையைக் கொஞ்சம் கொஞ்சமாக, தன் அமரத் தெய்வத்தன்மையின் அனுபவ அறிவின்மூலம் நீக்காதவரையில் அவனுக்கு அந்த அருள் கிட்டப்போவதில்லையே!

யதோதகம் ஶுத்தே
ஶுத்தமாசிக்தம் தாத்ருகேவ பவதி |
ஏவம் முனேர் விஜானத
ஆத்மா பவதி கௌதம ||

15. கௌதமா! சுத்த நீரில் கலந்த சுத்த நீர் சுத்த நீராகவே ஆவதுபோல் இதை அறிந்தவனுடைய ஆத்மாவும் ஆகிறது.

(இரண்டாவது அத்தியாயம் நான்காம் வல்லீ இங்கே முடிகிறது.)

நாலாம் வல்லியின் இந்தக் கடைசி மந்திரம் மீண்டும் எங்கும் பரவியிருக்கும் பூரண தெய்வமும் மனிதனுக்குள் இருக்கும் தெய்வத் தன்மையும் ஒன்றே என்பதை வலியுறுத்துகிறது. மனிதனிலிருந்து 'நான்' என்கிற உணர்வை எடுத்துவிட்டால் மீதம் இருப்பது கடவுள். கடவுள் இந்த உணர்வுடன் சேர்ந்தால் மனிதனாகிறான். இந்த 'நான்' உணர்வு எடுத்துவிட்டால் உடனே கடவுளாக ஆரம்பம். நம் மோகத்திலிருந்தும், நாம் கொண்டிருக்கும் பொய்யான மதிப்புக்களிலிருந்தும் நாம் நித்தியமானதும் சத்தானதுமான பொருளின் ஞானம் பெற்று அதன் உதவியால் நம்மை அகற்றிக்கொண்டுவிட்டோமானால் இந்த 'நான்' உணர்வு பறந்துவிடுகிறது. தன் சுத்த நிலையில் பெருமையும் கொண்டு தங்குவது அந்தச் சுத்த சத்வப் பொருள்தான்.

இந்த நிலையில் ஜீவன் தன் உண்மைத் தன்மை பரிசுத்த உணர்வுத் தத்துவம் என்று உணருகிறான். இந்த ஆன்ம சாட்சாத்காரம் ஏற்பட்டவுடன் அழியாது எங்கும் ஊடுருவி

நிற்கும் அந்த உண்மைத் தத்துவத்துடன் தன் இணைப்பை அறிந்து அனுபவிக்கிறான். சுத்த நீர் சுத்த நீரில் ஊற்றப் பட்டால் சுத்த நீராகத்தான் ஆகமுடியும். அதேபோல அழியாத் தத்துவமே என்று உணர்ந்தவுடன் ஒரு ஜீவன் அந்த ஒன்றுடன் ஒன்றும் உண்மையை உணருகிறான். ஜீவாத்மாவே பரமாத்மாவாம்.

இவ்வளவு தெளிவான உரைகளுக்குப் பிறகும் நாம் சுருதி யில் கருத்தைத் தவருகப் புரிந்துகொள்ளவும் வேதங்களை முரண்பாடுகள் நிறைந்தவை, தெளிவில்லாத கூற்றுக் கொண் டவை என்று குறை கூறினோமானல் நாம் புரிந்துகொள்ளும் மனதில்லாத வாசகர்களாவோம்; நம் வேதங்களின் அசட்டு மாணவர்களாகிவிடுவோம்,

வெகுநாட்களாக சாஸ்திரப் படிப்பு வழக்கம் ஒதுக்கப்பட்டு விட்டது. மற்ற படிப்பைப் படித்தவர்களுக்குச் சொல்லித் தரக்கூடிய ஆசிரியர்கள் இல்லாதுபோய்விட்டனர். அதனல் நம் சனுதனப் பண்பாடு அடியிழந்து நிற்கிறது. மேலும் பணக்காரர் உயர்தர நடுத்தர வகுப்பினர் இவரிடையேயும் ஹிந்து பண்பாடு அழியாத போனலும் முறுக்கிக்கொண்டு காணப்படுவதற்கும் அதுதான் காரணம்.

மேலே கூறப்பட்ட சங்கடங்கள்தான் நாம் இன்று இருக்கும் நிலைக்கு வந்து சேர்ந்ததற்குக்காரணம். ஹிந்துக்களின் தேசம் — ஒரு ஹிந்துவைப் பார்ப்பது கடினமாகிவிட்டது. அவர்களுள் மிகச் சிறந்தவர்கள்கூட தங்கள் உபநிஷதங்கள் வேதங்களையே படிக்க அஞ்சுகிருர்கள்.

வாழ்க்கை அதன் உண்மை மதிப்புக்கள் இவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து மனிதன் பெற்ற பெரும் விஞ்ஞான மான உண்மைகளில் மிகச் சிறந்தவற்றின் தொகுப்புக்களே உபநிஷதங்கள் ஆகும். உபநிஷதங்கள் இல்லை என்ருல் ஹிந்து மதம் ஒரு சமயமாகவே இருக்கமுடியாது,

# இரண்டாம் வல்லி

புரமேகாதசத்வாரம் அஜஸ்யாவக்ரசேதஸ: |
அநுஷ்டாய ந ஸோசதி விமுக்தஸ்ச விமுச்யதே||
ஏதத் வை தத்||

1. *நித்யமான ஞானம் உடைய அஜனுடைய (பிறக்காத-பிருமத்துடைய) நகரம் பதினோரு வாயில்களுடையது. அவனைப் பூஜித்து ஒருவரும் வருந்துகிறதில்லை. (மோக பந்தங்களி லிருந்து) விடுதலை அடைந்து சுதந்திரனாகிறான். இதுவே அது.*

புரமேகாதசத்வாரம்: *பதினோரு வாயில்களைக் கொண்ட நகரம். பதினோரு வாயில்களைக் கொண்ட உடல்தான் நகரம் என்று இங்கே குறிக்கப்படுகிறது. தலையில் மொத்தம் ஏழு துவாரங்கள் இருக்கின்றன. மூன்று, உடலின் நடுப்பாகத்தில் இருக்கின்றன. பதினொன்றாவது சூட்சுமமான பிர்மாந்திர மாகும். அது தலையின் முடியில் இருக்கிறது. யோக சாஸ் திரத்தில் அதற்கு மிகவும் மதிப்புண்டு. நகரத்துடன் உடலை ஒப்பிடுவது மிகவும் தகுதி உடைய ஒன்றாகும். ஏனெனில் நக ரம் உடல் இரண்டிலுமே வாயில்கள் உண்டு, வாயில் காப் போர்கள் உண்டு. அவர்களுக்கு அதிகாரிகள், ஒரு அரண்மனை, வேலைக்காரர்களெல்லாம் உத்தரவு கேட்டு ஒழுங்காக வரை முறையுடன் வேலை செய்ய அரசன் உண்டு. பொறி வாயில் கள் வாயில்கள். அவற்றின் அதிதேவதைகள் காவலாளிகள். மனம் அவற்றிற்கு அதிகாரி. புருஷன் அரசன். (கீதை 5ம் அத்தியாயம் 13ம் சுலோகத்தைப் பார்க்கவும்)*

அனுஷ்டாய (*தியானம் செய்து*): *இதய நாதனைப் பற்றி விடாமல் தியானம் செய்பவன் அறியாமை, அதனால் ஏற்பட்ட 'நான்' என்ற உணர்வு இவைகளைத் துறந்து தன் ஆத்மாவின் உண்மைத் தன்மையை உணர்கிறான். அதற்குப் பிறகு,*

இயற்கையாகவே, அறியாமையின் விலங்குகளிலிருந்து விடுபட்டு சாவு, பிறப்பு இவற்றின் வலைகளிலிருந்தும் வெளியேறுகின்ற காரணத்தினுல் துயருறுவதில்லை.

நசிகேதன் யமதர்மராஜனிடம் விளக்கம் வேண்டும் என்று கேட்ட அது இதுதான்.

ஹம்ச: ஸுசிஷத் வசுரன்தரிக்ஷசத் ஹோதா
வேதிஷததிதிர் துரோணஸத் |
ந்ருஷத் வரஸத்ருதசத் வ்யோமஸதப்ஜாகோஜா
ர்தஜா அத்ரிஜா ர்தம் ப்ருஹத் ||

2. ஹம்ஸத்தைப் போல (சூரியனைப் போல) அவன் சுவர்க்கத்தில் வசிக்கிறுன், வாயுவைப்போல அவன் ஆகாயத்தில் இருக்கிறுன். அதிதி போல் வீட்டில் வாழ்கிறுன்; அவன் மனிதனுள் வசிக்கிறுன், தெய்வங்களுள் வாழ்கிறுன். (உண்மையில்) யாகத்தில், ஆகாயத்தில் வாழ்கிறுன். அவன் ஜலத்தில் பிறந்தவன், தரையில் பிறந்தவன். யக்ஞத்தில் பிறந்தவன் மலைமேல் பிறந்தவன். அவன் உண்மையானவன். மிகப் பெரியவன்.

சென்ற மந்திரத்தில் மனித உடலில் இருப்பதாக விவரிக்கப்பட்ட புருஷனுடைய பரந்து நிற்கும் நிலை விவரிக்கப்படுகிறது. எல்லா விதத்திலும் எல்லாச் செய்கைகளையும் ஆள்கிற பிரபு அவனே. இந்த மந்திரத்தில் உலகிலுள்ள ஜீவன்கள் தோற்றங்கள் இவைகளுடைய ஒரு பட்டியல் மிகவும் இனிமையான சங்கீத அமைப்பில் தயாரித்துத் தரப்பட்டிருக்கிறது.

அப்ஜ: தண்ணீரில் பிறந்தவன். —சங்கு, முத்துச்சிப்பி, மற்ற சிப்பிகள், மீன்கள், நீர்வாழ்ப் பூச்சிகள், சுருங்கச் சொல்லின் எல்லாவிதமான நீர்ப் பிராணிகள். புழுக்கள். இவற்றின் உருவில்—

கோஜா: (தரையில் பிறந்தவன்) —தானியம். நெல். செடிகள், மரங்கள் முதலியன..

அத்ரிஜ : (மலைகளில் பிறந்தவன்) நதிகள், ஆறுகள், அருவிகள் முதலிய உருவத்தில்.

ஊர்த்வம் ப்ராணமுன்நயத்ய பானம் ப்ரத்யகஸ்யதி|
மத்யே வாமநமாசீனம் விஸ்வே தேவா உபாசதே |

3. அவன் (பிரும்மம்) பிராணனை மேலே அனுப்புகிறான், அபானத்தைக் கீழ் நோக்கி அனுப்புகிறான். மத்தியில் அமர்ந்திருக்கும் அந்தப் பூஜைக்குரியவனை எல்லாத் தேவர்களும் ஏத்துகிறார்கள்.

உயிர்க் கேந்திரத்தில், உடலினுள்ளே ஆத்மா இல்லை என்றால் உடல் மூச்சு விடாது என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. ஆகவே இயற்கையாகவே, ஆத்மன் அல்லது புருஷன் தன் உடலிலுள்ள பல்வேறு உயிர் வாயுக்களின் போக்கை நிலை நிறுத்துகிறான். உயிரை அது பிரியும்வரை உயிருடனும் இயக்கத்துடனும் வைத்திருக்கிறான் என்று சொல்லும் பொழுது இந்த மந்திரம் தெளிவாகப் புரிகிறது.

ஐந்து பிரதான உயிர்ச் சக்தி வகைகள் உண்டு. அவற்றின் காரணமாகத்தான் உடல் இயங்குகிறது. அவைகள் செய்யும் வேலைகளுக்கு ஏற்றவாறு அவை பெயர் சொல்லி அழைக்கப் படுகின்றன. எல்லாம் சேர்ந்து ஒரே உயிர்த் தத்துவமேதான். அந்த ஐந்து வகைப் பிராணன்களாவன :

1. பிராணா உலக சக்தி நுரையீரல் மற்ற சுவாச அவயவங்களின் செயல் மூலம் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் போது அழைக்கப்படும் பெயர்.

2. அபானா பிராணனே பெருங்குடல், சிறு நீர்ப் பைகள் இவைகளில் செயல்படும்போது அபானா என்று அழைக்கப்படுகிறது.

3. சமானா : ஜீரண உறுப்புகள் மூலம் இயங்கும்போது பெறும் பெயர்.

4. உதானும் : சத்த உறுப்புமூலம் வெளிப்பட்டுச் சத்தத்தைஎழுப்பும்போது.

5. வியானு—உடலில் ரத்தச் சுழற்சிமூலம் வெளிப்படும் போது.

இதில் கவனித்துக்கொள்ளவேண்டியது: பிராணன் என்பது வெறும் சுவாசம் மட்டுமல்ல. பிராணன் உயிர்ச்சக்தி· சுவாசம் அதன் பல தோற்றங்களில் ஒன்றுதான்.

தேவா: (தேவதைகள்) இந்தச் சொல்லுக்குப் பொருளை நாம் ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். அங்கே சுவர்க்கத்தில் வாழ்பவர் தேவர் என்ற கருத்து இல்லை என்றும், ஆனால், ஐந்து ஞான இந்திரியங்களை ஆளும் ஐந்து மூல தத்துவங்கள் என்றும் உறுதியாக முடிவு செய்தோம். இங்கே இந்த ஐந்து இந்திரியங்களும் புருஷன் அருள் ஒளியில்தான் தத்தம் அலுவலைச் செய்ய முடியும் என்பதுதான் கருத்து. ஆகவே உபநிஷதம் தன் மொழி நடையில் எல்லாத் தேவர்களும் அதாவது எல்லா இந்திரியங்களும் நடுவில் அமர்ந்திருக்கிற தேவனை ஏத்துகிறார்கள் என்று பேசுகிறது.

அஸ்ய விஸ்ரம் சமாநஸ்ய ஸரீரஸ்தஸ்ய தேஹின: |
தேஹாத் விமுச்யமானஸ்ய கிமத்ர பரிஸிஷ்யதே ||
ஏதத் வை தத்|

4. உடலில் வசிக்கும் இந்த ஆத்மன் உடலிலிருந்து பிரிந்து சென்றுவிட்டால் பிறகு என்ன இருக்கிறது? இதுதான் அது!

இந்திரியங்கள் எந்தத் தத்துவத்தின்மேல் தரிக்கின்றனவோ, எது எல்லா உயிர் வாயுக்களையும் ஆட்டி ஆளுகிறதோ அந்த ஆத்மன் பதினொரு வாயில்கள் உள்ள நகரமான இந்த உடலுக்கு அரசன். மக்கள் விரும்பும் ஓர் அரசன் தான் இருக்கும் தலைநகரைவிட்டு மற்றொரு நகரில் சாசுவதமாகத் தங்கிவிட முடிவுசெய்து நீங்கிச் சென்றுவிட்டால் அவன் சபையினரும் மற்ற குடிமக்களும் அவனுடனேயே சென்று அங்கே தங்குவர். அப்படியே ஆத்மா ஒரு உடலிலிருந்து நீங்கினால் அந்த உடலின் செயல்கள் எல்லாம் அந்த ஆத்மனுடனேயே வெளியேறிச் செல்வதாகவே தோன்றுகிறது.

உயிரின் பிரபு உடலைவிட்டு நீங்கினால், அவன் எவ்வளவு பெரிய மனிதனாயிருந்தாலும் சரி, அந்த உடல் எதிலிருந்து வந்ததோ அந்த மண்ணோடு மண்ணாகிவிடுகிறது.

கிமத்ர பரிசிஷ்யதே : (பிறகு என்ன மிச்சம் இருக்கிறது?) ஆத்மன் உடலைவிட்டு நீங்கியபிறகு உடலில் என்ன மிச்சம் இருக்கிறது? இந்தக் கேள்விமூலம் சுருதி நமக்குப் பெரிய உண்மையைப் புகட்டுகிறது. பிறகு அங்கே ஒன்றுமில்லை, உள்ளே ஒன்றுமில்லாத கூடு, இறந்த உடல் அதைப்பற்றிப் பேச என்ன உண்டு?

ந ப்ராணேன நாபானேன மர்த்யோ ஜீவதி கஸ்சன |
இதரேண து ஜீவந்தி யஸ்மின்நேதாவுபாஸ்ரிதௌ ||

5. பிராணனாலேயோ, அபானனாலேயோ ஒரு மனிதனும் (மர்த்யு, அதாவது அழிவுள்ள மனிதன்) உயிருடன் இருப்பதில்லை. ஆனால் இந்த இரண்டுமே எதை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றனவோ அந்த ஒன்றினால்தான் மனிதன் வாழ்கிறான்.

இதுவரை விளக்கங்களையும் அவற்றுடன்கூட மந்திரங்களையும் நன்றாகக் கவனித்து வந்த ஒருவன் சுருதி இங்கே நேரடியாகச் சொல்லும் இந்த விஷயத்தை அறிந்துகொள்வதில் ஏதும் சிரமம் இருக்காது. சுருதி, "மனிதன் உடல், மனம், புத்தி சாதனங்கள் பிராணன்கள் இயங்குவதாய் இயங்கி அதன் காரணமாக மனிதன் உயிருடன் இருக்கிறதில்லை. ஆனால் உயிருள்ள மனிதன் காட்டும் உயிர்ப்பின் அடையாளங்கள் எல்லாம் அவனுள்ளே உள்ள ஆத்மாவின் ஸ்பரிசத்தினாலேயேதான் நிலை பெறுகின்றன, உயிர் உடலில் தங்கும்வரைதான் பிராணன்கள் இயங்கி அலுவலைச் செய்கின்றன.

இந்த மந்திரத்தின் கருத்து சுலபம். நேரடியாகப் பொருளைத் தருகிறது. என்றாலும் சுருதி இங்கே கூறிய சொற்கள் சுட்டும் தொலைக் கருத்து ஹிந்து சாஸ்திரங்களைப் படிக்கப் புதிதாக ஆரம்பித்திருக்கும் மாணவர்களுக்குப் புதிதாகும்.

ஒருமித்த ஒரு கூட்டில் சேர்ந்திருக்கும் தனித்தனிப் பகுதிகள் சுதந்திரமானவையல்ல. அவை எல்லாம் அப்படிச் சேர்ந்து, தங்களுக்குள் ஒன்றுமில்லாத வேறு யாரோ ஒருவருக்காக அப்படி உழைக்கின்றன. உதாரணமாக நாம் ஒரு வீட்டை எடுத்துக்கொள்ளலாம். சுவர்கள், உத்தரங்கள், கட்டைகள், ஓடுகள் முதலிய எல்லாம் சேர்ந்து கூடும் கூட்டு வீட்டுக்கு ஆதாரமாகிறது. அவை எல்லாம் ஒன்று சேர்ந்தது அந்த வீட்டின் முதலாளியின் நன்மைக்காக. அந்த வீட்டின் சொந்தக்காரரான கோபாலன் வேண்டும் என்றபோது இஷ்டப்படி அதனுள்ளும் செல்லலாம். வெளியேயும் நடக்கலாம். ஆனால் சுவர்களாக உபயோகமான செங்கற்களோ! அப்படி அல்ல.

அதேபோல இந்திரியங்கள், உடலின் கைகால் முதலிய அவயவங்கள் மனம் புத்தி எல்லாம் இந்த உடற்கூற்றின் அங்கங்கள். அதில் வசிக்கும் புருஷனுக்காகவே அவை இருக்கின்றன. அவை தாம் விரும்பும் வண்ணம் நடக்க அவற்றில் ஒன்றுக்கும் உரிமை கிடையாது. ஆனால் புருஷனோ சாவு ஏற்படும் நேரத்தில் இஷ்டம்போல் வெளியேறி நடக்கலாம். கோபாலன் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டால் வீடு காலப் போக்கில் நாசமாகிக் குட்டிச்சுவராகிவிட வேண்டியதுதான்; அதேபோல ஆத்மா வெளியேறியவுடன் உடல் அழிகிறது. உயிரின் மூலஸ்தானம் பிராணன்கள் அல்ல. பிராணன்களும் உயிரின் மூலஸ்தானமான ஆத்மன் தன் கோயிலான உடலை விட்டு வெளியேறியவுடன் தாங்களும் முடிந்து அழிய வேண்டியவைகளே.

சாஸ்திரச் சொற்களில், உடல், மனம், புத்தி எல்லாம் செய்யும் செய்கைகளை பிராண விருத்திகள் என்று சொல்கிறார்கள்.

ஹந்த த இதம் ப்ரவக்ஷ்யாமி குஹ்யம் ப்ரஹ்ம சனாதனம் |
யதா ச மரணம் ப்ராப்ய ஆத்மா பவதி கௌதம ||

6· நல்லது, ஏ கௌதமா! விளங்காத பழைமையான பிரும்மத்தை நான் விளக்குகிறேன், மேலும் சாவுக்குப் பிறகு ஆத்மா என்ன ஆகிறது என்றும் (விளக்குகிறேன்).

இதுவரை யமதர்மராஜன் சொல்லி வந்ததெல்லாம் சாவுக்குப் பிறகு ஆத்மா என்ன ஆகிறது என்ற முக்கிய விஷயத்துக்கு முன்னுரைதான் போலும். இங்கே யமதர்மராஜன், "ஜீவன் தன் ஏமாற்றத்தில் சாவு என்ற நிலையை அனுபவித்த பிறகு என்ன ஆகிறது?" என்ற விஷயத்தைப்பற்றிய ஞானத்துக்கு உன்னை இட்டுச் செல்கிறேன் என்று அன்பாகச் சொல்கிறார். உள்ளபடி சாவின் பனிக் கைகளின் பொல்லாப் பிடிப்பில் சிக்கி உடல் குளிர்ந்து ஜடமான பிறகு ஆத்மாவுக்கு என்ன நேரும் என்ற விஷயத்தை எடுத்துச் சொல்ல யமதர்மராஜனைவிடச் சிறந்த தகுதியுள்ள நிருபரை நாம் கண்டிப்பாய்ப் பெற முடியாது அல்லவா!

ஆத்மா (நான் என்ற உணர்வின் கேந்திரஸ்தானம்): உபநிஷத மந்திரங்களில் ஆத்மா என்ற பதம் சில சமயம் உடல், சில சமயம் மனம், சில சமயம் புத்தி, இன்னும் சில சமயங்களில் மனம், மனத்தால் உருப்பெறப்பட்ட சுத்த உணர்வான ஜீவன் இவ்விதம் குறிக்கப் பல முறைகளில் உபயோகப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இங்கே ஆத்மன் என்ற பதம் 'தன்னைக் குறிக்க உபயோகமாகாமல் 'நான்' என்கிறதின் கேந்திரஸ்தானத்தைக் குறிக்க உபயோகப்பட்டிருக்கிறது என்று கொள்ளவேண்டும். ஏனெனில் ஆத்மா என்ற பொருளையே அது குறிப்பதாகக் கொண்டோமானால் இந்த மந்திரம் உபநிஷத்தின் வேதாந்தக் கருத்தையே முரணிப் பேசுவதாகக் கருதப்பட்டுவிடும். சுத்த உணர்வு அல்லது அந்தப் பரம உண்மைத் தத்துவத்துக்கு ஒருபொழுதும் ஒன்றும் ஏற்பட முடியாது. சுத்த உணர்வு உடலின் அலுவல்களை ஆளும் பொழுது உடலை ஒத்து அது, தனி ஆத்மா (ஜீவாத்மா) என்று சொல்லப்படுகிறது — அறையின் நான்கு சுவர்க்குட்பட்ட இடத்தை 'அறையிடம்' என்று குறிப்பதுபோல.

உண்மையில் அந்த நித்தியமான வெளியை அதிலேயே நிற்கும் சுவர்கள் கட்டுப்படுத்தவோ அதற்கு மாற்றம் தரவோ முடியாது. அதேபோல, உணர்வு அல்லது ஞானம் ஒன்றே. இரண்டற்ற ஒன்றே. உடல் அழிந்தவுடன் அந்தத் தெய்வப்

பொறி அல்லது உயிர்க் கேந்திரம் உடல் இருந்தபோது அதை ஆண்டது. ஒரு மாறுதலையும் அடைவதில்லை. எப்பொழுதும் அப்படியேதான் இருக்கும். சாவும் சாவு சமயத்தில் உடலை விட்டு நீங்குவதும் பிறவியின்போது வேறு உடல் எடுத்தோம் என்று எண்ணுவதும் இந்த 'நான்' என்ற உணர்வின் கேந்தரத் தத்துவத்தின் பிரமைகளேதான் !

மனதில் பிரதிபிம்பித்த பரமாத்மா — ஏற்கனவே நாம் அறிந்துகொண்டபடி புத்திதான் ஜீவன் அல்லது 'நான்' என்கிற உணர்வு. உடல் வீழ்ந்தவுடன் அஹங்காரம் மமகாரங் களை ('நான்' 'எனது' என்ற எண்ணங்களை) விட்டு விடுகின்றது. பிறகு உடலிலில்லாமல் நிச்சயமல்லாத ஒரு காலம்வரை தங்கிய பிறகு ஒவ்வொரு 'நான்' என்கிற ஜீவகேந்திரமும் வேறு ஒரு உடல் தோற்றத்துடன் என்னுடையதென்ற சொந்தத்தையும் யஜமானத்தனத்தையும் ஏற்படுத்திக்கொள்கிறது.

இவ்விதம், 'ஆத்மா சாவுக்குப் பிறகு என்ன ஆகிறது என்று விளக்குகிறேன்' என்று யமதர்ம ராஜா சொல்லும் போது அவர் ஜீவன் அது கொண்டிருந்த அஹம்காரம், அது கொண்டிருந்த மமகாரமான ஒட்டுதல்களுடன், ஒரு அழிந்த உடலை விட்டு மற்றொரு ஜன்மம் எடுக்கக் கர்ப்பத்துக்குள் நுழை யும் பொழுது என்ன ஆகிறது என்று சொல்வதாகத்தான் குறிப் பிடுகிறார்.

யோநிமன்யே ப்ரபத்யந்தே ஸரீரத்வாய தேஹின: |
ஸ்தாணுமன்யேனுசம்யந்தி யதா கர்ம யதாஸ்ருதம் ||

7. சில ஜீவன்கள் ஒரு உடல் எடுக்க யோனியில் பிரவேசிக் கின்றன. மற்றவை செடிகளுக்குப் போகின்றன—அவரவர்கள் கர்மங்களுக்கும், ஞானத்துக்கும் தக்கவாறு...

ஸ்தாணு என்றால் நகர்த்த முடியாதது என்ற பொருள். ஆகவே அது மரம் செடி கொடி என்ற வகைகளையும் குறிக்க லாம்; அல்லது கல் மண் என்ற ஜடப் பொருள்களையும் குறிக்கலாம். வேண்டாத ஒரு உற்சாக மனப்பாங்கில் சில சமயம் மனித உடல் எடுத்த ஒரு ஜீவன், இந்த வாழ்வில் என்ன

அக்கிரமங்கள் புரிந்திருந்தாலும் சரி, மீண்டும் இந்த ஜன்ம ஏணியில் கீழே இறங்கி கல் மண்ணாகப் பிறக்க மாட்டான் என்று தாவா செய்கிறார்கள். தங்கள் சீடர்களை உற்சாகப் படுத்தித் தூண்டிவிட எண்ணி இவ்விதம் சொல்லும் ஆன்ம வித்தை ஆசிரியர்கள் கூட இருக்கிறார்கள். அவர்கள், மனித அவதாரம் எடுத்த பிறகு எந்தக் காரணத்தைக் கொண்டும் ஜீவன் மிருகமாகப் பிறக்க மாட்டான் அல்லது ஜடமான மண் கல்லாக ஆக மாட்டான் என்று அழுத்தமாய்க் கூறுகிறார்கள். இந்த மந்திரத்தில் உபநிஷதம் அந்த அர்த்தமற்ற நம்பிக்கை தலையில் நேரடியாக ஒரு இடியைப் போடுகிறது.

முதல் வல்லி ஆறாவது மந்திரத்தில் கர்மத்தின் விதிகள், மறு பிறவித் தத்துவங்கள் ஆகியவை பற்றிய ஒரு குறிப்பை, நசிகேதன், "தானியங்கள் போல மனிதன் அழிகிறான், அவை போல மீண்டும் பிறக்கிறான்" என்று சொன்னபோது கண்டோம்.

உடல் இறந்த பிறகு இந்த "நான்' என்ற கேந்திரம் ஒரு 'கருத்தின்' நிலையில் அப்படியே இருக்கிறது. எது வரையில்? மீண்டும் ஒரு உடலுடன் தன் உறவை ஒட்டிக் கொள்ளும் வரை அது அவ்விதம் இருக்கிறது. இப்படிப் பறக்கும் 'நான்' என்கிற கேந்திரம் அடுத்துப் பெற வேண்டிய உடலைப் புது உடலுடன் புது க்ஷேத்திரத்தில் புது சந்தர்ப்பங்களின் மத்தியில் கொள்ள வேண்டியிருக்கிற பயன்கள்தான் நிர்ணயிக்கின்றன. வேதாந்த உலகிலேயே ஹிந்துக்களுக்குத் தனி அருளாய்க் கிடைத்திருக்கிற கர்ம விதிகளைப் போன்ற தர்க்கத்துக்கு மிகவும் ஒத்துக் கொள்ளக்கூடிய வேறு கருத்துக்களை (கற்பனைகளை) கிடையாது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக நாம் நம்முடைய வேதங்களையும் சாஸ்திரங்களையும் படிப்பதை நிறுத்தி மகாபாவம் செய்கிறோம். அதனால் கர்ம விதிகள் என்றால் அர்த்தமற்ற 'விதியின் பேச்சு' என்று கருதி விடுகிறோம். இது உபநிஷத ரிஷிகளின் குறைபாடு அல்லவே அல்ல. நாம் கர்மம் பற்றிய விதிகளை நன்கு புரிந்து கொண்டால் நமக்கு வருங்காலத்தில் நல் வாழ்வு வாழ்வதற்கு,

ஏதுவாக ஓர் ஆற்றலும் ஓர் உரிமையும் நம் கைக்குக் கிடைத்து விடும். இதை நாம் கேனோபநிஷத் யக்ஞ உரைகளில் பூராவாக விளக்கியிருக்கிறோம்.*

யதாகர்ம :—(கர்மங்களுக்கேற்றவாறு) கடந்த காலத்தில் செய்த செய்கைகளின் தன்மைக்கு ஏற்றவாறு நமக்கு வருங் கால வாழ்வும் கிடைக்கும். அனுபவங்கள் என்ற முறையில் செய்த செய்கைகளுக்கு விளைவுகளாய் உள்ள பிரதிச் செயல்களை (அறுவடை செய்யும்) ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அதற்கேற்ற உடல் சந்தர்ப்பங்கள் முதலியனவே நமக்குக் கிட்டும்.

யதா ச்ருதம் ; (ஞானத்துக்கேற்றவாறு)—வரும் ஜன்மம் நாம் செய்திருக்கிற செயல்களை மட்டும் ஒட்டினதாக இராது. இந்தச் செயல்கள் என்கிற பழைய செயல்களின் விளைவுகள் மூலம் நாம் பெறும் உண்மையின் அறிவையும் பொறுத்தே இருக்கும். பிரஹதாரண்ய உபநிஷத் (12.2.13) ஐப் பார்த்தால் விளக்கம் முழுவதும் கிடைக்கும்.

ய: யேஷு ஸுப்தேஷு ஜாகர்தி காமம் காமம்
புருஷோ நிர்மிமாண
ததேவ ஸுக்ரம் தத்ப்ரஹ்ம ததேவாம்ருதமுச்யதே |
தஸ்மின்லோகா : ஸ்ரிதா : சர்வே தது நாத்யேதி
கஸ்சன || ஏதத் வை தத் ||

8· விரும்பும் பொருள்களுக்கெல்லாம் (கனவாக) உருவம் தந்து கொண்டு, நாம் தூங்கும் போதும் விழித்திருக்கிறானே அவன் புருஷன். அவன்தான் சுத்தன், பிரும்மன். அவனே தான் அமிருதன். என்றும் அழைக்கப் பெறுகிறான். அதில் தான் (அந்தப் பிரும்மத்தில்தான்) உலகம் தங்குகிறது. அதை ஒருவரும் கடக்க முடியாது. இதுவே (நீ கேட்ட) அது.

உடலுக்குள்ளே அந்த 'சுத்தபுத்தி' இல்லாத போனால் விழிப்பு நிலையின் புலப்பொருள் அறிவைப் பெறுவது ஆகாத காரியம். அதேபோல, நாம் ஏற்கனவே பார்த்தோம்.

---

*சேஷாத்திரி தொகுத்து ஆறு புத்தகங்களாக யக்ஞப் பிரசாதம் என்ற பெயரில் வெளியாயிருக்கிறது.

கனவு நிலையிலும் அதே 'புத்தி' விளக்குத் தராத போனால் அந்த அனுபவமும் பெற முடிந்திருக்காது.

நல்ல தூக்க நிலையிலும் கூட. இதே புத்தித் தத்துவம் தான் 'எனக்குத் தெரியாது!' என்ற உணர்வுக்கும் ஒளி தருகிறது. எனவே இந்த 'சுத்தப் புத்தித் தத்துவம்' ஆத்மா தான். மூன்று நிலைகளிலும் சாட்சி பூதமாய் நிற்கிறது. அது விழிப்பதில்லை, கனவும் காண்பதில்லை, ஆழ்ந்து தூங்குவது மில்லை. அதன் எதிரே இந்த மூன்று நிலைகளும் தங்கள் விளையாட்டை ஆடித் தீர்க்கின்றன.

ஒரு விளக்கின் சாயல் உதாரணத்தின் (Analogy) மூலம் நாம் இந்த விஷயத்தை கேனோபநிஷத் விளக்கவுரை நிகழ்த்தும் போது தெளிவாக்கியிருக்கிறோம். தெருவிளக்கு அதன் ஒளி வட்டத்துக்குள் வரும் எந்தப் பொருளையும் ஒளி பெறச் செய்கிறது. புதிதாக மணம் கொண்ட தம்பதிகள் தாங்கள் புதிதாகக் கண்ட உடல் நட்பின் இன்பத்தில் ஆடிப்பாடிக் கொண்டு வந்தால் அவர்களையும் அந்த விளக்கு ஒளி பெறச் செய்யும்; அடுத்த கணத்தில் குடித்துவிட்டுக் கூத்தாடிக் கொண்டு அங்கே வருகிற கும்பலையும் ஒளி பெறச் செய்யும். அதற்கு அடுத்த நிமிஷம் அழுது கொண்டு வரும் சவ ஊர்வலத்துக்கும் ஒளி தரும். இந்த மூன்று விதங்களிலும் அந்தத் தெரு விளக்கு மகிழ்ந்ததும் இல்லை, குடிகாரர் போல் மதியிழந்ததுமில்லை. அல்லது இழவு தரும் துக்கத்தை ஏற்றதுமில்லை.

அதே போல நம்முள் அரசு புரியும் அந்தப் புத்தித் தத்துவம், விழிப்புலகநிலை, கனவுலகநிலை, தூக்கநிலை மூன்றையும் விளக்கம் பெறச் செய்கிறதே தவிர. தான் ஒரு நாளும் இந்த நிலைகளை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை.

சீடன் தற்பொழுது இருக்கும் நிலை அறியாமை உலகின் வாழ்க்கை, அதில் ஏற்பட்டிருக்கும் அனுபவங்கள் மூலம் அவைகளை ஒட்டியே அவனுக்குப் பெரும் கருத்துக்களை விளக்க வேண்டும். யமதர்மராஜன் நசிகேதனுக்கு அந்த விதத்தில்தான் சொல்கிறார்.

ஒரு பள்ளி ஆசிரியருக்குத் தெரியும். குழந்தைகளுக்குக் கூட்டல் கழித்தல் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ருல், எடுத்த எடுப்பிலேயே எண்களை எடுத்துக் கொண்டு சொல்லக் கூடாது. அதற்கு முன் குழந்தை பழகிய பொருள்களைக் கொண்டு தெளிவிக்கவேண்டும். அதனுல்தான் ஆசிரியர்கள், "உன்னிடம் பத்து மாம்பழங்கள் இருக்கின்றன என்று வைத்துக்கொள். உன் சிநேகிதனிடம் ஐந்து இருக்கிறது, இரண்டு பேரிடமும் எவ்வளவு?" என்று கேட்கிருர். மாம்பழக் கணக்குகள் வைத்துக் கொள்ள இவ்விதம் ஆசிரியர் கேட்கவில்லை. ஆனுல் குழந்தை மனதை இழுக்கும் இந்த மாம்பழக் கற்பனை மூலம் உயர்ந்த கணக்குத் தத்துவத்தைப் போதிக்கவே அவர் இந்த விதம் செய்கிருர். அதேபோல, உபநிஷதமும் செய்கிறது. சாதகன் இந்தப் பொய் உலகத்தில் வாழ்கிறவன். அவன் தன் குருவின் சரணத்தில் வரும்போது அப்படிப்பட்ட அனுபவங்களையும் அறிவையும்தான் கொண்டிருக்கிருன். அவைகளை ஒட்டியே தான்பேசி அவனை அறிவின் உயர்ந்த தளத்துக்கு அழைத்துச்சென்று அந்தப் பேச்சிலேயே 'சுத்த சத்தியத்தின்' தன்மையை விளக்கவேண்டியிருக்கிறது.

விழிப்பு நிலை, கனவு நிலை, நல்ல தூக்க நிலை என்ற மூன்று நிலைகளின் அனுபவங்களை யாரும் பெறுகிருன், ஆகவே அந்த மூன்றையும் பற்றி அறியாத ஒரு மனிதனும் இருக்கமுடியாது. அந்த நிலையில் ஒரு ஆசிரியர் வந்து நம்மிடம் இந்த மூன்று நிலையிலுமே நம் அனுபவங்களை விளக்கம் பெறச் செய்யும் ஒரு உள் தத்துவம் இருக்கிறது என்று விளக்கினுல் நமக்கு அந்தத் தத்துவத்தைப்பற்றி இந்த அமிருத ஆத்மாவைப்பற்றி உணர்வறிவின் மூலம் உணர்வது மிகவும் சுலபமாகிறது.

நம் கொலைகார எண்ணங்களால் ஆத்மா பாதிக்கப்படுவதில்லை. மட்டமான இன்ப ஆசைகள், பொருமைகள் நம் வாழ்வின் சுயநலம் ஒன்றுமே அந்த ஆத்மாவைப் பாதிப்பதில்லை. எனவே அந்த ஆத்மா, மேலேசொன்ன தெருவிளக்கைப் போல், சாட்சி பூர்வமாக நின்று என்றும் சுத்தமாகவே இருக்கிறது.

இந்த மந்திரத்தின் மற்ற சொற்கள் தாங்களாகவே விளங்கி நிற்கின்றன. இதுவரையில் விரிவாகத் தந்த விளக்க

வுரைகளைத் தொடர்ந்து வந்தவர்களுக்கு அவை எளிதில் புரிந்து விடும்.

அக்னிர்யதைகோ புவநம் ப்ரவிஷ்டோ
ரூபம் ரூபம் ப்ரதி ரூபோ பபூவ |
ஏகஸ்ததா சர்வபூதாந்தராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹீஸ்ச ||

9. ஒரு அக்னி உலகத்தில் வந்தவுடன் எரிக்கின்ற பொருளுக்கேற்றவாறு பல உருவங்களை எடுப்பதுபோலவே எல்லா ஜீவன்களுடைய அமிருதமான ஆத்மாவும், ஒன்றாயிருந்தாலும் எடுத்துக்கொண்ட அது புகுந்த உடல்களுக்கேற்றவாறு மாற்றம் அடைகிறது. அதேசமயம் அந்தத் தோற்றங்களுக்கும் அப்பாற்பட்டே நிற்கிறது,

ஒப்புக்கொள்ளப்பட்ட 108 உபநிஷத்துக்களில் இந்த கடோபநிஷத்தைப்போல இனிய சங்கீதக் கவிதைக் குணம் கொண்டது (கீத நாதம் கொண்ட ஒலிச் சொற்கள், எதுகை மோனை சிறந்த கவிதைக் கருத்துக்கள், ஓவியங்கள் கொண்டது) வேறொன்றுமில்லை, ஸம்ஸ்கிருத இலக்கியங்களுள், வேதாந்தம் கவிதை இரண்டுக்குமே ஒரு ஒப்புயர்வற்ற உரைகல் என்று சொன்னால் அது அஞ்சாமல் சொல்லக்கூடிய சொல்தான். உலகின் வேறு எந்த மொழியிலும் இப்படிச் சிறகடித்துப் பறக்கும் கருத்துக்கள் உணர்வைச் சுருட்டும் கவிதையில் சொல்லப்பட்டதில்லை. கடோபநிஷத்தில் கவிதை தன் காதலரான வேதாந்தத்துடன் கொஞ்சிக் காதலைக் கனிவிக்கும் ஒரு விந்தையைப் பார்க்கிறோம். நாம் சொல்லும் இந்தக் கருத்துக்களை நிரூபிக்க இந்த மந்திரம் அழகான ஒரு எடுத்துக் காட்டு.

நிறம் ஏறிய ஒரு நீர் தட்டையான ஒரு பாட்டிலுள் இருந்தால் தட்டையாகக் காணப்படும். உருளையான ஒரு கண்ணாடிப் பாத்திரத்துள் இருந்தால் உருளையாக உரு எடுக்கும். இப்படிப் பல உருவம் எடுப்பதனால் அந்தத் திரவத்தின் உருவத்தைப் பலவாறு நிர்ணயிக்க முடியாது, அதேபோல இயக்கம் தரும் உயிர்க்கேந்திரம் ஒன்றுதான். அது பல உடல்களை விளக்கம் கொள்ளச் செய்கிறது. தோற்றங்கள் பலவாக

இருக்கும் ஆனால் ஆன்மீக உள்ளடைவு ஒன்றேதான். ஒருவிசிறி, பல்பு, அடுப்பு இவற்றின் மூலம் பாய்ந்து உயிர்தரும் மின்சாரம் சண்டிப்பாய் ஒன்றேதான். ஊடே பாயும் உபகரணங்களுக் கேற்றவாறு காற்றாகவும், சூடாகவும் வெளிச்சமாகவும் பரிண மிக்கிறது, அவ்வளவுதான், அதேபோல ஆத்ம தத்துவம் ஒன்றுதான்: அது ஊடுருவி இயங்கும் மனங்கள் பலதரப் பட்டவை. அதனால் அதன் தோற்றங்கள் பலவாறு காட்சி யளிக்கின்றன. அந்தக் கருத்தில் நீங்கள் நானாக முடியாது. நான் நீங்களாகமாட்டேன். ஏனென்றால் என் மனதுக்கும் உங்கள் மனதின் அமைப்புக்கும் வேற்றுமை உண்டு. இருந்தும் நம் ஆத்மா ஒன்றேதான்.

பஹிச்ச (அப்பாற்பட்டதும்): அந்த "சுத்த உணர்வுத் தத்துவம்" எங்கும் ஊடுருவும் உண்மை. ஒவ்வொரு உட லுள்ளும் வீற்றிருந்து அதன் ஒவ்வொரு அணுவையும் ஊக்குவிக் கிறது. ஆனால், சுருதி மேலும் சொல்கிறது. வெளித்தோன்றும் உயிர் அடைக்கும் இடத்துக்குள் அந்த உண்மையைக் குறுக்கி அடைத்துவிட முடியாது.

அண்டங்களிலுள்ள உயிர்களை எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றாய் வைத்தாலும் கீதையில் பகவான் சொன்னபடி பார்த் தால் தெய்வ முழு அம்சத்தில் கால் பங்குதான் ஆகும். சுருதி அந்தக் கருத்தைத்தான் இங்கே குறிக்கிறது. அந்தப் பரம தத்துவம் காட்சிக்கு எளிதாய் நிற்கும் உலகம், காணாத உலகம் இவற்றை மட்டும் அணைத்து நிற்கவில்லை. அதற்கப்பாலும் பரவி நிற்கிறது. சுருங்கக் கூறின் காட்சிக்கு எளிதாவதும் அதுவே, காட்சிக்கு உயர உயர உயர்வதும் அதுவே.

வாயுர்யதைகோ புவனம் ப்ரவிஷ்டோ
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ |
ஏகஸ்ததா சர்வ பூதாந்தராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹிஸ்ச ||

10. ஒரே வாயு உலகில் வந்து அது புகுந்தவற்றிற்கேற்ற வாறு உருவங்கள் கொள்வதுபோல் இந்த உயிர்களுள் உள்ள ஆத்ம தத்துவம் ஒன்றாயிருந்தபோதிலும் அது புகுந்த உடல் களுக்கேற்றவாறு உருவம் ஏற்கிறது. அந்த உருவங்களுக் கெல்லாம் அப்பாற்பட்டும் நிற்கிறது.

இங்கே மீண்டும் ஒரு அழகான ஒப்புமை. போன மந்திரத்தில் சொல்லப்பட்ட அந்த ஒன்று என்ற தத்துவம் மீண்டும் இதன்மூலம் விளக்கம் பெறுகிறது. யமதர்மராஜன் அதே உண்மையை நெருப்புக்குப் பதில் வாயுவை எடுத்துக்கொண்டு விளக்குகிறார். குதிரையோ, கழுதையோ, மனிதனோ, கொடியோ அல்லது அத்திமரமோ எல்லாம் பிராணவாயுவைக்கொண்டுதான் ஜீவிக்கின்றன. அதேபோல நாம் அறியும் எந்தப் பொருளும் என்ன பெயரையும் உருவத்தையும் கொண்டிருந்தபோதிலும் எல்லாவற்றுள்ளும் அந்த இரண்டற்ற உண்மைத் தத்துவம் தான் வீற்றிருந்து ஆளுகின்றது.

இந்த மந்திரமும் முந்திய மந்திரமும் அநேகமாய் ஒன்றே போல் இருப்பதனால் அதன் அழகை மட்டும் காட்டிவிட்டு நிறுத்திக்கொண்டு அடுத்த மந்திரத்துக்குப் போகிறோம்.

சூர்யோ யதா சர்வலோகஸ்ய சக்ஷுர்ன :
லிப்யதே சாக்ஷுஷைர்பாஹ்யதோஷை :
ஏகஸ்ததா சர்வபூதாந்தராத்மா
ந லிப்யதே லோகதுக்கேன பாஹ்ய : ॥

*11, உலகின் கண்போன்ற சூரியன் வெளிக் கண்களின் குறைகளினால் பாதிக்கப்படுவதில்லை அதேபோல உள்ளின் சாரபூதமான தத்துவம். ஆத்மா; அது உலகின் வெளித் துயர்களினால் பாதிக்கப்படுவதில்லை.*

சர்வ லோகஸ்ய சக்ஷு (உலகெல்லாவற்றிற்கும் கண்): சூரியன் தருகிற ஒளியாற்றல் இல்லாமல் நாம் உலகில் காணும் பல உருவங்களின் தோற்றங்கள் உருவங்களான நிறங்களைப் பிரித்துக் காணும் செயலில் நம் கண்களை உபயோகிக்க முடியாது. ஏன், நிலவு நாட்களில் நிலவு பெற சந்திரனுக்குமே ஒளி கிடைத்திராது. இதை எல்லாவற்றையும்விட பழங்கால ரிஷிகள் வேதகாலத்தில் சூரியன் பார்க்கும் பொறியான கண்ணுக்குத் தேவதை என்றார்களே, அதுதான் விந்தை. அவர்களின் அறிவு ஒளியின் விஞ்ஞானத்தை நன்கு புரிந்துகொண்டிருத்தல் வேண்டும். எனவே சூரியனை உலகின் கண் என்று சொல்வது மிகவும் தகுதியுடைத்தே.

சூரியனின் ஒளி எல்லாப் பொருள்களையும் வேறுபாடின்றி அவைகளின் சுகநிலை அழிநிலை இரண்டிலும் வெளிச்சம் பெறச் செய்கிறது. அது போற்றத் தகுந்த யாகத்தை ஒளிக்குக் கொண்டுவந்தாலும் சரி, அல்லது திட்டமிட்டுச் செய்யும் பொல்லாத்தனக் காட்சியை வெளிக் காட்டினாலும் சரி. சூரிய வெளிச்சம் அதற்காக மட்டுமே. அது வெளிக் காட்டிய பொருள்களின் தன்மைக்கேற்றவாறு புகழ்ச்சிக்கோ இகழ்ச்சிக்கோ உட்படுத்தப்படுவதில்லை.

அதே போல ஆத்மா உலகின் துக்கங்களால் 'நான்' என்ற உணர்வைக் கொண்ட ஜீவன்கள் தம் அறியாமையின் மோக நிலையில் செய்யும் காமகர்மங்களால் நிறம் ஏறப்பெறுவதில்லை. எல்லாத் துக்கங்களும் நம்முடைய அடங்காத ஆசைகளாலும் அந்த ஆசைகளை, புலப்பொருள் உலகில் உணர்ச்சு வேகம் தூண்டத் தானாகத் திட்டமிட்டுத் திருப்திசெய்துகொள்வதற்காகச் செய்யும் செயல்களாலேயே தான் ஏற்படுகின்றன. (காம கர்மோத்பவம் துக்கம்).

நமக்குக் கம்பத்தில் காணும் பூதம் எப்படியிருந்தாலும்சரி, அந்தக் கம்பம் பாதிக்கப்படுவதில்லை. கயிற்றில் தோன்றும் பாம்பு நம்மை எவ்வளவு பயமுறுத்தினாலும் சரி கயிறுக்கு ஒரு ஆபத்தும் இல்லை. பாலையில் காணும் கானல் நீரின் மேல்தளம் எப்படி மாறினாலும் பாலைவனத்துக்கு ஒரு தொந்தரவும் கிடையாது. அதேபோல உலகின் நிலை எப்படியிருந்தாலும் இந்த உடல் வாழ்வில் நம்முடைய அனுபவங்கள் எப்படி இருந்தாலும், பிரமையில் நாம் ஏற்படுத்தியிருக்கும் பொய்யுலகிற்கு அடிப்படையான அந்த உண்மைப் பொருள் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை.

அந்த உண்மை இந்த உலகம் இரண்டுக்கும் உள்ள உறவை விவரிக்கும் வேதாந்திகளிடையே இரண்டு கருத்துக்கள் உண்டு. ஒரு வகையினர் அந்தப் பரம தத்துவம் இந்த உலகமாகத் தன்னை மாற்றிக்கொண்டது என்பர்; பால் தயிராக மாறுவதைப்போல். வேதாந்திகள் இந்தக் கருத்தை மறுக்கின்றனர், ஏனெனில் அவர்கள் வாத முறைக்கு இது ஒவ்வாதது. சுத்த சத்வம் மாற்றத்தை ஏற்றுக்கொண்டால், பால் தயிராக மாறிய பிறகு பாலாக நிற்க முடியாதது போல, சுத்த சத்வ நிலை

முற்றிலும் அழிந்து அல்லவா உடைகநிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது பார்க்கும்பொழுதே தப்பாய்ப் படுகிறதே. இந்தக் காரணத்தால்தான் வேதாந்திகள் அந்த வாதத்தை மறுக்கிறார்கள். அவர்கள் மேலும் சொல்கிறார்கள் : இந்த உலகம் சுத்த சத்வத்தின் பரிணாமம் என்றால் பரிணாமவாதிகள் சொல்கிறபடி சுத்தசத்வம் மாறுபாட்டுக்கு உரியதாகவல்லவா ஆகிவிடுகின்றது. மாறுபாட்டை ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றும் இருப்பதாக ஆகமுடியாதே! அதன் முடிவின் எல்லையில் விழுந்துவிடுமே! இந்தவிதம், பரிணாமவாதம் ஒப்புக் கொள்ளப்பட்டால் சுத்த சத்வம் மாறி அழியும் ஒரு பொருளாகவல்லவா ஆகிறது,

இதற்கு மாறாக வேதாந்திகள் இந்த உலகத்தை (சிருஷ்டியை) உண்மையின் மேல் விழுந்த போர்வை (மாயை) என்று கருதுகிறார்கள். அந்த மாயையை மனதின் மந்திரம் ஏற்படுத்துகிறது. இந்த வேதாந்த வாதத்தை விவர்த்தவாதம் என்கிறோம். இங்கே அந்தப் பரம்பொருள் மாறுபாட்டையும் ஏற்றுக்கொள்கிறதில்லை. எப்பொழுதும் தன் பரிசுத்த நிலையில் தன் அழியாப் பெருமையுடனேயே விளங்குகிறது. கயிறு மாறுகிறதில்லை. ஒரு சொட்டு விஷத்தைக்கூட அது ஏற்றுக் கொள்கிறதில்லை, பிரயாணி அதில் பாம்பை இருட்டின் காரணமாகப் பார்க்கிறானே என்ற காரணத்தால்.

ஸ்ரீ சங்கரர் சொல்வதை இந்த மந்திரம் சரி என்று முழு மனதுடன் ஒத்துக் கொள்வதாக இருக்கிறது. என்றுமே விவர்த்த வாதத்துக்கு முன் பரிணாம வாதம் அர்த்தமற்றதாகத் தான் முடியும். உண்மை, உண்மையில்லாதது இந்த இரண்டின் உறவு நிலையை விவரிப்பதில் 'மாயை போர்க்கும்' வாதம் உண்மையில் அதிகம் ஒளி பொருந்தியதாகவும் மனதுக்குத் திருப்தி அளிக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

ஏகோ வஸீ ஸர்வபூதான்தராத்மா
ஏகம் ரூபம் பஹுதா ய:கரோதி |
தமாத்மஸ்தம் யேநுபஸ்யன்தி தீரா : தேஷாம்
சுகம் ஸாஸ்வதம் நேதரேஷாம் ||

*12. (அந்த) ஒரு (பரமன்) ஆள்பவன், எல்லா உயிர் களுக்கும் ஆத்மா, யார் தன்னுடைய உருவத்தைப் பலவாக*

ஆக்கிக் கொள்கிறுனே அவனைத் தம்முள்ளே வீற்றிருப்பதாக அறிகிற ஞானிகளுக்கே சாசுவதமான இன்பம் கிட்டுகிறது; மற்றவர்களுக்கு அல்ல.

கர்வம் பிடித்துத் திரியும் இந்த 'நான்' என்கிற உணர்வுக் கேந்திரங்கள் (ஜீவன்கள்) நொறுங்கிப் போகும் மனம் புத்தி சாதனங்களின் மூலம் வெளியே பார்க்கும் காரணத்தால் முடிவில்லாத மாறுபாடுகளையும் இரட்டைகளையும் தவிரப் புனிதமான ஒன்றையும் காண முடியாது தவிக்கின்றன, ஆகவேதான் அவைவ தாமே ஏற்படுத்திக்கொண்டு துன்பங்களை அனுபவிக்கின்றன.

நம்முடைய மனம், புத்திசாதனத்துக்கு ஒரு பட்டைக் கண்ணுடிக்குள்ள ஒரு தன்மை உண்டு. ஆத்ம ஒளி அதனுள் பாயும்போது, அந்த ஒளியைப் பிரிக்கும் புத்தி என்னும் கருவி உடலுக்குள் இருப்பதாய்த் தோன்றுகிறது. புலப்பொருள்களில் சென்று அவைகளை அறிய அதனுல் மனதின் உதவியில்லாமல் முடியாது. ஆனுல் ஞானிகள், மனம் புத்தி இரண்டின் பிடிப்புக்கும் மேலேறி உள்ளுணர்வு என்கிற ஒரு தனிக் கற்பனை அறிவின் மூலம் பார்க்கக் கற்றுக்கொள்கின்றனர். அந்தக் கற்பனையறிவின் மூலம் பார்த்தால் எங்கும் எப்பொழுதும் உண்மை ஒன்றுதான் அடையப்பெறும் அனுபவமாயிருக்கும்.

ஆத்மன்தான் ஒளி மூலம். அந்த ஒளி இந்த மனம் என்ற பட்டைக் கண்ணுடி வழியாகப் பாயும்போது பலவிதப் பெயர்களும் தோற்றங்களுமான ஜகத் என்கிற பன்னிற ஒளிப் பட்டைகளாக மாறுகின்றது. பகுத்தறியும் விவேகம் கொண்டு யோகி மனம், தான் அறியாமையில் ஏற்படுத்திய இரட்டைத் தன்மையை நீக்குகிறுன். நல்ல ஆழ்ந்த தியான நேரத்தில் அவன் உணர்வு தான் தான் அந்த ஆத்மா என்ற உணர்வைப் பெறுகிறது.

நம் உணர்வு 'அதுவே நான்' 'சுத்த உணர்வுத் தத்துவம் நான்' என்கிற உணர்வைப் பெறும் நேரம்தான் ஆன்ம சாக்ஷாத்காரமான ஈசுவர தரிசன நேரமாகும். இந்தப் பரம ஞான, ஆனந்த நிலையை அடைந்து' இன்புற ஜீவன் நல்ல வளர்ச்சியுள்ள

தீரனாக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள்தான் இந்த ஆனந்தத்தை அடைய வரமுடியும். அவர்கள் இன்ப அனுபவம் தான் தொடர்ந்து நடுவே அறுமல், எல்லையில்லாததாய் இருக்க முடியும் என்று சுருதி இங்கே கூறுகிறது. அது 'தன் உண்மைத் தன்மையை அறிந்து கொண்ட ஞானிகள்தான் தீரர்கள், உண்மையில் மனிதர்கள்; மற்றவர்கள் அல்ல' என்று அறைகிறது. உலகியலில் புறப்பொருள்களின் வலையில் சிக்கி உழலும் மனிதர்கள், இந்தக் கூற்றின்படி பார்த்தால், அந்தப் பரமானந்தத்தைப் புறப்பொருள் மூலமே அநுபவிக்க என்றும் தகுதியில்லாதவர்கள் எனத் தடுக்கப்பட்டவர்களாக இருந்து விடுவார்கள்.

நித்யோ நித்யானாம் சேதநஸ்சேதனானாம்
ஏகோ பஹூனாம் யோ விததாதி காமான் |
தமாத்மஸ்தம் யேனுபஸ்யந்தி தீரா : தேஷாம்
ஸாந்தி : ஸாஸ்வதீ நேதரேஷாம் ||

*13 அநித்யங்களுள் நித்யமானவன், சேதனர்களின் சேதனம் (அறிவு). தனியாயிருந்தாலும் பலர் விருப்பங்களைப் பூர்த்தி செய்கிறவன். அப்படிப்பட்ட அவனை எந்த ஞானிகள் தங்களுக்குள் இருப்பவனாகக் காண்கின்றார்களோ அவர்களுக்குத் தான் சாசுவதமான சாந்தி கிட்டுகிறது; வேறு யாருக்குமல்ல.*

முதல் மந்திரத்திலேயே சுருதி இது இல்லை, அது உண்டு என்று பேச ஒரு அழுத்தமான நடையைக் கையாண்டது. அதே நடையில்தான் இந்த மந்திரத்திலும் பேசுகிறது. அவர்களுக்குத்தான் சாசுவதமான சாந்தி, மற்றவர்கள் இல் லாது நிற்கவேண்டியதுதான் என்று கட்டளையிடுகிறது.

நம்முள் எதை நாம் என்று உணரவேண்டும் என்ற விஷயம் இதில் பேசப்படுகிறது. அந்தச் சர்ச்சையில் உள் ளுணர்வு என்கிற கற்பனை அறிவின் மூலம் ஆத்மாவின் முழுத் தன்மையும் அறிந்துகொள்ள உதவும் பல விஷயங்கள் கிடைக் கின்றன. அந்த அந்தணச் சிறுவனும் யமதர்மராஜனிடம் அதைப்பற்றித்தான் அறிய விரும்பிக் கேட்டான். ஹிந்துக் களின் தர்ம கிரந்தங்கள் உபநிஷதங்கள். எங்கும் ஒரு மந்ரமும் இந்த மந்திரத்தைப்போல் அவ்வளவு முழுமையுடன், நேரடி

உ ாக. மொழி பேச இயலும் எல்லாப் பகுதிகளையும் அணைக்கும் வண்ணம், ஆத்மாவின் தன்மையைப்பற்றிப் பேசும் நிலையில் இல்லை. இதை நாம் உறுதியாகச் சொல்லலாம்.

இந்த உலகம் கொதிக்கும் பெரும் குழம்பு. தோற்றங்கள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. உருவம் பெயர் மாற்றங்களின் ஒரு ஆடி மறைந்து மீண்டும் ஆடும் நாடகம். நம் உடலே மணிக்கு மணி மாற்றங்களை ஏற்றுக்கொண்டேயிருக்கிறது. நாம் வாழ்ந்து முடியும்வரை அந்த மாற்றம் ஓய்வதில்லை. தற்கால வைத்திய அறிவும் ஒவ்வொரு உடலும் ஏழு வருஷங்களில் முற்றிலுமே மாறி நிற்கிறது என்று பேசுகிறது. நிமிஷத்துக்கு நிமிஷம் நம் உடற் பழக்கங்கள் மாறுகின்றன. மன அமைப்பு மாறுகிறது, ஆன்ம மதிப்புக்கள் மாறுகின்றன. ஒருவரும் வளர்ச்சியின் போக்கைத் தடுத்துவிட முடியாது.

இந்த இடையறாத மாற்றம் ஒரு தொடர்ச்சிக் கருத்தைத் தரவேண்டும் என்றால் மாறாத ஒரு அடிப்பகுதி ஒன்று இருக்க வேண்டுமே! சினிமாவில் ஒளியும் நிழலும் மாறி மாறி ஆடுகின்றன. ஆனால் அவை ஒரு தொடர்ச்சிக் கருத்தைப் படம் பார்க்கிறவர்களுக்குத் தருகிறது என்றால் அதற்குக் காரணம் அவற்றிற்குப் பின்னால் திரை ஒன்று மாறாமல் இருப்பதுதான். அது இல்லை என்றால் கதை ஒன்று படமாக ஓடுவதை யாரும் பார்த்திருக்கமுடியாது. அலைகள், சுழிவுகள், குமிழிகள், நுரை இவை எல்லாம் ஆடி ஒரு பொங்குதலைக் காட்டுவது அவற்றிற்கடியில் அசங்காது என்றும் மாறாமல் ஆழம் கொண்டு நிற்கும் சமுத்திரம் இருப்பதால்தான் முடிகிறது. ஒரு பாம்பு, தடி, பூமியில் வெடிப்பு எல்லாம் ஏமாற்றங்கள். அவை உண்மையாகத் தோன்றுவது அதன்பின் மாறாத உண்மையான அந்தக் கயிறு இருப்பதால்தான் சாத்தியமாகிறது.

அதைப் போலவே அடிப்படையில்லாமல் மாறும் இந்த உலகம் சாத்தியமாகாது. அந்த அடிப்படை மாறாது மாறுவதுமில்லை. ஆற்றமைப்பு இல்லாமல் அதில் ஆற்று நீர் ஓட முடியாது.

**சேதனஸ் சேதனனும்:** மீண்டும், ஒரு இரும்புத் துண்டு கையைச் சுட்டதால் 'ஓகோ, இது இரும்பின் குணம் அல்ல, அது நெருப்பிடம் வாங்கிய இரவல்!' என்று தெரிந்துகொள்ளு

கிறோம். அதேபோல இந்த உடல் மனம் புத்திச்சாதனங்கள் ஜடப்பொருள்களே. சில சமயங்களில் தெய்வீக அறிவாற்றலைக் காட்டுகிறதே! அந்த சமயம் நாம் திண்ணமாய் இந்த ஆற்றல் ஆத்மாவினுடையதே, ஏன் எனில் அதுதான் சுத்த அறிவுத் தத்துவம் என்று தெரிந்துகொள்ளலாம்.

விததாதி காமான்: மனிதன் விருப்பங்களைப் பூர்த்தி செய்கிறது. மீண்டும் சுருதி இங்கே கர்மவிதியைப் பொது வான முறையில் குறிக்கிறது. கர்மத்தின் சட்டத்தின் பின்னால் இருப்பது அந்த சுத்த சத்துவம் அல்லது பரமாத்மாவேதான். கர்மச் சட்டத்தின் காரணமாகத்தான் ஜீவன் இந்த வாழ்க்கை யில் தனக்கென்று விதித்த அனுபவங்களை ஏற்றுக்கொள்ள வருகிறது.

என்றும் நித்தியமாய், சுத்த அறிவுத் தத்துவமாய், மாற்ற முடியாத கர்மவிதிகளுக்குப் பின் உள்ள ஆற்றலாய் இருக்கும் அந்த ஒன்று ஒரு நகரத்திலிருந்துகொண்டு ஆளும் அரசன் தொலைவில், தன் அரசின் எல்லையில் உள்ள கிராமங்களில் உள்ள தன் மக்களைக்கூட அறியாமல் ஆட்சி புரிகிறானே அந்த விதம் ஆளும் சக்தி அல்ல. சுவர்க்கத்தில் எங்கோ இருந்து கொண்டு தன் வேலையைக் கவனித்துக்கொண்டிருக்கும் எட்டாப் பொருள் அல்ல அது. வேதாந்தம் மனிதன் ஞானத் தின் பரமசாதனையாம்.

ரிஷிகள் கூறும் உண்மைகள் அவர்கள் வாழ்க்கைக்குள் புகுந்து, ஜகத் என்ற மாறியும் மாறாத பிரமையை ஏற்படுத்தும் மாய நாடகத்துக்குப் பின்னால், செயல்களுக்கெல்லாம் மூல இயக்கமாய், அழியாது அசங்காது என்றும் நிற்கும் தத்துவ மான தன் உயிரின் ஆத்மாவையே கண்டுபிடித்தார்களே. அதற்கு எவ்வளவு துணிவு வேண்டியிருக்கும் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

எனவேதான் ஹிந்துக்களின் வேதசாரமான உபநிஷதங் கள் போன்ற கிரந்தங்கள் எங்கும் இருந்ததில்லை இருக்கவும் முடியாது. வளர்ச்சி பெறாத புத்திக் குறைவுள்ள வெளிநாட்டு இடையூறுகள் ஏதாவது இவற்றைப்பற்றிக் குறையாக, 'மனித இனம் வளர்ச்சியில் குழந்தைப் பருவத்தில் உளறிய

முறல்!' என்று கூறினால் நாம் நன்கு அறிந்தவர்களானபடியால். அன்று அறியாத மக்கள் கூட்டம் கிறிஸ்து மகானைச் சங்கடப் படுத்தியபோது சொன்னாரே அந்தவிதமே 'கடவுளே! இவர் களைக் காப்பாற்று. தாங்கள் என்ன செய்கிறோம் என்றே அறியாதவர்கள்' என்று சொல்லுவோம்.

தததேததிதி மன்யன்தேநிர்தேஸ்யம் பரமம் சுகம் |
கதம் நு தத்விஜாநீயாம் கிமு பாதி விபாதி வா ||

*14.* ஞானிகள், விவரிக்க முடியாத அந்த சுகத்தை, 'இதுவே அது' என்று காண்கிறார்கள். நான் எப்படி அறிவேன்? அது தானே ஒளி வீசுகிறதா அல்லது வேறு ஒளியில் விளங்குகிறதா?

இந்த மந்திரத்தில் யமதர்மராஜன் தான் அடுத்த மந்திரத் தில் பதில் சொல்ல எனவே கேள்விகளைப் போடுகிறார் என்று கொள்ளலாம். ஆனால் சின்மயா கருதுவது: அந்த வேதாந்தம் அறிய விரும்பிய பரம சிஷ்யனான நசிகேதன் உண்மையாகக் கேட்ட கேள்வியாயிருத்தல் வேண்டும்.

முன்னொரு மந்திரத்தில் ஆத்மா இந்திரியங்களின் காட்சி, மனதின் அறிவு, புத்தியின் விவேகம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது என்று யமதர்மராஜன் சொல்லி விளக்கி விட்டார். இருந்தும் இப்பொழுது பேசிய இரண்டு மந்திரங் களில் அவர் ஆத்மதரிசனம் செய்த ஞானிகள் பெறும் நிச்சய மான, அழியாத இன்பங்களைப்பற்றி விவரித்தார், இயற்கை யாகவே புத்தியுள்ள சிஷ்யர்கள் குழப்பமடைகிறார்கள். மீண்டும் அதே மந்திரத்தின் முதல் பாதியில் யமதர்மராஜன் "உண்மையறியும் ஞானிகள் தங்கள் ஆழ்ந்த தியான நிலையில் 'இதுவே அது' என்று எங்கும் ஊடுருவி நிற்கும் உண்மையை நேரடியான அனுபவ மூலம் உணரும் ஒரு சாதனையைப் பெறுகிறார்கள்" என்றும் உறுதி கூறியிருக்கிறார்.

தததேதத் இதி: (இதுவே அது) உண்மையைக் காண முடியாது. தொட்டு உணரமுடியாது. நிச்சயிக்க முடியாது. இப்படி அறியும் ஆற்றல் எல்லாம் மனிதன் புலன் அறிவுகள் மனம் புத்தி இவைகளினுடையது. இவை எல்லாம் இரட்டைத்

தன்மையின் தளத்தில் புலப்பொருள்கள், எண்ணங்கள் கருத்து இவற்றின் உலகத்தில்தான் செயல்பட முடியும். புத்திசாலியான ஞானி, இந்த மூன்றுவகை உணர்விலிருந்து நீங்கி, இவைகளின் துயர்தரு எல்லைகளிலிருந்து அப்பாற்பட்டு நிற்கிற தருணத்தில், இதுவரை நான் தேடிய பொருள் இதோ அருகேதான் இருக்கிறது. அது 'நானே'தான் என்று உணர்ந்து கொள்கிறான்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சிஷ்யன் கேள்வியை எழுப்புகிறான். அவன் இதுவரை ஆசிரியரிடம் கேட்ட வேதாந்தப் பாடங்களின் ஆதாரத்தில்தான் எழுகிறது. "இந்திரியங்கள் மனது புத்தி இவைகளை விஞ்சி அவற்றுக்கப்பால் சென்றால் இது அதுவே என்று ஆன்ம நிலையை உணரும் சமயத்தில் உபயோகமாகும் உபகரணம் எது, எப்படி இருக்கும்? அதை உபயோகிப்பவன் யார், அவன் லட்சணம் என்ன?" என்று நசிகேதன் கேட்கிறான்!

இதைக் கேட்கும் நீங்களும் இந்த நிலையில் நசிகேதன் கேட்கும் கேள்வியின் முழு அகல நீளத்தையும் புரிந்துகொள்ள முடியுமானால் சுருதி இதுவரை சொல்லிவந்த கருத்துக்களை எல்லாம் ஒருவாறு தொடர்ந்து வந்திருக்கிறீர்கள் என்று கருதிக்கொள்ளலாம்.

ஏற்கனவே ஒரு நிலையில் ஒரு பொருளைக் கண்டு அறிய ஒரு விளக்கின் உதவி தேவைப்படுகிறது எங்ஙனம் என்று விளக்கியிருக்கிறோம். அங்கே, வெளியிலுள்ள ஸ்தூலப் பொருள்களை அறிய வெளிஸ்தூல ஒளி இருக்கிறது; மனதிலுள்ள எண்ணங்கள் கருத்துக்கள் முதலியவைகளைக் காண புத்தி ஒளி இருக்கிறது என்றும் கூறினோம், அதை நசிகேதனும் நன்கு புரிந்து கொண்டிருக்கிறான். ஆனால், வேதாந்த தரிசி மனம் புத்தி இரண்டு தளங்களையும் மீறி மேலேறி 'தன்னையே பார்த்துக் கொள்ளும் நிலைக்கு வருகிறான்' என்று யமதர்மன் சொன்னவுடன் அந்த அந்தணச் சிறுவனுக்குக் குழப்பம் ஏற்படுகிறது.

கிருபாதி (அது ஒளிர்கிறதே) ஒரு விளக்கை நாம் பார்க்கிறோம். ஏன் என்றால் அதன் ஒளி மூலமே அதைக் காண முடிகிறது. ஆனால் மற்ற ஒளியற்ற பொருள்கள் அந்த ஒளியைப்

பெற்ருல்தான் காட்சிக் கெளிதாக முடியும். அதை விபாதி என்று சொல்கிறது சுருதி. அதனுல் தான் விபாதி வா? வேறு வெளிச்சத்தில் ஒளிர்கிறதா? என்று கேட்கிறது.

வேதாந்தத்தில் சிறந்த பெரும் ஆசிரியர்கள் இதை நல்ல தெளிவாக விளக்குகிருர்கள். இது ஆத்மாவே ஆத்மாவை உணரும் ஒரு தனி ஏற்பாடாகும். நடுவே யுள்ளவன் மனதையும் புத்தியையும் சரியானபடி அடக்கிய பிறகு ஏற்படும் அந்தத் துடிக்கும் மோன நிலையில் அவனுடைய உணர்வு தன்னை உணர்கிறது. இது அந்த உணர்வறிவின் விந்தை நிகழ்ச்சி. புத்தி உடல் தளத்தில் ஏற்படக்கூடியதல்ல. இந்த மிக நெருங்கிய தன் உணர்வு தானேயே அறியும் இந்த விந்தையைத்தான் தன்னை ஒப்புயர்வற்ற நடையில் சுருதி இதுவே அது என்று கூறித் தெரிவிக்கிறது. ஆத்மாவே ஞான ஒளி. அதற்குத் தன்னை ஒளிபெறச் செய்து கொள்ள வேறு ஒளி தேவையில்லை. மேக மண்டலங்களுக்குப் பின் இருந்து வெளியேறும் சூரியனைப் பார்க்க வேறு டார்ச் லைட் வேண்டாம். அவனே இயற்கையில் ஒளிப் பிழம்பு. அதைப் போலவே மறைக்கும் தொல்லைகள் மனதிலும் புத்தியிலும் ஆத்ம அறியாமை காரணமாக எழுவது நின்றவுடன் ஆத்மா தன் ஒளி கொண்டே மிளிர்கிறது. அந்தச் சுத்த அறிவு ஒளிபெற வேறு ஒளி தேடாது.

ந தத்ர சூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி : |
தமேவ பாந்தமனுபாதி சர்வம்
தஸ்ய பாசா சர்வமிதம் விபாதி ||

15 அங்கே சூரியன் ஒளிராது; சந்திரன் மிளிராது; நக்ஷத்திரங்களும் அப்படியே. மின்னலும் பிரகாசிக்கமுடியாது. இந்த நெருப்பு இன்னம் முடியப் போகிறதில்லை. அ(வன்)து பிரகாசிக்கும் பொழுது ஒவ்வொன்றும் ஒளி தருகின்றது. அதன் வெளிச்சத்தில் தான் இவை எல்லாம் பிரகாசிக்கின்றன.

நாம் நம்முடைய வேதசாரமான உபநிஷதங்களை மறந்து வெகு நாளான இன்றும்கூட நாம் இந்த மந்திரம் ஒவ்வொரு நாளும் கோவிலிலும் பூஜையிலும் சொல்லப்படுவதைக் கேட்

கிறோம். எந்த பூஜா கர்மங்களிலும் ஆரத்திக்கப்புறம் இது தான் கடைசி மந்திரமாகச் சொல்லப்படுகிறது. இதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து அறிய முற்படுகிறவர்கள் இல்லை என்று சொல்லலாம். பண்டிதர்கள்கூட அந்த முயற்சியைச் செய்வதில்லை. ஒரு கால் சில! வெறும் சொல்லளவில் பொருள் தெரிந்து கொண்டிருக்கிறார்களோ என்னவோ! நம் சமய வாழ்வு நாம் வாழாத காரணத்தினால் இன்று உட்பொருளற்றுக் குழாய் போல் நிற்கிறது. நமக்குப் புரியாத ஒரு மொழியில் கிளிபோல் மந்திரங்களைத் திருப்பிச் சொல்வதும் அதன் பொருளைப் புரிந்து கொள்ள முயலாதிருப்பதும் நமக்கு என்ன பயனைத் தரமுடியும்? சில 'கர்ம காண்டிகள்' மந்திரங்கள் கீர்த்தனங்கள் முதலியவைகளைத் திருப்பிச் சொன்னாலே பிரமாதமான புண்ணியம், பயன் உண்டு என்று சொல்கிறார்கள். பொருள் தெரியாமலும் குறிப்புப் புரியாமலும் ஒப்புவித்தால் போதும் என்பது அவர்கள் வாதம். சின்மயா இதைத் தப்பான' புத்திக்கும் புறம்பான, வெளிவேஷம் காட்டும் அர்த்தமற்ற கருத்து என்று கருதுகிறார். அது உண்மையானால் பாட்டுப்பாடும் கிராமப்போன் பெட்டி, நல்ல பேச்சை அஞ்சல் செய்யும் ரேடியோப் பெட்டி இவைகளைக்கூடப் பாராட்டித் தட்டிக் கொடுக்கலாமே!

தத்ர (அங்கே) யமதர்மராஜன் இங்கே அந்த ஆன்ம ஒளிப் பிரதேசத்தைக் குறிக்கிறார். அதுவே சுத்த அறிவின் நிர்மலமான பிரதேசமாகும். தெய்வ உணர்வின் தெய்வீகத்தனமான அங்கே மற்ற விளக்கு ஒளி தேவைப் படாது. நாமறியக்கூடிய மற்ற ஒளிகளின் மூல ஆதாரம் எல்லாம் அந்த உண்மை வெளியில் இடம் தரப்படவில்லை. இந்த மந்திரத்தில், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், மின்னல்கூட அங்கே பிரகாசம் தருகிறதில்லை என்கிறார். பிறகு இந்த நெருப்பு மாத்திரம்? சுருக்கமாக ஒளியில் அந்த ஒளி தவிர வேறு ஒளியிருக்க முடியாது. சூரியனில் அதை வெளிக்குக் காட்ட வேறு 'டார்ச்' கிடையாது.

அனுபாதி (பிறகு எரிகிறது) "உண்மைதான் வாழ்க்கையின் தோற்றம் தரும் எல்லாச் செயல்களுக்கும் ஆதாரம். உயிர் இல்லை என்றால் ஐம்பொறிகள், மனம் புத்தி எல்லாம் முடிகின்றன. இந்த மூன்று தத்துவங்களும் மனிதன் வாழ்வில்

சுருட்டி மூடப்பட்டு விட்டால், அந்த மனிதனுக்குப் பிறகு சூரியன், சந்திரன், விண் மீன்கள், நெருப்பு என்னதான் இருக்க முடியும்? வாழ்வில் உயிர் இருக்கும் வரை அவன் ஒளியின் மூலஸ்தானங்களை எல்லாம் காணக்கூடிய உலகில் அறிந்து கொள்ள முடிகிறது. இயற்கையாகவே, வேதாந்தக் கருத்தில் தெளிவாக நாம் ஒப்புக்கொள்ளலாம். சூரியன் மற்ற விளக்குப் பொருள்களுக்கு ஒளி தருகிறவன். புத்தியின் அறிவு ஆத்மா தான். ஆகவே யமதர்மராஜன் அதற்குப் பிறகுதான் மற்ற விளக்குகள் ஒளிதருகின்றன என்கிறார், அதன் ஒளி பெற்றுத்தான் இவை ஒளி வீசுகின்றன

இந்த மந்திரத்தின் உண்மைக் கருத்தை நாம் புரிந்து கொண்டோம். நம்முள் சிந்திக்க ஆற்றலுடையவர்களுக்கு இதில் திறந்து பேசாது மிளிர்ந்து நிற்கும் சுட்டுக் கருத்துகள் எவற்றுக்காக இந்த மந்திரம் ஒவ்வொரு புனித கர்மத்துக்கும், பூஜைக்கும் முடிவில் சொல்லப்படவேண்டும் என்று பணிக்கப் பட்டிருக்கிறது என்று புரிந்துவிடும்.

இந்த மந்திரம் முக்கியமான பத்து உபநிஷதங்களில் இன்னும் இரண்டு உபநிஷதங்களிலும் திருப்பிச் சொல்லப்பட் டிருக்கிறது. அதிலிருந்தும் இந்தக்கருத்து வலிவுறுகிறது. இதன் பெருமைக் கருத்துக்கள் புலனுகின்றன. முண்டகோபநிஷத் 11-2-10 லும் சுவேதாசுவதாரா உபநிஷத்து 6-14லும் இந்த மந்திரம் சில சிறு சொல் மாற்றங்களுடன் காணப்பட்டாலும் அந்த ஒரே மட்டு அற்ற உயர்ந்த கருத்துத்தான் அவற்றில் கூறப்பட்டிருக்கிறது. பகவத் கீதையில் 15-6ல் சுட்டப்பட்டபடி எல்லா ஒளிக்கும் ஆதாரம் ஆத்மா தான்.

இங்கே இரண்டாம் அத்தியாயம் ஐந்தாம் வல்லீ (பகுதி) முடிகிறது.

# ஆறும் வல்லி

ஊர்த்வமூலோவாக்ஸாக ஏஷோஸ்வத்த: சநாதன: |
ததேவ ஸுக்ரம் தத்ப்ரஹ்ம ததேவாம்ருதமுக்யதே |
தஸ்மிந்லோகா: ஸ்ரிதா: ஸர்வே ததுநாத்யேதி
கஸ்சன || ஏதத் வை தத் ||

1. இது பழைய அசுவத்தமரம். அதன் வேர்கள் உயர இருக்கின்றன; கிளைகள் கீழே பரவுகின்றன. அதுதான் பரிசுத்தமான பிரும்மமாகும், அதுவே அமிருதம் (அழிவற்றது) என்றும் சொல்லப்படுகிறது, அதில்தான் அண்டங்கள் எல்லாம் தங்குகின்றன. ஒருவரும் அதை மீற முடியாது. அதுவே இது.

ஸம்ஸ்கிருதத்தைப் பற்றிய மிகவும் குறைந்த அறிவு பெற்றவர்கள்கூட, ஸ்ரீ சங்கரர் எழுதிய இந்த மந்திரத்தின் விளக்கவுரை வாங்கிக்கொள்ளல் வேண்டும். அது இன்பம் தரும். இந்த மந்திரத்தின் விஷயம் ஸ்ரீ சங்கரர் போன்ற வேதாந்திகளைக்கூட சுத்தமான கவிதையுலகத்துக்கு எடுத்துச் சென்று உள் ஆழம் கொண்டு நிற்கும் அழகிய இலக்கியப் படைப்பைச் செய்துவிட்டன.

இரவு ராணிப் புஷ்பம் இனிய மணம் வீசினால் நாம் உடனே அருகே அந்த மரம் இருக்கிறது; அதற்கு அடியே வேர்களும் இருக்கின்றன என்று ஊகித்துக் கொள்கிறோம். அதேபோல சுருதி நம்மைப் பெயர்கள் தோற்றங்கள் கொண்ட இந்த எல்லைக்குக் கட்டுப்பட்ட உலகத்தைப் பார்த்தவுடன் அந்த மரத்துக்கு வேர் இருக்கிறதென்றும் அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறது. நாம் பார்க்கும் மேற்காட்சிகளுக்கு அந்த வேர் மறைந்திருக்கிறது. பார்த்து அனுபவிக்கும் பயன்களுக்கு அவசியம் இருக்கவேண்டிய காரணத்தைச் சுட்டிக் காட்டுவதற்காக சுருதி இங்கே ஒரு அழகான உவமையைத் தருகிறது. அந்த சுத்த உண்மைத் தத்துவத்திலிருந்து இந்த உலகம் அரசமரம் போல் எழுந்து பரவுகிறது. அரசமரத்தைப்பற்றி விவரிக்க ஸ்ரீ வியாசமுனிவரும் பகவத்கீதையின்

பதினைந்தாவது அத்யாயத்தில் முழுதாக மூன்று சுலோகங்களை எழுதியிருக்கிறார் என்று இங்கே சொல்வது சந்தர்ப்பத்துக்குரியதே.

ஸ்ரீ சங்கராச்சாரியார் தன் பாஷ்யத்தில் சம்சாரத்தை ஏன் அரசமரத்துக்கு உவமிக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஸம்ஸ்கிருதத்தில் மரத்தை விருக்ஷம் என்பதற்குக் காரணம் அது வீழ்த்தப்படும் என்ற கருத்தைக் கொண்டதனுல் தான். விருச்சனுத் —

அரசமரத்தைப் போல் எல்லோரும் அறிந்ததும் உயர அகல வளர்ச்சியில் அதிகம் கொண்டதும் நன்ருகப் பருத்ததுமான வேறு ஒரு மரம் இல்லை. அதனுல்தான் சுருதி இந்த பலவாகத் தோன்றும் உலகத்துடன் உவமிப்பதற்குத் தகுதியாக வேறு ஒரு மரத்தை நினைக்கவில்லை. சாதாரணமாக இதற்கு உரை எழுதும் சாதாரணமான வியாபார உரையாசிரியர்கள் சொற்பொருளை அப்படியே எடுத்துக்கொண்டு சம்சாரம் உயரே வேரும் கீழே கிளைகளும் கொண்ட அரசமரம் என்று எழுதிவிடுகிருர்கள். இது சுத்த அபத்தம். சுருதி கூட ஒரு அரசமரத்தை சிரசாஸனம் செய்விக்க முடியாது! ஸம்ஸ்கிருதப் பண்டிதர்கள் தப்பர்த்தம் செய்யலாம். அதைக் கேட்டுவிட்டு மிகவும் திறமை வாய்ந்த ஓவியர்கள் வண்ணமும் தெளிவும் கொண்ட படம்கூட எழுதிக் காட்டலாம். அதனுல் எல்லாம் தப்பு சரியாகிவிடாது. ஸ்ரீ சங்கரர் இந்தத் தப்பர்த்தத்தைப் பற்றித் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிருர்கள்.

ஊர்த்வ மூல: (வேர்கள் மேலே) இங்கே ஊர்த்வம் என்ருல் மேல் பக்கம் என்று க்ஷேத்திர கணிதத்தில் குறிக்கிருேமே அந்தக் கருத்தல்ல. 'பெருமை' என்ற கருத்தில் இந்தச் சொல் ஆளப்பட்டிருக்கிறது. பல பாகங்கள் கொண்ட சம்சார மரத்தில் 'வேர்' மிகவும் போற்றற்குரியது. அதனுல் ஊர்த்வம் என்று சொல்லப்படுகிறது. சம்சார மரத்தின் வேர்கள் எங்கும் பரவி நிற்கும் ஆத்மாவான விஷ்ணுவினுடைய (விஷ்ணோ: பரமம் பதம்) பரமபதத்திலிருந்து தமக்குரிய சாரத்தைக் கிரஹித்துக்கொள்கின்றன.

சுருதி சம்சாரத்தை மரத்துக்கு ஒப்பிட்டதற்கு மற்றொரு காரணமும் இருக்கலாம். அசுவத்த என்ற சம்ஸ்கிருதச் சொல்லையே மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம் சுத்த நிலையில் சுவ' நாளை என்ற கருத்தில் அந்தச் சொல் நாளையில்லாதது என்று கருதப்படும். சம்சாரம் என்ற சொல் வரம்புக்குட்பட்ட பொருள்களின் உலகம் என்பதைக் குறிக்கிறது. இங்கே சாவும் அழிவும் அடிக்கடி நிகழும் நிகழ்ச்சிகள். அந்தக் கருத்தில் உலகத்தை இந்தச் சொல்லைவிட எந்தச் சொல்லாலும் குறித்து அதன் அழியும் தன்மையைப் பூரணமாகவும் தெளிவாகவும் காட்டியிருக்க முடியாதல்லவா ?

இந்தக் கவிதை மாணிக்கத்தை அறியவேண்டும், அதன் பெருமை புரியவேண்டும் என்பதற்காகக் காரணங்களை ஏற்படுத்த மீண்டும் மீண்டும் எவ்வளவோ முயற்சிகள் செய்யப்படுகின்றன. என்றாலும் படித்த நம் ஹிந்து சகோதரர்கள் உபநிஷதங்களின் பாஷை அவற்றின் விஷயங்களைப்பற்றி வேண்டாத ஒரு வெறுப்பைக் கொண்டுள்ள காரணத்தால் இதைப் புரிந்துகொள்ள இன்னும் கஷ்டப்படலாம். சின்மயா இங்கே மீண்டும் ஒரு உதாரணம் கொடுக்க முயலுகிறார்.

சரித்திரப் பாடப் புத்தகங்களில் நீங்கள் அரசர்களின் வமிசாவளி மரத்தைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா ? ஒவ்வொரு வமிசாவளியின் தலைப்பிலும் மிகவும் முந்தைய ஒரு முன்னோரின் பெயர் இருக்கும். அதற்குக் கீழே வரிசையாக கிளைகிளையாக கீழ்க் கிளைகளின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும். பெண்கள், பிள்ளைகள், கீழே பேரர்கள், பேத்திமார்கள், அவர்களுக்குக் கீழே அவர்கள் ஒவ்வொருவருடைய் குழந்தைகள் — இம்மாதிரியே தொடர்ந்து செல்லும் அந்தக் கிளைகளின் பரப்பு. இந்த வமிசாவளியே மேலே கொண்டு கீழ் நோக்கிப் படரும் கிளைகளைக் கொண்ட வேர் ஒரு மரம் போல்தானே தோற்றமளிக்கிறது. ஆங்கிலத்திலும் (தமிழிலும் கூட) அதை வமிசாவளி மரங்கள் என்றுதான் சொல்கிறார்கள். (கிளை, கீழ்க் கிளை என்ற சொற்களும் தமிழில் வழங்குவதைக் காண்க !) நம் கால சரித்திர ஆசிரியர்களின் கற்பனைக் காவிய ஆற்றலைப்பற்றி நாம் பெருமைகொள்ள முடியாது. அவர்களே இந்தக் கற்பனை செய்து இன்பம் அனுபவித்தார்களே. நம் உபநிஷத கால

ரிஷிகள் கற்பனையாகப் பேசினார்கள் என்றால் அதை ஏன் போகிறார்கள் என்றுவது ஏற்றுக்கொள்ளக் கூடாது?

பல சொல்லுவானேன். உபநிஷதம் விரும்புவது இது தான். நாம் இந்த வரம்புக்குட்படும் பொருள்கள் நிறைந்து உபயோகமாகிற அசுவத்த மரத்தின் வேர் 'உண்மை'யில் புதைந்திருக்கிறது. அந்தப் பரம உண்மைத் தத்துவத்தி லிருந்தே தனக்கு வேண்டிய உணவைக் கிரஹித்து வாழுகிறது. சம்சாரம் மரமே, (விருக்ஷமே) முக்கியமாக ஏன் என்றால் விவேகம் என்கிற கோடரியால் அதை வெட்டி ஒரேயடியாக எறிந்து விடமுடியும். (கீதை 15-3 ஐப் பார்க்கவும்).

யதிதம் கிம் ச ஜகத் சர்வம் ப்ராண ஏஜதி நி:ஸ்ருதம்
மஹத்பயம் வஜ்ரமுத்யதம் ய ஏதத்விதுரம்ருதாஸ்தே
பவந்தி ||2

2, இந்த சகம் முழுவதும் பிரும்மத்திலிருந்து ஆனது. பிராணனில் (உயர்ந்த பிரும்மத்தில்) நகர்கிறது; இயங்குகிறது. அந்தப் பிரும்மம் மேலே தூக்கப்பட்ட மின்னடியைப் போல் பயங்கரமானது. இதை அறிந்தவர்கள் அமிருதர்களாக ஆகிறார்கள்.

சென்ற மந்திரத்தில் சொல்லப்பட்ட கருத்து இங்கே நன்றாகவும் தெளிவாக நேரடியான விஞ்ஞான சம்மதமான மொழியில் சொல்லப்பட்டிருக்கிறது. அசுவத்தமர உண்மையில் இருக்கும் கருத்துக்களின் நெறிசல் காரணமாக முழு மரமும் அந்த உண்மையில் வேர் விட்டு அதனால் உயிர் பெறுகிறது என்று சொன்ன கருத்தின் முழு ஆழத்தையும் புரிந்துகொள்ளாமல் போய்விடுவார்களே என்ற சந்தேகம் சுருதிக்கே இருக்கும் போலிருக்கிறது.

பிராணன் (பிராணே) இதை முதல் வேற்றுமையாகவும் கொள்ளலாம். அல்லது ஏழாம் வேற்றுமையாகவும் கொள்ளலாம். சகம் பூராவும் பிரும்மத்திலிருந்து எழுந்து பிராணனில் உலவுகிறது என்று கருத்தும் கொள்ளலாம். அல்லது பிராணன் (பிராணேசதி) இருப்பதால் சகம் முழுவதும் அவனி (பிரும்மத்தி)டமிருந்து எழுந்து அவனிலேயே இயங்குகிறது என்னும் பொருள் கொள்ளலாம்.

இங்கே பிராணன் என்பதற்கு பிரும்மம் என்று கருத்துக் கொள்ளவேண்டும். இந்த நித்யதத்துவம் தான் இந்தத் தோற்ற உலகம் வெளித் தோன்றல் காரணமான ஒரே ஆதாரம். அதன் ஆதாரத்தில்தான் இது தங்குகிறது. காலக் கிரமத்தில் அதற்குள்தான் ஒடுங்குகிறது. ஏஜதி (இயங்குகிறது அல்லது துடிப்பைக் காட்டுகிறது) 'சிருஷ்டி, சிருஷ்டிப் பொருளான சகம் இரண்டுமே அந்த அழியாப் பொருளின் மேல் ஏற்படும் அழுத்தங்கள்' என்று இந்திய வேதாந்திகள் கருதுகின்றனர். மேல்நாட்டு விஞ்ஞானமும் பொருள்களின் உலகமும் தங்களுடைய துடிப்பில் பிரயாதமான வேகத்தில் நகர்ந்துகொண்டிருக்கும் ''சக்திரங்கள் என்றே சொல்லி இந்திய வேதாந்தக் கருத்துக்குச் சமமான முடிவுக்கு வந்திருக்கிறது. அணு பிளக்கப்பட்டவுடன் அதற்குள் நிலையாக நிற்கும் ''ந்யூட்ரானை''ச் சுற்றி எலெக்ட்ரானும் ப்ரோடானும் வெகு வேகமாகச் சுற்றுவதாகக் கருவிகளின் மூலம் கண்டார்கள். அவர்கள் மேலும் இந்த பாகங்களின் சுழற்சி வேகத்தைக் குறைத்துப் பொருள்களையே மாற்றிவிடலாம் என்றும் கண்டார்கள். அணுக்களை சக்தி தவிர வேறில்லை என்றால் அணுவின் அணுக்களும் அப்படித்தானே இருக்க வேண்டும்? பிறகு பொருள்களும் சுழலும் சக்திக் குவியல்கள் தாம். இந்த விஷயம் சோதனைச் சாலையில் விஞ்ஞானம் கண்டு தந்த உண்மையாகும்.

இது அறிந்த புதுப் படிப்பு ஹிந்து இளைஞர்கள் ''சிருஷ்டி ஒரு போக்குச் சக்தியின் துடிப்பே'' என்று இந்த மந்திரம் சொல்வதை ஒப்புக் கொள்வதில் 'ஒன்றும் கஷ்டம் இராது' பிறகு அசங்காத ஆதாரம் ஒன்று இருந்தால் ஒழிய இந்தச் சுழற்சியும் துடிப்பும் நடைபெற இயலாது. அந்த ஆதாரம்தான் அந்தப் பரம சத்தியமாம் விடாமல் நடைபெறும் ஓட்டம் நம் மனதில் ஒரு தொடர்ச்சிகொண்ட உருவத்தை பிரமையின் மூலம் ஏற்படுத்த முடியும்; ஆம். அந்த ஆட்டத்தைத் தாங்க அசங்காத ஒரு அச்சோ அல்லது ஒரு அடிப் பொருளோ மட்டும் இருந்தாகவேண்டாம். நுனி கொளுத்திய ஒரு ஊதுபத்தியை வேகமாகச் சுற்றிப் பாருங்கள். ஒரு தங்க வளையம் ஏற்படுகிறது. அந்தத் தங்க வளையத்துக்கு கொளுத்திய பத்தி நுனியின் தொடர்ந்த ஓட்டம் இல்லாதபோனால்

இருப்பு ஏது? அதே மாதிரி சுத்தசக்தி அடிப்படையில் சக்தி தொடர்ந்து சுழலுவதும், தன் நிலையை ஒரு அச்சைச் சுற்றி ஒரே க்ஷேத்திரத்தில் வைத்துக் கொள்வதும்தான் நமக்கு உயிர்கள் பொருள்கள் நிரம்பிய சகத்தின் இருப்பைத் தருகின்றன.

நிச்சயமாக இன்று புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டதாகச் சொல்லப்படும் இந்த உண்மை வேதகால ஆரியர்களுக்குத் தெரிந்த ஒருசாதரண உண்மையாக இருக்கவேண்டும், இல்லை என்றால் சுருதி இவ்வளவு சுருக்கமாக சகம் பிராணனில் உயிர்க்கிறது!' என்று சொல்லி நிறுத்தியிருக்காது

மஹாபயம் (பெரும் பயங்கரம்) சகத்தில் எதுவும் திடீர் என்று தொடர்பு அர்த்தம் அற்ற வகையில் நடப்பதில்லை. இயற்கை ஒரு திட்ட இனிமையு (இழுமு)டன்தான் நடக்கிறது. நக்ஷத்திரங்கள் கிரஹங்கள் எல்லாவற்றின் போக்கையும் கட்டுப் படுத்தும் சட்டம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. இயற்கையின் சட்டங்கள் எல்லாவற்றிலும் ஒரு தொடர்ச்சி நேர்மையும் இருக்கிறது. ஏதோ நிச்சயமான உத்தரவுகளுக்கேற்றவாறு தான் ஒவ்வொன்றும் நிகழப் பணிக்கப்பட்டிருக்கிறது. சட்டம் ஏற்படுத்தி அதை அமுலும் செய்ய ஒரு கண்டிப்பான பேர்வழி இருக்கிறதாகத்தான் தெரிகிறது. இந்தக் கருத்தில் தான் பெயர்கள் உருவங்கள் கொண்ட உயிர்க் கோடிகளாலான இந்த உலகம் தன் பின்னால் பிரம்பைத் தூக்கிக் கொண்டு விரட்டும் ஒரு சட்ட அதிபதி நின்றுகொண்டிருப்பது போல் இவ்வளவு கெட்டிக்காரத்தனமாகவும் தவறு செய்யாமலும் தன் வேலையைச் செய்கிறது என்று கூறுகிறது.

மொத்தத்தில் இந்த மந்திரம் இந்த சகத்தின் தோற்றங்களின் ஆரம்பஸ்தானம் ஜடமான உயிர்ப்பற்ற பொருள் அல்ல; அப்படி புத்த மத வேதாந்திகள் வாதித்து நிலை நாட்ட முயலலாம். அது உண்மையல்ல. ஆனால் இந்த உயிர்களுக்கெல்லாம் ஆதார கேந்திரம் சுறு சுறுப்பான ஆற்றல் கொண்ட ஒரு உயிர்ப்புத்தான். அது தான் அந்தச் சுத்த அறிவேயாகும்.

அந்தப் பரப்பிரும்மம், எல்லா உயிர்க்கும் ஆதாரம், என்றும் நடக்கும் மாற்றத்தின் ஆட்டத்துக்கு அடிப்படையே

தங்கள் உள்ளே உள்ள உயிர்த்தத்துவம் என்று அறிந்தவர்கள் அமிருதத்தன்மையை அடைகிறார்கள்,

பயாதஸ்யாக்நிஸ்தபதி பயாத்தபதி ஸூர்ய: |
பயாதின்த்ரஸ்ச வாயுஸ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம: ||

3. அவனுக்குப் பயந்து நெருப்பு எரிகிறது. அவனுக்குப் பயந்து சூரியன் பிரகாசிக்கிறான். அவனுக்குப் பயந்தே இந்திரன் வாயு, ஐந்தாவது, யமன் எல்லோருமே (தங்கள் வேலை மேல்). போகிறார்கள்.

அந்தப் பரம சத்துவம் இருந்து கொண்டு உயிரின் சட்டமான தன் உத்தரவை இடவும் அதை ஆண்டு செலுத்திக் கடைசியில் அது ஒழுங்காக சிக்கலின்றி நடக்கவும் பார்த்துக் கொள்ளாவிட்டால் நிச்சயமாக இந்த இயற்கையின் போக்குகளில் ஒரு நேர்மையும தொடர்பும் இருந்திருக்க முடியாது. மட்டற்று உயரும் அந்த உண்மைத் தத்துவத்தின் அதிகாரத்தினிடம் பயம் இல்லாவிட்டால் இன்று விஞ்ஞானப் பாட புத்தகங்கள் ஏற்பட்டிருக்க முடியாது. ஏன், உயிர் தங்குவதே கஷ்டமாய்விடுமே? இன்று அக்னி ஒரு நாள் லீவு எடுத்துக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். சூடு அற்றுப்போனால் பாலை அடுப்பில் ஏற்றி வைத்து மணிக்கணக்காய்க் காத்திருந்தாலும் அது குளிருமே தவிர சூடேறப் போவதில்லை. ஒழுங்கு முறையான வாழ்வு முடியாத ஒன்றாகிவிடும். கிரகஹங்கள் இஷ்டப்பட்டால் தங்கள் பாதைகளிலிருந்தும் போக்கிலிருந்தும் அப்பால் போய்விடலாம். மோட்டார் மோதிச் சங்கடங்கள், ரெயில் தடம்புரண்டு சேதம் என்றெல்லாம் இன்று எவ்வளவு அடிக்கடி ஏற்படுகின்றனவோ அதேபோல் அடிக்கடி கிருகங்களின் மோதல், நக்ஷத்திரங்களின் அடிதடி எல்லாம் ஏற்படலாம்!

ஆனால் இன்று அண்டங்கள் எவ்வளவு வழவழ என்று சிக்கல் இல்லாமல் பூர்ணமான ஒழுங்கில் ஒரு சேர்க்கை இனிமையுடன் நடந்துகொண்டிருக்கின்றன. சூரியன், அக்கினி, இந்திரன், வாயு எமன் எல்லோரும் எவ்வளவு கோஷ்டியுணர்ச்சியுடன் இயங்கிக்கொண்டிருக்கின்றனர்.

இயற்கை அந்தப் ப்ரப்பிரும்மத்தினிடமுள்ள பயத்தினால் (அதிகாரத்துக்கு மதிப்புத்தந்து) சநாதன விதிகளுக்கு முற்றி லும் சொல் கருத்து இரண்டுக்கும் கட்டுப்பட்டு இருக்கிறது என்கிற கருக்தை ஒரே கருத்து வலிவுடன் தைத்தரீய உபநிஷத் திலும் 11—8—1ல் (கொஞ்சம் மாறுபட்ட சொற்களின் மூலம் தான் என்றாலும்) சொல்லியிருக்கிறார்கள்.

பஞ்சம: (ஐந்தாவது) யமன் எண்ணில் ஐந்தாமவராகக் கருதப்படுகிறார். இவருக்கு முன் இந்த மந்திரத்தில் நான்கு பேர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர் முறையே அக்னி, சூரி யன், இந்திரன் வாயு எனப்படுவர். ஆகவே எமன் ஐந்தாவது பெயர்.

இஹ சேதஸகத் போத்தும் : ப்ராக் சரீரஸ்ய விச்ரச :
தத: சர்கேஷு லோகேஷு ஸரீரத்வாய கல்பதே ||

4 இங்கே (இந்த வாழ்வில்) உடல் அழிவுக்குமுன் ஒருவன் பிரும்மத்தை உணரமுடியுமானால் அவன் சம்சார பந்தனத்திலி ருந்து விடுபடுவான். ஒருவன் அவனை அறிய முடியவில்லை என் றால் சிருஷ்டி உலகில் அவன் மீண்டும் பிறவி எடுக்க நேரிடும்.

அறியாமையை ஒழிக்க ஞானத்தால்தான் முடியும். ஏக காலத்தில் அதே இடத்தில் ஞானம் அஞ்ஞானம் இரண்டும் சேர்ந்திருக்க முடியாது. ஒளி இருட்டில் முடிவடைவதுபோல் ஞானமும் அஞ்ஞானத்தில் முடிவடைகிறது.

நம்முடைய உண்மை அடையாளம் அறியாமை மனம் புத்தி உடலுடன் சேர்ந்து மயங்கும் நிலையை ஏற்படுத்திவிட் டது. இதுதான் நம்முடைய துன்பம் சுற்றெல்லை இரண்டும் கொண்ட 'நான்' என்ற கேந்திரம்கொண்ட வாழ்க்கைக்கு ஆரம்பம் ஆகிறது.

மனிதனாகப் பிறந்த ஒருவன் தன் வாழ்நாள் எல்லைக்குள் அடையக்கூடிய மிகப் புனிதமான பெரும் சாதனை, மிகப்பெரும் வெற்றி தன் உண்மை அடையாளத்தை அந்தப் பரந்த நித்ய பரம ஆத்மாவுடன் இணைந்தது என்பதை உணர்வதுதான். இங்கே தன் வாழ்நாளிலேயே 'தான் அதே' என்ற உண்மை

அடையாள உணர்வைப் பெற்றவன் சாவில்லாத பூர்ணத்வம் நிறைந்த அந்த அமரப் பதவியை அடைகிறான். இந்த உண்மை அடையாளத்தை அடைந்தபிறகு அந்த ஜீவனுக்கு சாவு வாழ்வு வின் துயரங்கள் இருக்கவே முடியாது. கனவிலிருந்து விழித்த பிறகு கனவில் துரத்திய புலியைச் சுடத் துப்பாக்கியைத் தேடிக் கொண்டு திரியவேண்டாம். கனவில் குதிரை சவாரி செய்த வன் விழித்தபிறகு அந்தக் குதிரையை நீர் காட்ட அழைத்துச் செல்ல வேண்டியதில்லை. 'நான்' என்கிற உணர்வு சிருஷ்டித்த துன்பங்களாகிற கனவு நிலையிலிருந்து ஆன்ம அறிவாகிற விழிப்பு நிலைக்கு விழித்துவந்த பிறகு தெய்வ மனிதன் சாவு வாழ்வு என்ற எல்லை வளையத்துக்குள் இங்கும் அங்கும் ஊசலாடவேண்டிய அவசியமில்லை,

தன் வாழ்வில் ஒருவன் அந்த அமரதத்துவத்துடன் தன் இணைப்பை உணரவில்லை என்றால் அவன் தற்பொழுது கொண்டிருக்கும் தோற்றத்திலிருந்து (ஜன்மத்திலிருந்து) சென்றபிறகு மீண்டும் ஒரு முறை ஜன்மம் எடுத்து இந்தக் குறையும் எல்லையும் முடிவும் கொண்ட தளத்துக்கு வந்தாகவேண்டும். ஏன் எனில் நாம் ஏற்கனவே கண்டோம். இந்த 'நான்' உணர்வு நாம் நம் மனது உடல் புத்திப் போர்வையே நாம் என்று நினைக்கும்வரை முடியப்போவதில்லை. நம் உயிர்க்கெல்லாம் மூல இடமான அந்தப் பரமாத்ம நிலைதான் நம்முடைய உண்மை அடையாளம் என்கிற நேரடி உணர்வு ஏற்பட்டால் தான் முடிவடையும். இந்த நேரடியான ஆன்ம சாக்ஷாத்கார நிலையை ஒருவன் பெறுதவரை அதன் 'நான்—உணர்வு' இருக்கத்தான் செய்யும். அதனால் நான், எனது என்கிற உணர்வு இந்த உடலை விட்டு விட்டால் அவை கருத்துக்கள் உருவத்தில் அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. உரியகாலம் வந்த வுடன் வேறொன்றைத்தேடி எடுத்து அந்த (தோற்றம் அல்லது) உடலுடன் தன் உறவை ஏற்படுத்திக்கொள்கிறது. இங்கே சுருதி சாதகர்கள் நன்கு முயற்சிசெய்ய வேண்டும் என்று எச்சரிக்கிறது. அப்பொழுதுதான் அவர்கள் இந்த சாதாரண அழியும் நிலையிலிருந்து வளர்ச்சியில் அழியாப் பூர்ணத்துவத்தை அடைவதாகிற வாழ்வின் இறுதி லட்சியத்தை அடையமுடியும். வளர்ச்சி முயற்சியில் இந்தப் பரம லட்சியம்தான் பூரணமான நிறைவாகும். மனிதன் ஒருவன்தான் அதிர்ஷ்டம் செய்

தான். அவனுக்குத்தான் ஒரு உணர்ச்சி ஏற்கும் மனது, பகுத்தறியும் விவேகம் முதலிய தேவையான கருவிகள் கிடைத்திருக்கின்றன. அவற்றைச் சரியான பண்பட்ட முறையில் உபயோகித்து அவன் தானாகவே திட்டமிட்டே தன் வளர்ச்சி எல்லையைச் சீக்கிரம் அடைய முடியும். தன் வளர்ச்சி எல்லையை அடைவதில் துரிதம் காட்டிப் பயன்பெறும் இந்த சுதந்திரம் இயற்கை வேறு எந்த உயிருக்கும் அளிக்கவில்லை.

யதாதர்ஸே ததாத்மநி யதா ஸ்வப்னே ததா
பித்ருலோகே |
யதாப்சு பரீவ தத்ருசே ததா கந்தர்வலோகே
சாயாதபயோரிவ ப்ரஹ்ம லோகே ||

5. கண்ணாடியில் (பார்ப்பதுபோல்) ஒருவன் தன்னுள்ளேயே (பிரம்மத்தைத் தெளிவாகப் பார்க்கலாம்). கனவுகளில் போல் பித்ரு லோகங்களில் (முன்னோருலகத்தில்) நீரில் போல் கந்தர்வ உலகத்தில்: ஒளியிலும் நிழலிலும் போல பிரும்ம லோகத்தில் (அவனைப் பார்க்கலாம்).

இந்த மந்திரத்தின் ஒவ்வொரு சொல்லிலும் இந்த உபநிஷதம் கருத்தை செறித்து நிரப்பியிருக்கிறது. அதன் செறிவு காரணமாக இந்த மந்திரம் தன் கருத்துக்களில் கனத்தாலேயே வளைந்து காட்டுகிறது போலவே இருக்கிறது. முதல் தடவை படிக்கும் போது அப்படியே எல்லாம் தெளிவடைந்து விட்டது போல் தோன்றும். உபநிஷத நடையின் ரகசியம் இதுதான். எவ்வளவுக் கெவ்வளவு சுலபமாகத் தோற்ற மளிக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதில் கருத்துச் செறிவு நிறைந்திருக்கும். சென்ற மந்திரத்தில் வாழ்வின் மிகப் பெரிய சாதனை தன் உண்மை அடையாளத்தை உணர்வதுதான் என்று நமக்குப் புத்திமதி தரப்பட்டது. இந்த மந்திரத்தில் யம தர்மராஜன் தன் சிஷ்யனான நசிகேதனுக்கு. உயிரின் மற்ற தளங்களில் இந்த ஆத்ம சாக்ஷாத்காரத்தை ஒப்பிடுங்கால் இந்த மனித வாழ்வில் அந்த உணர்வு அடைவது எவ்வளவோ புனிதமானது. அது எப்படி, என்று விவரிக்கிறார்.

நாம் மனிதர்கள்என்ற முறையில் ஒரு உணர்வுத் தளத்தில் (அல்லது லோகத்தில்) இருக்கிறோம். இந்தத் தளத்தில் நம் இந்

திரியங்கள் மனம் புத்தி முதலியவைகள் மூலம் இந்தப் புறப் பொருள் உலகத்தில் ஏற்படும் சம்பந்தத்தால் கிடைக்கக் கூடிய குறிப்பிட்ட அநுபவங்கள் கிடைக்கின்றன. விழிப்புலகில் நம் அனுபவங்கள் கனவுலகின் நம் அனுபவங்கள் போல் இருக்க முடியாது. அதேபோல உணர்வின் பல தளங்கள் இருக்க முடியும். அங்கே எல்லாம் நம் அனுபவங்களின் அளவும் தன்மையும் மாறி நிற்கலாம். அந்த விதம் பித்ருலோகம் என்று ஒன்று இருக்கிறது. அங்கே மனமும் புத்தியும் இருக்கிறதே தவிர பூத உடல் இருக்க முடியாது. இயற்கையாக அங்கே சூட்சும உடலில் பெறும் அனுபவங்கள் இங்கே நாம் பெறும் அனுபவங்கள்போல் இருக்க முடியாது. இங்கே நம் உடல் தேடுவது வேறு. அதன் பயனாய் நாம் அடையும் இன்ப துன்பங்கள் நமக்கு ஒருவிதமான அனுபவங்களைத் தருகின்றன. அவற்றின் நிறமே தனி. இதே போல (பாட்டு ஆட்டம் முதலிய கலைகளில் மிகச் சிறந்த) கந்தர்வர்களின் லோகத்தில் கிடைக்கும் அனுபவங்கள் ஹிரண்யகர்ப்ப அல்லது பிரும்மலோகத்தில் கிடைக்கும் அனுபவங்கள் முதலியன ஒன்றுக்கொன்று மாறுபட்டுத் தனித்தே இருக்கும். சாதகர்கள் பல லோகத்தில் அடையும் அந்தப் பரம அறிவு எப்படி எப்படித் தெளிவு பட்டிருக்கும் என்று தெளியவைக்க முயலுகிறது.

யதாதர்சே (கண்ணாடியில் போல) இந்த மர்த்ய லோகத்தில் வாழும் மனிதன் மட்டிலும் தான், குறிப்பிட்ட சில பயிற்சி முயற்சிகளின் மூலம் அந்தப் பரம அறிவுத் தத்துவத்தைப்பற்றிய மிகவும் தெளிவான கருத்தைப் பெற முடியும். இயற்கை உணர்வறிவின் மூலம் மனதையும் புத்தியையும் தாண்டி சாதகன் உண்மை அல்லது ஆத்மாவைக் காணுகிறான். இங்கே சிந்திக்கும் மாணவர்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பலாம். மனமும் புத்தியும் தாண்டியபிறகு 'நானுணர்வு' நின்று நம் உயிரின் கேந்திரத்தை எதிர் எதிராகச் சந்தித்து அதை உணர்வது எங்ஙனம்? உண்மைதான், கேள்வி மிகவும் கெட்டிக்காரத் தனமானது; தர்க்கப்படி சரியும் கூட. இந்தக் கேள்விக்குக் கண்ணாடியில் பிரதிபிம்பம் பார்க்கும் உவமை மிகவும் சுலபமாக விடை தந்து விடுகிறது.

நண்பர்களே, நித்ய முக க்ஷவரம் செய்து கொள்ளும் இந் நாட்களில் கண்ணாடியில் முகத்தைப் பாந்த்துக்கொள்ளாமல்

ஒருநாள் கூடப் போகாது. ஆகவே உங்களுக்கு எல்லோருக்கும் கண்ணாடி பார்த்துக்கொள்வது நன்கு பழக்கமான ஒரு செயலாக இருக்கும். ஆனால் உங்கள் பிரதிபிம்பத்தை சரியாக எந்த நேரத்தில் உணர்ந்து கொள்கிறீர்கள் என்று நீங்கள் அலசி உணர்ந்திருக்கமாட்டீர்கள். இந்த சாது அதற்கு உதவி செய்வார்.

ஒரு கணம் நீங்கள் கண்ணாடிக்கெதிர் நிற்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்கள் பிரதி பிம்பத்தைப் பாருங்கள். என்ன தெரிந்துகொள்கிறீர்கள்? உதாரணமாக உங்கள் பிரதி பிம்பத்தின் தாடி வளர்ந்திருக்கிறது, கொண்டுவா பிளேடை என்கிறது. உடனே நீங்கள் பிளேடை எடுத்து அந்தப் பிரதிபிம்பத்தின் முகத்தை சிரைக்க ஆரம்பிப்பீர்களா! எனவே நீங்கள் பிரதி பிம்பத்தைப் பார்த்தாலும் கூட உண்மையில் நீங்கள் உங்களைத்தான் அறிந்து கொள்கிறீர்கள்.

அதே போல மனமும் புத்தியும் தாண்டிய பிறகு அந்த சுத்தத்தியான நிலையில் ஜீவாத்மா தன் குறைபாடுகளின் மூலமே எட்டிப்பார்த்தும் அந்தப் பரமாத்மாவை நேருக்குநேர் சந்திக்கிறது. அந்த சமயத்தில் இந்த நன்கு வளர்ந்த ஆத்மா சுத்த சத்துவத்தின் ஒளியைப் பிரதிபிம்பிக்கிறது. அந்தப் பிரதி பிம்பம், பார்க்கும் ஒரு செயலில் மறைந்து ஆத்மாவுடன் ஒன்றுகிறது: பிரதிபிம்பத்தைப் பார்த்துக் கொண்டே நாம் பிரதி பிம்பத்துக்குப் பதிலாக நாம் பிரதிபிம்பத்துக்கு மூலமான நம் முகத்தையே அறிகிறோம்-

இந்தக் கருத்தை அதன் ஆழத்திலுள்ள பொருள் செறிவுடன் நன்கு புரிந்து கொண்டு விட்டோமானால் பல லோகங்களில் (உணர்வுத் தளங்களில்) சாதகர்கள் அந்த உண்மையை அடையும் நிலையில் உள்ள தெளிவின் அளவு விபரங்களைத் தெரிவிக்க சுருதி இந்த மந்திரத்தில் உபயோகிக்கும் உவமைகளை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்

இதுவரை யக்ஞப் பேருரைகளைக் கவனித்து வந்தவர்கள் 'கனவில் போல பித்ருலோகத்தில், நீரில் போல கந்தர்வ உலகத்தில்' என்று பசப்படும் உவமைகளிலுள்ள செறிந்த கருத்துப் பொருள்களை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

(சாயாதபபோரிவ) (ஒளியிலும் நிழலிலும் போல) பிரும் மலோகத்தில் ஆன்ம அறிவு மிகவும் தெளிவாக இருக்கும் என்று சுருதி கூறுகிறது. கறுப்புச் சுவற்றில் வெண்மை எழுத்துகள் போன்று அவ்வளவு தெளிவாக இருக்கும்! உலகமனத் தளத்தில் ஆன்ம சாக்ஷாத்காரம் எல்லாவற்றையும் விடத் தெளிவாக இருக்கும் என்று சுருதி நிச்சயமாய்ச் சொல் கிறது. ஆனால் இந்த உணர்வுத் தளத்தை அடைவது மிகவும் கடினம் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஏன் எனில் கர்மம் உபாசனை என்ற இரண்டு யோகங்கள் மூலம் போது மான அளவு தகுதி அடைந்த ஜீவாத்மாக்களுக்குத்தான் இந்த நிலை சாத்தியமாகிறது. சுருதிப் பிரகாரம் பிரும்மலோகத்தை அடைந்த ஆத்மா வெகு நாள்வரை உலகத்தின் மிக சூக்ஷ்ம இன்பங்களை அனுபவித்துக் கொண்டு தங்கி விட்டு, பிறகு சிருஷ்டிகர்த்தா பிரளய காலத்தில் எல்லாவற்றையும் தன்னுள் சுருட்டிக் கொள்ளும் பொழுது அமரத்தன்மையை அடைந்து விடுகின்றது. இந்த முறை வேதாந்தகிரந்தங்களில் கிரம முக்தி என்று சொல்லப்படுகின்றது

**இந்திரியாணும் ப்ருதக்பாவம் உதயாஸ்தமயௌ ச யத்**
**ப்ருதகுத்பத்யமானும் மத்வா தீரோ ந ஸோசதி ||**

6, ஒரு ஞானி (தீரன்) தனியாக ஏற்படும் இந்திரியங்கள் ஆத்மனுக்குப் புறம்பானவை என்பதையும் அவைகள் எழுச்சி வீழ்ச்சியையும் அறிந்து பிறகு துயருறுவதில்லை.

சென்ற மந்திரத்தைப் படித்து அதன் உட்கருத்துக்களை அறிந்துகொண்டவன் 'ஏன் இந்த முயற்சியெல்லாம்? மனித வாழ்விலேயே பரமாத்ம உணர்வு பெற்று என்ன பயன்?' என்று கேட்கலாம் சுருதிதேவி இந்த மந்திரத்தில் அதற்குப் பதில் கூறுகிருள்.

நம்முள் இருக்கும் நித்யமான மாறுத உண்மைப் பொரு ளுக்கு நிச்சயமாகப் புறம்பானவை. இந்த ஐம்பொறிகள், புலனுணர்வுகள் காரணங்கள் கொண்டு ஏற்படுபவை. ஆத்மா காரணமற்ற காரணம். மீண்டும் இந்தப் புலன்கள் தங்களுக் குள் மட்டும் மாறுபட்டவை என்பதல்ல. அவைகளின் மூல காரணங்களே ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. ஐந்து இந்தி ரியங்களும் ஐந்து மூலப் பொருள்களிலிருந்து எழுந்தவை.

இப்படிக் காரணங்களில் மாறுபட்டு, தங்களுக்குள்ளேயும் வேறுபாடுடைய இவைகள் தாங்கள் நாடும் பொருள்களுக்கேற்றவாறு அடிக்கடி மாறிநிற்கும் போக்கையுமுடையவை. விழித்த நிலையில் அவை எல்லாம் உணர்வு ஏற்கத் தயாராயிருக்கின்றன, மனிதன் தூங்க ஆரம்பித்தவுடன் இவைகளின் உணரும் ஆற்றலும் அஸ்தமனமாகிவிடுகிறது. இப்படிச் சுருட்டி வைக்கப்பட்ட ஆற்றல்கள் எல்லாம் மீண்டும் அந்த ஆள் விழித்தவுடன் வெளித்தோன்ற ஆரம்பித்துவிடுகின்றன.

அந்த அழியாப் பொருளான ஆத்மா, பொறிகள் மூலம் பெறும் மாற்றமுள்ள புலனுணர்வுகள் இரண்டுக்கும் உள்ள வேற்றுமையை உணரும் அறிவாளி (தீரன்) ஒரு நாளும் வருந்துகிறதில்லை. உலகில் நாம் படும் துயரங்களுக்கெல்லாம் காரணம் நாம் அந்த 'நான் உணர்வே' என்று பெறும் ஏமாற்ற எண்ணம்; அதனால் நாம் மனதின் கோரிக்கைகள், புத்தியின் பிடிவாதங்கள், பொறிகளின் பசிகள் இவைகளுக்கு அடிமையாவதால் தான் நம் முழுச் சுதந்திர நிலையை நாம் உணர்ந்த நிலையில் வருத்தமோ துயரமோ அர்த்தமற்ற ஒரு நிலையை அடைந்து விடுவோம். இப்படி துயரமே நெருங்காத அந்த நித்ய ஆனந்தம் கொண்ட பதவி ஏற்கனவே இரண்டு மந்திரங்களில் சொல்லியபடி அறிவின் கத்தி முனைப் பாதையில் நடந்து இந்த ஜன்மத்திலேயே ஆன்ம சாக்ஷாத்காரம் செய்பவனுக்குக் கிட்டும் என்று சுருதித்தாய் உறுதி கூறுகிறாள். ஆன்ம உணர்வுபெற்ற ஜீவன் துக்கங்களுக்கு அப்பால் செல்லுவான் என்ற கூற்று நம் ஆன்ம சாஸ்திரப் புத்தகங்களில் அடிக்கடி கூறப்படும் ஒரு பேச்சாகும். (தரதி சோகமாத்மவித்) ஆன்மாவை அறிந்தவன் சோகத்தைத் தாண்டுகிறான் என்று மற்றொரு உபநிஷத்தும் கூறுகிறது.

இந்திரியேப்ய: பரம் மனோ மனச: சத்வமுத்தமம் |
சத்வாததி மஹாநாத்மா மஹதோவ்யக்தமுத்தமம் ||

7. இந்திரியங்களுக்கு அப்பால் மனது இருக்கிறது. மனதுக்கு அப்பால் புத்தி, புத்திக்கு அப்பால் ஆத்மா. பெரிய ஆத்மாவுக்கும் பெரிது அவ்யக்தம்.

அவ்யக்தாத்து பர: புருஷோ வ்யாபகோலிங்க ஏவ ச |
யம் ஞாத்வா முச்யதே ஜந்துரம்ருதத்வம் ச கச்சதி ||

8. அந்த அவ்யக்தத்துக்கும் அப்பால் எங்கும் ஊடுருவி நிற்கும் புருஷன் இருக்கிறார். அவருக்கு பிரித்தறியும் அடையாளங்கள் கிடையாது. அவரை அறிந்த பிராணி (அறிபவன்) விடுதலை பெற்று அமரத்வத்தைப் பெறுகிறான்.

இந்த இரண்டு மந்திரங்களையும் சேர்ந்தாற்போல் பார்க்கலாம். முதல் மந்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் இரண்டாம் மந்திரத்தின் முதல் பகுதியில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கள் இவற்றைப்பற்றி விரிந்த வகையில் நாம் விளக்கம் பார்த்துவிட்டோம். வல்லி மூன்று மந்திரம் 10ல் பார்த்தபடி இங்கே இந்த மந்திரம் ஸ்தூலத் தளத்திலிருந்து நம்முள் உள்ள மிக சூட்சும நிலைக்கு ஏறிச்செல்லும் ஏற்றப் படிகளைப்பற்றி சொன்னதையே திருப்பிச் சொல்கிறது. அந்த மந்திரத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தைப் பார்த்துக்கொள்ளலாம்.

நம்முள் இருக்கும் அந்தப் பரம சூட்சுமத் தத்துவமான புருஷன் இங்கே வியாபகம் என்றும் குணம் முதலிய அடையாளமற்றது என்றும் (வியாபகம், அலிங்கம்) விளக்கப்படுகின்றது. சூட்சுமத்திலும் சூட்சுமப்பொருள் ஆத்மா; என்றால் அது எங்கும் பரந்து ஊடுருவி நிற்கும் ஒரு பொருளாகத் தான் இருக்கும் என்று ஏற்கனவே நாம் விரித்து விளக்கியிருக்கிறோம்.

சம்ஸ்கிருதத் தத்துவசாஸ்திர அகராதியில் லிங்கம் என்ற சொல்லுக்குத் தனி சாஸ்திரீயமான பொருள் உண்டு. வேதாந்தச் சர்ச்சைகளில் அதன் சாஸ்திரப் பொருளில் பேச வேண்டியிருக்கும் பொழுதுதான் அந்தச் சொல்லை வேதாந்தி உபயோகிக்கிற வழக்கம். நமக்கு ஊகிக்கும் ஒரு சக்தி உண்டு. அதன் மூலம்தான் நாம் பெறும் அறிவில் பெரும்பகுதி பெறப்படுகிறது. இதுவரைப் பார்க்க இயலாத பொருள்களைப் பற்றிய அறிவிலோ மிகப் பெரும்பகுதி ஊகத்தின் மூலம் தான் கிடைக்கிறது. தொலைவில் உள்ள மலையின் ஒரு இடத்திலிருந்து புகை வந்தால் நாம் இங்கிருந்து அதைக் கவனித்து மலையில் நெருப்பு இருக்கிறது என்று ஊகிக்கிறோம் (அநுமானம் செய்கிறோம்) நெருப்பின் அறிவை ஏற்படுத்தக் கூடிய அடையாளம் புகை. அதைக்கண்டு நாம் நிச்சயமாக நெருப்பு இருக்கும் என்று முடிவு செய்கிறோம்.

அந்தப் புகை நெருப்பின் லிங்கமாகும். தர்க்க சாஸ்திரத்தில் பொருளை அறிய உபயோகப்படும் அடையாளமே லிங்கம் என்று அழைக்கப் படுகின்றது,

அச் சொல்லில் இந்தச் சரியான கருத்தைப் புரிந்துகொண்டால் நாம் இந்த சுருதிப் பொருளை நன்கு தெரிந்துகொள்ளலாம். புருஷனுக்கு லிங்கம் கிடையாது என்று சுருதி பேசுகிறது. அதன் கருத்து : அதற்குக் குணங்களோ, பண்புகளோ அல்லது அது'தான் என்று அறிந்து உணர உதவும் அடையாளங்களோ கிடையாது. ஆகவே நாம் எவற்றைக்கொண்டு அதை உணர்ந்து அனுபவத்தில் அதேயாக முடியும்.

இதை நேரடி அனுபவத்தில்தான் உணர முடியும். அப்படி சுயானுபவத்தில் அதை ஏற்றவன் இந்த அழிவுலகத்தின் குறைகளிலிருந்து விடுபடுகிறான். அதுமட்டுமல்ல, நிச்சயமாக அவன் நித்ய வாழ்வின் அமர நிலையையும் அடைவான் என்று சுருதி உறுதி கூறுகிறது. பிரும்மத்தை அறிந்தவன் பிரும்மமாகிறான் என்பது சுருதி அடிக்கடி கூறும் உறுதிமொழி.

ந சம்த்ருஸே திஷ்டதி ரூபமஸ்ய
ந சக்ஷுஷா பஸ்யதி கஸ்சனைநம் |
ஹ்ருதா மநீஷா மநஸாபிக்லுப்தோ
ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி •

9. அவன் உருவம் பார்க்க முடியாதது. கண்ணால் அவனை யாரும் பார்க்கிறதில்லை. மனதைப் புத்தியால் அடக்கி எப்பொழுதும் தியானம் செய்தால் அவன் அறிவுக்கு இலக்கு ஆகிறான். இதை (பிரும்மத்தை) அறிந்தவர்கள் அமிருதர்கள் (அமரர்கள்) ஆகிறார்கள்.

ஐம்புலன்கள், மனது, புத்தி இவற்றின் க்ஷேத்திரங்களுக்கு அப்பாற்பட்டது இந்த ஆத்மா என்ற விஷயத்தை சுருதி பல முறைகள் பல மந்திரங்களில் கூறிவிட்டிருக்கின்றது. அறிந்து. உணர்ந்து, யோசித்துத் தம் வேலைகளைச் செய்யும் இக் கருவிகளின் ஆற்றல்களுக்கு அந்தப் பொருள் இலக்காகவில்லை யென்றால் விஷயம் நன்கு அறியாத சாதகன் நம்பிக்கையிழப்பது சாத்தியம்தான். அவன் சுருதிகள் சொல்லும் இலட்சியம் கிட்டாத ஒரு முடிவு என்று சொல்லி தெய்வ வாழ்வு வாழும்

முயற்சிகளை விட்டுவிடலாம். ஆனால் இந்தக் கருவிகளின் எல்லைக்கப்பால் ஒரு தாண்டுதல் இருக்கிறது. அதைச் செய்தால் தான் உண்மையின் தேசத்தை அடையமுடியும். அந்தக் கடைசித்தாண்டுதல் எது என்று இந்த மந்திரம் சாதகனுக்கு இங்கே விளக்கித் தருகிறது.

ந சக்ஷுஷு : பச்யதி (அவனைக் கண்ணால் ஒருவரும் பார்க்கமுடியாது. இங்கே கண் உப லக்ஷணமான சொல். (பல கருத்தைக் குறிக்கப் பிரதிநிதியாய் நிற்கும் சொல்) இந்த மந்திரத்தில் அது எல்லாப் பொறிவாயில்களையும் குறிக்க நிற்கிறது. இங்கே குறிப்பாகவும் தெளிவாகவும் சுருதி ஒரு துணிகரமான செய்தியைச் சொல்கின்றது. ஈசுவரன் ஒருநாளும் தன் பக்தர்கள் தங்கள் புலன்களைக் கொண்டு காணும்படி இலக்காகமாட்டார். அப்படிக் காணும் காட்சிகள் மனதின் தோற்ற ஏமாற்றங்கள்தாம். அவை எவ்வளவு தெய்வீகக் காட்சிகளாயிருந்தாலும் சரியே !

தன் ஆத்ம தரிசனத்தின் ஒரே வழி இயற்கையுணர்வின் கற்பனையறிவு மூலம்தான் ! அது மனிதன் புத்தியில் இப்பொழுது தூங்கும் நிலையில் இருக்கிறது. சுருதி சொல்கிற பிரகாரம் புத்தி இதயக் குகையில் இருக்கிறது, அங்கிருந்தே அது மனதின் செயல்களை ஆளுகின்றது. மனது சும்மா இருந்தால் புத்திக்கு அமைதி கிட்டுகிறது. நல்ல அமைதி நிலையில் புத்தியும் மறைகிறது. அந்த நிலையில் நமக்குக் கிடைக்கும் ஆற்றல்தான் உள்ளுணர்வு என்ற 'உணர்வின் கற்பனையறிவு'. இந்த அறிவின் உதவியால்தான் ஒரு சாதகன் தன் ஆத்மாவை நேரடியாக உணர்கிறான். இந்த கற்பனையறிவு என்பது ஆத்மஞானத்தைப் பெறும் சக்தி என்பதுதான். வேறு ஒன்றுமில்லை. ஆத்மஞானம் என்பது ஆத்மா தன் உண்மை நிலையை அடைவதுதான்,

அழுத்தம் தருவதற்காக சுருதி இங்கே கூறியதைக் கூறுகிறது. இங்கு வந்து தங்கும் ஒருவன் அந்த சுத்த உணர்வுத் தத்துவமேதான், வேறில்லை என்று உணர்ந்து கொண்டானானால் அவன் அமரனாகி விடுவான். பிறப்பு இறப்பு என்கிற சம்சாரச் சுழலிலிருந்து தப்பிவிடுவான்.

யதா பஞ்சாவதிஷ்டன்தே ஞானநி மனசா சஹ |
புத்திஸ்ச ந விசேஷ்டதி தமாஹு: பரமாம் கதிம் ||

*10. ஐந்து ஞானேந்திரியங்களும் மனதுடன் சேர்ந்து அமைதியாயிருந்தால், புத்தியும் வேலையிலிருந்து ஒய்வு எடுத்துக் கொண்டால் அதைத்தான் பரமநிலை என்று சொல்கிறார்கள். அறிவும் மொழியும் எவ்வளவு தூரத்துக்குத் தெளிவாகப் பேச முடியுமோ அவ்வளவு தெளிவை நாம் இங்கே காண்கிறோம். ஆத்ம சமாதி நிலையில் ஆத்மா ஆத்மாவைச் சேரும் நிலையில் ஏற்படும் அந்தப் பரம புனிதநிலையை இதைவிடத் தெளிவாகச் சொல்ல முடியாது. ஐந்து இந்திரியங்களும் நன்கு கட்டுப் படுத்தப்பட்ட பிறகு மனது கிட்டத்தட்ட எல்லா நூற்றுக் குத் தொண்ணூறு பங்கு வேலையை மூட்டை கட்டி வைத்து விடுகிறது. இப்பொழுது மனதுக்குக் கிடைத்த வேலை எல்லாம் தானே ஏற்படுத்திக்கொண்ட கற்பனைகள் பழைய அனுபவங் களின் குவிக்கப்பட்ட நாயகங்கள் இவைகளிடையே தத்திக் கொண்டிருக்க வேண்டியதுதான்! இந்தத் தத்தல்களையும் நிறுத்திவிட்டால் இந்த மந்திரத்தில் இந்திரியங்களுடன் மன துடன் சேர்ந்து அடங்கியிருக்கும் நிலை என்று விளக்கப்பட் டிருக்கிற நிலையை அடையலாம். இதுவும் போதாது. ஏனெனில் இந்த நிலையில் புத்தி துடித்துக்கொண்டிருக்கும் தன் கருத்துக் கள் கொள்கைகளில் அது தட்டித் தன் நாதத்தை எழுப்பிக் கொண்டிருக்கும் அந்தச் சத்தம் மிகவும் குறைவாக இருக்கலாம். இருந்தாலும் துடிப்பு இருக்கத்தான் செய்யும். இந்த உபநிஷத் விரும்பும் நிலை அதற்கும் அப்பாற்பட்டது. இந்திரியங்கள், மனது, புத்தி எல்லாம் அடங்கியிருக்கவேண்டும், இந்த நிலை யைத்தான் சுருதி பரம சத்துவமான ஆன்மநிலையை அடையும் தருணம் என்கிறது.*

*"நாமே நம் வாழ்க்கையில் சில சமயங்களில் மனம், புத்தி இந்திரியங்கள் எல்லாம் சும்மா இருக்கும் ஒரு நிலையை அனுப வித்திருக்கலாமே! தூங்கும்போது நம் இந்திரியங்கள், நம் மனம், புத்தி எதுவுமே தன் சாவாட்டங்கள் போட்டு நம் அமைதியை அழிக்க முற்படுவதில்லை. அப்படியானால் தூங்கும் பொழுதெல்லாம் நாம் அந்த சத்துவநிலையை உணர்கின்றோம் என்று கருத்தாகிறதா? தூக்கம்தான் அந்த நிலைதான் என்றால்*

உபநிஷதம் நம்மைச் சோம்பேறிகளாகுங்கள் — ஒரு நாளில் இருபத்துநான்கு மணி நேரமும் தூங்குங்கள் என்று சொல்கின்றனவா ?" என்று சந்தேகம் எழுப்புவதே குணமாகக்கொண்ட பிரதிநிதிகள் கேட்கிறார்கள் !

இந்த மந்திரத்தை மட்டும் மேலெழுந்த வாரியாகப் படித்தவர்கள், புதிதாக இந்தவிஷயத்தைப் படிக்கிறவர்களாயிருந்தால் அவர்கள் மனதில் இந்தக் கேள்விகள் எழலாம். உண்மையில் இந்த மந்திரத்தைத் தனியாக எடுத்துக்கொண்டு பார்க்கக் கூடாது. அந்தக் கருத்தில் இதற்குத் தனி இருப்பே கிடையாது. இதுவரை யமதர்மராஜன் சொல்லி வந்த விளக்கங்களைப் படித்துவிட்டுத்தான் இதைப் படிக்கவேண்டும். அதன் அடிப்படையில்தான் இது புரியும். அதுவும் முக்கியமாக சென்ற மந்திரத்தின் ஒளியில் தான் இதன் பொருள் விளங்கும்.

கேவலம் தூக்கநிலைக்கும் ஆன்ம சாட்சாத்கார நிலைக்கும் எவ்வளவோ மாறுபாடு உண்டு. சமாதிநிலையைத் தூக்கநிலைக் கடுத்ததே என்று விவரிக்கிறவரும் உண்டு. நாம் நிற்கும் ஸ்தூல உலக அனுபவங்களை மட்டுமே அறிந்த நமக்கு உபநிஷத கால ரிஷிகள் தாங்கள் அனுபவித்த தெய்வநிலைப் பேரின்பத்தை நம்முடைய அனுபவங்களின் சொற்களாலேயே சொல்ல நேர்ந்தது. ஆகவே சமாதிக்குத் துணையாகப் புரியும்படி நாம் அறிந்த நிலை தூக்கநிலைதான். அதைத்தான் ஒருவாறு ஒத்திட்டுப் பேச முடியும்; ஏனென்றால் அந்த நிலையில்தான் நம் இந்திரியங்கள், மனம், புத்தி, எல்லாம் ஒருவாறு அமைதியடைந்த நிலையில் இருக்கின்றன. இந்தப் பொதுத் தன்மையைப்பற்றிய மட்டில்தான் அந்த ஒற்றுமையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தெய்வ உணர்வு நிலையில் ஜீவன் தன் மனம் புத்திகளை மீறி அந்த சுத்த உணர்வு நிலையை அடைகிறான். தூக்கநிலையில் மனிதன் செய்வதெல்லாம் தன் மனம் புத்திகளையும் இந்திரியங்களையும் சுருட்டி மடக்கி வைத்துவிட்டு உணர்விழந்த ஒரு இருட்டு உலகத்தை அடைகிறான். தூங்குபவன் அறியாமையிருளில் முழுகியிருக்கிறான். சமாதிநிலையில் இருக்கிறவன் ஞான ஒளியில் திளைக்கிறான். தூங்குகிறவன் இன்மையின் இருப்பில் அடிமையாயிருக்கிறான். ஆனால் ஆன்ம அறிவுபெற்ற

நிலையில் உள்ளவன் இருக்கிறது என்ற வாழ்வில் எஜமானுகை விளங்குகிருன். இந்தக் கருத்து வேற்றுமைகள் நாம் இந்த இரண்டு மந்திரங்களுக்கும் இடையே உள்ள எழுதாத வரிகள் ஒளிர்வதைப் பார்க்கலாம்.

நம்முள்ளே நாம் ஆழ்ந்து இன்புற்று, ஆத்மா ஆத்மாவையறியும் உள்ளுணர்வை ஏற்றிவிட்டு, அதன் மூலம் மனம் புத்தி சஞ்சலங்கள் ஒழிந்து கடைசியில் ஆத்மா ஆத்மாவைக் காணமுயலும் அந்த முயற்சிக்கு நாம் கைக்கொள்ள வேண்டிய வழிமுறை எது? அது அடுத்த மந்திரத்தில் சொல்லப்படுகிறது.

தாம் யோகமிதி மன்யந்தே
ஸ்திராமிந்திரியதாரணும் |
அப்ரமத்தஸ்ததா பவதி
யோகோ ஹி ப்ரபவாப்யயௌ ||

11. இந்திரியங்களை வலுவாய் அடக்குவதை யோகம் என்று சொல்கிருர்கள். பிறகு யோகி மனதின் பித்துக்குள்ளி ஓட்டங்களிலிருந்து விடுதலை அடைகிருன்; ஏனெனில் யோகம் பெற்று இழக்கப்படுகிறது.

ஒரு வேதாந்த மாணவன் தன் ஆன்ம சாட்சாத்காரத்துக்கு உபயோகமாகும் அந்தத் தனியறிவை வளர்த்துக் கடைசியில் தன் ஆத்மாவை உணர்ந்து அமிருதத் தன்மை அடையச்செய்ய வேண்டிய பயிற்சிமுறை இங்கே விளக்கப்படுகிறது. சுய வளர்ச்சியும் சுய பூர்ணத்வமுமே யோகம்; சரியாக உண்மையாக செய்யப்பட்டால் யோகம் கண்டிப்பாய் தெய்வத்தன்மையைத் தந்துவிட முடியும். யோகம் என்பது அதன் காரியாம் சத்தில் இந்திரியங்களைக் கண்டிப்பாய் அடக்குவதுதான் என்று தெளிவாக வியந்து கூறுகிறது. நல்லதொரு மரியாதையான வாழ்வின் தக்க விதிகளை அனுசரித்து வாழ்ந்தாலே ஓரளவு இந்திரிய அடக்கம் வழக்கமாகவே ஆகிவிடும். அப்படிப் பட்ட ஒருவன் தன்னுடைய உள் காட்டுமிராண்டியை வெளியே தலையை நீட்ட விடமாட்டான். அவன் மனது பக்கத்து விஷயங்களின் ஆசையினுல் தூண்டப்பெற்ற போதிலும் தன்

உள்ளத்தை அந்தக் காட்டுமிராண்டி அழைத்துச் செல்ல விடமாட்டான்.

ஒரு மனிதன் வாழும் நாட்களில் பொதுவாக மக்கள் மனப் பாங்கு தர்மங்களைப் பின்பற்றுவதாயிருந்தால் அவனுக்கு இயற்கையாகவே புலனடக்கங்களில் உதவி கிடைத்துவிடும். இன்று இளைஞர்களிடையே காட்டு வாழ்வே கொஞ்சம் அதிக மாக இருக்கிறது. கலாசாலைகளிலிருந்து வெளியேறும் குழந்தைகளிடையே கொடுமை மனப்பாங்கு அதிகம் காணப் படுகிறது. அவ்வளவு நம்முடைய முன்னோர்களிடம் இல்லை. நிச்சயமாக இதற்குக் காரணம் நம்முடைய படித்த மக்களிடத் தில் இருக்கும் மிகவும் கீழ்த்தரமான. அர்த்தமற்ற பொருள் களில் ஆசைகொண்டுள்ள வாழ்வுதான், ஆகவே காலத்தில் மனப்பாங்கினால் பாதிக்கப்பட்ட இந்தக் குழந்தைகளை நாம் முற்றிலும் குற்றம் சொல்லக்கூடாது. வாழவேண்டும் என்ற தப்புக் கருத்தில் ஆசைகளால் இழுக்கப்பட்டு இன்பங்களைத் தேடி அவர்கள் புலனின்ப அதிகரிப்புக்களில் சிக்குகிறார்கள், அவர்களைக் குறைகூறவேண்டும் என்றால் நம்மை அதிகம் நிந்தித்துக் கொள்ளவேண்டும். இன்று இருக்கும் மனப்பாங் குக்கு நாம் தான் செய்த காரியங்கள் செய்யாத காரியங்கள் இரண்டின் மூலமும் நம்மாலான திருப்பணியைச் செய்து பங்கு கொண்டிருக்கிறோம். உண்மையை ஏமாற்றுவது, நீதிநெறி தர்மத்தின் விதிகளை வேண்டுமென்றே செய்யும் தன் முனைப்புச் செயல்களின் மூலம் மீறுவது, இந்தவிதம் நடந்து நாம் நம் நாட்களின் ஸாது மனப்பாங்கு அதன் உச்சியிலிருந்து நழுவி இன்று இருக்கும் மிக மட்டமான நம்பிக்கையே இல்லாத நிலைக்கு வரச் செய்துவிட்டோம்.

வேத காலங்களில், அவர்கள் அதிர்ஷ்டம். அவர்கள் தர்மங்களின் ஒரு கண்டிப்பான முறைக்குப் பணிந்து நடந்தார் கள். அந்தக் காலத்தில் சனாதன தர்மம் அவர்கள் நீதியாயிருந் தது. அவர்கள் சந்ததிகளும் வெகுநாள் வரையிலும். சமீப காலம் வரை ஒரு மிகவும் சிறந்த ஜாதிமுறை வாழ்வில் வாகான தும் கண்டிப்பானதுமான சமூக மதிப்புக்களைப் போற்றி சனாதன தர்மத்தின் வழியைக் காத்து வந்தார்கள். இன்றும்

ஏழ்மை, சாவு வியாதிகள் நிரம்பியிருக்கும் நம் கிராமங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உள் இன்பம் கொண்ட ஆனந்த வாழ்வு வாழ்கிருர்கள் என்ருல் நாம் சனுதன தர்மத்துக்குத் தான் வந்தனம் செலுத்தவேண்டும். அது காலம் சோதத்து என்றும் நன்மை பயக்கக்கூடியதான ஆனந்த வாழ்வின் திட்ட மாகும். இன்று உலகிலேயே பெரிய நகரங்களுள் ஒன்ருன நியூயார்க்கில் இருக்கும் ஒரு நவீன கால மனிதனுடன் ஒத்துப் பார்த்தால் நம் நாட்டில் கிராமத்தில் இருக்கும் ஒரு இந்திய வியவசாயி கண்டிப்பாக மனதில் அதிக இன்பம் கொண்டு தன் அமெரிக்க சகோதரனைவிட அதிக உள் அமைதியுடன் வாழ்கிருன் என்று நாம் உறுதியாகச் சொல்லமுடியும். சாந்தி என்பது திருப்தியின் மூலம் கிடைக்கும் ஒரு பொருள். அது புலப்பொருள்களுடன் புலனின்ப ஆசை குலாவுவதால் பிறக்கும் பார்க்கத் தகாத குழந்தையல்ல!

கொஞ்சம் வழியை விட்டு நகர்ந்து விட்டோம். மன்னிக்க வேண்டும். புலனடக்கம் ஒருவன் எவ்வளவு கொள்கிருன் என்பது அவன் வாழும் நாளின் பொது மனப் பாங்கைப் பொறுத்தது. சுயவளர்ச்சியின் கடைசி எல்லேக்கு முதலாக ஒருவன் சுய அடக்க முயற்சிகள் மூலம் மேலும் மேலும் இந்திரியங்களின் ஆட்சியை அடைகிருன். ஆம். இந்திரியங்களைக் கடைசியாக அடக்குவது அந்த பூர்ண ஆத்ம சாக்ஷாத்காரத்தின் போது தான் (பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே.)

வேதாந்தத்தில் யோகம் புலனடக்கத்தில் ஆரம்பித்துத் தொடர்கிறது. வெற்றியுள்ள புலனடக்கம் மூலம் மனதை ஒரு முகப்படுத்தும் ஆற்றலின் முழுவளர்ச்சியே பெரும் தபஸாகும். ஐகாக்ர்யம் பரமம் தப:

புலன்களை அடக்குவது என்பது ஒரு இன்மைக் கருத்தில் புலப் பொருள்களிலிருந்து புலன்களை அப்புறப்படுத்துவது என்று மட்டும் பொருள்படாது இது சண்டையில் பாதிதான். ஆத்மாவில் மனதை நிறுத்தி த்யானம் நிலை பெறும் பொழுது தான் தன்னடக்கத்தில் வெற்றி கண்டதாகக் கூறலாம். இந்த சுயவளர்ச்சி நிலையில் யோகி விழித்தவனுக ஆகிருன். இன்ப நுகர்ச்சியைப் பற்றிய எண்ணங்களில் அவன் மீண்டும் மனது

விழுந்துவிடும்படி விடமாட்டான். ஏன் என்றால், வேதாந்த மாணவனுக்குத் தெரியும்; ஒரு முறை கண்ட வெற்றி திமிர் என்று ஏற்படும் சில ஆசைகளின் கடுமையான சோதனைக்கு முன் பஞ்சாகப் பறந்து விடலாம்; அதுவும் யோகி ஏற்கனவே பழகிய அதே புலப் பொருள்களின் சூழ் நிலையில் இருந்தான் என்றால் அது நிச்சயம் நேர்ந்துவிடும். சுருதி அதனால் தான் மிகவும் தயவுடன் எச்சரிக்கிறது. மிகவும் முன்னேறியவர்கள்கூட வழுக்கி விழுந்து விடலாம். நல்ல வெற்றி பெற்ற பிறகும்கூட ஒரு முறை ஒரு நிமிஷம் சற்றே விழிப்பு நிலை தவறினாலும் ஆபத்துத் தான். ஆம். ஞான மார்க்கம் சுருக்கு வழி தான். ஆனால் பயம் நிறைந்தது; கத்தி முனை போன்றது; ஒரு தடவை வழுக்கினாலே அடியுடன் ஆத்மநாசம்தான்.

> நைவ வாசா ந மனஸா ப்ராப்தும் ஸக்யோ
>
> ந சக்ஷுஷா |
>
> அஸ்தீதி ப்ருவதோன்யத்ர கதம் ததுபலப்யதே ||

12 பேச்சினாலோ மனதினாலோ, கண்ணினாலோ ஆத்மாவை அடைய முடியாது. 'அவன் இருக்கிறான்' என்று சொல்கிறவர்கள் தவிர மற்றவர்களிடமிருந்து அது எப்படி அறிய முடியும்?

வாழ்க்கையின் இயந்திரம் முழுவதையும் ஆண்டு நடத்துவது ஆத்மா தான். கார் ஓட்டும் டிரைவரை அவன் ஓட்டும் காரே மிதித்துச் சென்றுவிட முடியாது. அதேபோல ஐம்பொறிகள், மனம், புத்தி முதலியவை அவைகளுக்குப் பின்னால் இருக்கும் உயிர்த் தத்துவம் காரணமாகவே செயல்படுகின்றன. ஆகவே அவை அந்த ஆத்மாவைத் தாமே திரும்பிப் பார்த்து தாம் அறியும் பொருள்களில் ஒன்றாக அறிந்துவிட முடியாது. உணர்ந்தோ, வாதித்தோ தெரிந்து கொள்ள முடியாது.

ஆகவேதான் சாஸ்திர கிரந்தங்களின் தெய்வ வாக்குகள் (சப்த பிரமாணம்) விட்டால் ஆத்மாவின் இருப்பை அறிய வேறு வழியே இல்லை. அல்லது அவற்றின் உயிருள்ள, பிரதிநிதிகளான சித்தியடைந்த புருஷர்கள் மூலம் தெரியவேண்டும் என்பது வேதாந்தத்தில் நன்கு ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு நம்பிக்கை என்று யமதர்ம ராஜன் தன் சிஷ்யனிடத்தில் வியந்து

கூறுகிருர். எல்லா உயிர்களுக்குள்ளும் ஒரே ஆத்மாதான் இருக்கிறது என்று நிரூபிப்பதற்கு எவ்வளவுதான் சக்தி வாய்ந்த வாதங்களைச் சொல்லினும், அதற்கு நேர் எதிரானதுதான் அதாவது ஆத்மா இல்லை என்பதுதான் உண்மை . என்று வாதித்து ஆத்ம தரிசனம் செய்த மஹானுடைய வாதங்களையும்கூட பஞ்சாய்ப் பறக்கும்படி செய்யத்தக்க ஆற்றல் வாய்ந்த புத்திசாலித்தனமான ஆத்யாத்மிக வாதங்களைக் கொண்டுவர முடியும். எவ்வளவு வாதம் ஆத்யாத்மிகத் தளத்தில் பேசினலும் அந்தப் பரம உண்மையை அறிய அவை எல்லாம் சாதகனுக்கு உதவப் போவதில்லை. ஒவ்வொரு சாதகனும் தன் தீர்த்தயாத்திரையைத் தானே ஆரம்பிக்க வேண்டும், தன்னுடைய அஞ்சாத துணிவு, தன் ஆசிரியரின் சொற்களில் நம்பிக்கை இரண்டும் கொண்டு.

அஸ்தித்யேவோபலப்தவ்யஸ் தத்வ பாவேன
சோபயோ: |
அஸ்தீத்யேவோபலப்தஸ்ய தத்வபாவ: ப்ரஸீததி ||

13 அஸ்தி — இருக்கிறன் என்றும் அவனைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும்; அவன் இருக்கும் விதத்திலேயும் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த இரண்டு வகையினருள் 'அஸ்தி' என்று உணர்ந்தவனுக்கு அவன் உண்மைத்தன்மை வெளியாகிறது.

இந்த மந்திரம் விஷயம் புரியாதவர்களுக்குப் புதிர்போல் தான் இருக்கும். சாஸ்திரம் அறிந்தவர்களுக்கு இது நேர்ப் பொருள் கொண்ட வாக்கியமாகும். இந்தச் சாது இந்த யக்ஞ சாலையில் உள்ள நீங்கள் எல்லோரும் இன்று நன்கு மலர்ந்த வேதாந்திகள் என்று கருதுவதால் இந்த மந்திரத்தின் கருத்து தானகவே தெளிவாகியிருக்கவேண்டும்.

ஆத்ம சைதன்ய நிலை இரண்டு வகைகளில் அடையப்படலாம். ஒன்று அதன் தோற்றங்களால் பாதிக்கப்பட்ட உருப் பெற்ற நிலை. அல்லது அதன் குணங்கள் ஒன்றுமற்று உணர்வு நிலைகள் எல்லாவற்றுக்கும் சாக்ஷிபூதமாய் நிற்கும் அதே நிலையாகும். அநேக இடங்களில் யமதர்மராஜன் நசிகேதனிடம் ஒன்று குறிப்பிட்டு வந்துஇருப்பதைக் காணலாம். அதாவது

•ஓம்' என்ற அடையாளத்தைக் 'கீழ் நிலை பிரும்மமாக எண்ணி தியானம் செய்யும் சாதகன் ஹிரண்யகர்ப நிலையின்பங்களைத் தான் அடைய முடியும். ஆனால் அதற்கு மாறாக 'ஓம்' என்பதை குணங்களற்ற சுத்த உணர்வின் அடையாளமாக எண்ணி தியானம் செய்பவன் சாதகன் தன் தியானம் சித்தி வரப்பெறுகிறான். அந்தப் பரம உண்மையும் எங்கும் பாவிப்பதுமான சத்தியப் பொருளையே அடைகிறான. ஸ்ரீ சங்கரர்கூட கிரந்தத்தின் உண்மைப் போக்கிலேயே இந்த மந்திரத்தின் விளக்கத்தைத் தந்திருக்கிறார்.

ஆனால் உங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் பதிப்பையோ அல்லது ரிஷிகேசத்தின் யோக வேதாந்த வனக் கலா சாலைப் பதிப்பையோ பார்ப்பவர்கள் ஸ்ரீ சங்கரர் விளக்கத்தை மாற்றி எழுதப்பட்டிருப்பதைக் கண்டிருப்பீர்கள். இந்த மாற்றம் அவர்கள் சொல்வது தேவையற்றதென்று சின்மயா கருதுகிறார்.

ஸ்ரீ சங்கரர் சொல்கிறபடி சுருதி குணங்கள் உள்ள பிரம்மமாகப் பாவித்து தியானம் செய்வது சரியில்லை என்று சாதகர்களை எச்சரிக்கிறது. தோற்றம் குணங்கள் அற்ற பிரும்மத்தைத் தான் தியானம் செய்யவேண்டும் என்று அது தீவிரமாகக் கட்சி பேசுகிறது.

ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட மாற்றமுள்ள புத்தகங்களில் இந்தக் கட்சி குறைபாடுள்ளதாகக் கருதப்பெற்றுள்ளது. அது அஸ்திஎன்றமுறையில் ''உண்மையைத் தியானிக்க வேண்டுமேயல்லாது 'நாஸ்தி' இல்லாதது என்ற முறையில் தியானிக்கக் கூடாது என்று எச்சரிப்பதாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அந்தப் புத்தகங்கள் கூறுகின்றன. சில புத்த மத வேதாந்திகளும் ஹிந்து தர்மத்திலேயே வைநாயிகர்கள் என்ற தர்க்க சாஸ்திரிகளும் 'இல்லை' என்ற கருத்தில் பேசுகிறார்கள். ஆகையால் அந்த முறையில் தியானம் செய்வது சரியல்ல என்று ஸ்ரீ சங்கரர் எடுத்துக் கூறியிருக்கவேண்டும் என்று அப் புத்தகங்கள் கருதுகின்றன.

ஆத்மா வாழ்க்கையின் சாரபூதமான தத்துவமே என்று அறிகிறவன் ஆத்மாவை உணருகிறான். இப்படி உணரும் பொழுது

சாதகன் தியானத்தின் மூலம் எல்லா வாழ்க்கையின் சாரமும் சுத்த சத்துவமே என்று உணரக்கூடிய ஒரு உணர்வின் தளத்தை அடைகிறான். இருக்கும் ஒரு பொருள் அந்தப் பொருளின் இருப்பு இரண்டுக்கும் வேறுபாடு தோற்ற எப்படிச் சொல்வது? இருப்பின் நிலையிலேயே என்று சொல்லும்போது இருக்கும் பொருளைப் பற்றிப் பேசாமல் அதன் இருப்பை மட்டுமே குறிக்கிறோம். ஒருபொருளின் 'இருப்பு' என்றால் நாம் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். ஆனால் இங்கே இருப்பு அதன் பாதிக்கப்பட்டு உருவம் குணம் ஏற்ற நிலையில் அறியப்படுகின்றது.

உண்மை என்பது இருப்பே சுத்த ஞானத்தின் தன்மை என நேரடி அனுபவத்தில் உணரும் அறிவாகும். கேவலம் அஸ்தித்வ பாவத்தை (இருப்பு என்கிற சுத்த நிலையை) உபநிஷதங்கள் ஆத்மானுபவத்தின் சாரம் எனப் பேசுகின்றன. அறிவின் இந்த நிலையை எட்டுபவன் வாழ்வின் பரமலட்சியத்தை அடைகிறான். தியான ஸ்தானத்திலிருந்து அதற்குள் சென்ற மனிதன் போல் எழும்புவதில்லை; ஆனால் இந்த உலகில் வாழும் தெய்வ மனிதனாகத் திரும்பி வருகிறான்.

யதா சர்வே ப்ரமுச்யன்தே காமா யேஸ்ய ஹ்ருதி
ஸ்ரிதா : |
அத ம்ருத்யோம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம சமஸ்னுதே ||

*14.* இதயத்தில் குடியிருக்கும் ஆசைகளை எல்லாம் அழித்த பிறகு அந்த மனிதன் அமரனாகிறான். இங்கேயே பிரும்ம நிலையை அடைகிறான்.

ஆவலற்ற நிலைதான் கைவல்ய நிலை. அதாவது ஒளி பெற்ற நிலை. இந்த அழியும் உடலில் வாழும் காலத்துக்குள்ளேயே அந்த நிலையை ஒரு மனிதன் அடைய முடியும். இங்கே சுருதி அத்வைதிகளின் பேச்சுக்கு அழுத்தம் கொடுக்கிறது. அத்வைதிகள், இந்த வாழ்க்கையிலேயே தெய்வத்தன்மையை, ஜீவன் முக்தியை அடையலாம் என்று நம்புகிறார்கள். கேனோபநிஷத் விளக்க உரை நிகழ்த்தும் பொழுது நாம் சொல்லியிருக்கிறோம். வாழ்க்கையின் எல்லையில்தான் ஆன்ம சாக்ஷாத்காரம் ஏற்பட முடியும். அது ஏற்பட்டவுடனேயே இந்த உடல்

விழுந்துவிடும் என்று நம்பும் ஒரு வகுப்பினர் இருக்கின்றனர். அந்த வகுப்புப் பரிபாஷையில் விதேக முக்தி என்று சொல்லப் படும் அந்த நிலையை நம்புகிறார்கள்.

யதா ஸர்வே ப்ரபித்யன்தே ஹ்ருதயஸ்யேஹ க்ரந்தய: |
அத மர்த்யோம்ருதோபவத்யேதாவத்யநு
ஸாசனம் ||

15. இதயத்திலுள்ள முடிச்சுகள் எல்லாம் இந்த பூமியி லேயே அறுத்து விடப்பட்டால் பிறகு மனிதன் அமரனாகிறான். (வேதாந்தங்களுடைய) கட்டளை இது வரைதான்.

சென்ற மந்திரத்தில் சொல்லப்பட்ட கருத்தின் தொடர்ச்சி இந்த மந்திரத்தில் தரப்படுகிறது.

ஹ்ருதயக்ரந்தி! இதயத்திலுள்ள முடிச்சுக்கள். இது வேதாந்திகள் கற்பனை செய்திருக்கும் ஒரு கருத்து. அவர்கள் கருத்துப்படி அவித்தை, அதாவது தன் உண்மைத் தன் மையை மனிதன் மறந்திருத்தல் தான் அவன் தொடர்ந்து கொண்டிருக்கும் பிரமைகளுக்கும் ஏற்றுக் கொள்ளும் போர் வைகளுக்கும் அடிப்படைக் காரணமாம். இருட்டில் நாம் ஒரு கயிற்றைப் பாம்பு என்று தவறுதலாக எண்ணுகிறோம். இங்கே 'பாம்பு' நம் கயிற்றினுடைய உண்மைத் தன்மையை அறியாத தனால் எழுந்தது. நாம் ஒரு முறை பாம்பு என்று எண்ணியபிறகு மற்றும் ஒட்டியுள்ள நீளம், உயரம், உடற் பருமன், படம் இன்னும் மற்ற குணங்கள், அடையாளங்கள் எல்லாவற்றையும் இல்லாத ஒரு பாம்பின் மேலேற்றிப் பார்க்கிறோம். அதேபோல மனிதன் தன் உண்மை இயற்கையை அறியாத காரணத்தால் காமத்தினால் படபடப்படைகிறான். இந்த ஆசைகளே, புலப் பொருள். உலகில் தாம் பூர்த்தியாகவேண்டும் என்பதற்காக கர்மங்களாக மாறுகின்றன. ஆன்மீகத் தளத்தில் அறியாமையே (அவித்தையே) மனத் தளத்தில் ஆசையாக உரு எடுக்கின்றது. அதுவே மீண்டும் புலப் பொருள் உலகில் செயல்களாக மாறி விடுகின்றது. "ஒவ்வொரு செயலுக்கும் எதிர்ச் செயல் உண்டு" என்பது விஞ்ஞான உண்மை. ஆகவே இந்த எதிர்ச் செயல்களை (பலன்களை) அறுவடை செய்யவே 'நான்' மையங் கள் தங்களுக்குத் தற்பொழுது இருக்கும் உருவங்

களை விட்டு சாவு என்ற பின் கதவு வழி நீங்கி பிறப்பு என்கிற வாயில் வழியாக மீண்டும் புது உருவங்கள் எடுக்கின்றன. அவித்தை, காமம், கர்மம் இவற்றின் கூட்டுக்களையே சேர்த்து இதயத்தின் முடிச்சுக்கள் என்று வேதாந்த சாஸ்திரத்தில் சொல்கிறார்கள்.

ஒரு மனிதன் இந்தத் தன் பிறவியிலேயே இந்த பிணைப்புக்களை உடைத்தெறிந்தால் அவன் உண்மையில் தன் அறியாமையைத் தொலைத்துக்கொள்கிறான். அறியாமை அறிவின் மூலம் தான் ஒழிய முடியும். எனவே இதயத்தின் முடிச்சுக்கள் அறிவின் உதயத்தில்தான் ஒழிக்கப்பட முடியும். கைவல்யம் (விடுதலை) அறிவின் மூலம்தான் வரமுடியும். ஞானேன ஏவது கைவல்யம்.

தான் சொல்வதற்கு வலிவு தருவதற்காக சுருதி மீண்டும் ஜீவன் முக்திக் கருத்தை மீண்டும் எடுத்து அழுத்தமாகக் கூறுகிறது. அதுதான் ஸ்ரீ சங்கரர் அவர்கள் சிஷ்யர்களுடைய கருத்துமாகும். இந்த உலகில் இந்த எலும்பு மாமிசம் கொண்டு வாழும் பொழுதே தன் முயற்சிகள் மூலம் மனிதன் தன் அறிவைப் பூர்ணம் அடையச் செய்து கொண்டானானால் உலகில் தெய்வமாக அவன் ஆகிறான்.

ஸதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்ய:
தாஸாம் மூர்கா நமபிநிஸ்ருதைகா |
தயோர்த்வ மாயன்னமருதத்வமேதி
விஷ்வங்ஙன்யா உத்க்ரமணே பவந்தி ||

16. இதயத்தில் நூற்று ஒரு நரம்புகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்று மூர்த்தாவைத் தொளைத்து (மண்டை) போகிறது. அதன் வழிமேலே சென்று மனிதன் அமரத்தன்மையை அடைகிறான். ஆனால் மற்றவர் மாறு வழியில் செல்கிறவர்கள்.

இந்திய வேதாந்தத்தில் நீங்கள் இதுவரை கொண்டுள்ள அறிவின் நிலையில் அந்த மந்திரத்தின் கருத்தைப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமில்லாமல் இருக்கலாம். இது 'யோக'த்தைப்பற்றிய அடிப்பாறை போன்ற கருத்துக்களுள் ஒன்றாகும். மற்ற உபநிஷதங்களில் சிலவற்றின் மூலம் நமக்கு

நம் உடலுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் சூக்ஷ்ம சரீரத்தைப் பற்றிய விவரம் தெரியவருகிறது. வேத காலத்தில் இந்த விஷயங்கள் சர்வ சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அதனால்தான் யமதர்மராஜன் அந்தக் கொள்கையைப் பற்றி அவசரமாகப் பேச்சுவாக்கில் குறித்துவிட்டிருக்கிறார். இந்தச் சமயத்தில் இந்த மந்திரத்துக்குச் சிக்கல் நிறைந்து பளுவாகும் ஒரு விவரத்தைத் தருவதனால் இந்த உபநிஷதத்தைப் பற்றி நீங்கள் புரிந்து கொண்ட பொதுவான மொத்த அர்த்தத்துக்கு ஒரு சேர்க்கையும் ஏற்படப் போவதில்லை. இன்னம் அடுத்து இரண்டு மந்திரங்கள் வேறு இருக்கின்றன.

இருந்தும் அவசரமாகவேனும் அதைப்பற்றிப் பார்க்கலாம். சூக்ஷ்மமான ஆன்மிக உடல் 101 சூக்ஷ்மமான நரம்புகளால் ஆக்கப்பட்டிருக்கிறது. அதை டாக்டர்கள் கிழித்து எண்ணிப் பார்த்துவிட முடியாது; கண்ணால் பார்த்துவிடலாம் என்று எண்ணுவதும் வீண் பிரயாசை. அவற்றுள் மிகவும் முக்கியமானது 'சுஷும்ணு' என்பது. அது பின் எலும்புடன் அது அவ்வளவு நீளமாக ஒரே இடைவெளி விட்டுத் தொடர்ந்து அமைந்திருக்கிறது. மிகவும் மேலே யிருக்கும் முதுகு எலும்புக் கணுவையும் ஊடுருவி அது மனிதன் மண்டையின் நடுவை அடைகிறது. மண்டையின் நட்ட நடுப்பாகம் எவ்வளவு சீக்கிரம் உணர்ச்சிகளுக்கு இலக்காகிறது என்பதை நாமே உணரமுடியும். அதுவும் புதிதாகப் பிறந்த குழந்தையின் உச்சிக் குழியின் துடிப்பில் இதயத்துடிப்பின் பிரதிபலிப்பை அறிந்து கொள்ளலாம்.

அந்த விஷயம் உடற்கூறுகளை ஆராயும் விஞ்ஞானம் எப்படிச் சொன்னாலும் சொல்லட்டும்; அதன் இடமும் எப்படியும் இருக்கட்டும். வேதாந்த அறிவுப் பாதைகளில் முன்னேற விரும்பும் சாதகர்களாகிய நீங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இந்த விஷயம் மட்டும் தெரிந்திருந்தால் போதும். இந்த வாழ்விலேயே அபர பிரம்மத்தை ஒட்டிய உண்மையை அடைந்த தியானியினுடைய 'நான்'மயம் (ஜீவத்மபாவனை) அவன் சாகும் போது சுஷும்ணு நாடி மூலம் வெளியே தெளிவாக வரையறுக்கப்பட்ட அனுபவங்களின் உலகங்களைக் கடந்து பிரும்ம லோகத்தை அடைகின்றது. அங்கிருந்து அது

கல்பத்தின் முடிவில் அனுபவங்களின் உலகம் கரைந்துவிட்ட பிறகு சாக்ஷாத்காரத்தின் பரம நிலையை அடைகின்றது.

அந்த நித்தியப் பொருளை, அதாவது எங்கும் ஊடுருவும் அந்த உண்மைப் பொருளை அதன் குணம் அடையாளங்களற்ற சுத்த சத்வ நிலையில் இந்த உடல் வாழ்க்கையிலே சாக்ஷாத்காரம் செய்தவன் ஜீவன் முக்தன். அப்படிப்பட்ட ஜீவனுக்கு சுருதியே பிரயாணம் இல்லை என்று சொல்கிறது. (ந தஸ்ய ப்ராண உக்ரமதி) பிரும்மத்தை அறிந்து அவன் பிரும்மமாகிறான். அப்படிப் பட்ட பூர்ண விடுதலை கைவல்ய முக்தி என்று சொல்லப்படு கிறது.

அங்குஷ்டமாத்ர: புருஷோன்தராத்மா
ஸதா ஜனானாம் ஹ்ருதயே ஸம்நிவிஷ்ட: |
தம் ஸ்வாச்சரீராத் ப்ரவ்ருஹேன் முஞ்ஜாதி
வேஷிகாம் தைர்யேண
தம் வித்யாச் சுக்ரமம்ருதம் தம் வித்யாச்
சுக்ரமம்ருதமிதி ||

17. கட்டை விரலளவுள்ள புருஷன், அதாவது அந்தராத்மா எப்பொழுதும் எல்லா உயிர்ப்பொருள்களின் இதயத்திலும் அமர்ந்து இருக்கிறது. நாணலிலிருந்து உள் சோற்றை எடுப்பது போல் ஒருவன் தன் உடலுக்குள்ளிருந்து அதை வெளியேற்ற வேண்டும். அதை சுத்தமானது என்றும் அழியாதது என்றும் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டும்.

நாம் ஏற்கனவே விளக்கி வந்திருக்கிறோம். முன் உள்ள மந்திரங்களில் இந்த விஷயம் கூறப்பட்டிருக்கிறது. அந்தப் பரம தத்துவம் 'இருக்கிறது' என்ற நிலையில் ஒருவன் கட்டை விரலளவில் அவன் இதயத்தின் நடுவில் அமர்ந்திருக்கிறது. அங்கே இந்த உருவம் தரப்பட்டதற்குக் காரணம் நமக்கு தியானம் செய்யச் சுலபமாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் தியானத்தின் ஆரம்ப தசைகளில் அவசியம் என்றும் நாம் கண்டோம். உண்மையில் ஆத்மனுக்கு உருவம் கிடையாது. இங்கு ஏதோ உருவமும் தோற்றமும் இருப்பதுபோல் சொல்லப் பட்டிருக்கிறது. இது தியானநிலையில் மனம் நிலைத்து நிற்க ஒரு ஆதாரம் தரவேண்டும் என்பதற்காகவேதான்.

யமதர்மராஜன் சடைசியிலும் தன் மாணவன் நசிகேதனிடம் தியானத்தைப்பற்றிச் சொல்லியே இந்த உபநிஷதக் கூற்றுக்களை முடிக்கிருர். இது மிகவும் தகுதி வாய்ந்த ஒரு செயலேயாகும். இந்த உடல் பொய்யான ஒரு மேற்போர்வை. நடு மையத்திலிருந்து ஒன்றின்மேல் ஒன்ருய் ஒரே மையத்தைக் கொண்டு போட்ட பல போர்வைகளே. அதை ஆத்மா தன் ஒளிந்து பிடிக்கும் விளையாட்டுக்காக ஏற்றுக்கொண்டது. அது உண்மையானதல்ல. இவைகளுக்கு நடுவே இருக்கும் தெய்வ உண்மையைத் தெரிந்துகொண்டு தியானத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று யமதர்மராஜன் சொல்கிருர். ஐந்து கோசங்களுக்கு அப்பால் ஆத்மா அமர்ந்திருக்கிறது.

இங்கே சாயல் உவமை ஒன்று உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது ஆத்மா ஆத்மாவை அறியும் அந்தக் கடைசி நிலைக்கு அடைவதற்குப் போகவேண்டிய வழியின் போக்கைப்பற்றிச் சொல்லும்போது இந்த உவமை தரப்பட்டிருக்கிறது. இது உபநிஷதத்தின் நடைக்கு மிகவும் ஒத்து உண்மையானது. உபநிஷதம் சந்தேகப்பட்டுப் பேசுவதும் கிடையாது. அரைகுறையாகச் சொல்வதும் கிடையாது. வேண்டுமளவு அதிகமாகவும் உறுதியாகவும் பேசுவது அதன் குணம். நசிகேதன், அவன்மூலம் சாதக உலகத்தினர் எல்லோருக்குமே அந்தச் சுத்த உணர்வுத் தத்துவத்தை உண்மைச் சித்தின் சாரத்தை உடலைப்பற்றிய பொய் உணர்விலிருந்து ஆழ்ந்து தொடர்ந்த விவேகம் கொண்ட பயிற்சிகள், தியானம் இவற்றின் மூலம் பிரித்தெடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தியானம் செய்யும்போது சாதகன் எந்த விதத்திலும் தன்னை அலட்டிக்கொள்ளக் கூடாது, வீண் கஷ்டத்துக்குள்ளாக்கிக் கொள்ளக்கூடாது என்ற கருத்து, நாணலிலிருந்து (முஞ்சி) சோற்றை எடுத்துவிடுவதுபோல் என்ற உவமைமூலம் தரப்பட்டிருக்கிறது. நாணல் மிகவும் மிருதுவான ஒரு செடி. அதன் வெளிப் போர்வையே இலைகள் போன்றவைதான். அதன் உள்ளிருந்த சோற்றை வெளியேற்றுவது என்ருல் அவசரமும் முரட்டுத்தனமும் காட்டக்கூடாது. தொடுவதும்

மிகவும் மெதுவாய் இருக்கவேண்டும். செலுத்தப்படும் வேகம் மிகவும் குறைவாய் இருக்கவேண்டும்; அளவாகவும் இருக்க வேண்டும். அந்த வேலை செய்து முடியுமளவு மிகவும் கெட்டிக் காரத்தனம் கொண்ட பட்டுநூல் போன்ற மிருதுத்தன்மை காட்டவேண்டும்.

மனிதனுடைய உடல், மனம் புத்தி இவைகளின் செயல் களை எல்லாம் அடக்கி நடத்தும் சுத்த உணர்வுத் தத்துவம் தான் 'ஆத்மா'வாகும். உபநிஷதம் மற்றும் ஒருமுறை 'அது சுத்தமானது, 'அழியாதது' என்று வலியுறுத்திக் கூறி அது அமைகிறது. அது சுத்தமானது என்பது மனம் கொள்ளும் காமம், குரோதம், லோபம்(பேராசை) முதலியன அதனிடத்தே இல்லை என்ற கருத்தில்தான். அதை அழியாதது என்று கூறு வதன் பொருள் அது என்றுமுள்ள உண்மை. பிறந்தது என்று ஒரு நாள் கிடையாது. எங்கும் ஊடுருவி நிற்பது அது. அதன் தோற்றங்களில் காணப்படும் பயன்களின் காரணங்கள் ஏற்படுத்தாத காரணப்பொருள் அதுவே.

ம்ருத்யுப்ரோக்தம் நசிகேதோத லப்த்வா
வித்யாமேதாம் யோகவிதிம் ச க்ருத்ஸ்னம் |
ப்ரஹ்மப்ராப்தோ விரஜோபூத்விம்ருத்யூ:
அன்யோப்யேவம் யோ விதத்யாத்மமேவ ||

18. இந்த அறிவையும், யோகத்தின் முழு முறைகளையும் நசிகேதன் யமதர்மராஜனிடம் இருந்து பெற்றுக்கொண்டு அசுத்தங்கள் சாவு இரண்டிலுமிருந்து விடுதலை பெற்றான். பிரும்மத்தையும் அடைந்தான். அப்படியே இந்தவிதம் ஆத் மாவை அறிந்தவனும் அடைவான்.

முதல் மந்திரத்திலேயே கடைசி வரியில் ஒரு சொற்றொடர் இரண்டு தடவை திரும்பி வந்தது. 'இதி' என்ற சொல்லும் வந்தது. அங்கேயே உபநிஷதம் முடிகிறது என்பதற்கு அடையாளங்கள் கிடைத்துவிட்டன. எனவே இந்த மந்திரம் பகவதி சுருதித் தாயின் வாக்கியம் எனக் கொள்ளல்வேண்டும். நசிகேதன் தன் ஆசிரியரிடம உபநிஷத விளக்கங்களைக் கேட்டான். தன் உண்மைத் தன்மையை உணர்வதேயான சுய பூர்ணத்வத்தை அடைவதற்காகச் செய்யவேண்டிய யோக விதியைப்பற்றியும் அதன் முறைகளைப்பற்றியும் நன்கு முழுமை

யும் தெரிந்துகொண்டான். பிறகு அவன் ஒரு தனி இடத்துக்குச் சென்று பிரும்ம வித்தையைப் பயின்று மனம் புத்தி நிர்மலமாகிய தியானத்தின் உச்ச நிலைகளை அடைந்து ஆன்ம சாக்ஷாத்காரம் பெற்றான்.

விரஜ: (ரஜஸ் அல்லது பாபத்திலிருந்து நீங்கி) கல்மஷம் அல்லது அசுத்தங்களிலிருந்து விடுபட்டு (அதாவது துர்க்குணம் நல்ல குணம் இரண்டுமற்று) புலன்கள் புலப்பொருள்களை நாடி ஓடும் ஓட்டத்தை விவேகத்தின் வலுத்த சக்தி கொண்டும் மனதின் கட்டுப்பாட்டின் மூலம் அடக்குவதில்தான் ஞான சாதனம் அடங்கியிருக்கிறது. இந்தவிதமாக மனது தொடர்ந்து படிப்படியாக. அதன் மலங்களான, அஹங்காரப் பெருமைகள், சுயநலம் தந்தவும், தன்னையே குறியாகக்கொண்டு எழும் ஆசைகள், காமங்கள், பிடிப்புக்கள், பேராசைகள், தீவிர இன்ப உணர்ச்சிகள் இவைகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். அப்படிப்பட்ட, அடக்கப்பட்டு சுத்தமடைந்த மனதை திட்டமாக ஏற்படுத்தித் தரப்பட்ட ஒரு உருவம் அல்லது கருத்திலேயே செலுத்தினால் அதன் தியான சக்திகள் வளர்கின்றன, கடைசியான இப்படிப் பெறப்பட்ட தொடர்ந்த தியானத்துக்கேற்ற அந்தப் புதிய சக்திகளை இன்னும் அதிகத் தீவிரமாக, ஆத்மாவைச் சுற்றிக்கொண்டு பொய்த் தோற்றம் தரும் இந்த ஐந்து கோசங்களையும் ஊடுருவி ஆத்மாவுடன் இணைக்கும் பணியில் செலுத்துகிறோம். அந்த ஆத்மாவேதான் தன் இயற்கையில் சுத்த உணர்வுத் தத்துவம். நித்தியமானது. பரம்பொருள்.

வேத காலத்தில் யாரோ ஒரு சாதகன் யமதர்மராஜனுடைய அருள்பெற்று ஏதோ ஒரு சந்தர்ப்ப விசேஷத்தால் ஆன்மானுபவம் பெற்றான் என்றால் நமக்கெல்லாம் அது ஏதோ சந்தர்ப்பச் சேர்க்கையால் நடந்த சரித்திர உண்மை என்று படுமே தவிரச் சாதகர்கள் எல்லாம் எக்காலத்தும் சாதிக்கக் கூடிய ஒன்றுதான் என்று படாமல் இருக்கலாம், தன்னைப் படிக்கிறவர்கள் மனதில் இந்த சந்தேகம் எழக்கூடாதே, எழுந்தாலும் அது தொடரக்கூடாதே என்று தடுக்கத்தான் சுருதி தேவி இங்கே உறுதியாய்ச் சொல்கிறாள். "இவ்விதம்

தன் ஆத்மாவை அறிந்தவனும் அவ்விதமே அடைவான்'' என்று இன்றும் உபநிஷத்தில் தெளிவாகவும் மனதில் பதியும்படியும் விவரிக்கப்பட்ட யோக்யதாம்சங்களை ஒருவன் நிறைவேற்றி பிர்மவித்தையை நசிகேதனைப்போல உண்மையுடனும் ஊக்கத்துடனும் பழகினுல் அவனும் ஆத்மாவை அறிந்து உண்மையுடன் ஒன்ருக முடியும்; இந்த உலகிலேயே தெய்வமாக வாழ்வான்.

ஓம்

ஓம் ஸஹ நாவவது! ஸஹ நௌ புனக்து |
ஸஹ வீர்யம் கரவாவஹை |
தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை ||
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அவன் நம்மிருவரையும் காப்பாற்றட்டும். ஞான ஆனந்தத்தை நமக்கு அருளட்டும். நாம் சேர்ந்து முயலுவோம். நாம் படிப்பது நன்ருகப் படிக்கப்படட்டும். நாம் ஒருவருக்கொருவர் வெறுக்க வேண்டாம் (சண்டையிட்டுக்கொள்ள வேண்டாம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இந்த சாந்தி மந்திரம் ஆசிரியரும் சிஷ்யனும் எந்த மனப்பாங்குடன் படிப்பிப்பது, படிப்பது என்ற செயலை அணுகுகிருர்கள் என்று நமக்கு ஒருவாறு விளக்குகிறது. ஆகா! இன்று மாணவர் ஆசிரியரிடம் உள்ள பரஸ்பர உறவுக்கும் இதற்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது!

இன்று ஆசிரியர் தன் மேஜையருகே ''தலைவிதி, நாம்தானே அழவேண்டும்!'' என்று செல்கிருர். மாணவர்களும் 'ஆஜர்' ஆகவேண்டிய நாட்களின் எண்களைப் பூர்த்திசெய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்காக வந்து சேருகின்றனர். ஆசிரியர் மாணவனைத் தவிர்க்க முடியாததும் மிகவும் சங்கடம் தருவதுமான ஒரு தொல்லை என்று நினைக்கிருர். மாணவர்களுக்கோ காலேஜ் வாழ்வு என்ற சுக மலர்ப்படுக்கையில் ஆசிரியர்கள் முட்களாகத் தோற்றமளிக்கிருர்கள்!

பிர்ம வித்தையில் ஆசிரியரின் ஒத்துழைப்பும் வேண்டும். மாணவர்களும் அதே அளவுக்கு ஒத்துழைப்பை நேர்மையான உள்ளத்துடன் தரவேண்டும். இல்லை என்றால் ஒன்றும் நடவாது. அதனால்தான் 'நாம் ஒருவருக்கொருவர் சண்டையிடாதிருப்போமாக' என்று சிறப்பான பிரார்த்தனை செய்யப்படுகிறது. ஆம். சாஸ்திர பாடத்தில் அநாவசியமான கேள்விகள், நேரம் போகும் வாதங்கள், உபயோகப்படாதபேச்சுக்கள் இவை எழச் சாத்தியக் கூறுகள் அதிகம். அவை நம்மைச் சுருதிப்பொருள்களை அறிந்துகொள்ளாமை, தப்பிதமாகப் புரிந்துகொள்வது முதலிய அழிவு தரக்கூடிய சிக்கல்களுள் இழுத்துச் சென்று விடலாம். ஆகவே சாஸ்திரம் பயிலும் சந்தர்ப்பத்தில் இப்படிப்பட்ட சங்கல்பம் மிகவும் தேவைதான்.

ஒவ்வொரு நாளும் ஆசிரியரும் மாணவனும் இந்த மந்திரத்தைச் சொல்லி ஆரம்பிப்பார்கள். இதைச் சொல்லியே தன் படிப்பை முடிப்பார்கள். இன்றும்கூடச் சுருதிகள் பாடம் நடத்தும் இடங்களில் எல்லாம் இந்தப் பழக்கம் இருந்துவருகின்றது.

ஹரி: ஓம் தத் சத்.